

அறநெறிக்
கதைகள்
கே.வி. குணசேகரம்



# என்னுரை

**இ**ருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளேன். அதில் ஆயிரக்கணக்கான கதைகள் உண்டு. திருக்குறளில் உள்ள 1330 பாக்களுக்கும் மூன்று முறை கதை எழுதியுள்ளேன். பகவத்கீதை, திருவருட்பயன் என்ற தத்துவ நூல்களுக்கு சமூகத்திற்கு ஏற்ற கதைகளை எழுதியுள்ளேன். இவற்றை விடப் புராணங்கள், இதிகாசங்களையும் எழுதியுள்ளேன். சோதிடத்தை ஆய்வு செய்து ஒரு நூலும் வெளியிட்டுள்ளேன்.

**இ**வ்வளவு நூல்களையும் எழுதியபோதும் எனது மனம் மகிழவில்லை. நிம்மதியடையவில்லை. இப்போது வெளியிடும் நீதிக்கதைகள், அறநெறிக்கதைகளை எழுதிய பின் மனம் நிம்மதியடைந்துள்ளது. மகிழ்ச்சியும் உண்டானது. காரணம் எவற்றை எழுத வேண்டும் என்று விரும்பினேனோ அவற்றையெல்லாம் எழுதியுள்ளேன்.

**எ**னது நூல்களை விமர்சிக்காவிட்டாலும், பாராட்டாவிட்டாலும், விருதுகள், பரிசுகள் தராவிட்டாலும் இலட்சக்கணக்கானோர் வாசிக்கின்றனர். எனது நூல்கள் பல பாடசாலைகளிலும், வீடுகளிலும், நூலகங்களிலும் உண்டு. நீதியானவற்றை, அறக்கருத்துக்களை எழுதுவதால் பலர் தம்மைக் குறிப்பதாக எண்ணத் தேவையில்லை. ஏனென்றால் குடிகாரரைப்பற்றி எழுதினால் இலட்சக்கணகானோர் குடிக்கின்றனர். குடிக்கக்

கூடாதென்று எழுதினால் இலட்சக்கணக்கானோர் எனது எழுத்துத் தம்மைத் தான் குறிக்கிறது என்று எண்ணலாமா? என்றுகிறார்கள்.

**ச**ங்ககாலம் தொடக்கம் விழுந்து கும்பிடுவோருக்கும், புகழ்ந்துரைப் போர்க்கும் தான் பரிசுகள் விருதுகள் கொடுக்கப்பட்டன. இங்கும் அது தான் நடைபெறுகிறது. அதைத்தான் நான் எழுதிவருகிறேன். எழுதுவேன். பரிசும் விருதும் சோறுபோடுமா என்ன. மனதிற்கு மகிழ்ச்சி தரும் என்பர். ஆனால் விருதனையும், பரிசையும் யார் மதிக்கிறார்கள். எனது நூல்கள் பரிசுக்கும் விருதுக்கும் அப்பாற்பட்டன. விவேகானந்தருக்கு இராமகிருஷ்ண பரமகம்சருக்கு, கண்ணதாசனுக்குக் கலாநிதி பட்டம் கொடுக்க முடியுமா? கலாநிதிப்பட்டங்கள் கொடுப்பதை எல்லோரும் அறிவர். அதை பெயருக்கு முன்னால் போடலாமே தவிர மதிப்பிருக்குமா? இங்கு விருது கொடுத்த நூல்களை யாராவது கண்டார்களா? அல்லது வாசித்தார்களா? கல்விப் புலத்தில் இருந்தபோது அவமதித்தனர். உரிய இடம் தராது பழிவாங்கினர். நம்பிக்கையானவர்கள் ஏமாற்றினர். திறமைகளைப் பாராட்டாது பழிவாங்கினர். இவையாவும் எனது இரத்தத்தில் ஊறியதால் எனக்குக் கவலைகள் இல்லை இந்நூலை வாசித்துப் பாருங்கள். யாவும் புரியும். யாரையும் குறை சொல்வது எனது நோக்கம் அல்ல, உண்மையைச் சொல்வதே எனது நோக்கமாகும். சங்ககாலப் புலவர்கள் தமக்கேற்பட்ட அனுபவங்களை உடனுக்குடன் எழுதிவைத்தமையால் அவர்களுக்குத் துரோகமிளைத்தோர் இன்றும் நினைவு கூறப்படுகின்றனர். அதுபோலத்தான் நானும் எனது நூல்கள் அனைத்திலும் எழுதியுள்ளேன். அவை எதிர்காலத்திற்குத் தேவையானவற்றைக் கூறும் ஆறுமுகநாவலர் கூட தமது செயற்பாடுகளை எழுதிவைக்காவிட்டால் இப்போதுள்ளோர் எப்படி அவற்றை அறிவர். கல்வியில் முதல் நிலையில் இருந்த யாழ்மாவட்டம் ஏன் கடை நிலைக்கு வந்தது என்று ஆராய்வோர்க்கு எனது நூல்கள் உறுதுணையாக இருக்கும். அதற்காகத் தான் எழுதுகிறேன். இருநூறு நூல்களில் சுமார் பதினையாயிரம் கதைகள் உண்டு. ஆயிரம் குறள்களுக்குக் கதை சொல்லி முடித்துவிட்டேன். மிகுதியையும் சொல்வேன். இப்படியிருக்கும்போது நான் ஏன் விழுந்து கும்பிடவேண்டும். காலம் பதில் சொல்லும் பதினைந்து வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டுப் பணியாற்றிய எனது அடையாளம் எதுவும் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் இல்லை. ஆனால் அவை எனது இணையத்தில் இருப்பதால் உலகத்தவர்கள் யாவருக்கும் அங்கு என்ன நடைபெறுகிறது. நடைபெற்றது என்று தெரியும். இன்னும் பல வருடகாலம் கழிந்தாலும் அவற்றை அழிக்க முடியாது.

இந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. அறஞ் செய்ய விரும்பு



**மி**குந்த கவலையுடன் உச்சுவில் குளக்கட்டுக்கு வந்த எலி தனது மனைவிக்குச் சொன்னது, "எனது நண்பனை இரவு பெய்த பெருமழையின் போது வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு வந்த பாம்பு ஒன்று விழுங்கிவிட்டது. அதன் மனைவி இரவுதான் குட்டிகளை ஈன்றவள். வயலெல்லாம் ஒரே வெள்ளம். வரம்பில் குட்டிகளுடன் இருந்த அவளை நானும், எனது நண்பர்களும் காப்பாற்றிக் குளக்கட்டில் கொண்டு சென்றுவிட்டுள்ளோம். இரவு முழுவதும் உணவு இல்லாததால் அவள் உண்ணவில்லை. வயலில் உள்ள புற்றுக்களெல்லாம் நீரால் நிரம்பியமையால் உணவைப் பெற முடியவில்லை. நாம் முன்பே உணவுகளை எடுத்து வந்து குளக்கட்டில் வைத்துள்ளோம். பாவம் கொஞ்சம் கொண்டு சென்று கொடு".

"**அ**வள் சரியான வாய்க்காரி. இது அவைக்கு வேணும். புற்றுக்குள் அவர்களுக்கு மட்டுமா வெள்ளம் புகுந்தது. எமக்கும் தானே. நாம் கொண்டு வந்த உணவு இரண்டு நாட்களுக்குத்தான் போதும். அவர்களுக்குக் கொடுத்தால் நாளைக்கு நாம் என்ன செய்வது?" எலியின் மனைவி கேட்டது.

"**க**டவுள் தருவார். இப்போ பசிக்கு உணவு கொடு" என்றது எலி.

"**ச**ரி இங்கு வருடத்தில் ஐந்து மாதங்களுக்கு மழை பெய்யும். அதை உணர்ந்து செயற்பட வேண்டும். எமது இனத்தவர்கள் பலர் சேமித்த தானியங்களை நேற்றுக் கொண்டு வந்து விட்டனர்" என்றபோது எலி சொன்னது, "நேற்று அவள் பிரசவ வலியால் கஷ்டப்பட்டவள். அதைவிட வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு வந்த பாம்பு அவளது கணவனை விழுங்கி விட்டது. பாவம் அவள் என்ன செய்வாள்".

**அ**வள் எல்லோருடனும் சண்டைக்குப் போவாள் வாய்க்காரி. சகோதரங்களே உதவுவதில்லை" என்றது மனைவி எலி.

"**து**ன்பப்பட்டவர்களுக்கு உதவவேண்டும். பசித்தவர்களுக்கு உடனே உணவு கொடுக்க வேண்டும். குற்றங் குறைகளை இக்கட்டான நேரங்களில் ஆராயக்கூடாது. பாவம் தாயும் பிள்ளைகளும் பசியால் துடிதுடிக்கிறார்கள். பழையவற்றை மறந்துவிடு. முதலில் அவ் எலி பாவம் என்று உணர். அதன் பின் அதற்கு உதவவேண்டும் என்று விரும்பு" என்றது கணவன் எலி.

“**எ**னக்கு விருப்பமில்லை என்றா நினைக்கிறீர்கள். பாவம் கொடுக்க விருப்பம். ஆனால் அவளின் குணம் சரியில்லை”.

“**நீ** கொடுக்க வேண்டும் என்று விரும்பியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று முதலில் விரும்பவேண்டும். விரும்பாவிட்டால் செயற்பட முடியாது. அதனால் கொஞ்சம் தனியம் தா. கொண்டு சென்று கொடுத்துவிட்டு வருகிறேன்” என்றது கணவன் எலி.

“**எ**ன்னதான் கொடுமைக்காரியென்றாலும் ஆபத்தில் உதவவேண்டும். நானும் வருகிறேன்” என்று புறப்பட்டது மனைவி எலி.

## ௨. ஆறுவது சினம்



**எ**லிகள் பல ஓர் இளைய எலியின் தலைமையில் வந்து தலைவனான முதிய எலியைச் சந்தித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின.

“**வெ**ள்ளத்தோடு வந்து பாம்பு முன்பு குட்டியீன்ற ஓர் எலியின் கணவனைப் பிடித்து விழுங்கியது. இரவு வேறு நால்வரை விழுங்கிவிட்டது. தலைவர் என்று இருப்பவர் என்ன செய்கிறார்? பாம்பைக் கொல்ல வேண்டும். அதைக் கொல்லாவிட்டால் இன்னும் பலரை இழக்க வேண்டி வரும்”.

**ஏ**னைய எலிகளும் இளைய எலி சொல்வதை ஆமோதித்தன. தலைவரான எலி சொன்னது, “நாம் எளியவர்கள். பலமுள்ளவரைத் தாக்கும்போது கவனமாக நடக்காவிட்டால் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும். எதற்கும் ஆராயாது சினங்கொள்ளலாகாது. பதட்டப்படாமல் இருந்து நன்றாக ஆலோசித்துத்தான் செயற்படல் வேண்டும்”

“**ஆ**றுதலாக யோசிக்க முன் எமது இனம் அழிந்துவிடும்” என்றது இளையஎலி.

**ஒ**ருவரது மனதில் சினம் இருக்கககக் கூடாது. சினம் இருந்தால் அது அவரைச் சரியான முறையில் செயற்படவிடாது. எனவே சினத்தைவிட்டுவிட்டு, எமது நிலையை எண்ணிப் பொறுமையாகச் சிந்தித்துச் செயற்படல் வேண்டும்” என்றது முதிய எலி.

“**நா**ங்கள் என்ன செய்வதென்று யோசித்துச் சொல்லுங்கள். காலதாமதம் செய்வது எமது அழிவிற்கு வழிவகுக்கும்” என்றது இளைய எலி.

**அ**ப்போது ஓர் எலி சொன்னது, “பாம்பு எம்மவரைப் பிடித்து விழுங்கியபின் குளத்தின் மேற்குக் கரையில் உள்ள கறையான் புற்றுள் நுழைவதை நான் கண்டேன். அதனால் பொறிவைத்து அதைப்பிடிக்கலாம். நான் அதைச் செய்கிறேன்” என்றது.

**அ**ன்று இரவு அந்த எலி வெள்ளத்தில் தள்ளுப்பட்டு வந்த ஒரு கம்பியை எடுத்து புற்றின் வாசலில் கட்டிவிட்டு அதை மறைக்க இலை குழைகளைப் போட்டது.

**ம**றுநாட் காலை பாம்பு பொறிக்குள் அகப்பட்டுவிட்டது. அதைக் கண்ட எலிகள் மகிழ்ச்சியாரவாரம் செய்தன. முதிய எலி வந்து பார்த்துவிட்டுச் சொன்னது, “இந்த யோசனையைச் சொல்லிச் செயற்பட்ட எலிக்கு வாழ்த்துக்கள் கூறுகிறேன். எல்லோரும் கைதட்டி இந்த வீரதீரச் செயலைப் பாராட்டுங்கள்” என்றபோது எலிகள் மகிழ்ச்சியாரவாரம் செய்தன.

“**உ**டனே இதைக் கொல்ல வேண்டும்” என்றது ஓர் எலி.

“**தா**மதிக்காது கொல்ல வேண்டும்” என்றது இன்னொரு எலி.

“**பெ**ரியவர்களே, இரண்டு நாட்களாகப் பெருமழை பெய்தமையால் எனக்கு உணவு கிடைக்கவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள். நான் வேறெங்காவது சென்று விடுகிறேன்” என்று இரந்தது பாம்பு.

**அ**தன் நிலையை உணர்ந்த முதிய எலி சொன்னது, “கொலை செய்வது பாவம். பாம்பு இனிமேல் இவ்விடம் வராது என்று சொல்கிறது. அதனால் அதை இழுத்துச்சென்று மறு கரையில் விடுங்கள்”.

**எ**லிகள் கம்பியின் நுனியைப் பிடித்து இழுத்துச் சென்று குளத்தின் மறுகரையில் இருந்த கோவில் வீதியில் விட்டன.

“**உ**ங்களின் பெருந்தன்மையான செயலை நான் என்றும் மறக்கமாட்டேன். மிக்க நன்றி” என்றது பாம்பு. எலிகள் அது வீதியால் பனைவெளிக்குச் செல்வதைப் பார்துக் கொண்டு நின்றன.

## 3. இயல்வது கரவேல்



**ம**ழை விடாது பெய்து கொண்டிருந்தது. அத்துடன் பலத்த காற்றும் வீசியது. வரம்பில் வாழ்ந்த எலிகள் யாவும் அவை வாழ்ந்த புற்றுள் நீர் சென்றமையால் வெளியே வந்து குளக்கட்டில் இருந்தன. புற்றுக்குள் நிறையத் தானியங்கள் இருந்தன. வரம்பை மீறி ஒரு அடிக்கு நீர் நின்றமையால் எலிகளுக்கு உணவு கிடைக்கவில்லை. எலிக்குட்டிகள் "பசிக்குதம்மா" என்று அழுதன.

**அ**ப்போது அங்கே ஒரு கூட்டம் புறாக்கள் தானியங்களுடன் வந்து சேர்ந்தன. புறாக்களுக்குத் தலைமை வகித்துவந்த புறா சொன்னது, "இந்தக் குளத்தை நம்பி ஏராளமான உயிர்கள் இருக்கின்றன. நீங்கள் உங்கள் சேமிப்புக்களைப் புற்றில் சேமித்து வைத்துவிட்டு இங்கு தங்கியிருந்தீர்கள். அதனால் தான் உங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டது. நீங்கள் பசியால் துடிதுடிப்பதைக் கண்டு நாங்கள் மிக்க துன்பமடைந்தோம். அதனால் நெற்கதிர்களையும், திணை, சாமி, குரக்கன் போன்றவற்றின் கதிர்களையும் அறுத்து வந்துள்ளோம் உண்டு களைப்பாறுங்கள்".

"**மி**க்க நன்றி. நாம் கடந்த சில நாட்களாகப் பெரும் மழை பெய்வதால் வெளியே செல்ல முடியவில்லை. பசியால் துடிதுடித்தோம். பிள்ளைகள் பசியால் கதறி அழுதனர். இருந்தபோதும் எம்மால் எதுவும் செய்யமுடியவில்லை. வயற்கரையில் இருக்கும் கடவுளைத் தியானித்து எமது குறைகளைச் சொல்லிவந்தோம். அதனால் எமக்கு நல்ல பயன்கிடைத்துவிட்டது. மிக்க நன்றி" என்றது ஒரு முதிய எலி.

"**எ**ப்போதும் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். பசியால் வாடுபவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். எம்மிடம் உள்ளவற்றைப் பிறருக்குக் கொடுத்துதவுவதால் எமக்குத் துன்பங்கள் வரக் கடவுள் விடமாட்டார்" என்றது புறா.

## 4. ஈவது விலக்கேல்



**பு**றாக்கள் வயலுக்குள்ப் பறந்து வந்து நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு சென்று எலிகளுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து மீண்டும் நெற்கதிரை வாயால் கௌவின. அதைக்கண்ட கிளிகள் மிகவும் ஆச்சரியத்துடன் அவற்றைப் பார்த்தன. ஒரு கிளி கேட்டது, "புறாவாரே, எம்மினத்தவர்கள் எவரும் அடுத்த நேரத் தேவைக்காக ஒருபோதும் சேமித்ததில்லை. கடவுள் எமக்காக உலகெங்கும் பல்வேறு விதமான மரங்களைப் படைத்துள்ளார். பசிக்கும் போது நாம் மரத்திற்குச் சென்று நன்றாக முற்றிப் பழுத்த பழங்களை மரத்தில் இருந்தே உண்டுவிட்டுச் செல்வோம். நீங்களும் அவ்வாறு தானே செய்தீர்கள். இன்று ஏன் அதை மறந்து சேமிப்பில் ஈடுபடுகிறீர்கள்".

"**நா**ம் சேமிப்பில் ஈடுபடவில்லை. நாம் கடவுளை நம்புகிறோம். அதனால் எமக்குத் தேவையேற்படும் போதெல்லாம் கடவுள் தருவார் என்று நம்பியிருக்கிறோம்..." என்று புறா சொல்லிக் கொண்டிருக்கும் போது கிளி கேட்டது, "அப்படியானால் நீங்கள் ஏன் நெற்கதிர்களை எடுத்துச் செல்கிறீர்கள்".

"**இ**து சேமிப்பதற்கல்ல. கடந்த ஒரு வாரகாலமாகப் பெரும் மழை பெய்து வருகிறது. அதனால் வாய்க்கால்கள் மூலம் வரும் வெள்ளநீர் பயிரை மூடியுள்ளது. அதனால் கடந்த ஒரு வாரமாக வயலில் புற்று அமைத்து வாழ்ந்த எலிகளின் புற்றுள் வெள்ளம் நுழைந்துவிட்டது. எலிகள் சேமித்த தானியங்களையும் எடுத்துவர முடியவில்லை. வயலுள் வெள்ளம் நிரம்பியிருப்பதால் அவற்றால் உணவு தேடவும் முடியவில்லை. குளக்கட்டில் இருக்கின்றன. உணவு இல்லாமையால் அவை பசியால் அழுகின்றன. அதனால் அவற்றிற்கு எடுத்துச் செல்கிறோம்" என்றது புறா.

"**எ**லிகளுக்கா கொண்டு செல்கிறீர்கள். அவை படுமோசமானவை அடுத்தவர்களுக்கு உதவி செய்யாது திமிருடன் பேசுபவை. நாம் உணவு தேடி வயலுக்கு வந்தால் அவை இது தமக்குரிய வயல்கள். அதனால் இங்கு உணவு தேடாது வேறுஇடம் செல்லுங்கள் என்று சண்டைக்கு வரும் அதனால் அவற்றிற்கு உதவாதீர்கள். அவர்கள் செய்த பாவத்திற்குத் தண்டனை அனுபவிக்கட்டும்" என்றது கிளி.

"**ப**சியால் வருந்துவோருக்குக் கொடுப்பதைத் தடை செய்வது பாவம். நீ கொடுக்காவிட்டாலும் பிறர் கொடுப்பதைத் தடைசெய்யாதே. ஒருவர் தீயவரானாலும் அவர்

துன்பப்படும்போது உதவுவது தெய்வக்குணம். தயவு செய்து இவ்வாறு இனிப் பேசாதே” என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது புறா.

## 5. உடையது விளம்பேல்



**கு**திரை காட்டுவழியாக உற்சாகத்துடன் பாட்டுப்பாடியபடி சென்று கொண்டிருந்தது. குதிரையைக் கண்ட நரி கேட்டது, “நண்பா, என்றுமில்லாதவாறு மிகுந்த உற்சாகத்துடன் பாட்டுப் பாடியபடி செல்கிறாய். எந்த நாளும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உனது துன்பங்களைப் பற்றிச் சொல்வாய். நீ இன்று முற்றாக மாறிவிட்டாய்” என்றது.

**கு**திரைக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது தனது மகிழ்ச்சிக்கான காரணத்தைச் சொல்லி மகிழவேண்டும் என்ற நினைவு உண்டானது, “எனது துன்பங்களுக்கெல்லாம் விடிவுகாலம் பிறந்து விட்டது. இரண்டு வருடங்களுக்கு முன் வெளியூர் சென்ற எனது மகன் இதுவரை எம்மோடு தொடர்புகொள்ளவில்லை. அதனால் நான் மிகவும் வேதனைப்பட்டேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு அவன் வெளியூர் செல்ல வாங்கிய கடன் பெருகிக் கொண்டு வந்தது. பணம் தந்தவன் ஓயாது மிரட்டிக் கொண்டிருந்தான். அதனால் செய்வதறியாது கலங்கிக் கொண்டிருந்தேன். இப்போது மகன் தனது நண்பரிடம் பணங்கொடுத்து அனுப்பியுள்ளான். கடன்காசு கொடுத்த பின்பு இரண்டு இலட்சம் ரூபா எஞ்சியிருக்கிறது. மான் தனது வயலை விற்கப்போறதாகச் சொன்னதாம். அதனால் அது பற்றிப் பேசப்போகிறேன்” என்றது குதிரை.

“**அ**ப்படியா…? மிகவும் மகிழ்ச்சி” என்று கூறிய நரி நேராகச் சிறுத்தையிடம் சென்று “மான் தனது வயலை விற்கப் போவதாகக் கூறுகிறது. நீங்கள் வாங்குவதானால் சொல்லுங்கள்” என்று கூறச் சிறுத்தை, “அந்த வயலை வாங்கித்தா நான் உனக்குத் தரகுப்பணம் தருகிறேன்” என்றது.

**அ**தைக்கேட்ட நரி மானிடம் சென்றது. மான் வீட்டில் இருக்கவில்லை. அது வியாபார விடயமாகப் பட்டணத்திற்குச் சென்றதை அறிந்த நரி பட்டணத்திற்குச் சென்று மானைச் சந்தித்து வயலை விலைபேசி அச்சவாரப் பணம் கொடுத்தது.

**வெ**குநேரம் காத்திருந்த பின்பு மான் வீட்டுக்கு வந்தது. அதைக்கண்ட குதிரை, "நண்பா, உனது வயலை விற்கப்போவதாகக் கேள்விப்பட்டேன்…" என்று சொல்லும் போது மான் சொன்னது, "பலநாட்களாக விற்கவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் விற்க மனம் வரவில்லை. நான் அதை வெளியாரிடமும் சொல்லவில்லை. எப்படியோ அதைத் தெரிந்து கொண்ட நரி என்னைத் தேடிப் பட்டணத்திற்கு வந்து விலைபேசி அச்சவாரமும் தந்துவிட்டு சென்றுவிட்டது. எனக்குக் கொஞ்சக் கடன் இருக்கு அதனால் வலை விற்போம் என்று மகனுக்கு மட்டும் தான் கூறினேன். நரிக்கு எப்படித் தெரிந்தது என்று தெரியாது" என்றது.

**உ**னது மகன் எனது மகனின் நண்பன். அவன் எனது மகனுக்குச் சொல்லியிருக்கிறான். அவன்தான் எனக்குச் சொல்லி அந்த வயலை வாங்கப் பணமும் அனுப்பினான். அதை நான் தான் நரிக்குச் சொன்னேன். சொல்லிச் சிறிது நேரத்தான். நரி தனது புத்தியைக் காட்டிவிட்டது" என்று வேதனைப்பட்டது குதிரை.

"**ந**ண்பா, எனது மகன் நேற்று என்னுடன் கதைத்தவன். ஆனால் இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. ஒருபோதும் தான் செய்யவுள்ள ஒரு செயலைப்பற்றிப் பிறருக்குச் சொல்லக்கூடாது. அத்துடன் கைக்கு வர முன்னே நெய்க்கு விலை பேசுவதும் கூடாது. இனியாவது அவதானமாக இரு" என்றது மான்.

## 6. ஊக்கமது கைவிடேல்



**ப**ன்றி, குதிரையின் வீட்டுக்கு வந்தபோது குதிரை வீட்டில் இருக்கவில்லை. குதிரையின் மகள் வந்து சொன்னது, "மாமா, அப்பாவும் அம்மாவும் சித்தப்பாவின் மகளுக்கு இன்று திருமணம் நடைபெறுவதால் அங்கு சென்றுவிட்டனர். அதனால் அவர்கள் வரத் தாமதமாகும். நான் அப்பம்மாவுக்குச் சுகமில்லாததால் போகவில்லை".

"**அ**ப்படியா அம்மா. எனக்கு மனம்சரியில்லை. அவர்கள் வரும் நேரம் வரட்டும். நான் வேப்பமர நிழலில் படுத்திருக்கிறேன்" என்றது பன்றி.

**கு**திரையின் மகள் பட்டதாரி ஆசிரியை. அவள் பன்றிக்குப் பலமுறை உதவிகள் செய்திருக்கிறாள். தேவையேற்படும்போது ஆலோசனைகள் கூறுவதுண்டு.

“அப்படி என்ன மாமா உங்களுக்குக் கவலை”.

“மகளே, ஒன்று இரண்டல்ல பல. விவசாயம் இரண்டு முறை பொய்த்து விட்டது. சென்ற வருடம் மழை பெய்யாமல் நெற்பயிர் அழிந்தது. இந்த வருடம் அதிக மழை பெய்து பயிரை அழித்துவிட்டது. இதனால் கடன் பெருகிவிட்டது. கடன் தந்தவர்கள் நெருக்குகிறார்கள். இவ்வருடம் விதைக்கக் குறைந்தது பத்தாயிரம் ரூபாவாவது வேணும். கையில் ஒரு சதமும் இல்லை” பெருமூச்சு விட்டது பன்றி.

“மாமா, இயற்கையை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இவ்வளவு காலமும் நன்றாக விளைந்த உங்களது வயல் கடந்த இரண்டு வருடங்களாக இயற்கையால் அழிந்து விட்டது. ஒரு தொழில் செய்தால் லாபமும் வரும் நட்டமும் வரும். நட்டம் வரும்போது சோம்பி இருக்கக் கூடாது. ஊக்கத்தைக் கை விடக்கூடாது” என்றது குதிரையின் மகள்.

“நீ சொல்வது சரி. ஆனால் தொடர்ந்து இரண்டு வருடங்கள் நட்டமேற்பட்டதால் வயலை விற்கலாமென்று நினைக்கிறேன்” என்றது பன்றி.


“உங்களுக்கு இப்போ பணம்தானே தேவை. அதை நான் தருகிறேன். ஊக்கத்துடன் செயற்படுங்கள் ஏனைய வருடங்கள் போல இயற்கை இருந்தால் உங்களுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும். உங்களுக்கு மட்டுமா பயிர்கள் அழிந்தன. ஊரில் உள்ள அனைவர்களது வயலும் அழிந்தது தானே. அதற்காக எல்லோரும் தமது வயல் நிலத்தை விற்கவா போகின்றனர். மனதைத் திடப்படுத்தி உற்சாகமாக இந்த முறை விதையுங்கள். ஊக்கமாக உழைத்தால் கட்டாயம் முன்னேற்றம் உண்டு…” என்றது குதிரையின் மகள்.

“சரியம்மா, நீ சொல்வதை நான் கேட்கிறேன்” என்ற பன்றி மகிழ்வுடன் சென்று ஊக்கமாக உழைத்தது. அந்தமுறை சீரான மழை பெய்தமையால் எல்லோருக்கும் அமோக விளைச்சல் கிடைத்தது.

பன்றி, குதிரையின் மகளிடம் வாங்கிய பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சொன்னது, “நீ என்னை உற்சாகப்படுத்திப் பணம் தத்ததால் நெல்லை விதைத்தேன். இரண்டு வருட நட்டத்தோடு பெருந்தொகையான பணமும் கிடைத்தது. நான் சலிப்புற்று விதைக்காமல் விட்டிருந்தால் பெரும் நட்டத்தை அடைந்திருப்பேன். நீ சொன்ன புத்திமதியால் எனது மனம் திடமானது. இனிமேல் எந்தத் துன்பம் வந்தாலும் ஊக்கத்தைக் கைவிடமாட்டேன்”.

“மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது மாமா. தொடர்ந்து ஊக்கமாகச் செயற்படுங்கள்” என்றது குதிரையின் மகள்.

## 7. எண்ணெழுத்து இகழேல்



**கா**லையில் பாடசாலைக்குச் சென்ற குரங்குக்குட்டி இரவாகியும் வீட்டிற்கு வந்து சேராமையால் அதன் பெற்றோரும் உறவினரும் மிகுந்த கவலை அடைந்தனர். அது கற்கும் பாடசாலையின் அதிபரும் ஆசியர்களும் குரங்குக் குட்டியின் வீட்டுக்கு வந்திருந்தனர்.

**கு**ரங்குக் குட்டியின் கணித ஆசிரியர் சொன்னார், “குரங்குக் குட்டிக்குக் கணிதபாடமென்றால் பிடிக்காது” என்று சொன்னபோது தமிழ் ஆசிரியர் சொன்னால், “கணிதம் மட்டுமல்ல தமிழ்மொழியும் அதற்குப் பிடிக்காது. ழகர, ளகர வேறுபாடு தெரியாமையால் அது அடிக்கடி என்னிடம் திட்டு வாங்கும்”.

“**எ**னது எல்லாப் பிள்ளைகளும் படிப்பில் கெட்டிக்காரர்கள். இவன் மட்டும்தான் படிப்பதில்லை. இவனது சகோதரர்கள் புத்திமதி கூறுவதால் அவனுக்கு வீட்டில் இருக்கப் பிடிப்பதில்லை. பகல் முழுவதும் தேடிப்பார்த்து விட்டோம். அதைக் காணவில்லை. சகோதரர்கள் தீப்பந்தத்துடன் சென்றுள்ளனர்” என்றது தகப்பன் குரங்கு.

“**அ**வன் வராததால் நான் பகல் சாப்பிடவில்லை” என்று அழுதது தாய்க்குரங்கு.

“**தா**ய் தான் அதிகம் செல்லம் கொடுப்பது. முக்கியமாக அது செய்யும் குற்றங்களை மறைப்பது. சென்றவாரம் முழுவதும் அது பாடசாலைக்குச் செல்லவில்லை. நான் வெளியூருக்குச் சென்றமையால் அது வீட்டில் இருந்து விளையாடியது. அதிபர் என்னைத் தேடிவந்து சொன்னமையால் கண்டித்தேன். அது தான் அதற்குப் பிடிக்கவில்லை” என்றது அதன் தந்தை.

**கு**ரங்குக் குட்டியைக் காணாமையால் அதன் வீடு அல்லோல கல்லோப்பட்டுக் கொண்டிருந்தது.

**ந**டுக்காட்டில் குரங்குக் குட்டி தனியே நிற்பதை அவதானித்த யானை ஒன்று அதன் அருகில் வந்து, “மகனே நீயார்? வெகுநேரமாக இங்கே நிற்கிறாய். வீட்டில் ஏதாவது பிரச்சினையா?” என்று அன்போடு கேட்டது.

**கு**ரங்குக்கு அழுகை வந்து விட்டது. விக்கி விசும்பி அழுதது, “மகனே, அழாதை. உனது போக்கைப் பார்த்தால் நீ பாடசாலைக்குச் செல்லாமல் இங்கு வந்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். இந்த வயதில் கட்டாயம் படிக்க வேண்டும். படிக்காவிட்டால் எதிர்கால வாழ்வு சூனியமாகிவிடும். உன்னைப் போலத்தான் நானும், உனது வயதில் பாடசாலைக்குச் செல்லாது கட்டில் மறைந்திருந்தேன் எனது சகோதரர்கள் நன்றாகப் படித்து நல்ல தொழில் பார்க்கிறார்கள். நான் படிக்காததால் பெருங்கஷ்டப்படுகிறேன்” என்று மிகுந்த சோகத்துடன் கூறிய யானை பேசமுடியாமல் சில கணம் தவித்தது.

“**ம**கனே, எனது சகோதரர்கள் நன்றாகப் படித்து உயர்ந்த உத்தியோகம் பார்கிறார்கள் நான் படிக்காததால் எனக்கு ஒரு பலசரக்குக் கடை போட்டுத்தந்துனர். வாழ்வுக்கு ஆதாரமானது கல்வி. எந்தத்தொழில் பார்த்தாலும் எண்ணறிவும் எழுத்தறிவும் தேவை. என்னால் வியாபாரஞ் செய்ய முடியவில்லை. ஒருவர் இரண்டு மூன்று பொருட்கள் வாங்கினால் அதன் பெறுமதியை என்னால் கண்டுகொள்ள முடிவதில்லை. எனக்கு எழுதத்தெரியாது. கூட்டத்தெரியாது. இதனால் வியாபாரஞ் செசய்வதை எனது சகோதரர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் இப்போது நான் எதற்கும் அவர்களையே எதிர்பார்க்க வேண்டியுள்ளது. அதனால் ஏராளமான பிரச்சினைகள் தினமும் வருகின்றன. எனது சகோதரர்களின் பிள்ளைகள் எனக்கு எழுத வாசிக்கத் தெரியாதென்று சிரிக்கின்றனர். பெரிய அவமானமாக இருக்கிறது. அதனால் நீ படி படிக்காவிட்டால் பெருந்துன்பப்படுவால்” என்றது.

**கு**ரங்குக்குட்டி யோசித்துப் பார்த்தது. பிற்காலத்தில் தனக்கும் அந்த நிலை ஏற்பட்டுவிடும் என நினைத்தது.

“**ம**கனே, முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. அதனால் முயற்சி செய். இப்போது நான் பெரியவர்களிடம் கேட்டுப் படிக்கிறேன். முன்பு புரியாத கணிதம் இப்போது புரிகிறது. ஆறு மாதத்தில் கூட்டக் கழிக்க எழுதக் கற்றுவிட்டேன். இன்னும் சில மாதங்கள் கற்றால் நான் பழையபடி வியாபாரஞ் செய்ய ஆரம்பித்து விடுவேன். வா நான் உன்னை வீட்டில் கொண்டு சென்று விடுகிறேன். நன்றாகப்படி. ஓய்வான நேரத்தில் என்னிடம் வா” என்றது யானை.

“**இ**னி நான் கட்டாயம் படிப்பேன்” என்றது குரங்குக் குட்டி.

## 8. எற்பது இகழ்ச்சி



**ஒ**ட்டகம் காலையில் வேலைக்குப் புறப்பட்டபோது அதன் மனைவி சொன்னது, "நேற்று குரங்கு வந்து இன்று காட்டுப்பிள்ளையார் கோவிலில் தான் பெரியளவில் லட்சார்ச்சனை செய்யப்போவதாகவும் அப்போது மதிய உணவும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும், உடையும் கொடுக்கப்போவதாகவும் கூறிவிட்டுச் சென்றது. குரங்கு உங்களது பிரியமான நண்பன். அங்கு செல்லாமல் வேலைக்குப் போகிறீர்களா…?"

"**அ**ன்பானவளே, தகுதியானவர்கள் பிறரிடம் பொருட்களை வாங்குவது கூடாது. அதனால் தான் பெரியவர்கள், "ஏற்பது இகழ்ச்சி" என்று கூறியுள்ளனர். நாம் வசதியானவர்கள் ஏழைகளுக்கும், நோயாளர்களுக்கும், அங்கவீனர்களுக்கு கொடுத்துதவ வேண்டுமே தவிர வேறு யாரிடமும் வாங்குதல் கூடாது. கோவிலில் பூசை செய்யலாம். பிரசாதம் கொடுக்கலாம். பிரசாதம் என்பது சிறிதளவு கொடுப்பது நீறை, பூவை யாராவது அள்ளிக் கொடுப்பார்களா…?" என்று கேட்டது.

**ம**னைவி எதுவும் கூறாமையால் ஒட்டகம் சொன்னது, "தான தர்மம் செய்வுத பயன்கருதி. குரங்கு மிகவும் வசதியானது. அதன் பிள்ளைகள் நால்வர் வெளிநாட்டில் உள்ளனர். குரங்கு பெரும் வர்த்தகன். கலப்படம் செய்வதாகவும், பொருட்களைக் கூட்டி விற்பதாகவும் எல்லோரும் கதைக்கின்றனர். அதைவிட அதன் சகோதரி அன்றன்று உணவுக்கே மிகக் கஷ்டப்படுகிறாள். தான தர்மத்தில் விருப்பமிருந்தால் அவளுக்கு உதவலாம். அவளின் ஒர பெண்பிள்ளையைத் தனது மகனுக்குத் திருமணம் செய்துவைக்கலாம். பொருட்களில் கலப்படம் செய்யாதுவிடலாம். சகோதரியின் கணவன் விபத்தில் அகப்பட்டபோது குரங்கென்று பார்க்கவில்லை. நான் பலமுறை கூறியும் அது கேட்டவில்லை. இந்நிலையில் அவன் எனது நண்பனா?"

**அ**ப்போதும் ஒட்டகத்தின் மனைவி பேசவில்லை, "எனக்குப் பிறரிடம் பொருளை வாங்க விருப்பமில்லை. ஒட்டகம் தீயவழியில் பணத்தைச் சேகரித்துவிட்டு அதில் ஒரு பகுதியைப் புண்ணியம் பெறுவதற்காகத் தானம் செய்கிறது. அந்தப் பாவப் பணத்தைப் பெற்றால் எம்மையும் பாவம் சூழ்ந்துவிடும். கோவிலில் பிரசாதமானாலும் அது புனிதமானவனால்

கொடுக்கப்படுகிறதா என்று அறிந்த பின்பே வாங்கி உண்ணவேண்டும். அதனால் தான் பெரியவர்கள் ஏற்பது இகழ்ச்சி என்று கூறியுள்ளனர். தானதர்மம் செய்பவர்கள் அடுத்தவர்களுக்குச் சொல்லாது செய்தல் வேண்டும். சொன்னால் அது புகழுக்காகவும் பயன் கருதியுமே செய்யப்படுகிறது. இன்று பூசை முடிய இருவர் பேசுகின்றனர். இப்போது பேசுவோர் உயர்ந்த பதவியில் உள்ளவர்களை உயர்த்திப் பேசி இலாபமடையவே விரும்புகின்றனர்" என்றது ஒட்டகம்.

## ௯. ஐயம் இட்டு உண்



"**நீ**ங்கள் அறிவுள்ளவர். ஔவையார் ஏற்பது இகழ்ச்சி என்று கூறிவிட்டு அடுத்த குறளில் ஐயம் இட்டுண் என்று கூறியுள்ளார். இதன் அர்த்தமென்ன எனக்குக் குளப்பமாக உள்ளது" என்றது ஒட்டகத்தின் மனைவி.

"**நா**ன் மட்டுமல்ல நீரும் அறிவாளிதான். கணவனிடமும், உறவினர்களிடமும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளும் மனைவி கற்காவிட்டாலும் அறிவாளியாவாள். ஒருவர் சொல்வதைப் புரிந்து கொண்டால் மனமுறிவு, கோபதாபம் ஏற்படாது. முரண்பட்டால் மௌனமாக இருத்தல் வேண்டும். ஏற்றுக் கொண்டால் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். அது பெண்மைக்கு அழகையும் சிறப்பையும் உண்டாக்கும்".

"**ஏ**தாவது கேட்டால் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விடுவீர்கள். நான் கேட்டதற்கு மறுமொழியைச் சொல்லுங்கள்".

"**ஐ**யம் இட்டுண்" என்றால் நாம் உண்ணும் போது உணவை ஏனையோர்க்குக் கொடுத்து உண்ண வேண்டும். முன்பு ஒரு வீட்டில் விசேடமாக உணவுப் பண்டங்கள் செய்தால் அதை பலருக்கும் கொடுத்து அனுப்புவார்கள். அதுபோல மற்றவர்களும் கொடுப்பார்கள். இது சுவையாகத் தீன்பண்டங்களைச் செய்ய உதவும். உமக்கு ஆரம்பத்தில் வடையைச் சுவையாகச் செய்யத்தெரியாது. அதைக் குரங்கின் மனைவியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டீர். அப்படி நடந்தால் எல்லோரும் சுவையான உணவுகளை உண்ணலாம். அதோடு இயலாதவர்களுக்கு உதவுதல் வேண்டும். இயலாதவர்களுக்கு உதவுவது இறைவனுக்குக் கொடுக்கதற்கு ஒப்பானது. உணவைக் கொடுப்பது புண்ணியங்கள் யாவற்றிலும் தலைசிறந்தது.

நாம் குரங்குக்குக் கொடுத்தால் அது சில சமயம் உண்ணாமல் விடலாம். ஆனால் அதை ஏழைக்குக் கொடுத்தால் அவர்கள் மகிழ்வோடு ஏற்று உண்பர். நன்றியோடும் இருப்பர். ஒரு உத்தியோகத்தை மேலதிகாரி தகுதி பார்த்துக் கொடுப்பது போல தர்மம் செய்வோரும் தகுதிபார்த்துக் கொடுத்தல் வேண்டும்" என்றது ஒட்டகம்.

## 10. ஒப்புரவு ஒழுகு



**ஒ**ட்டகம் யானையின் வீட்டுக்கு வந்தபோது, யானை மாணவர்களுக்கு கணிதம் கற்பித்துக் கொண்டிருந்தது. அது ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று பின் தனது அயராத முயற்சியால் அதிபராகப் பதவி உயர்வுபெற்று ஊர்ப்பாடசாலையில் அதிபராகப் பல வருடங்கள் சிறந்தசேவையாற்றியது. அது ஓய்வு பெற்றபோதும் மாணவர்களுக்கு ஆங்கிலமும் கணிதமும் போதித்து வந்தது. அத்துடன் முதியவர்களுக்கு இராமாயாணம், பாரதம் முதலியவற்றை உபதேசித்துக் கொண்டிருந்தது.

**ஒ**ட்டகத்தைக் கண்ட யானை மாணவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு ஒட்டகத்தின் அருகே வந்தது, "நீங்கள் கற்பியுங்கள். நான் பிறகு வருவிறேன்" என்றது ஒட்டகம்.

"**இ**ல்லை வகுப்பு முடிவடையும் நேரம் வந்துவிட்டது. அதன்பின் கணிதபாடம் கற்க மாணவர்கள் வருவார்கள். இரவு முதியோர் வருவார்கள். நீங்கள் வந்த விசயத்தைச் சொல்லுங்கள்" என்றது யானை.

"**நீ**ங்கள் நல்லவர். பெரியவர். ஊருக்குத் தலைமைதாங்குபவர்" என்று ஒட்டகம் சொல்லும்போது யானை சொன்னது, "எனக்கு வீண்பேச்சுப் பிடிக்காது வந்த விசயத்தைச் சுருக்கமாகச் சொல்".

**சி**றிது தயங்கிய ஒட்டகம், "இப்ப பாடசாலை மிகவும் மோசமான நிலையை அடைந்துவிட்டது. இப்பகுதியில் சிறந்த பாடசாலையாக விளங்கிய எமது பாடசாலை சகல விடயங்களிலும் பின்தங்கிவிட்டது. அதற்குக் காரணம் அதிபரின் நடத்தை சரியில்லாமையே ஆகும்".

"**உ**ண்மைதான் நான் இதைப் பலநாட்டகாள எண்ணியுள்ளேன். அதிபர் எனது இனத்தவர். அதனால் நான் அவ்விடயத்தைக் கையில் எடுக்கவிரும்பவில்லை. இங்கு பலர் இருக்கிறார்கள்

நடவடிக்கை எடுத்திருக்கலாம்தானே. எல்லோருக்கும் முன்நிற்கப் பயம். யாராவது செய்யட்டும் நாம் ஏன் தலையிடுவான் என்று நினைக்கிறார்கள்" என்றது யானை.

"**அ**வரையும் பலர் விரும்புகிறார்கள்" என்று ஒட்டகம் சொல்லும்போது யானை குறுக்கிட்டுச் சொன்னது, "தீயவர்களுக்கும் நண்பர்கள் உண்டு. அவர்கள் பொருள் கொடுத்துப் பலரை வாங்கிவிடுவார்கள். ஆனால் நீதி என்ற ஒன்று உண்டு. எல்லோரும் நல்லது செய்யவேண்டும் என்று எண்ண வேண்டும். நான் வளர்த்த பாடசாலை அது. அது கெட்டுப்போவதை நான் விரும்பவில்லை. உலக நடைமுறையை ஏற்று நடப்பவன்தான் உண்மையானவன். எல்லோருக்கும் விருப்பமில்லை என்றால் எனக்கும் விருப்பமில்லை. நான் ஒப்புரவாளன். அதனால் உங்களோடு சேர்ந்து நானும் செயற்படுவேன்".

**ஒ**ட்டகம் அதை எதிர்பார்க்கவில்லை. யானை அதிபரின் நெருங்கிய உறவினன். அத்துடன் யானை செல்வாக்கு மிகுந்தது. அது அதிபருக்கு உதவினால் யாராலும் எதுவும் செய்யமுடியாது. அதனால் தான் எல்லோரும் தயங்கினர்.

**அ**திபரை இடமாற்றம் செய்யும்படி கல்வித் திணைக்களத்திற்குக் கடிதம் எழுதிய சில நாட்களுக்கு அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. மிருகங்கள் யாவும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தன. யானையைப் பாராட்டின.

## 11. ஓதுவது ஒழியேல்



**யா**னை மாலை வேளைகளில் முதியவர்களுக்கு இராமாயாணம், பாரதம், பெரியபுராணம் போன்றவற்றைப் பற்றிப் பேசும். கவர்ச்சிகரமாக யானை பேசுவதால் அயல்காடுகளில் வசிப்பவர்களும் அதன் பேச்சைக் கேட்க வருவார்கள். அவர்களுடன் அவர்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் வரும். யானை பேசத்தொடங்கினால் எல்லோரும் மிகவும் அமைதியாக இருந்து கேட்பார்கள். சிறுவர்களும் அவர் கூறும் கதையைக் கேட்ட பின்பு தமது இருப்பிடத்திற்குச் சென்று யானை பேசுவது போலப் பேசுவார்கள். அதனால் பெற்றோருக்கு மகிழ்ச்சியுண்டாகும். அதனால் பல பெற்றோர் தாம் வரும்போது பிள்ளைகளையும் அழைத்து வருவார்கள்.

**அ**ன்று யானை சொன்னது, “இன்று நான் பேசவில்லை எனது பிள்ளைகள் பேசுவார்கள். முதலில் தரம் ஐந்து படிக்கும் மான் பேசும்”.

**மா**ன்குட்டி துள்ளிக் குதித்து வந்து மேடையில் ஏறியது, “அன்பான எனது மாணவர்களே..” மான் பேச ஆரம்பித்ததும் சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்து சிரித்தனர்.

**அ**ப்போது யானை சொன்னது, “இது ஆயத்தப்படுத்திப் பேசவில்லை. நான் உங்களுக்குச் சொன்னதை மான்குட்டி உங்களுக்குச் சொல்கிறது. என் அருமைக் குட்டியே நீ பேசு” என்றது யானை.

**அ**ன்பான மாணவர்களே, நான் வயதான காலத்திலும் தினமும் கற்பிக்கிறேன். அத்துடன் கற்கிறேன். கற்பிப்பதால் எனக்கு உற்சாகம் பிறக்கிறது. கற்பதால் பல புதிய விடயங்களை அறியமுடிகிறது. ஒருவர் இறக்கும் வரை கற்க வேண்டும். நல்ல நூல்களைத் தேடித் தேடிக் கற்க வேண்டும். அதன்பின் என்னைப் போலக் கற்பிக்க வேண்டும். இராமாயாணக் கதையில் எந்த இடத்தில் நேற்று நான் விட்டேன்”.

**மு**யல் குட்டி எழுந்து சொன்னது, “இராமன் தந்தையின் விருப்பத்திற்கேற்பக் காட்டுக்குச் செல்ல ஆயத்தமாகிறான். என்ற இடத்தில் விட்டீர்கள்”

“**அ**ப்படியா?” என்று கேட்டுவிட்டு மேலே பேசமுடியாது தடுமாறியது மான். யானை மான் குட்டிக்கு அருகே வந்து அதனை அணைத்து முத்தமிட்டுவிட்டுத் தனது முதுகின்மேல் ஏற்றியது. சபையில் உள்ளோர் தம்மை மறந்து மகிழ்ச்சியாரவாரம் செய்தனர்.

“**எ**ன்னைப் போலவே பேசுகிறான். நான் பேசியதை இரசித்துப் பாடமாக்கி என்னைப் போலவே பேசிய மான்குட்டியை நான் பாராட்டுகிறேன். எல்லோரும் இவ்வாறு வெக்கம் இன்றியும் சபைக்கூச்சமின்றியும் பேசவேண்டும்” என்று கூறிய யானை ஓர் இனிப்புப் பொட்டலத்தை மானுக்குப் பரிசாகக் கொடுத்தது.

## 12. ஔவியம் பேசேல்



**மா**ன் நன்றாகப் படிக்கக் கூடியது. ஆனால் ஏழையின் மகன். நரி படிக்க முயற்சிக்காது விளையாடிக்கொண்டு திரியும். ஆனால் அது பெரும் பணக்காரரின் மகன். பாடசாலைத் தேவைகளுக்கு நரிக்குட்டியின் தகப்பன் கணக்குப்பாராது அள்ளிக் கொடுப்பார். அதனால் நரிக்குட்டியை அதிபரும்

ஆசிரியர்களும் விரும்பினர். மான்குட்டி நன்றாகப் படிக்கும். பாடம் சம்பந்தமான போட்டிகளில் கலந்து முதற்பரிசை வெல்லும். அதனால் நரிக்குட்டியின் மீதும் அதிபரும் ஆசிரியர்களும் அதிக அன்புவைத்திருந்தனர். எதற்கெடுத்தாலும் ஆசிரியர்கள் மான்குட்டியைத் தான் கேட்பார்கள். மான்குட்டி மாவட்டமட்டப் போட்டிகளிலும் கலந்து முதற்பரிசு வாங்கும்.

**இ**து நரிக்குட்டியின் தாய்க்குப் பிடிப்பதில்லை. மானின் தந்தை நரியின் வீட்டில் கூலிவேலைகள் செய்பவர். சில சமயங்களில் நல்ல பொருட்கள் வெளியே இருந்தால் அதை எடுத்துச் சென்று விடுவார்.

**ந**ரிக்குட்டியின் தாய் மான்குட்டியின் மீது பொறாமை கொண்டு தனது மகனை அடிக்கடி ஏசும். பணம் கொடாது. நல்ல உணவு கொடுக்கும் போதும், “நீ சாப்பிடத்தான் லயக்கு. கூலிவேலை செய்யும் மானின் குட்டி படிப்பதைப் போல உன்னால் ஏன் படிக்க முடியவில்லை” என்று ஏசிவிட்டே கொடுக்கும். அதனால் வேதனைப்பட்ட நரிக்குட்டி மான்குட்டியைப் பழிவாங்குவதற்காக குரங்கின் பேனாவை எடுத்து நரிக்குட்டியின் புத்தகப்பைக்குள் மறைத்து வைத்தது.

**கு**ரங்கு தனது பேனாவைக் காணவில்லை என்று வகுப்பாசிரியரிடம் கூற வகுப்பாசிரியர் வகுப்பில் உள்ள மாணவர்களின் புத்தகப்பைகளைச் சோதனையிட்ட போது மானின் புத்தகப்பைக்குள் குரங்கின் பேனா இருப்பதைக் கண்டு அதை அதிபரிடம் அனுப்பிவைத்தார்.

**மா**ன் குட்டிக்கு வேதனையைத் தாங்க முடியவில்லை. தான் எடுக்கவில்லை என்று சத்தியம் செய்ததோடு அது விம்மி விம்மி அழுதது. அதனால் கவலைப்பட்ட அதிபர் வகுப்பறைக்கு வந்து மாணவர்களே இந்தப் பருவத்தில் களவெடுக்கக்கூடாது, பொறாமைப்படக் கூடாது, நல்லபிள்ளைகளாக வாழுங்கள். குரங்கின் பேனாவை எடுத்து மானின் புத்தகப் பைக்குள்ப் போட்டது யார்? இது மான்குட்டியின் மீது பொறாமைப்பட்ட ஒருவரின் வேலை” என்றபோது நரிக்குட்டி சொன்னது, “மானின் தந்தை களவெடுப்பவர். அவர் எமது வீட்டில் களவெடுத்து அகப்பட்டவர். அதனால் மான்குட்டி எடுத்திருக்கும்”.

**அ**ந்தப் பதிலால் அதிபருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது, உங்களுக்கு உண்மையைச் சொல்லப் பயமாக இருந்தால் நான் ஒரு காகிதம் தருகிறேன். அதில் களவெடுத்தவர் யார் என்பதை எழுதி இந்தப் பெட்டிக்குள் போடுங்கள். நான் யாருக்கும் கூறமாட்டேன். பொய்சொல்வது பாவம். பொய் சொல்பவனைக் கடவுள் தண்டிப்பார். பொய் சொன்னவனின் வாய்க்குப் பொரி கூடக்கிடைக்காது கஷ்டப்படுவான். நாகலோகம் தான் அவன் செல்வான். அங்கு அவனைக் கொதிக்கும் எண்ணெய்க்குள்ப் போட்டு வாட்டுவர். நாக்கைத் தீக்கோலால் சுடுவர்” என்றார் அதிபர்.

நரிக்குட்டி பயத்தால் நடுநடுங்கியது. அதன் உடல் வியர்த்தது. அது அதிபர் கொடுத்த காயிதத்தில், “நான் தான் குரங்கின் பேனாவை எடுத்து மானின் புத்தகப்பைக்குள் வைத்தேன். என்னைக் காட்டிக் கொடுக்க வேண்டாம்” என்று எழுதியிருந்தது.

அதிபர் அதை வாசித்துவிட்டு மான்குட்டி பேனாவைத் திருடவில்லை” என்று சொல்லி மான்குட்டியைப் பாராட்டினார். பின்பு, “உண்மையைச் சொன்னவரை நான் பாராட்டுகிறேன். தவறுதலாக ஆசைப்பட்டு எடுத்தாலும் உண்மையை ஒப்புக்கொள்பவன் சிறந்தவன். அதனால் கடிதத்தை எழுதியவனை மிகவும் பாராட்டுகிறேன்” என்றார்.

வீட்டுக்கு வந்த மான்குட்டி தகப்பன் செய்த செயலைச் சொல்லிவிட்டு விம்மி விம்மி அழுதது. அதனால் கவலைப்பட்ட தகப்பன் மகனிடம் வந்து, “என்னை மன்னித்துக்கொள். இவ்வாறு நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இனிமேல் நான் எக்காரணம் கொண்டும் திருடமாட்டேன்” என்று சத்தியம் செய்தது.

## 13. அஃகம் சுருக்கேல்



நரி ஒரு பெரிய வர்த்தகர். ஊரில் பல்வேறு விதமான பொருட்களை விற்பதற்குப் பல கடைகளைத் திறந்து வைத்திருக்கிறது. அன்று காலை ஒன்பது மணிக்கு பன்றி பொருட்களை வாங்க வந்தது. கடை திறக்கப்படவில்லை. வெளியே நின்ற ஒருவரிடம், “இன்று கடை திறக்கப்படுமா?” என்று கேட்டது.

“பத்து மணிக்குத்தான் திறப்போம் நான் இங்கு வேலை செய்பவன்” என்றது முயல்.

பலசரக்குக்கடை யாதலால் பலரும் பொருட்களை வாங்க வருவார்கள். பத்து மணிவரை காத்திருக்க முடியுமா?” என்று கேட்டது பன்றி.

“அதை முதலாளியைத் தான் கேட்க வேண்டும். விடியற்காலையில் பரதேசிபோல வந்து நின்று கதைக்கிறாய். நீ யார்? உன்னை நான் இதற்குமுன் காணவில்லை” என்றது முயல்.

“நீ சொன்னது போல நான் பரதேசிதான். இவ்வூரில் வசிக்கும் பண்டிதர் முன்பு எமது ஊரில் கற்பித்தவர். அவரின் மாணவன் நான். அவரைத் தான் பார்க்க வந்தேன்” என்றது பன்றி.

“போய்ப் பார்க்க வேண்டியது தானே. இங்கே ஏன் நின்று தேவையில்லாமல் கதைக்கிறாய்” என்றது முயல்.

“அவர் ஒரு நல்ல ஆசிரியர். அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாக அறிந்தேன். அதுதான் பார்க்க வந்தேன். ஆசிரியர் அத்துடன் நோயாளி. அதனால் ஏதாவது வாங்கிச் சென்று கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் நிற்கிறேன்” என்றது பன்றி.

பத்துமணிக்கு நரி வந்து கடையைத் திறந்தது. கடை திறக்குமுன்பே பொருட்களை வாங்கப் பலர் கூடி நின்றனர். நரி கடையைத் திறந்ததும் பலர் முண்டியடித்துப் பொருட்களை வாங்கினர்.

பன்றி ஆறுதலாக நின்றதைக் கண்ட முயல் சொன்னது, “ஐயா, நேரத்திற்கே வந்து காத்திருக்கிறீர்கள். என்ன வேண்டும் சொல்லுங்கோ”

ஒரு கிலோ பயறு, ஒரு கிலோ உழுந்து, ஒரு கிலோ அரிசி, ஒரு பால்மா பைக்கற்” என்றது பன்றி.

பொருட்களை நிறுத்த முயல் அவற்றைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு ஆயிரத்து முன்நூற்று முப்பத்தைந்து ரூபா. முதலாளியிடம் கொடுங்கள்” என்றது.

பன்றி காசைக் கொடுத்துவிட்டு, “ஐயா, எனது மனைவி மிகவும் பொல்லாதவள். நான் சொல்வதை நம்பமாட்டாள். அதனால் பெரிய பிரச்சினை வரும். ஒரு பற்றுச்சீட்டுத் தாருங்கள்” என்று கேட்டது.

முயல் பற்றுச் சீட்டைக் கொடுத்ததும் விசிலை எடுத்து ஊத நாலைந்து பேர் நல்ல அழகான உடைகளுடன் அங்கு வந்தனர்.

“நாங்கள் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள். நீங்கள் தானியங்களை விற்கும்போது நிறைகுறைத்தும், கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலாகவும் விற்பதாக எமக்குப் பலர் புகாரிட்டுள்ளனர். இப்போது நான் வாங்கிய பொருட்கள் மூன்றிலும் இருபது ரூபா அதிகமாகப் பெற்றுள்ளீர்கள் நிறையும் ஐம்பது கிராம் அளவில் குறைகிறது. அதனால் உமது வர்த்தக நிறுவனத்தை மூடிச் சீல்வைக்கிறோம். தானியங்கள் மட்டும்மல்ல எந்தப்பொருளையும் விலை கூட்டி விற்கக் கூடாது. நிறை குறைத்தும் விற்கக் கூடாது. அதனால் தங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றுக்கு வந்து உரிய தொகையைத் தண்டப்பணமாகக் கட்டவும். நீதிபதி யாவற்றையும் சொல்வார்” என்றது பன்றி.

“பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்” என்று நினைத்தது முயல்.

## 14. கண்டு ஒன்று சொல்லேல்



பன்றியின் நெல் வயலுள் மான் புகுந்து பயிர்களை மேய்ந்ததோடல்லாமல் அதை நாசமும் செய்திருந்தது. பன்றி வந்து வயலைப் பார்த்தபோது அதற்குப் பெரும்வேதனை ஏற்பட்டது. அது மிகுந்த சோகத்துடன் வந்தபோது வழியில் எருமையைக் கண்டது. எருமை அதன் நண்பன் இல்லாவிட்டாலும் காணும் இடங்களில் கலகலப்பாகக் கதைப்பது.

“எருமையாரே, எனது நெல் வயலுள் இரவு யாரோ நுழைந்து நாசம் செய்து விட்டனர்” என்று துக்கப்பட்டது. உடனே எருமைக்குக் காட்டு எருதைப் பழிவாங்க வேண்டும் என்ற நினைப்பு உண்டானது. காட்டு எருது எந்நாளும் குளித்துச் சுத்தமாக இருக்கும். அதற்கு எருமையைப் பிடிக்காது. குளத்தைக் கலக்கி விட்டே குளிக்கும். குளித்த பின்பு வெளியே வந்து மேலை உதறும். அப்போது எருமையின் உடலில் உள்ள சேறு எங்கும் தெறித்துப் பரவும். அதனால் காட்டு எருது எருமைக்கு அருகில் வராது, “நீ மற்றவர்களுக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை குளித்துவிட்டு வெளியேறி உனது மேலில் படிந்துள்ள அழுக்கை மற்றவர்களுக்குப் படாமல் வைத்திரு. உன்னைக் கண்டதும் எல்லோரும் விலகிச் செல்கின்றனர்” என்று சொல்லும். அதனால் காட்டெருதைப் பழிவாங்க எருமை நினைத்தது.

“பன்றியாரே, நான் நேற்று மாலை எனது வயலைப் பார்த்துவிட்டு வரும்போது உமது வயலுக்குள் காட்டெருது நின்றதைக் கண்டேன்” என்றது.

பன்றிக்குக் காட்டெருதையும் பிடிக்காது. பன்றியும் சேற்றைக் கலக்கிய பின்புதான் குளிக்கும். அது குளித்த பின்பும் அழுக்காகவே இருக்கும். அதனால் காட்டெருது பன்றியைக் கண்டாலும் விலகிச் சென்றுவிடும்.

பன்றிக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. அதன் இனத்தவர் ஒருவர் தான் காவல்துறை அதிகாரி. பன்றி சென்று காவல்துறை அதிகாரிக்கு முறையிட்ட போது

காவல்துறை அதிகாரி சொன்னார், “பயிரை அழிப்பது கொலைக்குச் சமனானது. நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்” என்று கூறிக் காட்டு எருதைக் கைது செய்தார்.

**கா**ட்டெருதைக் கைது செய்தமையால் வேதனைப்பட்ட யானை காவல்துறை அலுவலகத்திற்கு வந்து காவல்துறை அதிகாரிக்குச் சொன்னது, “ஐயா, காட்டெருது ஒழுக்கமானது. பண்பானது. மற்றவர்களுக்கு துன்பம் செய்யாதது. எருமை ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் சொல்லியிருக்கிறது. அதைத் தீரவிசாரித்து நடவடிக்கை எடுங்கள்” என்றது.

**கா**வல்துறை அதிகாரி பலரிடமும் விசாரித்தபோதும் ஒருவரும் காட்டெருதைப் பற்றிக் குறையாகச் சொல்லவில்லை. காட்டெருதின் நண்பன் குரங்கு. அது வந்து எருமைக்குச் சொன்னது, “நண்பா, காவல்துறை அதிகாரி மிகவும் நல்லவர். அவருக்குக் குற்றம் செய்பவர்களைப் பிடிக்காது. அவர்களுக்குப் பெருந்தண்டனை கொடுப்பார். நீ பொய் சொல்லியிருந்தால் கட்டாயம் சிறைத்தண்டனை தான் கிடைக்கும். நீ சிறைக்குச் சென்றால் உனது குடும்பத்தின் நிலை என்ன? எல்லோரையும் பகைத்திருக்கிறாய். அதனால் யாரும் உனக்கு உதவமாட்டார்கள். பாவம் உனது மனைவியும், பிள்ளைகளும்” என்று சொல்லிவிட்டுச் சென்றது.

**அ**தைக்கேட்ட பின்பு எருமைக்குத் தூக்கம் வரவில்லை. அது தனக்குத் தெரிந்தவர்களிடம் காவல்துறை அதிகாரியைப் பற்றி விசாரித்தது. எல்லோரும் அவர் நேர்மையானவர். ஒழுக்கமானவர். குற்றம் செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவர் என்று கூறினர். அதன்பின் எருமைக்கு நிம்மதி இல்லாமல் போய்விட்டது.

**அ**ன்று இரவு காவல்துறை அலுவலர்கள் வந்து எருமையைக் காவல்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். எருமை காவல்துறை அதிகாரியைப் பார்த்தது. அவரின் தோற்றம் எருமைக்குப் பயத்தையூட்டியது.

**கா**வல்துறை அதிகாரி எருமையை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “நீ காட்டெருது பன்றியின் வயலுள் நின்றதைப் பார்த்தாயா…?”

**எ**ருமை தடுமாறியது. உடனே அதனால் பதில் சொல்ல முடியவில்லை, “என்ன பேசாமல் நிற்கிறாய். பார்த்தாயா?” அதட்டியபடி எழுந்தார்.

“**எ**ருமையாரே கண்டதைக் கண்டபடி கூற வேண்டும். இல்லாவிட்டால் உமக்குத் தண்டனை தான் கிடைக்கும். எப்போ, எந்நேரம் கண்டீர்”.

**எ**ருமை நடுங்கியது. அதனால் பதில் சொல்ல முடியவில்லை. அதன் நிலையைக் கண்ட காவல்துறை அதிகாரி, “நீ பொய் சொல்கிறாய். காட்டெருது வயலில் மேயவில்லை. நீ சொன்ன நேரம் அது யானையின் வீட்டில் இருந்தது. அதற்குச் சாட்சி உண்டு. உண்மையைச் சொல்” என்று தான்வைத்திருந்த கம்பை எருமையின் முதுகின்மேல் வைத்தார்.

**எ**ருமைக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நடுங்கியவாறு, “நான் பொய் சொல்லிவிட்டேன். என்னை மன்னியுங்கள்” என்று நடுங்கியது.

“**நீ** பொய் சொல்கிறாய் என்று எனக்குத் தெரியும். உனக்கு நான் கடுமையாக தண்டனை தருவேன்” என்றார் காவல்துறை அதிகாரி.

**சி**ல நாட்களின் பின் மானைக் கைது செய்த காவல்துறை அதிகாரி, “விவவசாயத்திணைக்களம் பன்றியின் நெல் வயலின் அழிவுக்கான நட்டஈட்டை அறிவிக்கும் அதைக் கட்ட வேண்டும். கட்டாவிட்டால் சிறையில் அடைக்கப்படுவாய்” என்றார்.

## 15. நப்போல் வளை



**ந**ரி மிகுந்த துக்கத்துடன் வந்து தனது நண்பனான ஒட்டகத்திற்குச் சொன்னது, “நண்பா, எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. என்னைக் காதலித்துத் திருமணம் செய்த மனைவி எனது தொந்தரவுகளைத் தாங்க முடியவில்லையாம். அதனால் தனது தாய்வீட்டுக்குச் செல்லப்போறேன் என்று சென்றுவிட்டாள். மனைவியும் பிள்ளைகளும் எனக்குச் சொல்லாமற் போனதால் நான் மத்தியானம் சாப்பிடுவதற்காக வீட்டுக்குச் சென்றேன். அம்மா வேண்டா வெறுப்பாக வரவேற்று பெற்ற கடனுக்காக இன்று மட்டும் உணவு தருகிறேன். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுப்பது வயதான காலங்களில் பெற்றோரைப் பார்ப்பார்கள் என்பதற்காகத்தான். எனக்கு எத்தனை வருத்தங்கள் இருக்கென்று உனக்குத் தெரியும். மனைவியோடு பிரச்சினைப்படுபவன் பிறகு என்ன நடக்கும் என்பதை யோசிக்க வேண்டும். உனக்கு எந்தவிதமான நல்ல பண்புகளும் இல்லை. அதனால் தான் அவள் விட்டு விட்டுச் சென்றவள். சமைத்துச் சாப்பிடு” என்கிறா.

**ஒ**ட்டகம் எதுவும் பேசவில்லை. அதன் அருகில் நின்ற ஒட்டகத்தின் நண்பனான முயல் சொன்னது, "உன்னுடைய நடத்தை சரியில்லாததால் தான் உன்னை எல்லோரும் வெறுக்கின்றனர். எனக்கே உன்னைப் பிடிக்கவில்லை. நீ பண்பாக மற்றவர்களுடன் பழகினால் எல்லோரும் உன்னை விரும்புவர்".

"**எ**ன்னோடு சம்பந்தப்பட்ட எல்லோரும் என்னை வெறுக்கின்றனர். ஒட்டகம் மட்டும் தான் என்னுடன் அன்பாக உறவாடுகிறது" என்றது நரி.

**ஒ**ட்டகம் "ங" என்ற எழுத்தைப் போன்றது. 'ங' என்ற எழுத்து தன் இன எழுத்துக்கள் பதினொன்றுக்கும் பல வழிகளிலும் வளைந்து கொடுத்து உதவுகிறது. அதன் இன எழுத்துக்கள் சொற்களில் வருவதில்லை. எனினும் அவை 'ங' என்னும் முதல் எழுத்தினால் தமிழ் நெடுங்கணக்கில் நிலைபெற்றுள்ளன. அது போலத்தான் ஒட்டகமும் வளைந்து நெளிந்து கொடுத்து உதவுகிறது. அதுபோல எல்லோரும் நடக்கமாட்டார்கள்" என்றது முயல்.

"**மு**யல் சொல்வது தான் உண்மை. உனது இனத்தவர்கள், வேண்டியவர்கள் எவ்வளவு நாட்களுக்குத்தான் பொறுமையுடன் இருப்பார்கள். அதனால் அவர்கள் பொறுமையை இழந்து உன்னை விட்டுச் சென்றுள்ளனர். நான் உன்னுடன் மிக்க விருப்புடன் பழகவில்லை. 'ங' என்ற எழுத்துப் போல வளைந்து கொடுத்துப் பழகுறேன்" என்றது ஒட்டகம்.

## 16. ஞயம்பட உரை



**மு**யல் சென்று விட்டது. நரி பசியுடன் இருப்பதை உணர்ந்த ஒட்டகம் ஒரு தட்டில் உணவு கொண்டு வந்து கொடுத்தது. அதை வாங்கி நரி உண்டது. அது உண்டு முடித்தபின் ஒட்டகம் சொன்னது.

"**ந**ண்பா, உன்னை உனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள், இனத்தவர், நண்பர்கள் எவருக்கும் பிடிப்பதில்லை. காரணம் நீ ஒருவருடனாவது நல்ல முறையில் பழகுவதில்லை. நன்றாக உழைக்கிறாய். அதை உனது குடும்பத்திற்குச் செலவு செய்யாது சூதாடுகிறாய். சூதாடுவது மிகவும் பாவமானது. ஒருமுறை பணம் வரும். பலமுறை பணம் போய்விடும். அதனால் உனது குடும்பத்திற்கு நீ பணங்கொடுப்பதில்லை. ஆனால் சாப்பாட்டுக்குச் செல்கிறாய். மனைவியோடும் பிள்ளைகளோடும் பிரச்சினைப்படுகிறாய். அதனால் தான் அவர்கள் உன்னை வெறுக்கின்றனர்".

**ஒ**ட்டகம் நரியைப் பார்த்தது. நரி அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் பொறுமையோடு சொன்னது.

“**ந**ண்பா, நான் சொல்வது உனக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். இருப்பினும் உனது நன்மைக்காகச் சொல்கிறேன். தாய், மனைவி, பிள்ளைகள் என்றாலும் உனக்கு இயலாமை ஏற்பட்டால் தான் உணவு தருவார்கள். குடும்பத்திற்கு உதவாதவர்களை மதிக்கமாட்டார்கள். உனக்கு உணவு தந்தால் உழைக்கும் காசு முழுவதையும் சூதாடி விடுவாய். அதனால் தான் உனது தாயே உனக்கு உணவு தரவில்லை. இன்று நீ பசியோடு வந்ததால் நான் உணவு தந்தேன். இனிமேல் தரமாட்டேன். உனக்கு உணவு தந்தால் உனது குடும்பத்தினர் என்னைக் குறைகூறுவார்கள். உன்னோடு நான் பழகுவது யாருக்கும் பிடிப்பதில்லை. அதனால் தான் முயல் எழுந்து சென்றது. எனது மனைவியும் பிள்ளைகளும் உனக்கு உணவு தந்தமைக்காக என்னை ஏசுவர்”.

**ந**ரி யோசித்துக் கொண்டிருந்ததே தவிரப் பேசவில்லை, “தானதர்மம் செய்வது புண்ணியம். பொருத்தமற்றவர்களுக்குத் தானதர்மம் செய்தால் அது பாவத்தைத் தான் உண்டுபண்ணும். இது உனக்குத் தெரியாதா என்ன?

“**உ**ண்மை தான் நண்பா எல்லோரும் என்னை வெறுப்பதற்குக் காரணம் எனது நடத்தை தான். நீ தான் ஞயம்படச் சொன்னாய். மற்றவர்கள் கோபத்துடன் சொல்வார்கள். கேலியாகச் சொல்வார்கள். அதனால் அவர்கள் மீது எனக்குக் கோபம் வரும். நீ அன்பாகச் சொன்னதால் அதை ஏற்கிறேன்” என்றது நரி. அதைக்கேட்க ஒட்டகத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

## 17. சனிநீராடேல்



**அ**ன்று சனிக்கிழமை அதிகாலை முதல் அக்காட்டில் வசிக்கும் மிருகங்கள் எல்லாம் உச்சுவில் குளக்கட்டில் அமர்ந்திருந்தன. குட்டிகளுக்கு பெற்றோர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தனர். முதியவர்களுக்குப் பிள்ளைகள் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தனர். வாலிபர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தமக்குத் தாமே எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தனர். சிறுவர்களும் சிறுமிகளும் பெரும் சத்தத்துடன் அழுது கொண்டிருந்தனர். அவர்களுக்கு பெற்றோர் உடலெங்கும் எண்ணெய் தேய்க்கும்போது, எண்ணெய் அவர்களது கண்களுக்குள்ச் சென்றதால் கண் எரிந்தது. அதனால் அவர்கள்

அழுது கொண்டிருந்தனர். உடலெங்கும் எண்ணெய் தேய்த்தவர்கள் குளத்தில் நீந்தி விளையாடினர்.

**கு**ளக்கட்டில் படுத்திருந்த சிங்கராசாவுக்கு நரியும், ஓநாயும் அதனது பிள்ளைகளும் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தனர். அது தேவைக்கேற்றவாறு உருண்டு பிரண்டு தனது உடல் முழுவதற்கும் எண்ணெய் தேய்ப்பித்துக் கொண்டது.

**ஒ**வ்வொரு சனிக்கிழமையும் ஒருவரும் வேலைகளுக்குச் செல்வதில்லை. அன்று முழுமையான ஓய்வுநாள். காலையில் நன்றாக நல்லெண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். நல்லெண்ணெய்யில் மருத்துவக் குணங்கள் அதிகமுண்டு. அது சூட்டைத் தனிக்கும். சுறு சுறுப்பைக்கொடுக்கும். சூட்டு நோய்களை மாற்றும். ஆரோக்கியத்தைக் கொடுக்கும். மனவளர்ச்சியைத் தூண்டும். தோலில் உண்டான சிறு சிறு காயங்களையும், பருக்களையும் மாற்றும். தேமல்களை மாற்றும். கிருமிகளை உள்ளே செல்லவிடாது. அதனால் எல்லோரும் சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும் என்று வைத்தியர் கூறியதால் சிங்கராசா அதைச் சட்டமாக்கினார். அதனால் எல்லோரும் எண்ணெய் தேய்த்து நீராடினர்.

**நீ**ராடிய பின்பு நல்ல சுவையான உணவு வகைகளைத் தயாரித்து குடும்பத்தினருடன் ஒன்றாக அமர்ந்து உணவை உண்பர். அதனால் குடும்பத்தில் அன்பு, பாசம், பற்று என்பன உண்டாகும். குடும்பத்தினரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியும். மாலை நேரங்களில் விரும்பியோர் சுற்றுலா செல்வர். சிலர் விளையாடுவர். சுருக்கமாகச் சொன்னால் சிங்கம் சனிக்கிழமைகளில் கட்டாயம் எண்ணெய் தேய்த்து நீராடவேண்டும் என்று கட்டளையிட்ட பின்பு நோய்கள் குறைந்து விட்டன. குடும்பங்கள் தமது உறவினர்களுடன் அன்பாக உறவாடி பாசத்தை வெளிப்படுத்தின.

**மா**லை நேரம் சிங்கராசா உலாவருவார். அப்போது மிருகங்கள் யாவும் அவருடன் உரையாடி, உறவாடி மகிழ்வடையும்.

## 18. இடம்பட வீடு எடேல்



**மா**ன் மிகவும் வசதியானது. பெரும் வர்த்தனர், அது தனது மகனுக்கு ஒரு வீடு கட்டவிரும்பியது. சோதிடரான புலியிடம் சென்று ஆலோசனை கேட்டது.

"**நீ**ங்கள் பெரிய வர்த்தகர் வாடிக்கையாளர் அதிகம். அதுபோல உற்றார், உறவினர்களும் அதிகம்.

நண்பர்களும் அதிகம். சிலசமயம் பண்டசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டால் வீட்டில் பொருட்களைக் கொண்டு வந்து சில நாட்களுக்கு வைக்கலாம். நம் முன்னோர் இடம்பட வீடு எடேல் என்று சொல்லியுள்ளனர். இதன் அர்த்தம் என்னவென்றால் தனது தேவைக்குத் தகுந்தளவு வீட்டைத் தான் கட்டுதல் வேண்டும். தாங்கள் பெருந்தனவந்தர். அதற்கமைய வீட்டின் அமைப்பைத் தரவா? அல்லது சிறிதாகக் கட்டப் போகிறீர்களா?. தங்கள் மகனுக்குத் திருமணமானால் அவரும் மனைவியும் இருப்பர். பின் பிள்ளைகள் மூன்று நான்கு பிறக்கும். அப்படியானால் ஓர் அளவான வீடு போதும். பெரிதாகக் கட்டினால் பராமரிக்க முடியாது" என்றது புலி.

"**அ**வனுக்குச் சொத்தைப் பிரித்துக் கொடுத்து ஒரு வர்த்தக நிலையம் அமைத்துக் கொடுக்கவுள்ளேன். அதற்குப் பொருத்தமான வீட்டை அமைக்க விரும்புகிறேன்" என்றது மான்.

**மா**னுக்கு அதன் தொழிலுக்கேற்ற வீட்டைக் கட்டப் படம் வரைந்து கொடுத்தது புலி.

**சி**ல நாட்கள் கழிய ஒரு எருது புலியிடம் வந்து தனது மூத்த மகனின் சாதகத்தைக் கொடுத்து எனக்கொரு வீடு கட்ட விருப்பம். பொருத்தமான ஒரு அமைப்பைத் தாருங்கள்" என்றது.

"**உ**னக்கு எத்தனை பிள்ளைகள்"

"**அ**வன் ஒருவன் தான்"

"**தி**ருமணம் செய்து விட்டானா? செய்தால் எத்தனை பிள்ளைகள்"

"**தி**ருமணம் செய்து ஐந்து வருடங்கள். ஒரு பெண்பிள்ளை இருக்கு".

"**உ**னது மகனுடன் அவனது மனைவியின் பெற்றோர் இருப்பார்களா..?"

"**இ**ல்லை அவர்களுக்கு வீடு இருக்கிறது".

"**நீ**யும் மனைவியும் அவர்களுடன் இருப்பீர்களா?"

"**இ**ல்லை எமக்கு வீடு இருக்கிறது".

"அப்ப ஒரு சிறிய வீடு போதும்".

"**இ**ல்லை ஐயா, அவன் வசதியானவன். மிகப்பெரிய வீடாகக் கட்ட வேண்டும்"

“மகனே, இடம்பட வீடு எடேல் என்று நம் மூத்தோர் சொல்லியுள்ளனர். வீடு கட்டுவது பெரிதல்ல. அதைப் பராமரிப்பது தான் சிரமமானது. வீட்டை உரிய முறையில் பராமரிக்காது விட்டால் பாம்பு போன்ற விசயந்துக்கள் உள்ளே நுழைந்திருந்தாலும் தெரியாது. கிருமிகள் இருக்கும். சிறு பூச்சி, புழுக்கள், எலி போன்றன நுழையும். இவ்வாறு பல பிரச்சினைகள் இருப்பதால் தான் குடும்ப உறுப்பினர்க்கேற்ப வீடு அமைத்தல் வேண்டும் என்று சொல்லியுள்ளனர். அளவாகக் கட்டும்போது பின்பு தேவைக்கேற்றபடி கட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது தான் சிறப்பானது. தேவையேற்படும் போது வீட்டைப் பெருப்பிக்கும் வசதியுடன் உனக்கு வீட்டை அமைத்துத் தருகிறேன். அதை நீ இப்போதும் கட்டலாம். பின்பு தேவையேற்படும் போதும் கட்டலாம்” என்றது புலி.

“சரி ஐயா” என்றது எருது.

## 19. இணக்கம் அறிந்து இணங்கு



எருமை நரியுடன் கதைத்து விட்டு வீட்டுக்கு வரும்போது இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. தனது கணவனின் வருகைக்காகச் சாப்பிடாது காத்திருந்த எருமையின் மனைவிக்குக் கடுமையாகப் பசித்தது. எருமை நரியுடன் நட்புப் பூண்டபின்பு தினமும் இவ்வாறு தான் வருகிறது. இனிமேலும் இதைப் பொறுக்க முடியாது இன்று இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று பெண் எருமை நினைத்தது.

பத்தரை மணிக்கு எருமை வந்து கால்முகம் கழுவி விட்டுச் சாப்பிட அமர்ந்தபோது பெண் எருமை சொன்னது, “ஒருவருக்கு நண்பர்கள் இருப்பது இயல்பு. ஆனால் அந்த நண்பருடன் குடும்பத்தை மறந்து இரவு பத்து பதினொரு மணிவரை கூடியிருப்பது நல்லதல்ல. அது ஆபத்தையும் தரும். நான் விசாரித்துப் பார்த்தளவில் நரி நல்ல குணமுடையது அல்ல. கரடியும், புலியும் உனது கணவனை நரியுடன் சேரவிடாதே. நரி திருடன். நல்ல பண்புகள் எதுவும் இல்லாதவன். நாளைக்கு ஏதாவது தீமை நடந்தால் அது உனது குடும்பத்தைப் பாதிக்கும் என்று சொன்னவர்கள்”.

“உனக்கு அவர்கள் தவறாகச் சொல்லியுள்ளனர். நரி நல்ல பண்புகளை உடையது. ஒழுங்கமானது” என்றது எருமை.

“**ந**ண்பர்களுக்கு கிடையே பிரிவு வராது என்பர். நரியுடன் நட்பாக இருந்த ஆடு, புலி, கரடி என்பன அதை விட்டு விலகி விட்டன. ஒருவரை நன்றாக ஆராய்ந்த பின்பு தான் நட்புக் கொள்ள வேண்டும். ஆராயாமல் நட்புக் கொண்டால் அது பெரும் ஆபத்தையும் தேடித்தரும். ஒருமுறை நரி யானையின் வீட்டில் திருடி அகப்பட்டு விட்டது. அதனால் காவல்துறையினர் ஆட்டையும், புலியையும், கரடியையும் கைது செய்து விசாரித்தவர்களாம். அதற்குப் பின்பு அவை நரியுடன் சேர்வதில்லை என்று எனக்கு கழுதை சொன்னது.

**எ**ருமையால் பேச முடியவில்லை. அதனால் பெண் எருமை சொன்னது, “இரவில் நீங்கள் இருவரும் கூடிக் கதைப்பதைப் பலர் கூடியிருந்து கதைக்கின்றனர். நேரம் தாழ்த்தி வருவதால் பிள்ளைகள் இரவில் படிப்பதில்லை. என்னாலும் பசியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நண்பன் என்றால் அவன் ஒழுக்கமான குடியில் பிறந்திருக்க வேண்டும். தனக்குப் பழி வந்தால் அஞ்சுபவனாக இருத்தல் வேண்டும். நண்பன் தவறான வழியில் சென்றால் அதைக் கண்டித்துத் திருத்த வேண்டும். நீங்கள் நரியினது நட்பை விடாவிட்டால் நான் எனது சகோதரனுக்குச் சொல்வேன். அவன் தனது நண்பனான காவல்துறை அதிகாரிக்குச் சொல்லி நரியைப் பற்றி விசாரிப்பான்” என்று பெண் எருமை சொன்ன போது.

“**ஆ**ண் எருமை குறுக்கிட்டுச் சொன்னது, “நரியோடு நட்புப் பூண்டமையால் எனது நல்ல நண்பர்கள் பலர் என்னை விட்டுச் சென்று விட்டனர். நீ உனது சகோதரனுக்குச் சொல்லாதே. நாளை முதல் நான் நேரத்திற்கு வருகிறேன். நரியின் நட்பையும் துண்டிக்கிறேன்” என்றது ஆண் எருமை

## 20. தந்தை தாய் பேண்



**பா**டசாலைக்குச் செல்ல ஆயத்தமான முயற்குட்டிகள் சென்று தமது தாயையும் தந்தையும் வணங்கின.

“**எ**ப்போதும் நீங்கள் வளமாக வாழ்வீர்கள்” என்று தாயும் தந்தையும் அவற்றை வாழ்த்தி முத்தமிட்டன.

**தா**யையும் தந்தையையும் வணங்கிய பின்பு முயற்குட்டிகள் பாட்டனையும் பாட்டியையும் வணங்கின, “பேரர்களே, உங்களுக்கு நல்ல ஆசிரியர்களையும் அதிபரையும் கடவுள் தந்திருக்கிறார். அதனால் தான் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் அனைவரும் பெற்றோர்களையும், மூத்தோர்களையும் தெய்வங்களென நினைத்து வணங்குகின்றனர்.

பெற்றோரைப் பேணும் எந்த ஒரு பிள்ளைக்கும் துன்பம் வரக் கடவுள் விடமாட்டார். பாடசாலைக்குச் சென்று நன்றாகப் படியுங்கள்" என்று தாத்தா வாழ்த்தினார்.

"**எ**மது அதிபர், தனது பெற்றோரைத் தெய்வமாக மதிப்பவர் அதனால் தான் கடவுள் எந்தக் குறையையும் எனக்கு வைக்கவில்லை. எனக்கு வயது குறைவு என்னுடன் அதிபர் பரீட்சை எழுதியவர்கள் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள். எனக்கு முப்பது வயது நான் பரீட்சைக்குச் செல்லும் போது எனது பெற்றாரிடமும், பெற்றாரின் பெற்றாரிடமும் ஆசிபெற்றுச் சென்றேன். எனது தந்தையின் தந்தையை வணங்கிய போது அவர் சொன்னார், "மகனே, அறிவு என்பது அனுபவத்தின் மூலம் வரவேண்டும். நூல்கள் மூலம் வரும் அறிவில் அறியாமை இருக்கும். நீ அனுபவஸ்தன். அதனால் உனக்கு அதிபர் பதவி கட்டாயம் கிடைக்கும் என்று ஆசீர்வதித்தவர். அது போலக் கிடைத்து விட்டது. நான் அவரை வணங்கி ஆசிபெற்றுச் சென்ற அனைத்துச் செயல்களும் எனக்கு வெற்றியைத் தந்தன. அதனால் நீங்கள் எல்லோரும் உங்கள் பெற்றோரைத் தெய்வமாகப் போற்றுங்கள். அப்படிப் போற்றினால் உங்கள் செயல்கள் யாவும் வெற்றியைத் தரும். அவர்கள் இறந்தாலும் உங்களோடு கூடியிருந்து உங்களுக்கு உதவி செய்வர்" என்றவர் அதனால்தான் நாம் உங்களை வணங்குகிறோம். தினமும் காலையில் பிரார்த்தனை முடித்த பின்பு யார்யாரெல்லாம் இன்று பெற்றோரை வணங்கினீர்கள் என்று அதிபர் கேட்பார். அதனால் எம்மால் பொய் சொல்ல முடியாது" என்றது முயல் குட்டி.

**தா**த்தா முயல் அதை அணைத்து முத்தமிட்டது.

## 21. நன்றி மறவேல்



**மா**ன் மிக்க கவலையுடன் வந்து குதிரைக்குச் சொன்னது, "நண்பா, நான் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளேன். நான் குடியிருக்கும் காணி எருமையினுடையது. அது தனது மகளுக்குத் திருமணம் முற்றாகியதால் நாம் குடியிருக்கும் நிலத்தை விற்று மகளுக்குச் சீதனமாகக் கொடுக்கப் போகிறதாம். பத்து வருடங்களாக அங்கு குடியிருக்கிறேன். திடீரென்று வந்து எழும்பச் சொன்னால் நான் என்ன செய்வது? எருமையின் மகளுக்கு வயது அதிகம். பல்வேறு காரணங்களால் பேசப்பட்ட திருமணங்கள் தடைப்பட்டன. இப்போது சரிவந்துள்ளது. பணம் கொடுக்காவிட்டால் அதுவும் குழம்பிவிடும்.

பலர் நான் பத்து வருடங்களாகக் குடியிருப்பதால் விடவேண்டாம் என்கின்றனர். நான் வீடில்லாமல் தவித்த போது எருமை தானாகவே முன்வந்து அந்தக் காணியைத் தந்தது. அந்த நன்றியை மறக்கலாகாது அதனால் விட்டுவிடுவதாகக் கூறினேன். பலர் வந்து காணியைப் பார்த்துச் செல்கின்றனர். நான் காணியைவிட்டுச் சென்ற பின்பு தான் அவர்கள் அக்காணியை வாங்குவார்களாம். அதனால் உன்னிடம் இருக்கின்ற காணியை தருகிறாயா? நான் நீ கேட்டதும் விட்டுவிடுவேன். அதற்காக நான் எழுதித்தருகிறேன்" என்றது.

"**இ**தென்ன பேசக்கூடாத பேச்செல்லாம் பேசகிறாய். எருமை காணியை விற்பதானால் அதை நீ வாங்கு. நான் பணம் தருகிறேன். காணியை விற்றால் நீ வீட்டை உடைத்துப் புதிதாக கட்டுதல் வேண்டும். அது வீண் செலவு" என்றது மான்.

**க**ண்களால் கண்ணீர் மல்க குதிரையைக் கட்டித் தழுவியது எருமை. மானிடம் வந்து சொன்னது, "நீ நான் கேட்டவுடன் வீட்டை விடுகிறேன் என்று சொன்னதை என்னால் மறக்க முடியாது. பலர் அந்நிலத்தைக் கேட்கின்றனர். அது உனக்குத்தான் காசாத்தா. நீ மனம் நொந்தால் எனது மகள் வாழமாட்டாள். ஏனென்றால் நீ பண்பானவன், ஒழுக்கமானவன். ஒழுக்கமாகவன் மனம் நோகக் கூடாது" என்றது எருமை.

**கு**திரையின் மனைவியும், மனைவியின் சகோதரர்களும் குதிரையின் வீட்டுக்கு வந்தனர். அப்போது அங்கே குதிரையும் இருந்தது.

**கு**திரையின் மனைவியின் சகோதரன் சொன்னான், "மான் சரியான ஏழை. அது தெரிந்தும் பெருந்தொகைப் பணத்தைப் பொறுபில்லாமல் கொடுத்துள்ளீர்கள்" என்றபோது குதிரையின் மனைவி, "இவருக்கு உலகம் புரியாது. மானின் ஆசைவார்த்தையில் ஏமாந்து விட்டார். காணியை எமது பெயரில் எழுதிவிட்டு மானுக்கு இருக்க இடம் கொடுத்திருக்கலாம்" என்றது.

"**மூ**ன்று வருடங்களுக்கு முன்பு எனது மகளுக்குதம் திருமணம் பேசியபோது உனது சகோதரர்கள் அதைக் குளப்பினர். தீயசெயல்களைச் செய்து கொண்டு திரியும் தனது பிள்ளைகளில் ஒன்றைச் செய்வதற்காக அவர்கள் பேசக்கூடாத பேச்சையெல்லாம் பேசினர். நீயும் நானும் பெருந்துன்பப்பட்டோம். அப்போது எமது வீட்டுக்கு வந்த மான் தனது உற்ற நண்பனின் மகனை எனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தது. மானுக்காக மாப்பிள்ளையின் தகப்பன் எதையும் செய்வார். அப்படியிருந்ததால் தான் உனது சகோதரர்களின் பேச்சை மீறி, மானின் பேச்சை நம்பித் திருமணம் செய்துவைத்தார். அந்த நன்றியை மறந்தால் எமக்கு ஏழேழு பிறவிகளிலும் நகரம் தான் கிடைக்கும். நான் வசதியானவன். அக்காணியை அன்பளிப்பாகவே கொடுத்துள்ளேன்" என்றது குதிரை. யாரும் எதுவும் பேசவில்லை.

## 22. பருவத்தே பயிர் செய்



**ஒ**ட்டகச் சிவிங்கி மிக்க மகிழ்ச்சியுடன் தனது நண்பர்களான மான், பசு, எருமை, முயல் என்பவற்றைக் காண வந்தது. மிக்க மகிழ்வுடன் வந்த ஒட்டகச் சிவிங்கியை மான் அன்புடன் வரவேற்றது, “என்ன நண்பரே ஒரு நாளும் இல்லாதவாறு மிக்க மகிழ்வுடன் வருகிறீர் கையில் உள்ள பொட்டலத்தின் வாசைன மூக்கைத் துளைக்கிறது. என்ன விசேசம்”

“**மு**தலில் இனிப்பை எடுத்துச் சாப்பிடுங்கள்” என்ற போது, “காரணத்தைச் சொன்னால் தானே நாமும் மகிழ்வோம். மகிழ்ந்த பின் இனிப்பை உண்பது தான் நல்லது” என்றது பசு.

“**ச**ரி சொல்கிறேன். எனது மகளுக்குப் பதினெட்டு வயது. எனது இனத்தவரின் மகன் வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறான் மகளை நேற்று மாலை காட்டுப்பிள்ளையார் கோவிலில் கண்டவனாம். அவளின் அழகு அவனைக் கவர்ந்தமையால் பெற்றோரையும் கூட்டிக் கொண்டு காலையில் வீட்டுக்கு வந்துவிட்டான். பெற்றோரை எனக்குத் தெரியும். தூரத்து உறவினர். சரி இனி இனிப்பை எடுங்கள். இது வெளிநாட்டில் இருந்து மாப்பிள்ளை கொண்டு வந்த இனிப்பு” என்றது ஒட்டகச்சிவிங்கி.

“**நீ** கொடுத்து வைத்தவன். இங்கு பலர் வயது வந்த பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு கரைசேர்க்க முடியாது துன்பப்படுகின்றனர். உனது மகள் வயது குறைந்தவள்” என்றது முயல்.

“**வ**யது சென்றும் பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்காமைக்குக் காரணம், அந்தப் பெண்ணும் குடும்பமும்தான். பெண்களிடம் சீதனம் இல்லாவிட்டாலும் அழகு, உத்தியோகம், தகுதி என்பவற்றைப் பார்ப்பார்கள். எருதின் மகள் பேசி வாற சம்பந்தங்களுக்கு ஒவ்வொரு குறைகாண்பாள். ஒரு மாப்பிள்ளையை நான் பேசிக்கொண்டு போனான் மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் பெரிய நெற்றி. தலையில் முடியும் குறைவு. வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு முடி கொட்டுவது இயற்கையானது என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதனால் வேறொரு இடத்தில் செய்துவைத்தேன். பொம்பிளைக்கு ஐந்து சகோதரிகள். குடியிருக்கும் காணியும் வேறொருவருடையது”.

“திருமணம் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. பெண்ணின் சகோதரிகள் ஐந்து பேரும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனர். மூன்று பேருக்குத் திருமணமும் முடிந்து விட்டது” என்றது ஒட்டகச் சிவிங்கி.

“உண்மை தான். இப்ப தகப்பன் விலையுயர்ந்த காரில் மனைவியையும் ஏற்றிக் கொண்டு காட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு வாறார்” என்றது பன்றி.

“அந்தந்தப் பருவத்திலை அதையதைச் செய்ய வேண்டும். நெல்விதைக்கும் காலத்தில் வயலில் பயறை விதைக்கலாமா? அதனால் தான் நான் மகள் படிக்கப்போகிறாள். இப்ப திருமணம் செய்ய விரும்பவில்லை என்று சொல்லவில்லை. மகள் விரும்பினால் படிக்கட்டும் என்று மாப்பிள்ளை சொல்லிவிட்டார். திருமணம் செய்து பேரப்பிள்ளைகளைக் கண்ட பேராசிரியை வள்ளிநாயகி இரண்டாவது கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார். படிப்புக்கு வயதிருக்கா. படிப்பைத் தவிர ஏனையவையெல்லாம் அந்தந்தப் பருவத்தில் செய்தல் வேண்டும்” என்றது ஒட்டகச்சிவிங்கி.

## 23. மன்று பறிந்து உண்ணேல்



புலியிடம் நரி வந்து சொன்னது, “நண்பா, எனக்கொரு பிரச்சினை இருக்கிறது. நான் யானையிடம் பத்து வருடங்களுக்கு முன்பு பத்தாயிரம் ரூபா வாங்கினேன். வட்டியுடன் தருவதாகச் சொன்னபோதும் இதுவரை நான் வட்டியைக் கூடக் கொடுக்கவில்லை. யானை இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டது யானையின் மகன் தகப்பன் எழுதிவைத்திருந்த கொப்பியை இப்போது தேடிக் கண்டுபிடித்து விட்டு என்னிடம் வந்து சொல்லிக் கடனைக் கேட்டது. நான் கொடுத்துவிட்டதாகக் கூறினேன். அப்பா வாங்கியிருந்தால் பெயரை வெட்டி நீக்கியிருப்பார். அப்படி அவர் பலரது பெயரை வெட்டி நீக்கி அவர்கள் கொடுத்த பணத்தையும் குறித்து வைத்துள்ளானர். நீ கொடுத்திருந்தால் உனது பெயரை வெட்டி நீக்கிவிட்டுக் குறிப்பெழுதியிருப்பார்” என்றது. நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். அதனால் அது மன்றில் வழக்குப் போட்டுள்ளது. நீ வந்து நான் கொடுத்ததைக் கண்டதாகச் சொல் நான் உனக்குப் பணம் தருகிறேன். நீ நீதிச்சபையான இணக்க மன்றில் ஓர் உறுப்பினராக இருக்கிறாய். அதனால் சபை நம்பும்” என்றது.

**பு**லிக்கு அதைக் கேட்டதும் கடுங்கோபம் வந்தது. மன்றில் இதுவரை குற்றப்படாது செயலாற்றிக் கொண்டிருப்பது புலி. அதனால் புலியின் மீது எல்லா மிருகங்களும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளன. தலைவரான சிங்கம் சிக்கலான வழங்குகளில் தீர்ப்புக் கூறு முன் புலியுடன் கலந்துரையாடும். அவ்வளவு மதிப்போடு இருக்கும் தன்னை இவ்வாறு இழிவுபடுத்தியமையால் புலி உறுமியது.

"**ந**ண்பா, கோபப்படாதே. இங்குள்ளவர்களில் யார் நேர்மையாக வாழ்கின்றனர்? வட்டியுடன் சேர்த்து இருபதினாயிரம் ரூபா நான் கொடுக்க வேண்டிவரும். அதில் அரைவாசியை உனக்குத் தருகிறேன்" என்றது நரி.

**பு**லிக்கு வந்த ஆத்திரத்தில் நரியைக் கடித்துக் குதற வேண்டும் என்று நினைத்தது. பின் நீதிச் சபையில் இருந்து கொண்டு அவ்வாறு நடக்கக் கூடாது என்று நினைத்து அமைதியானது.

**நா**ன் ஒழுக்கமானவன். தவறு செய்பவர்களுக்கு நீதியை வழங்குபவன். அப்படியனவன் பணத்தைப் பெற்றுக் கொண்டு தீர்ப்பை மாறிச் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் எனக்குத் தண்டனை கிடைக்கும்" என்றது புலி.

**ஒ**ருவாரம் கழிய அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மன்றின் முக்கியமான உறுப்பினரான எருது, "ஐயா, இந்தக் கொப்பியை ஏற்க முடியாது. பல இடங்களில் கிழிந்து உள்ளது. அத்துடன் நரி பெற்றுக் கொண்டமைக்காக கையொப்பமிடவில்லை. நரி தான் எருமையுடன் சென்று பணத்தையும், வட்டிப்பணத்தையும் கொடுத்ததாகக் கூறுகிறது. அதை எருமை ஒத்துக் கொள்கிறது. அதனால் வழக்கைத் தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்".

**த**லைவரான சிங்கம், புலியைப் பார்த்தது. புலி எழுந்து நின்று சொன்னது, "நேற்று மாலை நரி வந்து எனக்குப் பணம் தருவதாகச் சொல்லி தான் பணத்தைக் கொடுத்து விட்டதை நான் கண்டதாகச் சொல்லும்படி கேட்டுக்கொண்டது. நான் மறுத்ததால் தான் நரி, எருதை அழைத்து வந்துள்ளது. அதற்கு வீடியோ ஆதாரம் என்னிடம் உண்டு". எனக்கூறித் தான் பதிவு செய்து வைத்திருந்த வீடியோவைக் காட்டியது. அதனால் எருதும் நரியும் தடுமாறின.

"**எ**ருது பொய்ச்சாட்சி சொன்னதற்காக இரண்டு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனையை விதிக்கிறேன். நரி பொய்சொன்னதோடு மன்றை அவமதித்ததால் யானையிடம் வாங்கிய பணத்தை வட்டியுடன் கொடுக்க வேண்டும். நீதிமன்றத்தை அவமதித்ததால் பத்தாயிரம் ரூபா குற்றப் பணம் கட்டுதல் வேண்டும். அத்துடன் ஒருவருடச் சிறைத்தண்டனையும் விதிக்கிறேன்.

குற்றப்பணம் கட்டாவிட்டால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை அனுபவித்தல் வேண்டும். கடமை தவறாத புலியை நான் பாராட்டுகிறேன்" என்றது சிங்கம்.

## 24. இயல்பு அல்லாதன செய்யேல்



**ந**ரி வந்து ஒட்டகத்திற்குச் சொன்னது, "நான் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன். யானை தனது நெல்வயலை விற்கப் போகிறதாம். நல்ல விளைச்சலைத் தரும் வயல். நீ விரும்பினால் வாங்கித் தருகிறேன்".

"**அ**து நல்ல வயல் தான். எனினும் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. கடன்பட்டால் வட்டி முதலைவிட வேகமாக வளர்ந்திடும். அதோடு போதியளவு வயல் என்னிடம் உண்டு. உள்ள வயலை நல்ல பசளையிட்டு நல்ல முறையில் பராமரித்தால் நல்ல விளைச்சளைப் பெறலாம். எனக்கு வேண்டாம்" என்றது ஒட்டகம்.

**ந**ரி வந்து பன்றிக்குச் சொன்னது, "யானை தனது இருபது ஏக்கர் வயலை விற்க விரும்புகிறது. உனக்குப் பத்துப்பிள்ளைகள். அவ்வயலை வாங்கினால் பிள்ளைகளுக்கு உதவும்".

"**உ**ண்மைதான் பிள்ளைகள் எல்லோரும் படிக்கின்றனர். இப்போ உள்ள வயலில் அவர்கள் வேலை செய்துவிட்டுப் பாடசாலைக்குச் சென்று நன்றாகப் படிக்கின்றனர். அதனால் அவர்களுக்கு வேலைச் சுமையைக் கூட்டக்கூடாது" என்றது.

**அ**தன்பின் நரி வந்து எருமைக்குச் சொன்னது, "நண்பா, யானை தனது வயலை விற்கப் போகிறதாம். அருமையான வயல். வாங்கும் பணத்தை ஓரிரு வருடங்களில் விளைந்து தந்து விடும். உனக்கு ஐந்து ஆண்கள் இருக்கிறார்கள் அவர்களுக்குத் தொழில் கொடுக்க வேண்டுமானால் நீ அந்த வயலை வாங்க வேண்டும். இப்போ உனது வயலில் வேலை செய்ய நீ மட்டுமே போதும். அதனால் வயலை வாங்கு" என்றது.

**எ**ருமைக்கு அதை வாங்க விருப்பமாக இருந்தது. ஆனால் அதனிடம் பணம் இல்லை. அதைச் சொன்னபோது நரி சொன்னது, "எல்லோரும் பணத்தை வைத்துக் கொண்டா தொழிலைச் செய்கின்றனர். புலி கடன்பட்டு ஒருவர்த்தக நிலையத்தை தொடங்கியது. சிறிய

கடை இன்று பெரும் வர்த்தக நிறுவனமாக மாறிவிட்டது. அதுபோல மான் கையில் ஒரு சதம்கூட இல்லாமல் வீடு கட்டத்தொடங்கியது. ஒரு வருடத்தில் அது வீட்டைக் கட்டி முடித்துவிட்டது. பணம் எப்போதும் வரும். ஆனால் நிலம் எப்போதும் வராது. யானை தனது வயலை விற்றால் பின் அது உனக்குக்கிடைக்குமா? பணத்தைப் புரட்டி வாங்கு. நான் உதவி செய்கிறேன்" என்றது நரி.

**எ**ருமை வாங்கச் சம்மதித்தத அதை அறிந்த அதன் மனைவி சொன்னது, "எம்முடைய இயல்புக்கெற்ற படிதான் அதாவது எமது பொருளாதார நிலைக்கேற்றவாறு தான் வாழ வேண்டும். அளவுக்கதிகமாக ஆசைப்பட்டால் உள்ளதும் இல்லாமல் பொய்விடும். எமக்கு உள்ள வயல் போதும். போதும் என்ற மனம் பொன்விளையும் பூமி என்று பெரியவர்கள் சொல்வார்கள். எமது பிள்ளைகளை நம்பி வயலை வாங்க முடியாது. அவர்கள் நாகரிகமாக வாழ்கின்றனர். குடும்பப் பொறுப்பு இல்லை. எந்த நேரமும் மடிப்புக் கலையாத உடையுடன் திரிகிறார்கள். இப்போது வயலில் இருந்து வரும் வருமானம் எமக்கும் போதும். கடன்பட்டால் வட்டிகட்டுவதே கஷ்டம். அதனால் எமக்கு வயல் வேண்டாம்" என்றது.

**எ**ருமை அதைக் கேட்கவில்லை. கடன்பட்டு வயலை வாங்கியது. அத்துடன் அவ் வயலை விதைக்கவும் அதனிடம் பணம் இல்லை. ஏற்கனவே இருந்த வயலில் விதைத்த போதும் அதற்குப் பசளையிடவும், களை எடுக்கவும் பணம் இல்லாமையால் அதற்குப் பசளை இடப்படவில்லை. களையும் எடுக்கவில்லை. அதனால் விளைச்சலும் கிடைக்கவில்லை.

**க**டன்காரர் நெருக்கியதால் வாங்கிய வயலையும் தனது வயலையும் விற்று கடனைக் கொடுத்தது. தனது மனைவியின் சொல்லைக் கேட்டிருந்தால் தனக்கு இந்த நிலை ஏற்பட்டிராது என்று தனது நண்பர்களுக்குக் கூறிக் கவலைப்பட்டது.

## 25. அரவம் ஆட்டேல்



**ந**ரி மகுடியை ஊதப் புற்றில் இருந்து வந்த நாகபாம்பொன்று இசைக்கேற்ப நடனம் ஆடிக்கொண்டிருந்தது. ஆதைப் பார்ப்பதற்காகப் பல மிருகங்கள் ஒன்று கூடின. புலி வந்து, "நரியே எந்நாளும் நீ தீமையானவற்றை செய்து வருகிறாய். ஒரு நாளென்றாலும் மற்றவர்களுக்கு நன்மை செய்தாயா? பெற்றோர் எல்லோரும் வேலைக்குச் சென்ற பின் வீட்டில் இருக்கும் பிள்ளைகளுக்குத் தீயதைக் கற்பிக்கிறாய். இது பல விபரீதங்களை உண்டாக்கும் என்பதைத் தெரிந்தும்

செய்கிறாய். சிங்கராசா முன்பு ஒருமுறை நீ பாம்பாட்டிய பின் ஒரு சிறுவன் வழியால் வந்த பாம்பைப் பிடித்து ஆடுமாறு சொல்ல அது அவனுக்குக் கடித்தது உனக்குத் தெரியாதா? அந்தச் சிறுவனை உரிய நேரத்தில் வைத்தியரிடம் கொண்டு சென்றதால் பிழைத்தான். அப்படியிருந்தும் நீ பாம்பு ஆட்டுகிறாய்".

"**பி**ள்ளைகள் விரும்பிக் கேட்டார்கள். அது தான்" என்றது நரி.

"**எ**துவும் அறியாத பிள்ளைகள் கேட்கும் அதற்காகத் தீயவற்றையும் நீ செய்வாயா? சிறுபிள்ளைகள் விபரம் புரியாதவர்கள். அவர்களுக்குத் தீயவற்றைச் செய்யக்கூடாது என்று சொல்ல வேண்டும். அத்துடன் தீயவற்றைச் சிறுவர்களுக்கு முன்னால் செய்யவும் கூடாது. நீ சிறுவர்களுக்கு முன்னால் புகைக்கிறாய் அதைக் கண்ட பன்றிக்குட்டி கடதாசியைச் சுருட்டி நெருப்பு மூட்டி வாயால் புகைவிட்டதாம். நீ புகைக்க உனது பிள்ளைகளும் புகைக்கிறார்கள். உனது மகன் நீ புகைத்துவிட்டு வைத்த சுருட்டொன்றைப் பாடசாலைக்கு எடுத்துச்சென்று மாணவர்களுடன் சேர்ந்து புகைத்துள்ளான். அதனால் மூவர் மயக்கமடைந்தனர். இவையெல்லாம் தெரிந்தும் நீ திருந்துவதாக இல்லை. அதனால் உன்னைத் தண்டித்துத்தான் திருத்தல் வேண்டும்" என்று சொல்லி நரி ஊதிய மகுடியைப் பறித்து அதனால் பலமுறை நரிக்கு அடித்தது புலி.

**ந**ரிக்கு வேதனையைத் தாங்க முடியாது ஊளையிட்டு அழுதது" இனிமேல் நீ இப்படியான செயல்களில் ஈடுபட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன் என்று" உறுமியது புலி.

## 26. இலவம் பஞ்சில் துயில்



**நா**ரிப் பிடிப்பால் ஒட்டகம் அவதிப்பட்டது. அதனால் நடக்கவும் முடியவில்லை. நிற்கவும் முடியவில்லை. படுக்கவும் முடியவில்லை. அது தனது மகனுக்குச் சொன்னது, "நேற்று வயலில் கடுமையாக வேலை செய்ததால் நாரி நோகிறது. போய் வைத்தியரை அழைத்து வா" என்றது.

**ஒ**ட்டகத்தின் மகன் வைத்தியரான புலியிடம் சென்று சொல்ல புலி தனது உதவியாளருடன் ஒட்டகத்தின் வீட்டிற்குச் வந்தது.

**ஒ**ட்டகம் தென்னந்தும்பால் செய்யப்பட்ட மெத்தையில் முனகியபடி படுந்திருந்தது. அதைக்கண்ட நரி சொன்னது, “ஒட்டகமே, முன்பு வாழ்ந்த சித்தவைத்தியர்கள் எதையெதைச் செய்ய வேண்டும். எதையெதைச் செய்யக் கூடாது என்றும் எதை எதை உண்ண வேண்டும் எதையெதை உண்ணக் கூடாதென்றும் சொல்லியுள்ளனர். முன்னர் உண்ட உணவு சமிப்பதற்கு முன்பு அடுத்தவேளை உணவை உண்ணக் கூடாது. அதைவிட தனது உடம்பு ஏற்காத உணவு வகைகளை உண்டாலும் நோய் வரும். நீ நேற்றுக் கிழங்கு வகைகளை அளவுக்கதிகமாக உண்டுள்ளாய். அதனால் தான் வாயு அதிகமாகி நாரிப் பிடிப்பு ஏற்பட்டுள்ளது. உடல் ஏற்றுக் கொள்ளாதவற்றை உண்ணவும் கூடாது, செய்யவும் கூடாது. நீ தென்னந்தும்பால் ஆன மெத்தையில் படுத்திருக்கிறாய். தென்னந்தும்பு மெத்தை இரும்புக்குச் சமனானது. அது நெகிழ்ந்து கொடுக்காது. மருந்துவக் குணங்கள் அடங்கிய நெகிழ்ந்து கொடுக்கும் இலவம் பஞ்சுமெத்தையில் படுத்துறங்கினால் நாரிப்பிடிப்பு ஏற்படாது. நாரிப்பிடிப்பு ஏற்பட்டவர்கள் இலவம் பஞ்சு மெத்தையில் தான் படுக்க வேண்டும். உடனே மெத்தையை மாற்று”.

“**அ**ப்பா சொல்வழி கேளார். தனக்கு ஒரு இரப்பரால் ஆன மெத்தை வாங்கித்தரச் சொல்லிக் கரைச்சல் படுத்தியவர். அம்மா அது கூடாதென்றவா” என்று ஒட்டகத்தின் மகன் கூறும்போது புலி சொன்னது, “இப்போது நாகரிக மோகத்தால் எமது பண்பாடுகளைப் பலரும் கைவிட்டு விட்டனர். உணவு முறையிலிருந்து உடை வரை யாவும் மாறிவிட்டது. நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க நோய்கள் தான் பெருகும். இவற்றைச் சொல்வதால் பயனில்லை. ஆங்கில வைத்தியர்கள் சொல்வது தான் சரியானது, உண்மையானது, நோயைக் குணப்படுத்துவது என்கிறார்கள்” என்று பெருமூச்சு விட்டது புலி.

## 27. வஞ்சகம் பேசேல்



**ந**ரி, சிங்கராசாவிடம் வந்து சொன்னது, “அரசே, நீங்கள் எல்லா மிருகங்களுக்கும் அளவுக்கதிகமாக இடங்கொடுத்துவிட்டீர்கள். இப்போது எந்த மிருகமும் உங்களுக்குப் பயப்படுவதில்லை. மதிப்பதும் இல்லை. நீங்கள் மூச்சு விட்டால் முப்பது அடிக்கு அப்பால் சென்று விழும் முயல் கூட உங்களை மதிப்பதில்லை. அப்படியிருக்க உங்களுக்குச் சமமான வீரனான புலி உங்களை எப்படி மதிக்கும்?”.

**சி**ங்கம் அவற்றைக் கேட்டுக் கொண்டதாகக் காட்டாது, “உள்ளே சென்று சாப்பிட்டு விட்டுப்போ” என்றது.

**ந**ரிக்கு அவமானமாக இருந்தது. இருப்பினும் அதைக் கவனத்தில் கொள்ளாது சொன்னது, “உங்களுக்கு மூளையில்லையாம். அதனால் தானாம் எனது முன்னோர் உங்கள் மூதாதையரை ஏமாற்றி அழைத்துச் சென்று பாழுங் கிணங்றைக் காட்டி அதனுள் உங்கள் உருவம் தெரிய அதை உண்மையான சிங்கம் என்று நினைத்து அதனுள் பாய்ந்து உயிரை விட்டவராம்”.

**அ**ப்போதும் சிங்கம் கோபப்படாது புன்னகையுடன் சொன்னது, “நீதான் முட்டாள். உலகத்தை அறியாதவன். பாழங்கிணற்றில் பாய்ந்த எனது மூதாதையரை மனிதர் காப்பாற்றி கிணற்றில் இருந்து வெளியே தூக்கிக் கொண்டு வந்து அவர்களுக்கு உயிர்களைக் கொல்வது பாவம் என்று புத்திமதி கூறி அதை விடுதலை செய்துவிட்டனர். அதை நீ அறியவில்லையா? அது மிகவும் பிரபலமான கதை. பாடசாலைகளில் அதை நாடகமாக நடித்துப் பரிசும் பெற்றவர்கள். இப்படிக் கற்பனையாகப் பலரும் பல கதைகளையும் எழுதுவார்கள். அதை உண்மை என்று நம்பக் கூடாது. இப்போ எனது மக்கள் என்னை மதிக்கின்றனர். மதிக்காவிட்டாலும் அவர்கள் ஒரு காலத்தில் உண்மையை உணர்ந்து கொள்வர். ஆனால் நீ மாறவில்லை. உனது சுயபுத்தியை அடிக்கடி வெளிப்படுத்திக் கொள்கிறாய்”.

**ந**ரி பயத்துடன் சிங்கத்தைப் பார்த்தது, “நரியே, உனது நன்மைக்காக நீ எதையும் செய்வாய். சில நாட்களுக்கு முன் நீ சிறுவர்களுக்குப் பாம்பாட்டிக் காட்டினாயாம். இதனால் உனக்கு என்ன லாபம். பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது என்றொரு முதுமொழி இருக்கிறது. நீ மற்றவர்களை உனது நடத்தையால் வேதனைப்படுத்தாதே. அடுத்தவர்களைப் பற்றிக் குறை சொல்லாதே. சொல்ல விரும்பினால் சம்பந்தப்பட்டவர்களுக்கே சொல்லு. அதுதான் தர்மம். வஞ்சகம் பேசி அடுத்தவரைக் கெடுக்க நினைத்தால் நினைப்பவரைத் தான் கடவுள் தண்டிப்பார். அதனால் நல்லவற்றைப் பேசி, நல்ல படி வாழ்” என்றது சிங்கம். நரி கவலையுடன் தலையைத் தொங்கப் போட்டவாறு சென்றது. சிங்கம் சொன்னது உண்மைதான். முன்பு புத்திமதி கூறக்கூடிய கதைகள் எழுதினார்கள். இப்போ புதுமை என்ற பெயரில் நடக்காதவற்றைக் கதையாக எழுதுகின்றனர். சிங்கம் தாவர உணவை உண்ணுமா என்ன? இப்படியான கதைகளைப் பாராட்டி விருதும் கொடுக்கிறார்கள்” என்று யோசித்தவாறு சென்றது நரி.

## 28. அழகு அலாதன செய்யேல்



**செ**ன்ற நரியைச் சிங்கம் அழைத்துச் சொன்னது, "நரியே, நீ எப்போது வந்தாலும் சாப்பிடாமல் சென்றதில்லை. எனக்குப் பிரியமான உணவு வகைகள் தான் உனக்கும் பிடிக்கும். இன்று எனது மனைவி நல்ல சுவையான உணவு வகைகளைச் சமைத்தாள். அதனால் சற்று அதிகமாக உண்டு விட்டேன். அசதியாக இருக்கிறது. நீயும் சாப்பிடு? என்ற சிங்கம் தனது மனைவியை அழைத்து, நரிக்கு உணவு கொடுக்குமாறு சொன்னது.

**சி**ங்கத்தின் மனைவி கொண்டு வந்து கொடுத்த உணவை நரி ருசித்துச் சாப்பிட்டது. உண்மையில் அது வெகுசுவையாக இருந்தது, "சுவையான உணவை உண்பவன் பாக்கியசாலி என்பார்கள். சிங்கம் பாக்கியசாலி. எந்நாளும் சுவையான உணவை உண்கின்றது" என்று நினைத்தது.

**ந**ரி உண்டு முடித்ததும் சிங்கம் சொன்னது, "நரியாரே, எந்நாளும் நீர் மற்றவர்களைப் பற்றிக் குறையாகவே சொல்வீர். இரண்டு வாரங்களுக்கு முன்பு யானையுடன் முரண்பட்டீர். அதனால் யானை தனது தும்பிக்கையால் உம்மைத் தூக்கித் தூர எறிந்தது. அதனால் உமது பின்னங்கால் முடமாகிவிட்டது. அப்படியிருந்தும் நீர் திருந்துவதாக இல்லை. தொடர்ந்து தீய செயல்களையே செய்து வருகிறீர். தீய செயல்களைச் செய்வதால் தீமைதான் உண்டாகும். நல்ல செயல்களைச் செய்துபாரும். பலரும் மதிப்பார்கள். புகழ்வார்கள். அது மனதிற்கு இன்பத்தைத் தந்து வாழ்க்கையை வளப்படுத்தும். வீணாகக் கோள் சொல்லி பகையை உண்டு பண்ணுவதால் இரு பக்கத்தவர்களும் உம்மை வெறுத்து ஒதுக்குகின்றனர். ஒரு சில நல்ல செயல்களையாவது செய்துபாரும். அதனால் வரும் இன்பம் உம்மைத் திகைக்க வைக்கும்" என்றது சிங்கம்.

"**ச**ரி மகாராஜா. நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டது நரி.

**ந**ரி சென்ற பின்பு மான் சொன்னது, "நல்லவர்களுக்குத் தீமைசெய்ய மனம் வராது. அதுபோலத் தீயவர்கள் நல்லவற்றைச் செய்யமாட்டார்கள். ஒருவரது பண்பை மாற்றமுடியாது. அதனால் நரிக்குப் புத்திமதி கூறுவதில் அர்த்தமில்லை".

**உ**ண்மைதான். பலமுறை முயற்சி செய்தால் பயன் கிடைக்கும் என்ற நினைப்பில் சொன்னேன்" என்றது சிங்கம்.

## 29. இளமையிற் கல்



**அ**திகாலையில் இருந்து பேரனைத் தேடிக்கொண்டிருந்தது தாத்தாக் குரங்கு. என்றுமில்லாதவாறு அன்று குட்டிக் குரங்கு பாடசாலைக்குப் போகாது ஒளிந்திருக்கிறது. தாத்தாவுக்குக் கண் அவ்வளவாகத் தெரியாது. வைத்தியர் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி வாங்கும்படி துண்டு எழுதிக் கொடுத்தும் அது வாங்கவில்லை. நான் என்ன படிப்பவனா? எனக்கேன் கண்ணாடி என்று நினைத்து வாங்காது விட்டுவிட்டது.

**மா**மரத்தில் சலசலக்கும் சத்தம் கேட்டது. தாத்தாக் குரங்கு நிமிர்ந்து மாமர உச்சியைப் பார்த்தது. ஏதோ அசைவது போல இருந்ததே தவிரத் தெளிவாகத் தெரியவில்லை.

"**பே**ரா, நீ எங்கே இருக்கிறாய் இறங்கிவா" வெகுநேரம் சலசலப்புச் சத்தம் கேட்கவில்லை. எட்டு மணிக்குக் குரங்குக் குட்டி இறங்கி வந்தது. காலையில் பாடசாலை ஏழரைக்குத் தொடங்கிவிடும். அதனால் இனிப்பாடசாலைக்குப் போகத்தேவையில்லை என்று நினைத்து அது இறங்கிவந்தது.

**அ**தைக்கண்ட தாத்தா, "பேரா, இப்ப எட்டுமணிதானே. ஆராதனை முடிந்து பிள்ளைகள் வகுப்புக்குச் சென்று கொண்டிருப்பார்கள். வா உன்னை அழைத்துச் சென்று விட்டு விட்டு வருகிறேன்".

"**நா**ன் இன்றைக்குப் பாடசாலைக்குச் செல்ல விரும்பவில்லை. கணித ஆசிரியர் வீட்டுவேலை தந்தவர். நான் செய்யவில்லை".

"**ஏ**ன் செய்யவில்லை. அண்ணன்மாரைக் கேட்டுச் செய்திருக்கலாம் தானே. பேரா, இளமையில் மாணவப்பருவத்தில் கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். பின் கற்க முடியாது. கற்காவிட்டால் வாழவே முடியாது. பலரும் ஏமாற்றிவிடுவார்கள். எனது தந்தை

கற்காதவர். அதனால் அவர் நான் கற்க வேண்டும் என்று நினைக்காது வேலையில் கவனம் செலுத்தினார். நான் பாடசாலைக்குச் செல்லாது காடுகளில் நண்பர்களுடன் விளையாடிப் பொழுதைக் கழித்தேன்".

"**நீ**ங்கள் படிக்கவில்லையா தாத்தா?"

"**இ**ல்லை. அதனால் நான் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நான் விளைவித்த விவசாயப் பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு சென்றால் குறைத்து நிறுப்பார்கள். ஐம்பது கிலோ இருக்கிறது. கிலோ முப்பது ரூபா படி ஆயிரம் ரூபா வருகிறது. இதில் ஆயிரம் ரூபா இருக்கிறது என்று சில்லறையாகத் தருவார்கள். எனக்கு எண்ணத் தெரியாது. வீட்டில் கொண்டு வந்து பாட்டியிடம் கொடுத்தால் அவா எண்ணிப் பார்த்துவிட்டு எண்ணூறு ரூபா இருக்கிறது என்பா. நான் யாரைக் கேட்பது. வியாபாரி தந்த காசை எண்ணி வாங்க வேண்டும். வீட்டுக்குச் சென்றபின் வந்து சொல்வதை நம்பமுடியாது என்பான்".

"**அ**ப்படியே பொல்லாத கள்வராக இருக்கிறார்கள்" என்றது பேரன்.

"**இ**ல்லைப் பேரா. பிழை முழுவதும் என்னில் தானே உண்டு. நான் படித்திருந்தால் இந்த நிலை வருமா. பின் பாட்டியையும் அழைத்துக் கொண்டு சந்தைக்குப் போவேன். அவாதான் தராசைப் பார்த்துக் கணக்குப் பார்த்துப் பணத்தை வாங்குவா. அதனால் எல்லோரும் சிரிப்பர். இளமைக் காலத்தில் பெற்றோரோடு இருக்கும்போது படிப்பதைத் தவிர வேறு வேலைகள் இராது. அதனால் நன்றாகப் படிக்கலாம். அதனால் தான் உனது அப்பாவைப் படிப்பித்தேன். அவர் ஐந்தாம் வகுப்பிற்கு வந்தபோது சந்தைக் கணக்குகளை நல்லமுறையில் கணிப்பார். அதை நினைத்துத்தான் உன்னைப் படி என்று சொல்கிறேன். என் அன்பான பேரா, என்னைப் போலப் படிக்காததால் கஷ்டப்படாது நன்றாகப் படி. இன்பமாக வாழலாம்" என்றார் தாத்தா.

"**வா**ருங்கோ தாத்தா பாடசாலைக்குப் போவோம். உங்களது நிலை தெரியாததால் தான் நான் பாடசாலைக்குப் போகாது நின்றேன். படிக்காவிட்டால் இவ்வளவு கஷ்டங்கள் வரும் என்று எனக்குத் தெரியாது. இனி நான் பாடசாலைக்குச் சென்று நன்றாகப் படிப்பேன்" என்றது குட்டிக் குரங்கு.

**தா**த்தா மிக்க மகிழ்வுடன் குட்டியைத் தூக்கித் தனது தோளில் சுமந்துகொண்டு பாடசாலையை நோக்கிச் சென்றார்.

## 30. அறனை மறவேல்



**ப**ன்றி வந்து மானுக்குச் சொன்னது, "நண்பா, எனக்குப் பெருந்துன்பம் வந்துள்ளது. இப்படி ஒரு துன்பம் யாருக்கும் வரக்கூடாது. கடவுள் ஏன் இப்படி என்னை வருத்துகிறாறோ தெரியவில்லை" என்று விம்மி விம்மி அழுதது.

"**எ**ன்ன செய்வது. எல்லாம் விதிப்படிதான் நடக்கும். அழுதாலென்ன, குளறினாலென்ன, வேதனைப்பட்டாலென்ன நடப்பது தான் நடக்கும். இப்பேன் அவசரமாக உனது மனைவி வெளியே சென்றது. குட்டிகளை ஈன்று இரண்டு நாட்களாகவில்லை" என்றது மான்.

"**அ**து தான் விதி. நான் ஒரு விடயமாக வெளியே சென்று விட்டேன். அவள் குட்டிகளுக்குப் பால் கொடுத்து விட்டு வெளியே செல்ல இரக்கமற்ற வேட்டைக்காரர்கள் அதைக் கொன்று விட்டனர். பாலில்லாமையால் இரண்டு குட்டிகள் இறந்து விட்டன. இரண்டு குட்டிகள் பாலில்லாததால் பசியால் அழுகின்றன. எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை".

"**எ**னது நண்பனான எருதின் மனைவி குட்டியை ஈன்றுள்ளாள். அவள் தர்மசிந்தனை மிக்கவள். கட்டாயம் உனது பிள்ளைகளுக்கு உதவி செய்வாள். வா சென்று சந்திப்போம்" என்றது மான்.

**மா**னும் பன்றியும் எருதைச் சந்தித்து நடந்தவற்றைச் சொன்னபோது, "அப்படியா? வாருங்கள் எனது மனைவியிடம் செல்வோம்" என்று கூறி அவர்களை அழைத்துச் சென்றது.

**ந**டந்தவற்றைக் கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த பசு பன்றியுடன் புறப்பட்டுச் சென்றது. பன்றிக் குட்டிகள் பசியால் அழுது ஓய்ந்துவிட்டன. அவற்றால் அழ முடியவில்லை முனகின.

**ப**சு தாய்மை உணர்வுடன் சென்று அதன் அருகில் படுத்ததும் பபன்றிக் குட்டிகள் இரண்டும் பாலைக் குடித்தன. பால் குடித்து முடிந்ததும் அவை எழுந்து நடந்தன. அதைப் பார்க்க பன்றிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

**மா**னைப் பார்த்து அது கண்ணீர் விட்டது, "நண்பா, இந்தப் பசுவை எனது வாழ்நாளில் ஒருபோதும் மறக்க மாட்டேன். இதனால் தான் எனது வம்சம் தளைத்தது. எனது மூன்று பிள்ளைகளும் என் கண் முன்னே பசியால் அழுது துடிதுடித்து இறக்கும் போது இவையும் இறந்துவிடும் என்று நினைத்தேன். பொறுத்த நேரத்தில் கடவுள் போல வந்து எனது பிள்ளைகளைக் காப்பாற்றியதற்கு நன்றி" என்றது பன்றி.

**ப**சு பன்றிக் கட்டிகளுக்குப் பாலூட்டியபடி சொன்னது, "பொன்னைப், பொருளை, உணவை, உடையைக் கொடுப்பது தான் தர்மம் அல்ல. பொறுத்த நேரத்தில் உதவுவதும் தர்மம். தகுந்த ஆலோசனை வழங்குவதும் தர்மம். மான் எனது மனதை அறிந்து இங்கே கூட்டி வந்துள்ளது. அப்படி இருக்க நான் எப்படி மறுப்பது. ஒரு தாய்க்குத்தான் மற்றவர்கள்படும் கஷ்டம், வேதனை, துன்பம் என்பன தெரியும். மான் செய்த உதவியால் நான் தர்மம் செய்ய முடிந்தது. அதற்காக நான் தான் மானுக்கு நன்றி சொல்ல வேண்டும். பன்றியாரே, நான் எனது குடும்பத்தினரை விட்டு விட்டு இங்கே தங்க முடியாது. அதனால் உமது பிள்ளைகளை எனது வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன். நீர் விரும்பும்போது வந்து பிள்ளைகளைப் பாரும்" என்றது.

## 31. அனந்தல் ஆடேல்



**கா**லை எட்டு மணிக்கு மூன்றாவது முறையாகத் தனது மகனை எழுப்பியது தாய்ப் பூனை, "மகனே, பத்து மணிக்கு நேர்முகப் பரீட்சை என்று சொன்னாய். இப்ப எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. எழுந்து முகம் கால்கை கழுவிக் குளித்துவிட்டுக் கோவிலுக்குச் சென்று வந்து காலை உணவை உண்டு விட்டுப் புறப்படு. எதற்கும் நேரகாலத்துடன் செல்ல வேண்டும் எழும்பு".

"**பொ**றம்மா. நேரம் இருக்கிறது" என்று சொன்ன மகன் மீண்டும் சுருண்டு படுத்தது.

"**இ**ந்த நித்திரை எங்கிருந்து உனக்கு வருகிறது என்று தெரியவில்லை. உனது சகோதரர்கள் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். எழும்பு".

**ம**கன் பூனை எழுந்து கிணற்றடிக்குச் சென்று பல்துலக்கி முகம் கழுவிக் குளித்து விட்டுவர ஒன்பது மணியாகிவிட்டது, “கெதியாச் சாப்பாட்டைத்தாம்மா…” என்று அவசரப்படுத்திய மகன் பூனை, தாய் கொடுத்த சாப்பாட்டை முழுமையாகச் சாப்பிடாது வைத்துவிட்டு கையை கழுவியது.

“**நா**ன் போய்விட்டு வருகிறேன்”.

“**ச**ரி. காலையில் கோவிலுக்கும் போகவில்லை” என்று தாயப் பூனை சொன்ன போது மகன் பூனை சொன்னது, “போகும் வழியில்தானே கோவில் உள்ளது. கும்பிட்டு விட்டுப் போறன்”.

“**ம**றக்காது கும்பிட்டுவிட்டுப் போ” என்றது தாய்ப்பூனை.

**பூ**னை நேர்முகப்பரீட்சை நடக்கும் மண்டபத்திற்கு வந்தபோது பத்தரை மணியாகிவிட்டது. மண்டபம் பூட்டப்பட்டிருந்தது. வெளியே நின்ற ஒருவர் பூனையின் அருகில் வந்து, “எத்தனை மணிக்கு நேர்முகப் பரீட்சை என்று அறிவித்தார்கள்” என்று கேட்டது.

“**ப**த்துமணிக்கு”.

“**இ**ப்போ என்ன நேரம்?”

“**ப**த்தரை மணி. பத்து மணிக்கு வந்தவர்களை உள்ளே விட்டுப் பூட்டியாயிற்று. நீங்கள் போகலாம்”.

**பூ**னை தயங்கியது. “நேர்முகப் பரீட்சைக்கே நேரத்திற்கு வரமுடியவில்லை. எப்படி வேலை செய்யப்போகிறீர்கள். பொறுப்பும் அக்கறையும் இருத்தல் வேண்டும். வழியில் ஏதாவது தாமத மேற்பட்டால் அறிவித்திருக்க வேண்டும். அதற்காக மேலாளர் தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பித்த அனைவருக்கும் அனுப்பியிருந்தார். நீர் அறிவித்தீரா…?”

“இல்லை” என்றபோது அவர் சொன்னார், “வீட்டில் மரணவீடு நடந்தாலும் அதை அறிவித்து இன்னொரு நாளைப் பெறுவது தான் இயல்பான நடைமுறை. உமது முகத்தைப் பார்த்தால் ஒன்பது மணிவரை நித்திரை கொண்டவர் போலத் தெரிகிறது. நீர் போகலாம்”.

பூனை வீட்டிற்கு வந்த போது தாய்ப் பூனை சொன்னது, “உன்னை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கவில்லையென்று முயற்குட்டி சொன்னது. நான் காலை ஆறு மணிக்கே எழுப்பினனான். நீ சுருண்டு சுருண்டு படுத்தாய். இப்ப வேலையில்லாமல் போய்விட்டது. இனியாவது திருந்து. இல்லாவிட்டால் பெருந்துன்பப்படுவாய்” என்றது.

## 32. கடிவது மற



மான் மிகுந்த வேதனையுடன் மயிலின் வீட்டுக்கு வந்து எதுவும் பேசாது நின்றது. அதைக் கண்ட மயில் மானின் அருகே வந்து, “மானாரே, உமது முகத்தைப் பார்த்தால் பெரும் வேதனையில் இருப்பதாகத் தோன்றுகிறது. உமது வேதனைக்கான காரணத்தைச் சொன்னால் என்னால் முடிந்தளவு உதவி செய்வேன்”.

“நீங்கள் ஓர் நல்லாசிரியர். மாணவர்களை உங்களது பிள்ளைகளாக நினைத்து அன்புடனும், பண்புடனும் கற்பிக்கிறீர்கள். அதனால் பிள்ளைகளும் பெற்றோரும் உங்களைத் தெய்வமாகப் போற்றுகின்றனர்”.

மான் பேசும்போது மயில் குறுக்கிட்டுச் சொன்னது, “நான் எனது கடமையை விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் செய்கிறேன். எனக்குத் தரப்படும் சம்பளம் புண்ணியகாரியத்திற்காகக் கடவுளால் தரப்படுகிறது என்ற நினைவோடு வாழ்கிறேன். என்னைப் புகழத் தேவையில்லை. பாராட்டத் தேவையில்லை. ஏனென்றால் எனது வேலைக்குச் சம்பளம்

வழங்கப்படுகிறது. அதனால் உமது பிரச்சினையைச் சொல்லும். தேவையில்லாத கதைகளைக் கதைக்க வேண்டாம்".

"**நா**ன் புகழுக்காகவோ, ஆதாயத்துக்காகவோ சொல்லவில்லை. உண்மையைச் சொன்னேன். உங்களைப்போல அர்ப்பணிப்புடன் எல்லா ஆசிரியர்களும் கற்பித்தால் எமது பாடசாலை மாவட்டத்தில் முதல் இடம் பெறும்" என்று நிறுத்திய மான் சிறிது நேரம் கழித்துச் சொன்னது, "எனது மகனை உங்களுக்குத் தெரியும். அவன் நான்காம் வகுப்புப் படிக்கும் போது நல்ல கெட்டிக்காரன். இப்போது படிக்கிறான் இல்லை. அத்துடன் பாடசாலைக்குச் செல்ல மறுக்கிறான்".

"**ஏ**ன் என்ன நடந்தது?" மயில் கேட்டது.

"**அ**வனது வகுப்பாசிரியர் அவனை மிரட்டுகிறாராம், ஏசுகிறாராம், ஏதாவது பிழைவிட்டால் திட்டுகிறாராம்" என்றது மான்.

"**அ**வரைப் பற்றிப் பல புகார்கள் அதிபருக்குத் தினமும் வருகின்றன. எப்படிச் சொன்னாலும் அவர் கேட்பதாக இல்லை. கல்விப் பணிப்பாளருக்குச் சொல்லியுள்ளார். விரைவில் வகுப்பாசிரியரை மாற்றுவார்" என்றது மயில்.

"**அ**டுத்த மாதம் தரம் ஐந்துப் புலமைப்பரிசில் பரீட்சை வருகிறது. அதில் சித்தியடையாவிட்டால் தேசிய பாடசாலையில் சேரமுடியாது" என்று மான் சொன்ன போது மயில் சொன்னது, "என்னால் எதுவும் செய்ய முடியாது. வேண்டுமானால் மாலை நேரங்களில் வீட்டுக்கு அனுப்பு பின்தங்கிய பிள்ளைகள் சிலர் வருகிறார்கள். அவர்களுடன் சேர்த்துக் கற்பிக்கிறேன்".

**இ**ரண்டு மாதங்கள் கழியப் புலமைப் பரிசில் சோதனை வந்தது மான் குட்டியும் அதனிடம் கற்ற பின்தங்கிய மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தனர். மான்குட்டி மாவட்டத்தில் முதலிடம் பெற்றது.

**அ**ன்று மாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் அழைத்து அதிபர் சொன்னார், "மாணவர்களின் உள்ளம் மென்மையான மலரைப் போன்றது. கோபமான பார்வையே அவர்களது மனதை வாடச் செய்துவிடும். ஆசிரியர்கள் இலவசமாகக் கற்பிக்கவில்லை. அதற்காகச் சம்பளம் பெறுகின்றனர். சலுகைகளையும் பெறுகின்றனர். அதனால் அவர்களுடன் அன்பாகப் பேசுங்கள். பண்பாகப் பழகுங்கள். அவர்களை வன்சொற்கொண்டு பேசாதீர்கள். அன்புடன் எடுத்துச் சொல்லுங்கள். அன்பான பேச்சு அவர்களைக் கவரும் என்பதை மாவட்டத்தில் முதலாவது நிலையைப் பெற்ற மான்குட்டி சாட்சியாகும். அதன் வகுப்பாசிரியரை

மாற்றியதால் அது மகிழ்வுடன் கற்றுச் சித்தியடைந்துள்ளது. அதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கற்பிக்காவிட்டாலும் மாணவர்களுடன் அன்போடு பழகுங்கள். அவர்களை மதியுங்கள். இன்று மாணவர்கள் கற்கப் பல வழிகள் உண்டு. தொலைக்காட்சி மூலம் கற்கலாம். கைத்தொலைபேசி மூலமும் கற்கலாம். மான்குட்டி கைத்தொலைபேசி மூலமும் கற்றதாக அயலவர்கள் கூறுகின்றனர். அதனால் மாணவர்களை அன்பால் வசியப்படுத்துங்கள் அன்பால் கண்டியுங்கள்".

## 33. காப்பது விரதம்



**அ**ன்று காட்டுப் பிள்ளையார் கோவில் தேர். காடு முழுவதும் புனிதமாக இருந்தது. சாம்பிராணியினது வாசம் மூக்கைத் துளைத்தது. காட்டுபிள்ளையார் தேரில் ஏறி அமர்ந்தார். பக்தர்கள் தேரை இழுப்பதற்காக வடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தனர். பஞ்ச தீபம் காட்டியதும் தேர் இழுக்கப்படும்.

"**நா**ன் நினைவு தெரிந்த நாளில் இருந்து பிள்ளையார் கொடி ஏறிய நாளில் இருந்து தீர்த்தத் திருவிழா நடைபெறும் பத்து நாட்களும் விரதம் பிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். காட்டுப்பிள்ளையார் அருள் மிகுந்தவர். கேட்ட வரங்களையெல்லாம் தந்துவிடுவார்" என்றது கரடி.

**யா**னை கரடியைப் பார்த்தது. நன்றாகக் குளித்து சைவ ஆசாரப்படி அது தேர் வடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது. உடலெங்கும் விபூதிப் பூச்சு நெற்றியில் சந்தணப்பொட்டு அதற்குள் குங்குமப்பொட்டு, உருத்திராட்ச்ச மாலை அணிந்து ஒரு சைவப் பழம் போல அது காட்சியளித்தது. அதைப் பார்த்தவுடன் யானைக்கு ஒரு சிவனடியாரின் நினைவு வந்தது. அதனால் அது தனது தும்பபிக்கையைத் தூக்கிக் கரடியை வணங்கியது. கரடியும் மகிழ்வுடன் யானையை வணங்கிவிட்டு, "தங்களைப் பார்த்தால் காட்டுப்பிள்ளையார் நேரில் வந்தது போல இருக்கிறது" என்றது.

**அ**ப்போது அங்கு வந்த நரி, கரடியின் அருகில் சென்று சொன்னது, "நண்பரே, விரதம் முடிய ஆடு வெட்டிச் சாராயமும் குடித்தால்தான் உடம்பின் அலுப்புத் தீரும் என்றீர். எருமை

ஆடுகளை வளர்க்கிறது. நான் போய்ப் பார்த்து அச்சவாரம் கொடுத்துவிட்டு வந்துள்ளேன். பின்நேரம் வா அதைப் பார்க்கலாம்".

"**ச**ரி" என்றது கரடி.

**யா**னைக்கு அதைக் கேட்டக் கோபம் கோபமாக வந்தது, "சுவாமி தேரில் இருக்கும் போது இவ்வாறு கதைக்க உங்களுக்கு எவ்வாறு துணிவு வந்தது. நீங்கள் ஏன் விரதம் பிடிக்கிறீர்கள். விரதம் என்றால் உங்களுக்கு என்னவென்று தெரியுமா…? மனதால் கூட ஒரு உயிருக்குத் துன்பம் நினைக்காமைதான் விரதம். நீங்கள் காலையில் உண்ணாது குளித்துவிட்டு நீற்றைப் பூசி நாலைந்து சுவையான கறிகளுடன் உண்டுவிட்டுத் தீர்த்தம் முடிய உயிர்க்கொலை செய்து மாமிசத்துடன் மதுபானம் குடிப்பதுதான் விரதம் என்கிறீர்கள். உங்களுக்குச் சமயப் பிரசங்கங்கள் செய்யும் பிரசங்கிகளும் உங்களைப் போலத்தான் நடந்து கொள்கின்றனர். இது பெரும் பாவமான செயல் என்பதை உணர்ந்து இனியாவது திருந்தி வாழுங்கள். இல்லாவிட்டால் விரதத்தின் மகிமையை உணர்ந்து விரதத்தைப் பிடிக்காது விடுங்கள். நீங்கள் கோவிலடியில் பேசியதைக் கேட்டு எனது மனம் பாதிக்கப்பட்டுவிட்டது" என்றது.

## 34. கிழமை பட வாழ்



**யா**னை அன்று தான் விதைத்த நெல்லை அறுவடை செய்தது. நூற்றுக்கு மேற்பட்ட கூலியாட்கள் அருவிவெட்டி, சூடடித்துக் கொண்டிருந்தனர். யானை ஒரு மொத்த வியாபாரி. ஏனைய மிருகங்கள் விளைவிக்கும் பொருட்களை நியாய விலையில் வாங்கி வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும். அறுவடை முடிந்ததும் விளைந்த நெல்லை மூட்டையாகக் கட்டி பண்டசாலைக்கு அனுப்புமுன் அருவிவெட்டியவர்களுக்கும் ஏழைகளுக்கும் நெல்லைக் கொடுக்கும். அருவிவெட்டியவர்களுக்கும், அங்கு வந்தோர்க்கும் சுவையான உணவு வகைகளைக் கொடுக்கும். கூலியாட்களுக்குக் கூலியும் கொடுக்கும். யானையின் வயலில் வேலை இருந்தால் வேறு இடங்களுக்கு வேலை செய்ய யாரும் செல்லமாட்டார்கள். கடந்த பத்துத் தினங்களாக

யானையின் வயலில் வேலை செய்த தொழிலாளர்களில் சிலர் பன்றியின் வயலின் அருவிவெட்டினர்.

**ப**ன்றி வந்து அவர்களைக் கேட்டது, "யானையின் வயல் வேலை முடிய எனக்கு வேலை செய்வதாகச் சொன்னீர்கள் ஆனால் பலரைக் காணவில்லை".

"**யா**னையின் வயல்வேலை முடிய, அவ் வயலை உழுகிறார்கள். உழுது நான்கு நாட்களுக்குக் காய விட்டபின் உழ வேண்டும். பின் உழுந்து, பயறு, எள் முதலிய தானியங்களை விதைக்க வேண்டும்".

"**யா**னை பெரிய வர்த்தகன் மட்டுமல்ல, பெரிய விவசாயியும் கூட மழை வரும் போல இருக்கிறது. மழை வந்தால் விளைந்த நெல் அழிந்து விடும்" என்று பன்றி துயரப்பட்டபோது சுமார் ஐம்பது மிருகங்கள் அங்கு வந்தன. எருமை சொன்னது, "யானை முதலாளியார் மழை வரும் போலத் தெரிகிறது. நீங்கள் எல்லோரும் சென்று பன்றியின் வயலில் வேலை செய்யுங்கள்" என்றவர் என்று கூறிவிட்டு வயலில் இறங்கின.

**ப**ன்றிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. யானை பெருந்தனவந்தனாக இருந்தபோதும் அமைதியாகவும், சாந்தமாகவும் இருந்து எல்லோருக்கும் உதவி செய்வது. அதனால் தான் எல்லோரும் அதற்கு உதவுகிறார்கள் என்று நினைத்தது.

**அ**ன்று மாலை ஐந்து மணிக்கு பன்றியின் வயல்வேலைகள் முடிந்தன. அறுவடை செய்த நெல்லை ஏற்றிய பின்பு மழை பெய்ய ஆரம்பித்தது.

"**யா**னை செய்த உதவியால் எனக்கு ஏற்படவிருந்த பெருநட்டம் இல்லாமற் போனது" என்று சொன்னபோது எருமை சொன்னது, "நல்லவர்களை ஒருபோதும் கடவுள் கைவிட மாட்டார். இன்று பின்நேரம் தான் மழை வரும். அதற்கு முன் சென்று பன்றிக்கு உதவுங்கள் என்று யானை சொன்னது. அது சொன்னது போல, அது சொன்ன நேரம்தான் மழை வந்தது. பக்தியுள்ளவரின் விருப்பப்படி தான் கடவுளும் நடந்து கொள்வார்" என்றது.

## 35. கீழ்மை அகற்று



**பெ**ருமழை பெய்து கொண்டிருந்தது. பன்றியும் மகனும் இரவு பத்து மணிக்கு யானையின் வீட்டுக்கு வந்தன. வீட்டின் முன் பக்கத்தில் மட்டும் மின்குமிழ் எரிந்து கொண்டிருந்தது. பன்றி திரும்பிச் சென்றுவிடலாமா எனச் சிந்தித்தபோது அங்கே வந்த யானையின் வேலையாளான ஒட்டகச்சிவிங்கி, “யாரது, இந்தக் கொட்டும் மழையில் நடுச்சாமத்தில் வந்துள்ளீர்கள்” என்று கேட்டவாறு குடை பிடித்துக் கொண்டு நின்றது.

“**எ**ன்னைத் தெரியவில்லையா? முதலாளி எங்கே? படுத்துவிட்டாரா?” என்று கேட்டது பன்றி.

“**ஓ**, நீங்களா. வாருங்கோ, வாருங்கோ. உள்ளே வந்து அமருங்கோ” என்றது ஒட்டகச்சிவிங்கி. பன்றியும் அதன் மகனும் உள்ளே வந்து அமர்ந்தன. சிறிது நேரத்தில் யானை போர்த்து மூடியபடி வந்தது.

“**நா**ன் உங்களது நித்திரையைக் குழப்பிவிட்டேன்” என்றது பன்றி.

“**இ**ல்லை, இல்லை. வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்” என்றது யானை.

**இ**ன்று நீங்கள், உங்கள் கமத்தில் வேலை செய்த சுமார் நூறு வேலையாட்களை அனுப்பாவிட்டால் எனது நெல் பாதுகாப்பாக பண்டகசாலையை அடைந்திருக்காது. அதனால் சுமார் ஐந்து லட்சம் ரூபா அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டது. நான் உங்களுக்கு எந்த ஒரு உதவியும் இதுவரை செய்ததில்லை. எனது விளை பொருட்களை எனது தந்தையார் கொடுத்து வந்த சிங்கத்துக்கே விற்பனை செய்வேன். அப்படி இருந்தும் எனக்குப் பெரும் உதவி செய்துள்ளீர்கள். அதனால் இனி எனது விளை பொருட்களைத் தங்களுக்கே தர விரும்புகிறேன். எனது மகன் தனது விளை பொருட்களையும் உங்களுக்கே தருவான்” என்றது பன்றி.

“**இ**ல்லை, இல்லை நீங்கள் கொடுத்தவருக்கே பொருட்களைக் கொடுங்கள் அது தான் நியாயம். எனக்குத் தந்தால் வீண் விரோதம் உண்டாகும் என்றது யானை.

“**இ**ல்லை அவர் வயதானவர். பிள்ளைகள் இல்லை. வியாபாரத்தைக் கைவிடப்போவதாகக் கூறுகிறார்.

“**அ**வர் வியாபாரத்தை முழுமையாகக் கைவிட்ட பின்பு அதைப் பற்றி யோசிக்கலாம். இதுக்காகவா கொட்டும் மழையிலும் நடுராத்திரியில் குடைபிடித்துக் கொண்டு வந்தீர்கள். இது எல்லாம் சாதாரண விடங்கள். ஒருவர் கஷ்டப்படும் போது பிரதியுபகாரம் பாராது உதவி செய்தல் வேண்டும். அவருக்கு உதவி செய்தால் அவரிடமிருந்து எவற்றைப் பெறலாம் என்ற கீழான தீய நோக்கத்தை விட்டு விட்டு உதவுவது தான் பண்பாகும்” என்றது யானை.

“**நா**ன் யாருக்கும் உதவிகள் செய்வதில்லை. ஒருமுறை உதவி செய்தால் தினமும் உதவிகோரி வருவார்கள். பலமுறை கொடுத்து விட்டு ஒருமுறை கொடுக்காவிட்டால் அதைப்பற்றித்தான் குறையாக நினைப்பார்கள்” என்றது பன்றி.

“**ஒ**வ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிந்திக்கின்றனர். நான் உதவிகள் செய்வதை அன்றன்றே மறந்து விடுவேன். செய்த உதவிகளை நினைப்பதால் தான் மனம் குழம்புகிறது. எமக்குத் தீது என்று நாம் நினைப்பவற்றை நாம் பிறருக்குச் செய்யாதிருந்தால் கடவுள் எமக்கு உதவுவார். இது எனது நம்பிக்கை. அதனால் நான் யாருக்கும் தீமை செய்வதில்லை. நினைப்பதும் இல்லை. அதனால் துன்பமும் இல்லை” என்றது யானை.

“**உ**ண்மைதான். தீயவற்றை நினைப்பதால் தான் மனம் குழம்புகிறது” என்றது பன்றி.

## 36. குணமது கைவிடேல்



**ஒ**ட்டகம் யானையிடம் வந்து சொன்னது, “நண்பா, அரியபல நல்ல குணங்களை உடையவன் நீ. முன்பென்றால் ஒருவர் கேட்காமலே நீயே உணர்ந்து மற்றவர்களுக்கு உதவி செய்வாய். பாடசாலையில் அதிபராக இருந்தபோது நீ எவ்வளவு அரிய வேலைகளைச் செய்தாய். அதனால் பாடசாலை இமயம் போல் உயர்ந்தது. பாடசாலைக்கு நூறு வருடங்களாக விளையாட்டு மைதானம் இல்லை. அருகில் உள்ள பாடசாலை மைதானத்தில் தான் விளையாட்டுப் போட்டியை நடத்தி

வந்தனர். நீ தான் முயற்சி செய்து ஒரு விளையாட்டு மைதானத்தை வாங்கினாய். அப்போது யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. யாரும் பணம் தராதபோதும் எப்படியோ விளையாட்டு மைதானத்தை வாங்கினாய். பாடசாலைப் பாதுகாப்பிற்காக சுற்றிவரச் சீமெந்தினால் சுவர் அமைத்தாய். நூறு வருடங்களாக குடிநீர் இல்லை. நீர்த்தாங்கி அமைத்து நீர் வழங்கினாய். கோவில் கட்டினாய். பாடசாலையை நிறுவினவருக்குச் சிலை அமைத்தாய். இவ்வாறெல்லாம் செய்த நீ, இன்று சமூகசேவையில் இருந்து ஒதுங்கியிருப்பது எனக்கு கவலையை அளிக்கிறது".

"**நி**னைத்துப் பார்த்தால் இதெல்லாம் தேவையில்லாத வேலை என்று இப்போது தெரிகிறது. பாராட்ட வேண்டாம். விருதுகள் தரவேண்டாம். நன்றி உணர்வாவது இப்பிரதேச மக்களுக்கு இருக்கா?" என்று யானை சொன்னபோது ஒட்டகம் சொன்னது, "நீ ஊர்மக்களின் நன்மைக்காகச் செய்கிறாய் என்று நினைத்தேன். ஆனால் நீ சுயநலன் கருதித்தான் செய்திருக்கிறாய்".

"**சு**ய நலமில்லாத செயல் ஒன்று சொல்லு பார்ப்போம் கடவுளுக்குப் பொங்கும் போது கூடக் காரணமின்றி எம்மவர் பொங்குவதில்லை. பாராட்ட வேண்டாம். நான்தான் செய்தேன் என்பதற்கு அடையாளம் ஏதாவது இருக்கா?".

"**நா**னும் இன்னும் பலரும் நம்பக்கூடாத தீயவர்களை அவர்களின் தந்திரமான பேச்சை நம்பிப் பொறுப்புக்களை ஒப்படைக்கிறாய் என்று சொன்னபோது, நீ அவர்களைத் தேவர்கள் என்றாய். நீ பதவியைக் கொடுத்த மறுநாளே அவர்கள் மாறிவிட்டனர் என்று உன்னைப் பற்றி கதைக்கப்போனவர் வந்து சொன்னவர் தானே. நீ அப்போது நம்பவில்லை. இப்போது கவலைப்படுகிறாய். நீ மதிக்க வேண்டியவர்களை மதித்து அவர்களைப் பொறுப்பில் வைத்திருந்தால் இந்தநிலை வந்திருக்காது. யார் சொல்லியும் கேளாது நம்பக்கூடாதவரை நம்பிவிட்டு மக்கள் எல்லோரும் அப்படித்தான் என்று நினைப்பது மகாதவறு. யோசித்துப்பார் அன்று நீ நம்பியவர்கள் அன்று இருந்தவாறா இன்று இருக்கிறார்கள். அதனால் உனது இயல்பான மேலான குணத்தைக் கைவிடாதே. யாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு உனது கடமைகளைச் செய். நன்மையையும் தீமையையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு மீண்டும் உனது செயல்களை ஆரம்பி" என்றது ஒட்டகம்.

"**நீ** சொல்வது சரி. முன்பு இவற்றையெல்லாம் நீ எடுத்துச் சொன்ன போது உன்னை விட அவர்களைத்தான் நம்பினேன். அவர்கள் மனதுக்குள் தம் நலத்தைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுத்த பின்பே நடித்தனர். பரவாயில்லை எல்லாம் நன்மைக்கென்றே எடுத்து செயலாற்றுகிறேன்" என்றது யானை.

"**மி**க்க மகிழ்ச்சி நண்பா" என்றது ஒட்டகம்.

## 37. கூடிப் பிரியேல்



**க**டந்த சில நாட்களாகக் குரங்கைக் காணாது மிகவும் கவலைப்பட்ட ஒட்டகச்சிவிங்கி, குரங்கைத் தேடிக் குரங்கின் வீட்டுக்குச் சென்றது. வெளியே நின்று அது குரங்கைப் பெயர் சொல்லி அழைத்த போது குரங்கின் மனைவி வந்து, "அவர் வெளியூருக்குப் போய்விட்டார் வரச் சில நாளாகும்" என்றது.

**அ**தைக்கேட்ட ஒட்டகச்சிவிங்கிக்குத் துக்கமாக இருந்தது. குரங்கை அது தனது நல்ல நண்பனாக ஏற்ற பின்பு குரங்கு எங்கு சென்றாலும் அதை அழைத்துச் செல்லும். அல்லது சொல்லிவிட்டுச் செல்லும். இப்போ அது வீட்டில் தான் நின்று கொண்டு தனது மனைவியிடம் அயலூருக்குச் சென்றுவிட்டதாகச் சொல்லச் சொல்லியிருக்கிறது. அதன் மனைவி வெளியே வந்தபோது சிறிது பதட்டமாக இருந்தது. அத்துடன் தடுமாறித் தடுமாறித்தான் பேசியது. அதை நினைக்க ஒட்டகச்சிவிங்கிக்குக் கவலையாக இருந்தது. அது மிகுந்த வேதனையுடன் நடந்து வரும்போது பன்றி கேட்டது, "நண்பா, நீயும் உனது நண்பரான குரங்கும் ஒருபோதும் தனியே சென்றதை நான் பார்த்ததில்லை. சிறிது நேரத்திற்கு முன்பு குரங்கு கரடியுடன் சென்றது. நான் கூப்பிடக் கூப்பிடக் கேளாதது போலச் சென்றது. இப்போது நீ தனியே வருகிறாய். நண்பர்களானால் ஒருபோதும் பிரியமாட்டார்கள். பிரச்சினைகள் ஏற்பட்டால் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிரப் பிரியக் கூடாது".

**ஒ**ட்டகச்சிவிங்கி வேதனையுடன் நடந்து வரும்போது எருமை சொன்னது, "நண்பா, உனது நண்பனான குரங்கு கரடியுடன் சேர்ந்து காட்டின் ஓரத்தில் உள்ள தென்னந்தோப்பில் நுளைந்து திருடும்போது பொறிக்குள் அகப்பட்டுக் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அதை மறைக்கத்தான் உன்னை விட்டுப் பிரிந்து திரிகிறது".

**ஒ**ட்டகச்சிவிங்கி வேதனையுடன் திரும்பவும் குரங்கின் வீட்டுக்குச் சென்றது. அதைக் கண்ட குரங்கின் மனைவி வந்து அழுதழுது சொன்னது, "நண்பரே, நீங்கள் நல்லவர். ஒழுக்கமானவர். இறுக்கமான மனதை உடையவர். எனது கணவர் அப்படியானவர் அல்ல. கரடி துர்க்குணங்களை உடையது. அது அவரை உங்களிடமிருந்து பிரித்துத் தனது களவுத் தொழிலில் ஈடுபடுத்தியது. இரண்டு மூன்று முறை களவெடுத்துத் தப்பிவிட்டனர். அதனால் உற்சாகத்துடன் நேற்றுக் களவெடுக்கச் சென்றபோது தென்னத்தோட்டத்தில் பொறிவைத்து

விட்டனர். அதில் அகப்பட்டு இவரது கால் ஊனமாகிவிட்டது. தயவு செய்து அவரைக் கரடியோடு சேரவிடாது உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். நல்லவரான உங்களோடு சேர்ந்திருக்கையில் இவரிடம் தீய குணங்கள் இருக்கவில்லை. உங்களை விட்டுப்பிரிந்த பின்பு திருடனாக மாறிவிட்டார்" என்று அழுதது.

**அ**ப்போது குரங்கின் மகன் குரங்களை கைத்தாங்கலாக அழைத்து வந்தது, "நண்பா, உன்னோடு சேர்ந்திருக்கும் வரை என்னை எல்லோரும் மதித்தனர். இப்போ எல்லோரும் என்னைக் கேலி செய்கின்றனர். அதனால் தமது மானம் போய் விட்டதாக எனது குடும்பத்தினர் ஏசுகின்றனர். நான்பட்டது போதும். இனி உத்தமனான உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்" என்று அழுதது. ஒட்டகச்சிவிங்கி மீண்டும் அதைத் தனது நண்பனான ஏற்றுக் கொண்டது.

## 38. கெடுப்பது ஒழி



**ந**ரி வந்து தனது நண்பனான எலிக்குச் சொன்னது, "நண்பா, நான் முயலோடு நண்பனாக இருக்க விரும்பிப் பலமுறை தொடர்பு கொண்டும் என்னை முயல் தனது நண்பனாக ஏற்கிறதில்லை. அதற்குக் காரணம் நான் தீயவனாம். என்னை நம்பிப் பழக முடியாதாம். நான் உன்னுடன் நண்பனாக இருந்தால் நீ என்னுடைய நண்பர்கள் என்று பாராமல் அவர்களின் பொருட்களைத் திருடிவிடுவாய். கோள் மூட்டி நல்ல நண்பர்களைப் பிரித்து விடுவாய். மாடும் எருமையும் நல்ல நண்பர்களாக இருந்தன. நீ எருமைக்கு மனிதர்கள் பயிர்செய்யும் தோட்டங்களுக்கு அழைத்துச் சென்று பயிரை மேயவைத்துவிட்டு, அது மேயும் போது பலத்த சத்தமாக ஊளையிட்டாய் அச்சத்தத்தைக் கேட்ட மனிதர்கள் வந்து எருமையை கட்டிவைத்து அடித்தனர். பாவம் எருமை அறிவில்லாதது. அதனால் தான் உனது சூழ்ச்சிக்குப் பலியாகியது. எருதோடு நீ குளத்தில் குளிக்கும் போது நீரைக் கலக்கிச் சேறாக்கினாய். அதை எருது சொல்ல, அது பிடிக்காமல் அது நீரைவிட்டு வெளியே வந்ததும் சண்டையிட்டாய். எருது உன்னை கொம்பால் குத்தியது. அதைப் பழிவாங்க நினைத்து இரண்டையும் பிரித்தாய்".

நரி சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டுச் சொன்னது, "எருமை பயிர்களின் செழிப்பைக் கண்டு ஆசைப்பட்டு அதிகநேரம் மேய்ந்தது. அதை வரப்பண்ணத்தான் ஊளையிட்டேன். மனிதர்கள் அடிக்கடி பயிரைப் பார்க்க வருவார்கள்".

"நீ சொல்வதெல்லாம் பொய். உன்னை நான் நம்பமாட்டன். இப்போ முயலுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு அது விதைக்க வைத்திருக்கும் விதை நெல்லைக் கொறித்து அழிக்கச் சொல்கிறாய். ஒருவரைக் கெடுப்பது பாவம். முயல் நெல் விதைத்து அதன் வருமானத்தில் தான் வாழ்ந்து வருகிறது. நான் அதைக் கெடுத்தால் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைக் கெடுத்தவனாவேன். முற்பகல் தீமை செய்தால் அது பிற்பகலில் தீமை செய்தவரை வந்தடையும் என்று எனது தாத்தா சொல்வார். அதனால் நான் யாரையும் கெடுக்கமாட்டேன்" என்றது.

"நீ இதைச் செய்தால் நான் உனக்கு ஏராளமான பணத்தைத் தருவேன் நீ சுகமாக வாழலாம்" என்றது நரி.

"நீ என்ன லட்சக்கணக்கிலா தரப்போறாய். நீ தரும் பணம் ஒரு சிலநாட்களுக்கே போதாது. நீ இலட்சக்கணக்காக இல்லை கொடிக்கணக்காகத் தந்தாலும் ஒருவரைக் கெடுக்க நான் விரும்பமாட்டேன். அதனால் போய்விடு. இல்லாவிட்டால் சிங்கராசாவுக்குச் சொல்வேன்" என்றது எலி. நரி சிங்கராசாவுக்குச் சொல்வேன் என்றதும் பயந்து சென்றுவிட்டது.

## 39. கேள்வி முயல்



குட்டி நரி பாடசாலைக்குச் செல்லாததால் அதன் வகுப்பாசிரியரான பன்றி நரியின் வீட்டுக்கு வந்தபோது குட்டிநரி பயத்துடன் வெளியே வந்தது. நரியைக் கண்ட பன்றி அன்புடன், "மகனே" என அழைத்து அதன் தலையை வருடியபடி கேட்டது, "இன்று ஏன் பாடசாலைக்கு வரவில்லை. ஏதாவது சுகவீனமா…? சுகமில்லாவிட்டால் மருந்து எடுத்தாயா…?"

**ந**ரிக்குட்டிக்குப் பயமாக இருந்தது. அது எதுவும் பேசாது நின்றது. அதன் கண்கள் கலங்கின.

“**ம**கனே, நான் என்ன சொல்லிவிட்டேன் என்று அழுகிறாய். பயப்படாதே நீ எனது விருப்புக்குரிய மாணவன் அதனால் தான் தேடி வந்தேன். உனது தந்தை என்னுடன் படித்தவர். அவர் படிப்பில் அக்கறை காட்டுவதில்லை. அதனால் அரசாங்கப் பரீட்சையில் சித்தியடையவில்லை. நான் சித்தியடைந்தமையால், எனக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. எனது நண்பனின் மகன் பாடசாலைக்கு வராதது எனக்கு மிக்க கவலையை அளித்தது. படிக்காவிட்டால் உனது அப்பாவைப் போலக் கஷ்டப்படல் வேண்டும். நீ ஏன் இன்று பாடசாலைக்கு வரவில்லை என்று கூறு” என்றது பன்றி.

“**நீ**ங்கள் தந்த கட்டுரையை எழுத என்னால் முடியவில்லை. அது எனக்கு விளங்கவும் இல்லை” என்றது நரிக்குட்டி.

“**ம**கனே, எல்லோருக்கும் எல்லாம் விளங்கமாட்டாது. விளங்காதவற்றைக் கற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும். என்னிடம் வந்து கேட்டிருக்கலாம். யானைக்குட்டி கற்று ஆசிரியராக இருக்கிறது. அதனிடம் கேட்டிருக்கலாம். எருமை பண்டிதர் அதனிடம் கேட்டிருக்கலாம். கற்றவர்கள் கேட்டால் சொல்லித்தருவார்கள் அத்துடன் அவர்கள் கூறும் அறிவுரைகளையும் கேட்க வேண்டும். அப்படிக் கேட்பதன் மூலம் அவர்களது அறிவு உன்னை வந்தடையும். தெரியாதவற்றையும், நாம் அறியாதவற்றையும் கற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அது வெக்கம் இல்லை. யானைக் குட்டி மாலை வேளைகளில் இலவசமாக கற்பிக்கிறது. அதன் வகுப்பிற்குச் செல். நம் முன்னோர் சொல்வர் கண்டவற்றையெல்லாம் கற்றால் பண்டிதர் ஆகலாம் என்று. அதனால் வெட்கப்படாது தெரியாதவற்றைத் தெரிந்தவர்களிடம் கேள். நீ எந்த வேளையில் வந்து எதைக் கேட்டாலும் நான் மிக்க மகிழ்வுடன் சொல்லித் தருவேன். எதற்கும் பயப்படலாகாது. முக்கியமாக அறியாதவற்றை அறிஞர்களிடம் கேட்கத் தயங்கக் கூடாது” என்றது பன்றி.

“**இ**து தெரியாமையால் தான் நான் இன்று பாடசாலைக்கு வரவில்லை. இனிமேல் வராமல் விடமாட்டேன்” என்றது நரி. அதைக் கேட்டு மகிழ்ந்தது பன்றி.

## 40. கைவினை கரவேல்



**எ**ருது முழுச்சோம்பேறி. எந்தஒரு வேலையையும் ஒழுங்காகச் செய்யாது அதனால் அது வறுமையில் வாடியது. எருதின் மகன் பாடசாலையில் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அது ஒரு பிரபலமான பெரிய பாடசாலை. எருதின் சகோதரனின் பிள்ளைகள் அப்பாடசாலையில் கல்வி கற்றனர். அதனால் எருதின் சகோதரன் எருதின் மகனையும் அப்பாடசாலையில் சேர்த்திருந்தான். எருது உழைக்காததால் எருதின் மகனின் பாடசாலைச் செலவுகளையும் சகோதரனே கொடுத்து வந்தான். இது எருதின் மகனுக்கு வெக்கத்தைக் கொடுத்தது. அதனால் அது பாடசாலையில் சொல்லிக் கொடுத்த பனை ஓலையால் செய்யும் பெட்டி, கடகம், பாய், பைகள் முதலியவற்றை ஓய்வு நேரங்களில் செய்து விற்பனை செய்து வந்தது. அதனால் அதற்குப் பணம் சேர்ந்தது.

**எ**ருதின் மகன் பாடசாலை விட்டதும் தான் செய்த கைவினைப் பொருட்களை வீதி வீதியாகக் கொண்டு சென்று விற்பான். இது எருதின் சகோதரனின் பிள்ளைகளுக்கு வெட்கமாக இருந்தது. தமது மரியாதை அதனால் போய்விட்டது என்று தந்தைக்குச் சொல்லின. அது பெரிய பாடசாலை. அங்கு படிக்கும் பெண்கள் எருதின் மகனை ஓயாது கேலி செய்வர். மாணவர்களும் கேலி செய்வர்.

**எ**ருதின் மகனை ஒரு வியாபாரியின் மகள் கேலி செய்தபோது, "சகோதரியே, களவெடுப்பது, பொய்சொல்வது, கலப்படம் செய்வது தான் பாவம். அவை தீய செயல்கள். அதையே பலர் அஞ்சாது செய்கின்றனர். உனது தந்தை பொருட்களை விற்கிறார். நான் பெட்டி, கடகம், பாய் என்பவற்றை விற்கிறேன். இரண்டும் வியாபாரம் தானே. இதில் என்ன குறை இருக்கிறது?" என்று கேட்டது. அதன் பின் யாரும் அதைக் கேலி செய்வதில்லை.

**ஒ**ரு வருடம் கழிந்தது. எருதின் மகன் பெரும் வியாபாரி ஆகிவிட்டது. பாடசாலைக்கு ஒரு கட்டிடம் கட்ட அதிபர் நிதிசேகரித்த போது எருதின் மகன் பெரும் பெரும் தனவந்தர்கள் கொடுத்தளவு பணம் கொடுத்தது. அதிபர் திகைத்துப் போனார்.

**ம**றுநாள் காலை ஆராதனை முடிய அதிபர் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உரையாற்றினார்.

“**மா**ணவர்களே, எமது பாடசாலை மாணவன் ஒருவன் படிக்கும்போது பாடசாலையில் கற்ற பனைஓலை மூலம் செய்த பொருட்களை விற்பனை செய்து ஒரு பெருந்தொகையைப் பாடசாலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளான். எல்லாம் பணம் தேடுவதற்கான தொழில்கள். இதில் வெட்கப்பட எதுவும் இல்லை. பெட்டி, கடகம், பாய் இழைத்து விற்பதும் ஒரு தொழில் அதைச் செய்து பெரும் பணம் சம்பாதித்த மாணவனைக் கௌரவப்படுத்த இந்தப் பொன்னாடையைப் போர்த்தி, மாலை அணிவித்துப் பாராட்டுகிறேன். ஏனைய மாணவர்களும் இம் மாணவனைப் பின்பற்றி வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்” என்றார். மாணவர்களும் ஆசிரியர்களும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். பின்பு தனித்தனியே பாராட்டினர். கேலி செய்த மாணவி வந்து மன்னிப்புக் கேட்டாள்.

## 41. கொள்ளை விரும்பேல்



**ந**ரிக்கு சூதாடுவதற்குப் பணம் தேவையாக இருந்தது. அது தனது நண்பர்களிடம் சென்று தனது மகனுக்குச் சுகமில்லை மருந்தெடுக்கப் பணம் தரும்படி கேட்டது. யாரும் கொடுக்கவில்லை. நரி பலமுறை பல்வேறு விதமான பொய்களைக் கூறி நண்பர்களிடம் பணம் கேட்கும். சிலர் கொடுத்துவிடுவார்கள். அன்று யாரும் கொடுக்கவில்லை.

**அ**ன்று வெளியூர்களில் இருந்து சூதாடுவதற்குப் பலர் வரவிருப்பதாகச் சூதாட்டத்தை நடத்தும் ஒட்டகம் சொல்லியிருந்தது. அதனால் எப்படியாவது பணத்தைப் புரட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் அலைந்து திரிந்தது.

**அ**ப்போது அந்த வழியால் ஓர் ஆமை வந்தது. நரி ஆமையிடம் இதுவரை கடன் கேட்டுப்பெறவில்லை. அதனால் அது ஆமையின் அருகே சென்றது.

**ந**ரி ஏதோ ஒரு தேவைக்காகத் தான் தன்னிடம் வந்திருக்கிறது என்று ஆமை உணர்ந்து கொண்டது. ஆமைக்கு நரியைப் பற்றித் தெரியும். நரி ஆமைக்கு அருகில் மிக்க சோகத்தில்

இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டு நின்றது, “என்ன நரியாரே, மிக்க கவலையுடன் இருப்பது போலத் தெரிகிறது” என்று பேச்சை ஆரம்பித்தது.

“**ஓ**ம் நண்பா, எனது இளைய மகனுக்குக் கடுமையான சுகவீனம். மருந்துவரான புலி இரத்தம் எடுத்துச் சோதித்துத்தான் மருந்து தரவேண்டும். இங்கு அந்த வசதியில்லை பட்டணத்தில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று கூறிவிட்டது. என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. ஓர் ஆயிரம் ரூபா தா. ஓரிரு நாட்களில் திருப்பித் தருகிறேன்” என்றது.

“**க**டுமையான வருத்தமான? உடனே கொண்டு போ. என்னிடம் இப்போது பணம் இல்லை. வீட்டுக்குத் தான் போகிறேன். அங்கு சென்று எடுத்து உனது மனைவியிடம் கொடுக்கிறேன்” என்றது.

**ஆ**மை தன்னை நம்பவில்லை என்று புரிந்து கொண்ட நரி என்ன செய்யலாம் என்று யோசித்தது. காட்டில் உள்ள முதிய கரடியொன்று காலை வேளையில் தனது மகனின் வீட்டுக்குச் செல்லும். மாலை வேளைகளில் திரும்பி தனது வீட்டுக்குச் செல்லும். அதன் கழுத்தில் ஒரு பெறுமதியான தங்கச் சங்கிலி எப்போதும் இருக்கும். அது மாலை வேளை திரும்பிவரும்போது தங்கச் சங்கிலியை அறுக்க வேண்டும் என்று தீர்மானித்து அது வரும் பாதையில் பதுங்கி இருந்தது. கரடி பொல்லை ஊன்றியபடி மெதுவாக நடந்து வந்தது. முகத்தை மறைத்துத் துணியால் கட்டியிருந்த நரி கரடியின் தங்கச் சங்கிலியை இலகுவாக அறுத்துக் கொண்டு ஓடிவிட்டது.

**மு**திய கரடியின் அவலக் குரல் கேட்டு பலர் ஓடிவந்தனர். கரடி பயத்தால் நடுநடுங்கிய படி தனது தங்கச் சங்கிலியை முகமூடியணிந்த ஒருவர் திருடிவிட்டார் என்று அழுதது.

**ந**ரி தனது இருப்பிடத்திற்குச் சென்றபோது புறா அதன் வீட்டின் முற்றத்தில் இருந்த வேப்பமரத்தில் இருந்து, “திருட்டு நரியே வாவா…” இராசாவுக்குச் சொல்வேண் வா… வா…” என்றது.

**ந**ரி திகைத்து விட்டது. எனினும் எதையும் அறியாதது போல, “நீ என்ன சொல்கிறாய்?” என்று கேட்டது.

“**நீ** முதிய கரடியின் சங்கிலியை அறுத்ததை தான் எனது கண்ணால் கண்டேன். மரியாதையாகத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் சிங்கராசாவுக்குச் சொல்வேன். அவர் சாப்பாடு தராது இருட்டறையில் அடைப்பார். எது விருப்பம்” என்றது.

“**பு**றாவே, தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே. சங்கிலியின் பெறுமதியில் அரைவாசியை உனக்குத் தருகிறேன்” என்றது நரி.

“**தி**ருடுவது பாவம். ஒருவர் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை அபகரிக்கக் கூடாது. கரடி தனது இறுகிக் காலத்திற்கென அச் சங்கிலியை வைத்துள்ளது. அதைக் கவர்வது பாவம். பாவச் செயலைக்கண்டும் அதை உரியவருக்கு அறிவிக்காமல் விடுவது மகாபாவம். அதனால் அதைக் கொடுத்துவிடு” என்றது புறா.

**வே**று வழியின்றி நரி அச் சங்கிலியைப் புறாவிடம் கொடுக்க, அது அதைக் கரடியிடம் கொடுத்தது. கரடி மகிழ்வுடன் புறாவுக்கு நன்றி சொன்னது.

## 42. கோதாட்டு ஒழி



**பு**றா நரிக்குச் சொன்னது, “நீ சூதாடுவதற்காகப் பல பொய்களையும் புரட்டுக்களையும் சொல்லி ஏமாற்றிப் பணம் வாங்குகிறாய். இது குற்றமான செயல். சிங்கராசா அறிந்தால் உன்னைச் சிறையில் அடைத்துவிடுவார். உனது மனைவி என்னுடன் படித்தவள். மிகவும் நல்லவள். ஒழுக்கமானவள் அவளைத் திருமணம் செய்த நீ அவளைத் தினமும் கொடுமைப்படுத்துகிறாய். எதும் அறியாத அந்த அப்பாவிப் பெண்ணை நீ துன்புறுத்துவது எனக்குப் பிடிப்பதில்லை. இன்று சூதாடுவதற்காக முதிய ஒரு கரடியின் தங்கச் சங்கிலியை அறுத்துள்ளாய். அறுக்கும் போது அதன் கழுத்தில் பெரியதொரு வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. எனது நண்பியைக் காப்பாற்றுவதற்காகத் தான் உன்னை நான் காட்டிக் கொடுக்கவில்லை. கரடியின் பிள்ளைகள் எனக்கு எவ்வாறு சங்கிலி கிடைத்தது என்று பலமுறை கேட்டனர். முகமூடி அணிந்த ஒருவர் பயத்தினால் ஓடுவதை நான் கண்டு அதன்பின் அது யாரென அறியச் சென்றேன். ஓடும் அவசரத்தில் சங்கிலி விழுந்ததை அது கவனிக்கவில்லை. நான் அதைக்கண்டு எடுத்து விட்டு எங்கும் பார்த்தேன் யாரையும் காணவில்லை” என்று நான் சொன்னதைக் கரடியின் பிள்ளைகள் நம்பிவிட்டனர். முதிய கரடியும் முகமூடியணிந்த ஒருவர் எனது சங்கிலியை அறுத்தவர். அதனால் என்னால் அவரை அடையாளம் காணமுடியவில்லை என்று கூறியமையால் எல்லோரும் நம்பிவிட்டனர்.

“**ந**ரியாரே தப்பிவிட்டேன் என்று நினைத்து மகிழாதீர். அத்துடன் சூதாடுவது பெரும் குற்றமான விளையாட்டு. சிங்கராசா அதைத் தடைசெய்துள்ளார். தடை செய்த விளையாட்டை விளையாடி மீளாத சிறைக்குச் செல்ல விரும்புகிறீரா. பல நாள் திருடுபவன் ஒருநாள் அகப்படுவான். அகப்பட்டால் சிறைத் தண்டனை கிடைக்கும். அதனால் தண்டணையைப் பெற்றுத் தரும் விளையாட்டை விளையாடவேண்டம்” என்றது புறா.

## 43. சக்கரநெறி நில்



**கா**ட்டுப்பிள்ளையார் கோவில் கொடியேறித் திருவிழா நடைபெற்றுக கொண்டிருந்து. நரியார் திருவிழாவுக்குத் தினமும் ஆடம்பரமான உடைகளை உடுத்தி, தங்கச் சங்கிலி அணிந்து வருவார். விரல்கள் அனைத்திலும் தங்க மோதிரங்கள் அணிந்திருப்பார்.

**எ**ல்லா மிருகங்களும் அவரை விசித்திரமாகப் பார்க்கும். சில காலத்திற்கு முன்பு அன்றன்றேல் உணவுக்கே கஷ்டப்பட்டவர் இப்போது எப்படி வசதியாக வாழ்கிறார் என்று மிருகங்கள் பலவும் தமக்குள் பேசிக் கொள்ளும்.

“**ந**ரியார் ஏதோ கள்ள வேலை செய்கிறார். கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் இவ்வளவு விரைவாக முன்னேற மாட்டார்கள்” என்றது யானை.

“**ஏ**தாவது புதையல் கிடைத்திருக்கும்” என்றது மான்.

“**பு**தையல் கிடைத்தால் அதை அரசனான சிங்கராசாவிடம் ஒப்படைத்து விடவேண்டும். அது தானே சட்டம்” என்றது புலி.

“**ஆ**ளைக் கண்காணிக்க வேண்டும். தீய செயல்கள் மூலம் பணம் சம்பாதித்தால் அது அவருக்குக்கேடு. சிங்கராசா அவரைக் கவனிக்கவில்லை” என்றது ஒட்டகம்.

“**சி**ங்கராசா, அதிபுத்திசாலி. கவனித்திருப்பார் அவருக்குப் பின்னால் ஒற்றரும் திரிவர்” என்றது புலி.

“திருடுபவன் ஆடம்பரமாக வாழ்ந்தால் அகப்பட்டு விடுவான் என்று கூடத்தெரியாதவரா அவர்” என்றது பன்றி.

“இவர் காட்டின் எல்லைப் புறத்திற்கு அடிக்கடி சென்று வருகிறார். அங்கு நாலைந்து மனிதர்களுடன் பேசுகிறார். நான் பறந்து செல்லும் போது அவரைப் பார்ப்பேன். எனக்கும் சந்தேகமாக இருக்கிறது” என்றது கிளி.

“ஒருநாள் எருமை ஒன்று மனிதர்களின் தோட்டத்துள் நுளைந்து மேய்ந்து விட்டு மயங்கிக் கிடந்தது. இரண்டு மூன்று நாட்களாக அது எழும்பவில்லை. பின் அது இறந்துவிட்டது” என்றது ஒட்டகம்.

“இவரைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கிளியிடம் ஒப்படைத்த போது அது பறந்த சென்று நோட்டமிடும். அதை யாரும் சந்தேகிக்க மாட்டார் என்றது மான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. சிங்கராசாவின் வீரர்கள் வந்து நரியைக் கைது செய்தனர். நரி காட்டின் எல்லையில் கஞ்சாச் செடி வளர்த்து விற்பனை செய்ததாம். சிங்கராசா கஞ்சாச்செடியை வளர்த்தால் மரண தண்டணை கொடுப்பேன் என முரசறிவித்தவர். அரசின் ஆணையை மீறினால் கடுந்தண்டனை கிடைக்கும். நரியார் தப்பமுடியாது” என்றது புலி.

## 44. சான்றோர் இனத்து இரு



பன்றிக் குட்டியும், எருமைக் கன்றும், கரடிக் குட்டியும் மான் குட்டியின் வீட்டுக்கு வந்த போது மான் குட்டி பட்டுவேட்டி உடுத்து அதற்கேற்ற பட்டுச்சட்டை அணிந்து, தோளில் பட்டுச் சல்வை போட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. அதைக் கண்ட பன்றிக்குட்டி சொன்னது, “இன்று பாடாசாலையில் பட்டிமன்றம் நடப்பதால் அதைச் சாட்டி நாங்கள் படத்திற்குப் போவதாக உனக்கும் சொன்னோம். நீ வராமையால் தேடி வந்தோம். நீ மாப்பிள்ளை மாதிரி வெளுக்கிட்டு நிற்கிறாய். நீ தான் பட்டிமன்றத்தில் பேசப்போகிறாயா...?” என்றுகேலியாகக் கேட்க எருமைக் கன்றும் கரடிக் குட்டியும் சிரித்தன.

“**நா**ன் பேசுவது உங்களுக்குத் தெரியாதா? படிக்கும்போது படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் படிப்பில் கவனம் செலுத்தாது ஏனைய விடயங்களில் கவனம் செலுத்துகிறீர்கள். அதிபரும், பண்தர் ஐயாவும், விஞ்ஞான ஆசிரியரும் என்னைப் பேசச் சொல்லி வற்புறுத்துகின்றனர். அதனால் நான் ஒப்புக் கொண்டேன். பேசும் விதம் பற்றிச் சொல்லித் தந்தார்கள்” என்றது மான் குட்டி.

“**அ**ப்ப நீ பேச்சாளன்” நக்கலாகச் சொன்னது பன்றி.

“**நா**ன் பெரிய பேச்சாளன் அல்ல. அறிமுகப் பேச்சாளன். கற்ற பெரியவர்களுடன் சேர்ந்திருப்பதால் அவர்களின் இயல்பு எனக்கும் வந்துவிட்டது” என்று அதிபர் சொன்னவர் என்றது மான் குட்டி.

“**இ**ளம் வயதில் கிழடுகளோடு சேர்ந்து கிழட்டுப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகிறாய். இந்த வயது விளையாட்டு வயது. இது போனால் திரும்பவும் வராது” என்றது எருமைக் கன்று.

“**எ**னக்கு நேரமாகிவிட்டது. நான் போகிறேன்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டது மான்குட்டி.

**மா**லை வேளை ஊர் முழுவதும் மான்குட்டியின் பேச்சைப் பற்றியே கதைத்தனர். மான்குட்டியின் தாய் சொன்னது, “மற்றப்பிள்ளைகளைப் போலில்லாமல் எனது பிள்ளை கற்றறிந்த சான்றாரோடு அன்பாகப் பழகியதால் நல்லதொரு பேச்சாளனாகிவிட்டான். முன்பு விஞ்ஞான பாடத்தில் அவன் மிகக்குறைவான புள்ளிகளையே பெற்றான். விஞ்ஞான ஆசிரியர் தமிழ்ப் பாடத்திற்கு மட்டுமா பட்டிமன்றம் வைக்க முடியும். விஞ்ஞான பாடத்தில் பட்டிமன்றம் வைத்துக் காட்டுகிறேன்” என்று கூறிச் சூரியன் உதிக்காவிட்டால் எமக்கு உணவு கிடையாது. மழை பெய்யாது” என்ற பட்டிமன்றத்தை வைத்தார். அது பிரபலமானதால் அது தொடர்பான பல பட்டிமன்றங்களை வைத்தார். அதனால் மாணவர்களிடையே விஞ்ஞான அறிவு உண்டானது. இப்போ எனது மகன் விஞ்ஞான பாடத்தில் நூறு புள்ளிகள் எடுக்கிறான்” என்றது பெருமையாக.

“**மா**ணவர்கள் கல்லைப் போன்றவர்கள். ஆசிரியர்கள் சிற்பிகள். அவர்கள் விரும்பியபடி கல்லில் அருமையான சிலைகளை வடிக்கலாம். விஞ்ஞான ஆசிரியர் மாணவர்களின் நலனில் அக்கறை உள்ளவர். ஒவ்வொரு பிள்ளையையும் தனது பிள்ளையாக நினைத்துக் கற்பிப்பவர். அதனால் மாணவர்கள் விஞ்ஞான ஆசிரியர் மீது பெருமதிப்பு வைத்துள்ளனர்” என்றது யானை.

**ச**ந்தன மரத்திற்கு அருகில் நிற்கும் மரங்கள் யாவும் சந்தன வாசத்தைப் பெறுவது போல கற்றறிந்த சான்றோருடன் நெருக்கமாகப் பழகுவோரும் அவர்களின் அறிவைப் பெறுவர்” என்றது மான்குட்டியின் தாய்.

## 45. சித்திரம் பேசேல்



**அ**ன்று நரிக்குட்டி கணித ஆசிரியர் கொடுத்த வீட்டு வேலையாவற்றையும் செய்து முடித்திருந்தது. வகுப்பிற்கு ஆசிரியர் வந்ததும் அது எழுந்து நின்று, “குருவே நீங்கள் தந்த வீட்டுவேலைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டேன். நீங்கள் சொன்னது போல அம்மாவிற்குத் தேவையான உதவிகள் யாவற்றையும் செய்து கொடுத்தேன். எனது உடைகளை நானே துவைத்தேன். இனிமேல் நீங்கள் சொல்வது அனைத்தையும் கேட்டு நடப்பேன்” என்றது.

**ஆ**சிரியர் நரிக்குட்டியின் கொப்பியை வாங்கிப் பார்த்தார். அதில் கொடுக்கப்பட்ட கணக்குகள் சரியாகச் செய்யப்பட்டிருந்தன. உடையும் நேர்த்தியாக இருந்தது. ஏனைய நாட்களில் நரிக்குட்டி எதையும் செய்யாது. ஆசிரியர் எப்படி எடுத்துச் சொன்னாலும் அது செய்யாது. பெற்றோருக்குச் சொன்னாலும் அது செய்யாது. அதனால் ஆசிரியர் நரிக்குட்டியைப் பாராட்டினார். அவர் பாராட்டும் போது முயல்குட்டி சிரித்தது. முயல்குட்டி நரியின் வீட்டுக்கு அருகில் இருப்பது. அதனால் அதற்கு நரிக்குட்டியின் திருவிளையாடல்கள் எல்லாம் தெரியும்.

**மு**யற்குட்டி ஒழுக்கமானது. நன்றாகப் படிக்கக் கூடியது. அதனால் முயற்குட்டி சிரித்ததை ஆசிரியர் தனது கவனத்தில் எடுத்தார், “பிள்ளைகளே கெட்டிக்காரனின் புழுகும் அதாவது உண்மைபோலத் தோன்றும் பொய்யான வார்த்தைகள் சில நாட்களில் வெளித்துவிடும். அதனால் விளையாட்டாகவும் பொய் சொல்லக்கூடாது” என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

**ஒ**ருவாரம் நரிக்குட்டி கொடுத்த வீட்டுவேலைகள் யாவற்றையும் அழகாகச் செய்து வந்தது. அதன் உடையும் தூய்மையாக இருந்தது. அன்று கொடுத்த வீட்டுவேலை எதையும் நரிக்குட்டி செய்யவில்லை. அது உடுத்தியிருந்த உடையும் அழுக்காக இருந்தது.

“**ந**ரிக்குட்டியே, ஒருவாரமாக நல்ல முறையில் செயற்பட்டீர். இப்போ உமக்கு என்ன நடந்தது சொல்லும்” ஆசிரியர் கேட்டார்.

**ந**ரிக்குட்டி எதுவும் பேசாது மௌனமாக இருந்தது. அதனால் முயற்குட்டி சொன்னது, “குருவே, நரிக்குட்டியின் சகோதரி ஒருத்தி வெளியூரில் இருக்கிறாள். அவர்கள் ஒருவாரத்திற்கு முன்பு நரிக்குட்டியின் வீட்டுக்கு வந்திருந்தனர். அப்போது நரிக்குட்டியின் சகோதரி வீட்டுவேலைகளைச் செய்யும்படி சொல்லியபோதும் நரிக்குட்டி செய்யாததால் அவள் தான் நரிக்குட்டியின் கொப்பியில் செய்து கொடுத்தாள். அத்துடன் உடைகளையும் துவைத்துக் கொடுத்தாள். இப்போது அவர்கள் சென்று விட்டனர்”.

**ஆ**சிரியர் நரிக்குட்டிக்கு அருகே வந்து சொன்னார், “மகனே, இன்னொருவரைக் கேட்டுச் செய்யலாமே தவிர அவரைக் கொண்டு செய்வித்தலாகாது. உண்மையைப் போலப் பொய் சொன்னாய். அது பொய் என்று வெளித்துவிட்டது. ஆகையால் பொய் பேசாதே”.

**ந**ரிக்குட்டி எதுவும் பேசத்தோன்றாது பயத்துடன் நின்றது.

## 46. சீர்மை மறவேல்



**மா**ன் பட்டப்படிப்பை முடித்து உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்று மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வந்தது. அன்று சனிக்கிழமை ஊரின் பெரியவரான யானை மானின் வீடுதேடி வந்தது. அதைக்கண்ட மான் மிக்க மகிழ்வுடன் அதை வரவேற்று ஆசனத்தில் அமருமாறு சொன்னது. யானை அமர்ந்தது. மான் அதை வணங்கி அதன் அருகில் நின்றது.

“**மா**னாரே, உமது வரவேற்கும் பண்பைப் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னைப் போலப் பிறரையும் நீ மதித்து வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினால் நான் இன்னும் மகிழ்வடைவேன்” என்றது.

**மா**ன் பதறிப்போனது, “ஐயா, நான் யாரை மதிக்கவில்லை. யாரோ உங்களுக்குத் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள்” என்றது.

“**இ**ல்லை நான் ஒரு விடயத்தைக் கேள்விப்பட்டால் அதைத் தீரவிசாரித்து உண்மையை அறியாது கதைக்க மாட்டேன் என்பது உனக்குத் தெரியும். நீ பட்டதாரி. உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவன் என்ற நினைவு உனக்கு இருக்கு. யானை சொல்லச் சொல்ல மானுக்குத் துக்கமாக இருந்தது.

“**ம**கனே, உனது தாயாரின் சகோதரன் மிகவும் நல்லவர். பண்ணானவர். உயர்வுதாழ்வு பாராதவர். எல்லோரையும் மதிப்பவர். உனது தந்தை இளமைப்பருவத்தில் இறந்துவிட்டார். அதனால் உன்னை ஒழுக்கமாக வளர்த்து உயர்ந்த உத்தியோகத்தனாக்க வேண்டும் என்பதற்காக அவர் சில முரட்டுத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டார். “நீ உருப்படமாட்டாய், காவாலிகளோடு நட்புப் பூண்டுள்ளாய், அவர்கள் உன்னைக் கெடுத்துவிடுவார்கள்” இவ்வாறு மோசமாக அவர் திட்டியது உன்மீதுள்ள பாசத்தால்தான் உனது தந்தை சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து குடும்பத்தைக் கவனிக்காமல் திரிந்தவர். அப்படி நீயும் வந்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் அவ்வாறு நடந்தவர். சிறுவயதில் அது உனக்குப் புரியாதது தவறல்ல. படித்துப்பட்டம் பெற்ற போதும் புரியாவிட்டால் உனது அறிவால் என்ன பயன்? அவர் உன்மீதுள்ள அன்பால் பெரியதொரு பணக்காரரின் மகளை உனக்குத் திருமணம் பேசி வந்தபோது அவரை மதியாமல், அவரது வயதை மதியாமல் அவரது அறிவை மதியாமல் நடந்துள்ளாய். அவரின் உதவி இல்லாவிட்டால் நீ படித்திருக்க முடியுமா? பட்டம் பெற்றிருக்க முடியுமா? கற்றவன் நல்ல பண்புகளை மறக்கக்கூடாது”

**மா**ன் எதுவும் பேசவில்லை. அதனால் பேச முடியவில்லை, “கற்றவர்கள் எல்லோரையும் மதித்தல் வேண்டும். நீ மதித்தால் தான் பிறர் உன்னை மதிப்பர். கரடி யாரையும் மதிப்பதில்லை. அதனால் கரடியையும் யாரும் மதிப்பதில்லை. மது குடிப்போர் அதைக்கண்டால் வாயில் வந்தபடிபேசுவர். என்னைக் கண்டால் பேசாது ஒதுங்கிப் போவர். ஒருவர் கீழானவனை மதித்தால் தான் அவன் அவரை மதிப்பான்” என்று கூறியபோது மான் சொன்னது, “என்னில் தான் தவறு உள்ளது. மாமா தீயவர் என்றாலும் அவர் செய்த உதவியை நினைத்து அவரை மதித்திருக்க வேண்டும். நான் அவரிடம் சென்று மன்னிப்புக் கோருகிறேன். அவர் பேசிய திருமணத்தை நான் விருப்புடன் ஏற்றுக் கொள்கிறேன்”.

**அ**ருகில் கேட்டுக் கொண்டிருந்த தாய்க்கு மெய்சிலிர்த்து கண்ணீர் வடியச் சொன்னது, “இன்று தான் நான் மிக்க மகிழ்வுடன் இருக்கிறேன். இதை எனது சகோதரன் அறிந்தால் மிக்க மகிழ்வடைவார்”

## 47. சுளிக்கச் சொல்லேல்



**ஒ**ட்டகம் பட்டதாரி ஆசிரியர். ஊர்ப்பாடசாலை ஒன்றில் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்தது. மாணவர்கள் விரும்பும்படி பாடத்தைக் கற்பிக்கும். எல்லா ஆசிரியர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகும். அவர்களுக்குத் தேவையானவற்றை விருப்புடன் செய்து கொடுக்கும். பாடசாலை வேலைகளைத் தனது வீட்டுவேலைபோல நேசித்து விருப்புடன் செய்யும். அதனால் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் ஒட்டகத்தை மிகவும் விரும்பினர். அப்பாடசாலையின் அதிபர் ஒட்டகச்சிவிங்கி.

**ஒ**ட்டகம் மிகவும் அன்பாகப் பேசும் வற்புறுத்தமாட்டாது. அதன் பேச்சால் கவரப்பட்டவர்கள் அது சொல்லும் செயல்களை விருப்புடன் செய்து முடிப்பர். விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்றால் ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்று கூடி அவ்விழாவை மிகமிகச் சிறப்பாகச் செய்து முடிப்பர்.

**ஒ**ட்டகத்திற்குப் பதவி உயர்வுடன் ஒரு பெரிய பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. பிரியாவிடையின் போது பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் கண்ணீர் விட்டு அழுதனர். ஒட்டகம் மிகவும் வேதனைப்பட்டது.

**பு**திய பாடசாலையின் புதிய அதிபராக எருமை இடமாற்றம் பெற்று வந்தது. எருமையை யாருக்கும் பிடிப்பதில்லை. அது முரட்டுத்தனமாக பேசும் தான் நினைத்தவற்றைச் செய்யச் சொல்லும். பயனில்லாத வார்த்தைகளைப் பேசும். உதைப்பந்தாட்டக் குழுவிற்கு ஒட்டகம் பொறுப்பாக இருந்தது. அன்று உதைப்பந்தாட்டக் குழுவின் பாடசாலைமட்டக் கூட்டம் நடைபெறவிருந்தது. எருமை வந்து ஒட்டகத்தைத் தேடியபோது ஒட்டகம் லீவில் நிற்பது தெரித்தது. அதனால் அது தனது கைத்தொலைபேசி மூலம் ஒட்டகத்துடன் தொடர்பு கொண்டது.

“**இ**ன்று உதைப்பந்தாட்டக் குழுவின் கூட்டம் என்பது உமக்குத் தெரியாதா?” என்று எருமை கேட்டது.

“**தெ**ரியும். எனது தகப்பனாருக்குச் சுகமில்லை. அவருடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கிறேன்” என்றது ஒட்டகம்.

“**பொ**றுப்பை எடுத்து விட்டுப் பொறுப்பிலாமல் நிற்கலாமா?”.

“**இ**து பாடசாலையில் நடக்கும் சாதாரணமான ஒரு நிகழ்வு. எனது உதவியாளர் கூட்டம் நடத்துவார்”.

“**அ**ப்படிச் செய்ய முடியாது. உடனே வரவும்”.

“**எ**ன்னால் வரமுடியாது அப்பா மயக்கமான நிலையில் இருக்கிறார்”.

“**வ**ருத்தக்காரரைப் பராமரிக்க கூலியாட்கள் இருக்கின்றனர். யாரையாவது பிடித்து விட்டுவிட்டு வரவும்”.

**ஒ**ட்டகம் தொடர்பைத் துண்டித்தது. அதிபர் பலமுறை எடுத்தும் ஒட்டகம் பேசாததால் அவருக்குக் கடுமையான கோபம் வந்தது. அவர் கல்விப் பணிப்பாளரான யானைக்கு முறையிட்டபோத யானை சொன்னது, “ஒட்டகத்தை மாற்ற முடியாது. அதை மாற்றினால் சமூகம் கொந்தளிக்கும். பின் அது அரசியல் விசயமாக மாறிவிடும். எல்லோரிடமும் அன்பாக, அவர்களது நிலையை அறிந்து பேச வேண்டும். அது தெரியாததால் தான் முன்பிருந்த பாடசாலையில் இருந்து உம்மை மாற்றினோம். இப்போ உமக்கு மேலே ஒரு புதிய அதிபரை நியமித்துள்ளோம். நீர் தரம் மூன்று அதிபர். இப்போ வருபவர் தரம் ஒன்று அதிபர். உமது பேச்சுச் சரிவராததால் உம்மை இடமாற்றம் செய்து புதிய அதிபரை நியமித்துள்ளோம். மற்றவர்களை மதித்து நடக்க வேண்டும். அவர்கள் கோபப்படாதவாறு அன்பாகப் பேசுதல் வேண்டும். மயக்க நிலையில் உள்ள தந்தையை விட்டு விட்டு உம்மைப் போன்றவர்கள்தான் வருவர். ஒட்டகத்தைப் போன்ற பாசமுள்ளோர் வரமாட்டார்கள்” என்றது.

**அ**தைக்கேட்டு மிகுந்த கோபத்துடன் சென்றது எருமை.

## 48. சூது விரும்பேல்



**ஒ**ட்டகம் திருமணம் செய்து ஐந்து வருடங்கள் கழிந்தபோதும் அதற்குப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் மிகவும் வேதனைப்பட்ட ஒட்டகம் காட்டுப்பிள்ளையாருக்கு நேர்த்தி வைத்தமையால் ஒரு மகன் பிறந்தது. மகன் பிறந்த முப்பத்தொராவது நாளை ஒட்டகம் மிகவும் விமர்சையாகக் கொண்டாடியது. உறவினர்களும், நண்பர்களும், அயலவர்களும் வந்து தமது வாழ்த்தைத் தெரிவித்தனர். எல்லோருக்கும் நல்ல சுவையான உணவும், குளிர்பானமும் வழங்கப்பட்டது. விருந்து முடிய இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. எல்லோரும் மிக்க மகிழ்வுடன் இன்னிசைக் கச்சேரியைக் கேட்டு ரசித்துவிட்டுச் செல்ல இரவு ஒரு மணியாகிவிட்டது.

**ம**றுநாட் காலை ஒட்டகத்தின் மனைவி வந்து தனது கணவனுக்குச் சொன்னது, “மகனுக்கு நீங்கள் போட்ட தங்கக் காப்பைக் காணவில்லை”.

**ஒ**ட்டகம் மிகுந்த வேதனையுடன், “எவ்வளவு கஷ்டப்பட்டு அந்தக் காப்பை வாங்கினேன். இன்னும் கொஞ்சப் பணம் நகைக் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கிடையில் களவுபோய்விட்டது”.

“**உ**ங்களின் அப்பா தான் திருடியிருப்பார். போய்ச் சூதாடும் இடத்தில் விசாரித்துப் பாருங்கள்” என்றது ஒட்டகத்தின் மனைவி.

**ஒ**ட்டகம் சூதாடும் இடத்திற்கு வந்தபோது அதைக்கண்ட பன்றி சொன்னது, “நீ இப்பொது தான் வருகிறாய். உனது தந்தை மாலை ஐந்து மணிக்கு ஒரு சோடி தங்கக் காப்புக் கொண்டு வந்து சூதாடித் தோற்றவர்”

**ஒ**ட்டகம் எதுவும் பேசாது வீட்டுக்கு வந்த போது தந்தை ஒட்டகம் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

“இன்றைக்குத்தான் கடைச்சிப் சாப்பாடு. சாப்பிட்டு விட்டு வீட்டை விட்டுப் போய்விடு. நான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் மகனுக்குத் தங்கக் காப்பு வாங்கிப் போட்டேன் ஒரு மணித்தியாலங்கூடக் கழியவில்லை நீ கழட்டிக் கொண்டு சென்று நரியோடு சூதாடித் தோற்றுவிட்டாய். நான் அப்பணத்தைத் தேட இரண்டு மூன்று வருடங்கள் சென்றன. நீ அதை இரண்டு நிமிடத்தில் அழித்து விட்டாய். எல்லாச் சகோதரர்களும் நீ அவர்களின் பொருட்களைக் களவெடுத்துச் சூதாடி அழித்ததால் உன்னை வெறுத்து ஒதுக்கிவிட்டனர். நான் பாவம் பார்த்து அழைத்து வந்தால் நீ எதையும் யோசிக்காது திருடிச் சூதாடுகிறாய். அம்மா கூட உனக்கு உணவு தருவதில்லை” என்ற ஒட்டகம் தனது மனைவியின் பக்கம் திரும்பி, “அப்பாவுக்கு இனிமேல் நீ உணவு கொடுக்கக் கூடாது. மீறிக் கொடுத்தால் நான் வீட்டை விட்டு சென்றுவிடுவேன்” என்றது.

இரண்டு நாட்கள் கழிந்தன தந்தை ஒட்டகம் பசியால் வாடியது. மனைவியிடம் சென்றபோது அது ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஏனைய பிள்ளைகளும் அதை வரவேற்கவில்லை. அதனால் அது திரும்பி வந்து தனது மருமகளிடம் உணவு தருமாறு இரந்தது.

“உங்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது என்று எனது கணவர் சொல்லியிருக்கிறார். அவரது சொல்லை என்னால் மீற முடியாது. சூது விளையாடக்கூடாது மீறி விளையாடினால் பல துன்பங்கள் தானாகவே வந்து சேரும். உங்களது மனைவியே உங்களை வெறுத்து ஒதுக்கிய பின் நான் யாரோ ஒருத்தி எப்படி உதவுவது. அதனால் எங்காவது சென்று பிச்சை எடுத்து உண்ணுங்கள்” என்றது அதன் மருமகள்.

“இரண்டு நாட்களாகச் சாப்பிடவில்லை. உயிர்போகிறது. சிறிது உணவு தா” என்று இரந்தது தந்தை ஒட்டகம்.

“நான் கணவனின் செயலை மீறமாட்டேன். அவர் வந்ததும் அவரிடம் கேளுங்கள் அவர் சம்மதித்தால் தருகிறேன். சூது விளையாடியதற்கான இன்பம் எப்படி?” என்று கேட்டது மருமகள்.

“இனிமேல் நான் சூதாடும் இடத்திற்கே போகமாட்டேன். இது சத்தியம்” என்ற போது, “சத்தியத்தை மகனின் முன் செய்யுங்கள்” என்றது மருமகள்.

## 49. செய்வன திருந்தச் செய்



**ஒ**ரு அரச விவசாயப் பண்ணைக்குக் கூலியாட்கள் தேவையென பத்திரிகையில் விளம்பரம் வெளியாகியிருந்தது. அதைப் பார்த்த ஒட்டகச் சிவிங்கி தனது இளைய மகனுக்குச் சொன்னது, "உனது மூன்று சகோதரர்களும் நன்றாகப் படித்து நல்ல உத்தியோகம் பார்க்கின்றனர். நீ சரியாகப் படிக்காததால் தோட்டங்களில் தினமும் கூலிவேலை செய்கிறாய். அதிலிருந்து வரும் வருமானம் போதாது. அரச வேலையானால் சலுகைகள் அதிகம். சம்பளத்துடன் லீவும், ஓய்வூதியம் கிடைக்கும். அத்துடன் அரசாங்கத்தில் ஒரு சிறு வேலையில் சேர்ந்தாலும் பின்பு படித்து பெரிய வேலைதேடலாம். அதனால் இவ் வேலைக்கு விண்ணப்பி" என்றது.

**ஒ**ட்டகச் சிவிங்கியின் மகன் அதைக் கேட்டு அவ்வேலைக்கு விண்ணப்பித்தது. சில நாட்களின் பின் அதற்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் வந்தது. அதில் செய்முறைப்பரீட்சை இருக்கும் என்று குறிப்பிடப்பட்டு அதற்கான திகதியும் நேரமும் கொடுக்கப்பட்டிருந்தது.

"**ம**கனே, முன்பு இதே வேலைக்குப் பன்றியின் மகன் சென்றது. அதற்கு உருளைக்கிழங்கு நடுவது பற்றிச் சொல்லிக் கொடுத்துவிட்டு நடவிட்டார்களாம். அது சரியாக வேலை செய்யாமையால் அதற்கு வேலை கிடைக்கவில்லை. எந்த ஒரு வேலையைச் செய்வதானாலும் அதை ஒழுங்குமுறைப்படி செய்தல் வேண்டும். உருளைக்கிழங்கை அவர்கள் சொன்னபடி திருத்தமாக நடவேண்டும். அதிகமாக நட்டால் தான் வேலை கிடைக்கும் என்று எண்ணாது முறைப்படி சிறிதளவாவது நடு. ஒழுங்காவும், மற்றவர்களைக் கவரும் படியும் செய்தால் எச் செயலும் வெற்றியளிக்கும்" என்று சொன்னது.

**ஒ**ட்டகச்சிவிங்கி செய்முறைப் பரீட்சைக்குச் செசன்ற போது அந் நிறுவனத்தின் மேலாளர், "நிமிர்ந்து பாருங்கள் சென்ற வருடன் உருளைக்கிழங்கு நட்ட பின்பு இந்த

நிலத்தைத் துப்பரவு செய்யாததால் காடுபோல் புல் முளைத்திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர் திருத்தும் நிலம் பகிர்ந்து தரப்படும். அந்நிலத்தை மிகவும் அவதானமகத் துப்பரவு செய்யுங்கள். அடுத்த வாரம் உருளைக்கிழங்கு நடவேண்டும். அதற்கு ஏற்றவகையில் செயற்படுங்கள்" என்றார்.

**எ**ல்லோரும் வேலை செய்யத் தொடங்கினர். ஒட்டகச்சிவிங்கி தாய் சொன்னவற்றை நினைத்துப் பார்த்து விட்டு வேலை செய்யத் தொடங்கியது. மாலையானது பலர் வேலையை முடித்து விட்டு அமர்ந்திருந்தனர். ஒட்டகச்சிவிங்கி அவதானமாக வேலை செய்யத் தொடங்கியது. வேலை முடிந்த பின்பு வெளியே செல்லாது எங்காவது புற்கள் இருக்கின்றனவா என்று பார்த்து துப்பரவு செய்தது. மேலாளர் வந்த பின்பும் அது வேலை செய்து கொண்டிருந்தது.


**மே**லாளர் வந்து ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டு வந்தார். ஒட்டகச்சிவிங்கியின் இடத்தைப் பார்த்த மேலாளர் மகிழ்வுடன் அதனருகே வந்து நன்றாகச் செய்திருக்கிறாய். செய்பவற்றைத் திருத்தமாகச் செய்ய வேண்டும். பத்துப்பேரை எடுக்கவுள்ளோம். அந்தப் பத்துப் பேருக்கும் நீதான் தலைவன். எல்லோரையும் கொண்டு நீ செய்வதைப் போல் அழகாகச் செய்வி" என்று கூறிவிட்டுச் சென்றார்.

**அ**தை ஒட்டகச்சிவிங்கி தாய்க்குச் சொன்னபோது அது மிகவும் மகிழ்ந்தது.

"**உ**னது மேலாளர் உன்மீது நம்பிக்கை வைத்து ஒரு பொறுப்பையும் தந்துள்ளார். மிகவும் அவதானமாக செயற்படு. எல்லோரைக் கொண்டும் திருத்தமாகச் செய்வி" என்றது.

**ம**றுநாள் பத்துப் பேரையும் அழைத்துக் கொண்டு ஒட்டகச்சிவிங்கி தோட்டத்திற்குச் சென்றது. மாலையில் வந்த மேலாளர், "மிகவும் நன்றாக வேலை செய்வித்திருக்கிறாய் இப்படியே செயலாற்று" என்றார். ஒட்டகச் சிவிங்கி தாயின் அறிவை நினைத்து மகிழ்ந்தது.

## 50. சேரிடம் அறிந்து சேர்



**யா**னைக் குட்டியும் நரிக்குட்டியும் இணைபிரியாத நண்பர்கள். எப்போதும் அவை இரண்டும் ஒன்றாகவே திரியும். வகுப்பில் இருவரும் சேர்ந்து பல குறும்புகளைச் செய்வார்கள். அதனால் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது இரண்டு பேரையும் ஒரு வாங்கில் அமரவிடாது நரிக்குட்டியை முன்வாங்கிலும், யானைக்குட்டியைக் கடைசி வாங்கிலும் இருத்துவர். நரிக்குட்டி முன்வாங்கில் ஆசிரியரின் கண்காணிப்பில் இருந்தாலும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் போது அல்லது அவர் ஏதாவது வேலை செய்யும்போது ஏதாவது குறும்புத்தனம் செய்துவிடும். நரிக்கு எல்லா மாணவர்களும் பயம். நல்ல மாணவர்கள் நரிக்குட்டியோடு சேர்வதில்லை. யானைக்குட்டியுடன் படித்த மான், யானை நரியுடன் சேர்ந்து தீயசெயல்களைச் செய்வதை அதன் தாய்க்குச் சொல்லிவிட்டது.

**அ**ன்று மாலை யானைக்குட்டி, நரியுடன் சேர்ந்து சுற்றித்திரிந்து விட்டு இரவு எட்டுமணிக்கு வீடு திரும்பியது. யானையின் தந்தை தூர இடத்தில் வேலை செய்வதால் அது வீட்டுக்கு வர இரவு ஒன்பது மணியாகும். அதற்கு முன் வரும் யானைக்குட்டிதான் கவனமாகப் படிப்பது போலப் படிக்கும். அதை தகப்பன் யானை நம்பிவிடும்.

**யா**னைக்குட்டியின் அருகே வந்த தாய் யானை தனது தும்பிக்கையால் யானைக்குட்டியை அணைத்து முத்தமிட்டது, “மகனே, படிக்கும் பிள்ளைகள் பாடசாலை விட்டதும் வீட்டிற்கு வரல் வேண்டும். நான்கு மணிக்குப் பாடசாலை விடும். இப்போ எட்டுமணி. இதுவரை என்ன செய்தாய்? உனது தந்தை உன்னை கற்பித்து வசதியுடன் வாழவைக்க வேண்டும் என்று எண்ணித் தூர இடங்களுக்குச் சென்று வேலை செய்கிறார். அதை உணர்ந்து நன்றாகப் படித்தல் வேண்டும்”.

“**நா**ன் நன்றாகப் படிக்கிறேன்” என்று குட்டி சொல்ல தாய் சொன்னது, “உனது வகுப்பாசிரியரைச் சந்தித்தேன். நீ நரியோடு சேர்ந்து வகுப்பில் மற்ற மாணவர்களைக் கிண்டல் செய்கிறாயாம். படிப்பதில் அக்கறைப்படுவதில்லை என்று சொல்கிறார்”.

**யா**னைக்குட்டி எதுவும் பேசவில்லை. அதனால் தாய் சொன்னது, “மகனே, நட்பு என்பது புனிதமானது. நண்பர்களுக்கிடையே பிரிவு ஏற்படக்கூடாது நண்பர்களை ஆராய்ந்து அறிந்த பின்பு தான் நட்புக் கொள்ள வேண்டும். தீயவர்களின் நட்பு உயிரைக் கூடக் குடித்துவிடும்.

நரி உனக்கேற்ற நண்பன் அல்ல. அது தீயது. ஏனைய மாணவர்கள் அதனுடன் சேர்வதில்லை. அதனால் அது உன்னை நண்பனாக்கியுள்ளது. தீயவர்கள் செய்யும் தீய செயல்கள் அவர்களது நண்பர்களையும் பாதிக்கும். உனது நட்புப் பற்றி உனது தந்தை அறிந்தால் என்ன நடக்கும் என்று உனக்குத் தெரியும். அவர் முன்கோபக்காரர். எதையும் ஆராயாது முடிவெடுத்து விடுவார். பாடசாலை முடிந்து பல மணி நேரங்கழித்துத் தான் நீ வீட்டுக்கு வருவதாக அறிந்தால், தனக்கு நான் அதைச் சொல்லவில்லை என்று என்னையும் தண்டிப்பார்".

**யா**னைக்குட்டி தனது தந்தையை நினைத்துப் பார்த்தது. ஒருமுறை அவர் அதை மரத்தில் கட்டிவைத்து அடித்துவிட்டு கண்களுக்கு மிளகாய்ப் பொடி போட்டவர். அதை நினைக்க யானைக்குட்டிக்குப் பயமாக இருந்தது. "அப்பாவுக்குச் சொல்லாதைங்கோ, நான் இனி நரியுடன் சேரமாட்டேன்""என்றது.

"**ம**கனே, மாணவர்களுக்கு நண்பர்கள் இருக்க வேண்டும். அவர்கள் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். அதனால் நீ மானுடன் அல்லது எருதுடன் சிநேகிதம் கொள். அவர்கள் மிகவும் நல்லவர்கள்" என்றது தாய் யானை.

"**ச**ரியம்மா" என்றது குட்டியானை.

## 51. சை எனத்திரியேல்



**தா**த்தாக் குரங்கு தனது பேரர்களிடம் வந்து, பேரர்கள் இருவரையும் அணைத்துத் தூக்கித் தனது மடியில் வைத்துவிட்டு இருவரையும் இறுக்கமாக அணைத்து முத்தமிட்டது. பின் தான் கொண்டுவந்த இனிப்புக்களை எடுத்துக் கொடுத்தது.

"**மி**க்க நின்றி தாத்தா. இனிப்புக்கள் மிகவும் சுவையாக இருக்கிறது" என்றது மூத்தபேரன்.

"**தா**த்தா கொண்டு வரும் இனிப்புக்கள் எப்போதும் சுவையானவை" என்றது இளைய பேரன்.

**அ**ப்போது அங்கு வந்த தாய்க் குரங்கு சொன்னது, "அப்பா, நீங்கள் இவர்களுக்கு அளவுக்கதிகமாகச் செல்லம் கொடுப்பதால் இரண்டுபேரும் பெரும் குற்றங்களைச் செய்கின்றனர். நேற்றுக் கரடியின் பழத்தோட்டத்துள் நுளைந்து மாங்காய் திருடியிருக்கிறார்கள். கரடி அதைக் கேட்கப்போக ஒரு கல்லை எடுத்து அதைத் தாக்கியுள்ளனர். கரடியும் மனைவியும் வந்து கண்டபடி பேசிவிட்டுச் சென்றனர். நீங்கள் தினமும் இனிப்புகளைக் கொடுத்து அவர்களைக் கெடுக்கிறீர்கள். இப்படிச் செய்தீர்களானால் இங்கு நீங்கள் வரவேண்டாம்".

**ம**கள் சென்றதும் தாத்தாக் குரங்கு சொன்னது, "பேரர்களே, நீங்கள் குற்றம் செய்ய உங்களது தாயார் என்னை ஏசிவிட்டுச் செல்கிறார். என்னை இங்கு வரவேண்டாமாம். நான் இனிமேல் வரவில்லை".

**தா**த்தாவின் பேச்சு இரண்டு குரங்குக் குட்டிகளுக்கும் கவலையளித்தது. தாத்தா அவர்கள் மீது மிகுந்த பாசம் வைத்திருப்பவர். அவர் தினமும் வரும்போது விதம் விதமான இனிப்புவகைகளைக் கொண்டு வருவார். அம்மா கண்டிப்பானவர். அவர் சொன்னால் சொன்னது தான். அப்பாவே அம்மாவுக்குப் பயந்தவர்.

"**பே**ரர்களே, தீய செயல்களைச் செய்யக்கூடாது. தீய செயல்களைச் செய்தால் பிறர் எம்மை மதிக்கமாட்டார்கள். கரடி உங்களைப் பற்றித் தரக்குறைவாகப் பிறருக்குச் சொல்கிறது. நான் வரும்போது மான் என்னைக் கேலி செய்தது, "உனது பேரப்பிள்ளைகள் திருடர்கள். திருடர்களுக்கு இனிப்பு வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கிறயா? பிள்ளைகளைச் சிறுவயதில் திருத்தாவிட்டால் வளர்ந்ததும் அவர்கள் மிகவும் மோசமான திருடர்களாகிவிடுவார்கள்" என்று பலருக்கு முன்னால் சொல்ல அவர்கள் சிரித்தனர். எனக்கு வெக்கமாய்ப் போய்விட்டது".

**கு**ரங்குக் குட்டிகள் எதுவும் பேசவில்லை, "பேரர்களே பிறரின் பொருட்களின் மீது ஏற்படுகின்ற ஆசை தான் உங்களைத் திருட வைத்துள்ளது. அதனால் பிறரின் பொருட்களின் மீது ஆசைப்படாதீர்கள். உங்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் நான் வாங்கித் தருவேன். என்னைக் கேளுங்கள். அதைவிடுத்துத் திருடாதீர்கள். நீ பெரியவன் திருடக்கூடாதென்று உனக்குத் தெரியாதா? சிறுபிள்ளையான உனது தம்பியையும் நீ கெடுத்துள்ளாய். அவன் தவறு செய்தால் நீ திருத்த வேண்டும். அதை விட்டு விட்டு அவனுக்கும் தீயவற்றைச் சொல்லிக் கொடுத்துள்ளாய்" என்று கண்கலங்கியது தாத்தாக் குரங்கு.

**தா**த்தாக் குரங்கு அழுவதைக் கண்ட பேரப்பிள்ளைகள் திகைத்து விட்டன. எம்மால் தானே அவர் அழுகிறார் என நினைத்தன. மூத்த பேரன், "தாத்தா, இனிமேல் நான் தீய

செயல்களைச் செய்யமாட்டேன். நான் செய்ய அதைப் பார்த்துத் தம்பியும் செய்கிறான். அதனால் அம்மா குற்றம் செய்யாத உங்களை இங்கு வரவேண்டாம் என்கிறா தாத்தா, உங்களைப் பாராது எங்களால் இருக்கமுடியாது. அதனால் நாங்கள் இனித் தீய செயல்களைச் செய்ய மாட்டோம்" என்றது மூத்தபேரன்.

"**மி**கவும் மகிழ்ச்சி பேரா. ஊரவர்களிடம் நல்ல பெயர் வாங்கவேண்டும். அதற்காக நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்" என்றது தாத்தாக் குரங்கு.

"**நா**ங்கள் இனி உங்களுக்குக் கெட்ட பெயர் வரும்படி நடக்க மாட்டோம்" என்று பேரர் கூற, தாத்தா இரண்டு பேரர்களையும் அணைத்து முத்தமிட்டது.

## 52. சொற் சோர்வு படேல்



**மு**யல் தனது வயலை விற்க விரும்பியது. அதை அறிந்த நரி முயலிடம் வந்து, நீ வயலை விற்ற விரும்புவதாகக் கேள்விப்பட்டேன். விலையைச் சொல்" என்றது.

"**இ**ரண்டு இலட்சம் ரூபா தருவதாக மான் சொன்னது. நான் கொடுக்கவில்லை. மூன்று இலட்சம் என்றால் கொடுப்பன் என்றது முயல்".

"**அ**ந்தளவு போகாது. இரண்டரை இலட்சம் ரூபாவென்றால் சொல்லு உடனை காசு தரலாம்" என்றது நரி.

"**க**டனுக்குத் தரமாட்டன். முழுப்பதைத்தையும் தரவேண்டும்" என்றது முயல்.

**ந**ரி சென்று எருதுக்குச் சொன்னது, "முயல் தனது வயலை விற்கப்போகிறதாம். மூன்று இலட்சம் ரூபா சொல்கிறது. விலை பரவாயில்லை வாங்கலாம் நல்ல வயல்" என்றது நரி.

"**ச**ரி அதை வாங்கித்தா மூன்று இலட்சம் தரலாம். தரகு காசு தரமாட்டன். முயலிடம் வாங்கு" என்றது எருது.

**ந**ரி வரும்போது வழியில் எருமையைச் சந்தித்தது. நரியைக் கண்ட எருமை சொன்னது, "முயல் தனது வயலை விற்கப் போறதாக அறிந்தேன். அதை வாங்கித்தா".

“**மு**யல் மூன்றரை இலட்சம் சொல்கிறது. விருப்பமா” என்று கேட்டது நரி.

“**மூ**ன்றே கால் இலட்சம் தாறன் தரகு காசும் தாறன்” என்றது எருமை.

**ந**ரி முயலிடம் வந்து, “நண்பா, இரண்டு மூன்று பேர் உனது வயலை வாங்க விரும்புகின்றனர். எவரும் இரண்டரை இலட்சம் ரூபாவுக்கு மேலே கேட்கவில்லை. விருப்பமானால் சொல்” என்று கூறிவிட்டு, அதில் அக்கறை இல்லாதது போலச் சென்றது. அதைக்கண்ட முயல் நரியை மறித்து, “நீ கேட்ட விலைக்குத் தருகிறேன்” என்றது. நரி மிகுந்த மகிழ்வுடன் எருமையிடம் சென்றது.

“**ந**ண்பா, நீ கேட்ட விலைக்கு முயல் தர முதலில் மறுத்தது. நான் வாதாடி மூன்றரை இலட்சத்திற்குத் தீர்த்திருக்கிறேன். காசை ஆயத்தப்படுத்து உடனே வாங்க வேண்டும். இல்லாவிட்டால் வேறுபலர் விரும்புகின்றனர்” என்றது.

“**ச**ரி நாளைக்குக் காசு தருகிறேன். யாருக்கும் சொல்லிவிடாதே” என்றது.

**ந**ரி தனக்கு இலாபமாக எவ்வளவு பணம் வரும் என்று கணக்குப் பார்த்து மகிழ்வுடன் சென்றது.

**ம**றுநாள் நரி வந்தபோது எருமை சொன்னது, “முயல் கஷ்டத்திற்காக வயலை விற்கவிரும்பியது. அதை நீ சாதகமாகப் பயன்படுத்தி நீ இலாபமடைய விரும்பினாய். அதற்காகப் பல ஆயிரம் ரூபாவைப் பெற விரும்பினாய். ஒவ்வொருவரிடமும் சென்று ஒவ்வொரு விலையைக் கூறி ஏமாற்றினாய். உன்னை ஏமாற்ற வேண்டும் என்றுதான் உனக்கு விலையைக் கூட்டிச் சொன்னேன். யானை இரண்டரை இலட்சம் ரூபாவுக்கு வயலை வாங்கித்தந்து விட்டது. தரகுத் தொழில் பார்த்தாலும் அதில் ஒரு தர்மம் இருக்க வேண்டும்” என்றது எருமை. நரி எதுவும் பேசவில்லை.

## 53. சோம்பித் திரயேல்



**பெ**ண் எருமை வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது திடீரென்று மயங்கிவிட்டது. வயலில் வேலை செய்தோர் அதை உடனே

வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அதன் மயக்கம் தீரவில்லை. அதன் பெற்றோரும், சகோதரர்களும், உறவினர்களும் செய்தியை அறிந்து பரபரப்புடன் அங்கு வந்து சேர்ந்தனர்.

**வை**த்தியரான புலி பெண் எருமையை நன்கு பரிசோதித்து விட்டு, "இப் பெண்ணின் கணவன் எங்கே?" என்று கேட்டது.

**இ**னத்தவர்களும், ஊரவர்களும் செய்தியை அறிந்து வந்து கூடியபோதும் அதன் கணவன் வராதது பெண்ணின் தகப்பனுக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது. அதன் மூன்று சிறுபிள்ளைகளும் தாய் அசையாது படுத்திருப்பதைக் கண்டு பலமான அழுதனர்.

"**இ**ப் பெண்ணின் கணவன் எங்கே?" வைத்தியர் மறுபடியும் கேட்டார்.

"**அ**வன் முழுச்சோம்பேறி ஐயா. அவன் ஒழுங்காக இருந்தால் இவளுக்கு இந்தக் கதி நேர்ந்திராது. காலையில் புறப்பட்டால் மத்தியானம் மகள் சமைத்து வைத்திருக்கும் உணவு முழுவதையும் உண்டுவிட்டு எங்காவது சென்றுவிடும் பின் இரவு பத்துமணிக்குச் சாப்பிட வரும். சாப்பிட்டுவிட்டு ஊர்சுற்றுவது தான் வேலை. மகள் பாவம் வீட்டுவேலை, தோட்டவேலை, பிள்ளைகளின் வேலைகள் யாவும் செய்வது அவள்தான். சாப்பாட்டிலும் கவனமில்லை. அதுதான் இந்தநிலை" தந்தை அழுதது.

**அ**ப்போது கணவன் எருமை அங்கு வந்தது. அதை அழைத்த வைத்தியர் சொன்னார், "உமது மனையிவின் நிலை கவலைக்குரியதாக உள்ளது. அதற்குக் காரணம் கடுமையான வேலைச் சுமைதான். நீ அதற்குதவி செய்யாது சோம்பித்திரிவதாக எல்லோரும் கூறுகின்றனர். மனச்சாட்சியில்லாது ஒரு பெண்ணைக் கொண்டு இல்லளவு வேலைகளையும் செயவிக்க உமக்கு எப்படி மனம் வந்தது. உண்மையான ஆண் தனது மனைவி கஷ்டப்படுவதை விரும்பமாட்டான். மனைவி நோய்வாய்ப்பட்டுப் படுத்தால் வீடு இருண்டுவிடும். இப்போது உமது மனைவியின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. இனியும் வேலை செய்தால் உயிருக்கே ஆபத்தாக முடியும். அந்தப் பெண்ணை இனிமேல் வேலை செய்யவிடாது நீயே செய்" என்றார் வைத்தியர்.

**ஆ**ண் எருமையின் தந்தை சொன்னது, "மகனே, உனது அம்மாவை நான் பலமான வேலைகளைச் செய்ய அனுமதிப்பதில்லை. பிள்ளைகளும் விடுவதில்லை எல்லா வேலைகளையும் மருமகளைக் கொண்டு செய்விப்பதால் தான் இந்த நிலை ஏற்பட்டது. இனியும் நீ சோம்பியிருந்தால் உன்னைக் காப்பாற்றக் கடவுளாலும் முடியாது. அதனால் துன்பம் வருமுன்னே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வயல் வேலையைக் கூட நீ

செய்வதில்லை. நீ என்ன பிறப்பென்று எனக்குத் தெரியவில்லை. உற்சாகமான எனது மகனா நீ என்று நான் கவலைப்படுகிறேன்”

“**இ**னிமேல் நான் மிகக் கவனமாக இருப்பேன். நானே எல்லா வேலைகளையும் செய்கிறேன்” என்றபோது தகப்பன் சொன்னது, “நீ இவ்வாறு கதைப்பாய். ஆனால் செய்யமாட்டாய்”.

“**இ**ல்லை அப்பா கட்டாயம் செய்வேன்” என்றது எருமை.

## 54. தக்கோன் எனத்திரி



**கு**ரங்குக்கு அந்தக் காடு முழுவதும் பெருமதிப்புண்டு. அது ஒரு பெரிய வர்த்தகன். இருப்பினும் தன்னாலியன்றளவு சமூகசேவைகளைச் செய்யும். பாடசாலை ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் தனது இருசக்கர வாகனத்தில் பாடசாலைக்குச் செல்லும் வழியாகச் செல்லும். யாராவது பாடசாலைக்குச் செல்லாது ஒளிந்திருந்தால் அவர்களுக்குப் புத்திமதி கூறி அவர்களை அழைத்துச் சென்று பாடசாலையில் விடும். கோவிலில் பிள்ளைகள் ஓடிவிளையாடினால் அவற்றிக்குப் புத்திமதிகள் கூறும். வறிய பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களையும், உடைகளையும் வாங்கிக் கொடுக்கும். அதனால் பெற்றோர் மதித்தியில் அதற்கு உயர்ந்த மதிப்பு உண்டு. சிறுவர்கள் அதைக் கண்டால், அதனுடன் சேர்ந்து திரிவர்.

**ஒ**ருமுறை ஒரு நாகபாம்பு மரத்தின் உச்சிக் கொப்பில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்த ஒரு பறவையின் குஞ்சைப் பிடிப்பதற்காக ஏறியது. பறவை புத்திசாலித்தனமாக இரண்டு கிளைகள் பின்னியிருந்த ஓர் இடத்தில் கூடு கட்டியிருந்தது. பாம்பால் கூட்டின் அருகே செல்ல முடியவில்லை. தெண்டித்து முன்னேற முயன்ற போது அது சிக்கிக் கொண்டு தன்னைக் காப்பாற்றும்படி கத்தியது.

**அ**தன் துயர ஓலத்தைக் கேட்ட காட்டு மிருகங்கள் யாவும் ஒன்று கூடி நின்றனவே தவிர உதவவில்லை. எல்லோரும் பார்த்துக் கொண்டு நின்றனர். அப்போது குரங்கு ஒரு தடியுடனும் வந்து மரத்தில் ஏறியது பாம்பிற்குக் கிட்டப்போகக் கிளை பலமாக ஆடியது. அது கொண்டு வந்த தடியை பாம்பின் அருகே பிடிக்கப் பாம்பு அதில் ஏறிவந்தது. குரங்கு பாம்பைப் பிடித்து

பைக்குள்ப் போட்டுக் கொண்டு வந்து உறவினரிடம் ஒப்படைத்தது. உறவினரும், ஏனையோரும் குரங்கைப் பாராட்டினர்.

**இ**ன்னொருமுறை உச்சுவில் குளத்தில் குளிப்போர் அதன் மேற்குக் கரைக்குச் சென்று குளிப்பதில்லை. மேற்குப் பகுதிக்குச் சென்று குளிக்கக் கூடாது என்று விளம்பரப் பலகை ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. அது தெரிந்தும் எருமைக் கன்று அலட்சியமாகச் சென்று மேற்குக் கரையில் குளித்த போது அது சேற்றில் சிக்கிக் கொண்டது. குளத்தின் மறுகரையில் குளித்தோர் அவலக்குரல் எழுப்பினர். இருந்தும் யாரும் காப்பாற்ற முயலவில்லை. முன்பு சேற்றில் சிக்கிய கரடி ஒன்றை மீட்க முடியாமையால் அது இறந்துவிட்டது.

**அ**ப்போது குரங்கு ஒரு கயிற்றுடன் வந்தது. குளக்கரையில் ஒரு மருதமரம் நின்றது. அதன் கிளைகள் நீரில் முட்டிக்கொண்டிருந்தன. குரங்கு மருதமரத்தில் ஏறி, எருமையின் முதுகில் குதித்து அதன் கால்களுக்கிடையே கயிற்றைக் கட்டியது. பின் அது மருதமரத்தில் பாய்ந்து ஏறிவந்து யானையிடம் கயிற்றைக் கொடுத்தது. யானை எருமையை இழுத்து எடுத்தது.

**இ**தனால் குரங்கை ஊரே போற்றியது. காட்டில் நடைபெறும் எந்த விழாவானாலும் விழாவை நடத்துவோர் குரங்கக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவித்த பின்பே விழாவை நடத்துவர். சிங்கராசா அடிக்கடி குரங்கைப் பாராட்டி, “குரங்கைப் போலச் சேவை செய்து வாழவேண்டும்” என்று கூறுவார்.

## 55. தானமது விரும்பு



**ஒ**ட்டகம் பெரும் வர்த்தகன். வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் உள்ளூரில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கிப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும். அதன் வியாபார நிறுவனத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் வேலை செய்தனர். ஏராளமான வாகனங்கள் அதனிடம் இருந்தன.

**அ**ந்த முறை ஒருபோதும் பெய்யாதளவு மழைபெய்தது. சூறாவளிக் காற்றும் அடித்தது. அதனால் விவசாயிகளின் பயிர்கள் யாவும் அழிந்து விட்டன. காட்டில் வசித்தோரின் வீடுகளுள் மழைநீர் புகுந்தமையால் பல வீடுகள் அழிந்து விட்டன. அதனால் எல்லோரும் மலைப்

பகுதியில் இருந்த பாடசாலைக் கட்டங்களிலும், கோவில்களிலும் தங்கியிருந்தனர். அவர்கள் உணவுக்குக் கஷ்டப்பட்டனர். குடிநீர் கூடக் கிடைக்கவில்லை.

**ஒ**ட்டகம் தனது வியாபார நிலையத்தில் வேலை செய்யும் வேலையாட்களைக் கொண்டு சமைப்பித்து, உணவைப் பொதியாகக் கட்டி எல்லோருக்கும் தினமும் மூன்று வேளை கொடுத்து வந்தது.

**ஒ**ட்டகத்தின் நண்பன் நரி இவ்வாறு தினமும் ஒட்டகம் மூன்று வேளையும் உணவு கொடுத்து வருவது அதற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதனால் அது ஒட்டகத்திடம் வந்து, “நண்பா, கடந்த சிலநாட்களாக இக்காட்டில் வசிக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு மூன்று வேளையும் உணவு கொடுக்கிறாயே உனக்குக் கட்டுமா” என்று கேட்டது.

“**இ**ப்போது மக்கள் பெருந்துன்பப்படுகின்றனர். துன்பப்படுவோருக்கு இப்போது உதவாவிட்டால் அவர்கள் பெருந்துன்பத்துக்குள்ளார். கஷ்டப்படுவோருக்கு உதவினால் கடவுள் எனக்கு உதவுவார். இவர்கள் எல்லாம் எனது வாடிக்கையாளர்கள். இவர்களால் தான் நான் முன்னேறினேன். அவர்கள் பலமுள்ளவர்களாக இருந்தால் தான் உற்சாகமாகத் தொழில் செய்வர். அவர்கள் தொழில் செய்தால் தான் நான் தொழில் செய்யலாம். அதனால் தான் கொடுத்து வருகிறேன்” என்றது ஒட்டகம்.

**அ**தைக்கேட்ட நரி ஒட்டகத்தின் மீது பொறாமைப்பட்டு ஒட்டகம் சொன்ன கதையை மாற்றிச் சொன்னது.

“**நீ**ங்கள் தினமும் மூன்று வேளையும் நன்றாகச் சாப்பிடுகிறீர்கள். அதற்குப் பணம் பின்பு நீங்கள் விளைபொருளைக் கொடுக்கும்போது கழிப்பதாக ஒட்டகம் எனக்குச் சொன்னது” என்று மானுக்குச் சொல்ல மான் அதை மற்றவர்களுக்குச் சொன்னது.

**அ**தைக்கேட்ட யானை சொன்னது, “ஒருவன் தொடர்ந்து பல நாட்களுக்கு உதவி செய்ய முடியுமா என்ன? இப்போது பசியால் தவிக்கிறோம். எமது பசியை அடக்கும் ஒட்டகம் பின்பு அதற்கான பணத்தைப் பெற்றால் அது தப்பல்ல”.

**அ**ந்தக் கதை ஒட்டகத்திற்குத் தெரியவந்த போது ஒட்டகம் மிகவும் வேதனைப்பட்டது. தனது நண்பன் வேண்டுமென்று சொல்லியதாக நினைத்தது. அன்று மதிய உணவு கொடுக்கும் போது ஒட்டகம் சொன்னது, “நண்பர்களே, கவலைப்படாமல் சாப்பிடுங்கள். நான் உங்களுக்குத் தந்த உணவுக்கு ஒருபோதும் யாரிடமும் பணம் வாங்கமாட்டேன். நீங்கள் தரும் பொருட்களை வாங்கி விற்றுத்தான் நான் தொழில் செய்கிறேன். என்னை வாழவைத்த நீங்கள் உணவில்லாமல் துன்பப்படுவதை நான் விரும்பவில்லை. அத்துடன் பணம், பொருள்

உள்ளவன் பணம், பொருள் இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும். உங்களின் பலரின் வீடுகள் அழிந்துவிட்டன. அவற்றைத் திருத்தவும் நான் உதவி செய்வேன்” என்றது.

**அ**தைக்கேட்ட மிருகங்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்தன. நரி அவ்விடத்தை விட்டுச் சென்றது. அதைக் கண்ட யானை சொன்னது, “எதையும் ஆராயாது கதையாதீர்கள். நரி மோசமானது என்று தெரிந்தும் கதைத்தவர்கள் வெக்கப்பட வேண்டும்”.

## 56. தீவினை அகற்று



**ந**ரி குள்ளத்தனங்களைச் செய்து மற்றவர்களை வேதனைப்படுத்தி இன்பங்காணும். அது காட்டு வழியினூடாகச் செல்லும் பாதைகளில் கற்களையும், முட்களையும் போட்டுவிடும். அதைக் கவனியாது செல்வோர் கால்களில் காயம்பட்டு வேதனைப்படுவர்.

**யா**னை தான் செல்லும் வழிகளில் கூரிய பொருட்கள் இருந்தால் அதை எடுத்து ஓரமாகப் போட்டுவிட்டுச் செல்லும். அன்று வீசிய சூறாவளிக்காற்று பல மரங்களை வேரோடு சாய்த்து விட்டது. பல மரங்களின் கொப்புகள் முறிந்து பாதையில் வழுந்து கிடந்தமையால் அப்பாதையால் சென்று வருவது சிரமமாக இருந்தது. ஒட்டகம், கரடி, மான், நரி போன்ற மிருகங்கள் அப்பாதையால் செல்ல முடியாது அவதிப்பட்டன. அதைக் கண்ட யானை அங்கு நின்ற ஒட்டகத்தையும், கரடியையும், மானையும் அழைத்துச் சொன்னது, “இது ஒரு பிரதான பாதை. சிங்கராசாவுக்கு அறிவித்தால் அவர் எம்மை அழைத்து அவற்றைத் துப்பரவு செய்யுமாறு கூறுவர். அதிலும் பார்க்க நாம் அவற்றை அகற்றுவோம்” என்று கூற மிருகங்கள் ஒன்றுபட்டு சில மணிநேரத்தில் துப்பரவு செய்துவிட்டன. அதை அறிந்து வந்த சிங்கராசா அங்கு வேலை செய்தவர்களைப் பாராட்டினார்.

**ம**றுநாள் நரி அப்பாதையூடாக வந்தபோது பாதை சீரமைக்கப்பட்டுள்ளதைக் கண்டுவிட்டுச் சில மரங்களை உருட்டி வந்து பாதையில் போட்டது. அதைக் கண்ட யானை மெதுவாக நடந்து வந்து தனது தும்பிக்கையால் நரியைப் பிடித்து நசித்தது. நரி வேதனையைத் தாங்க முடியாது பலமாகக் குளறியது. அச்சத்தம் கேட்டு மிருகங்கள் யாவும் ஓடி வந்தன. யானை நடந்தவற்றைக் கூறியது.

“**யா**னையாரே, நரியை இறக்கி விடுங்கள். நரியைக் கொண்டு பாதையின் பக்கங்களையும் துப்பரவு செய்விப்போம். பாதையோரமாகக் கற்களும் முட்களும் இருப்பதால்தானே நரி அவற்றை எடுத்து நடு வழியில் போடுகிறது. துப்பரவு செய்தால் ….” என்றதும் யானை நரியை இறக்கி விட நரி அன்று முழுவதும் பாதை ஓரங்களைத் துப்பரவு செய்தது.

**ந**ரி நன்றாகக் களைத்து விட்டது, “நீ ஒருவருக்குத் துன்பம் செய்தால் கடவுள் உனக்குத் துன்பம் செய்வார். அதனால் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதே. உனக்குத் தீமையானது என்று நீ நினைப்பவற்றையும் மற்றவர்களுக்குச் செய்யாதே. இனி இவ்வாறு நடந்தால் சிங்கராசாவிடம் சொல்லி உனக்குத் தகுந்த தண்டனை தரச்செய்வேன்” என்றது யானை, “இனி இப்படியான தீய செயல்களைச் செய்யமாட்டேன்” என்றது நரி.

## 57. துன்பத்திற்கு இடங்கொடேல்



**ந**ரி வந்து யானைக்குச் சொன்னது, “நான் எதைச் செய்தாலும் அது வெற்றியைத் தருவதில்லை. இம்முறை நெல்லுக் கூட சரியாக விளையவில்லை. கூலிவேலை செய்யலாமென்றால் என்னை யாரும் விரும்புகிறார்களில்லை. இவற்றை நினைக்க வாழ்க்கை வெறுத்துவிட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை”.

“**ஒ**ருவருக்கும் பிறர் துன்பத்தைக் கொடுப்பதில்லை. அவரவர் துன்பத்தையும், இன்பத்தையும் தாமே தேடிக்கொள்கின்றனர். உண்மையாக உழைக்க வேண்டும் பிறருக்குத் துன்பம் செய்யக் கூடாது. ஒழுக்கமாக வாழவேண்டும். அவ்வாறு நடந்தால் துன்பம் ஒருபோதும் வராது. நீ உனது சகோதரர்களுடனும் ஒற்றுமையாக இருந்ததில்லை. உனது மனைவியின் சகோதரர்களை மதிப்பதில்லை. உற்றார் உறவினருடனும், சுற்றத்தவருடனும் நல்ல முறையில் பழகுவதில்லை. அத்துடன் உரியவேளைகளில் உரியவேலைகளைச் செய்வதில்லை. இம்முறை எல்லோருக்கும் நெல் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது. நீ களை எடுத்தனியா? உரியமுயைறயில் மருந்து விசிறினாயா? பசளையிட்டாயா…? இல்லையே அப்படி இருக்கப் பயிர் எப்படி வளரும்” என்று கேட்டது யானை.

“**க**ளை எடுக்கும் நேரம் என்னிடம் பணம் இருக்கவில்லை. பலரிடம் கேட்டும் அவர்கள் தரவில்லை” என்றது நரி

“**நா**ன் பெரிய பணக்காரன் அல்ல. விதை நெல்லுக்கூட என்னிடம் இருக்கவில்லை அதைத் தந்தது எனது மைத்துனன். களையெடுத்த போதும் பசளையிட்ட போதும் எனது சகோதரர்கள் உதவி செய்தனர். நெல்லை அறுவடை செய்து விற்றதும் எல்லாக் கடன்களையும் கொடுத்துவிடுவேன். நீ வாங்கிய கடனை யாருக்காவது கொடுத்திருக்கிறாயா…? குடிப்பாய், சூதாடுவாய் இரண்டு சேர்ந்திருந்தால் குபேரனாக இருந்தாலும் பிச்சைக்காரனாகிவிடுவான். உன்னில் பிழையை வைத்துக் கொண்டு பிறரை நோவதால் பயனில்லை. தாயென்றாலும் ஒழுக்கமாக வாழும் பிள்ளையைத் தான் விரும்புவாள். உனது தாயார் வசதியானவர். உனக்கு விதைநெல்லைத் தந்தால் விற்றுச் சூதாடுவாயாம். களை எடுக்கக் காசு தந்தாலும் நீ களையெடுக்க மாட்டாயாம். இரண்டு வருடங்களுக்கு முன் உனது கஷ்டத்தைப் பார்த்துவிட்டு உனது மூத்த சகோதரன் வயலை உழுது பண்படுத்தி விதைத்து விட்டவன். பின் களையெடுக்கவும், மருந்து அடிக்கவும், பசளையிடவும் பணம் தந்தபோது நீ எதுவும் செய்யவில்லை. அப்படி இருக்க உனக்கு யார் உதவுவார்கள். உனக்குத் தரும் பணத்தை வங்கியில் உனது பிள்ளைகளின் பெயரில் வைப்பிலிடலாமே தவிர உன்னிடம் தரக்கூடாது” என்று உனது தாயார் சொல்கிறார். நீயே துன்பங்களைத் தேடிக் கொண்டு மற்றவர்களைக் குறை சொல்லாதே” என்றது யானை.

## 58. தூக்கி வினை செய்



**கு**திரைக் குட்டியொன்று தனது தந்தையிடம் வந்து சொன்னது, “அப்பா, நான் க.பொ.த. சாதாரண பரீட்சை எழுதிவிட்டேன். ஆனால் சித்தியடைவேன் என்று நம்பவில்லை. அதனால் ஏதாவது தொழில் செய்யலாமென்று நினைக்கிறேன்”.

“**நீ** சிறுபிள்ளை. இன்னொரு முறை பரீட்சையை எழுதிப்பார். தொழில் செய்வதானால் முன் அனுபவம் வேண்டும். என்ன தொழில் செய்ய யோசிக்கிறாய’?” என்று கேட்டது தகப்பன்.

“**இ**ங்கு கடைகள் இல்லை. இங்குள்ளவர்கள் பொருட்களை வாங்குவதற்குச் சிறிதுதூரம் செல்லவேண்டி இருக்கிறது. அதனால் வயது முதிர்ந்தவர்களும், பெண்களும், சிறுவர்களும் கஷ்டப்படுகின்றனர். அதனால் ஒரு கடையை வைக்கலாம் என்று நினைக்கிறேன்”.

“**உ**னது எண்ணம் சரியானது தான். நான் வசதியுள்ளவனல்ல. ஒரு முயற்சி செய்ய வேண்டுமானால், அது பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். அதனால் எனது இனத்தவர் ஒருவர் பட்டணத்தில் ஒரு பெரிய வியாபார நிலையம் வைத்திருக்கிறார். அவரைக் கேட்டு உன்னைச் சேர்த்து விடுகிறேன். வியாபார நுணுக்கங்களை அறிந்த பின்பு ஆரம்பிப்பது தான் நல்லது” என்றது தந்தை.

“**ச**ரி அப்பா, உங்களின் விருப்பப்படி செய்யுங்கள்” என்றது மகன்.

**த**கப்பன் குதிரை, தனது இனத்தவருடன் கதைத்து அதை இனத்தவரின் வியாபார நிலையத்தில் சேர்த்துவிட்டது. குதிரைக்குட்டி சுறுசுறுப்பாகவும் அர்ப்பணிப்புடனும் வேலை செய்து வந்தது. அதனால் அதை முதலாளிக்கு நன்றாகப் பிடித்து விட்டது. அதனால் பொருட்களைக் கொள்வனவு செய்தல், விற்றல் கணக்கு வைத்தல் போன்ற முக்கிய பணிகளை முதலாளி குதிரைக் குட்டியிடம் ஒப்படைத்தார். குதிரைக்குட்டி வந்தபின் லாபம் மூன்று மடங்காக அதிகரித்தது. அதனால் முதலாளி அதன் சம்பளத்தை இரண்டு மடங்காக அதிகரித்தது.

**தி**டீரென்று முதலாளிக்கு நெஞ்சுவலி வந்து பலநாட்கள் ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குதிரைக் குட்டிக்கு அது பெரும் வேதனையைக் கொடுத்தது. முதலாளி நோய்வாய்ப்பட்ட நிலையில் தான் தனியாக ஒரு வியாபார நிலையத்தை ஆரம்பிப்பது முறையல்ல என்று நினைத்தது.

**அ**ன்று முதலாளி குதிரைக்குட்டியின் தந்தையையும் குதிரைக்குட்டியையும் தனது வீட்டுக்கு அழைத்தார், “நீ எனது இனத்தவன். அதனால் தான் உனது மகனுக்கு வியாபாரம் சம்பந்தமான அனைத்தையும் கற்பித்தேன். இன்று அவன் வியாபாரத்தில் நல்ல திறமைபெற்று விட்டான். நீ முன்பே உனது கிராமத்தில் ஒரு வியாபார நிலையம் அமைக்கவிருப்பதாகச் சொன்னாய். இப்போ நான் நோயாளியாகி விட்டேன் என்னால் இனித் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. அதனால் எனக்கொரு மகள் இருக்கிறாள். உனது மகன் கெட்டிக்காரன், பண்பானவன், ஒழுக்கமானவன். அதனால் எனது மகளைத் திருமணம் செய்து கொடுத்து எனது வியாபார நிலையத்தையும் கொடுக்கிறேன். உனக்கு விருப்பமா” என்று கேட்டது.

**கு**திரை சம்மதித்தது. மறுவாரம் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. தந்தையின் சொற்படி நடந்தமையால் தான் தனக்கு இந்தப் பெருவாழ்வு கிடைத்தது என்று மகிழ்ந்தது குதிரைக்குட்டி.

## 59. தெய்வம் இகழேல்



**அ**ன்று விநாயக சதுர்த்தி. அக் காட்டிலுள்ள மிருகங்கள் யாவும் காட்டுவிநாயகர் கோவிலுக்கு வந்திருந்தன. மயில் தோகையை விரித்து ஆடியது. குயில் இனிமையாகப் பாடியது. குரங்கு மிருதங்கம் அடித்தது. அப்போது சில மயில் குஞ்சுகள் வந்து மயிலுடன் சேர்ந்து நடனமாடின.

**ந**ரி வந்து அவற்றைப் பார்த்துவிட்டு மயிலுக்குச் சொன்னது, "உன்னுடைய நடனத்தைக் காட்ட இதுவா இடம்? நீ ஆடுவதைப் பிள்ளையார் பார்த்து ரசிப்பார் என்று நினைக்கிறாயா..? அப்படிப் பார்த்து ரசித்தால் அவர் உன்னைப் பாராட்டுவாரே. எப்போதாவது பாராட்டினாரா…?.

**அ**தைக் கேட்டதும் குரங்குக்குக் கோபம் வந்தது. மிருதங்கத்தை ஒரு கரையில் வைத்து விட்டு அருகில் இருந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு வர, யானை சொன்னது, "மூடர்களுக்குப் புத்தி சொல்வதும் தண்டனை அளிப்பதும் அர்த்தமற்றது. நரியுடன் சிலர் நட்புப் பூண்டுள்ளனர். அவர்களும் நரியைப் போல கடவுகளைக் கேலி செய்பவர்கள். அவர்கள் நரிக்காகச் சண்டைக்கு வர, குரங்கின் நண்பர்கள் குரங்கிற்காக வரக் கோவிலடி கலகபூமியாகிவிடும். கோவிலில் அமைதியைப் பேணவேண்டும். அடியார்களை வழிபட விடவேண்டும்" என்று கூறிக் குரங்கு கொண்டு வந்த கம்பைப் பறித்தெடுத்தது.

"**அ**வர் பெரிய சண்டியர். விடு அடிக்கட்டும் என்ற நரி, "என்னைப் பற்றிப் பிள்ளையாருக்குச் சொல்லிவிடாதே. அவர் எலியில் ஏறி வந்து என்னைக் கொன்றுவிடுவார்" என்றது நரி.

**யா**னை தனது காதைப் பொத்தியது, "ஏன் கோவிலடியில் வீண் கதைகள் பேசுகிறீர்கள். கும்பிட விருப்பமில்லாதவர்கள், நம்பிக்கையில்லாதவர்கள் ஏன் கோவிலுக்கு வருகிறீர்கள். உங்களை யார் அழைத்தது?" என்று கேட்டது யானை.

**யா**னைக்குக் கோபம் வந்துவிட்டது என்று அறிந்த நரி மெதுவாக அங்கிருந்து சென்றது. செல்லும் வழியில் ஒரு மலைப்பாம்பு நின்றது. நரி அதைக் கண்டால் கேலி பண்ணிச் சிரிக்கும் அதற்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று மலைப்பாம்பு எண்ணி சருகுகளுக்குள் மறைந்திருந்தது. நரி விசிலடித்தவாறு வந்தபோது மலைப்பாம்பு அதைப் பிடித்துவிட்டது. அதனால் அது உயிருக்கு அஞ்சிப் பலமாகக் கத்தியது.

**கோ**விலடியில் நின்ற யானையும் ஏனைய மிருகங்களும் அங்கே ஓடிவந்தன. மலைப்பாம்பு நரியைப் பிடித்து நசுக்கியதால் நரி வேதனை தாங்கமாட்டாது, "காட்டுப்பிள்ளையாரே, இனிமேல்" நான் உன்னைக் கேலி செய்யமாட்டேன். ஏன்னைக் காப்பாற்று" என்று அழுதது.

"**பா**ம்பாரே, நரியைவிட்டு விடும். பாவம்" என்றது யானை.

"**ந**ரியைப் பாவம் பார்க்கலாகாது. எல்லோரையும் கேலி செய்வது இதன் வழக்கம்" என்று மலைப்பாம்பு சொன்ன போது நரி சென்னது, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் நான் யாரையும் கேலி செய்யமாட்டேன்".

"**கா**ட்டுப்பிள்ளையாரையும் கேலிசெய்தாய் இப்போ காப்பாற்றும்படி காட்டுப்பிள்ளையாரை அழைக்கிறாய். அவர்தான் உன்னைக் காப்பாற்றுமாறு எம்மை அனுப்பினவர்" என்றது யானை.

"**எ**ன்னை மன்னியுங்கள், என்னைக் கொன்று விடாதீர்கள். பிள்ளையாரே என்னைக் காப்பாற்று" என்று அழுதது நரி.

"**பா**ம்பாரே, பாவம் நரி. பிள்ளை குட்டிக்காரன். அவரை விட்டு விடும்" என்றது யானை.

"**பி**ள்ளையாரை அழைத்தமையாலும், பெரியவரான நீர் சொல்வதாலும் நரியை விடுகிறேன்" என்று கூறி நரியை விட, அது திரும்பிப்பாராது ஓடியது.

## 60. தேசத்தோடு ஒத்துவாழ்



**யா**னையிடம் அந்தக் காட்டில் வசிக்கும் மிருகங்கள் பல பதட்டத்துடன் ஓடி வந்தன. பலர் ஒன்று சேர்ந்து குளறும் சத்தம் பலமாகக் கேட்டது.

"**யா**னையாரே, ஏதோ பெரும் ஆபத்து

நேர்ந்துள்ளதைப் போலத் தெரிகிறது. தலைவரான நீங்கள் பேசாதிருக்கலாமா…?" என்று கேட்டது மான்.

"**ப**தட்டப்படாதீர்கள் நரி இங்கும் யாருடனும் ஒற்றுமையில்லை. எல்லோரிலும் குறைகாண்பதும் சிறிய சிறிய விடயங்களைப் பெரிதுபடுத்திச் சம்பந்தப்பட்டவரை உற்சாகப்படுத்திச் சண்டையைத் தூண்டிவிடுவதும் அதன் இயல்பான குணங்கள். அயற்காட்டுக்குச் சென்ற நரி இங்கு செய்யும் வேலையை அங்கும் செய்துள்ளது. அங்குள்ள தீயவர்களைச் சேர்த்து திருடுவது, குளப்பம் விளைவிப்பது, வீண்சண்டையை உண்டாக்கி வேடிக்கை பார்ப்பதெல்லாம் அதற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அங்கு பெருந்தொகையான பணத்தைக் கூட்டுச் சேர்ந்து திருடிவிட்டு இங்கு வந்து விட்டது. நரியோடு சேர்ந்த திருடர்களைப் பிடித்து விட்டனர். நரியைப் பிடிக்கக் காவல்துறையினருடன் அந்தக் காட்டின் மிருகங்கள் வந்துள்ளன. இதில் நாம் எப்படித் தலையிடுவது?" என்று கேட்டது யானை.

"**இ**ருப்பினும் நாம் சென்று ஒருமுறை விசாரித்துப் பார்க்கலாம்" என்றது கரடி.

"**எ**மக்கும் இந்தநிலை வரலாம்" என்று ஒட்டகம் சொல்லும் போது யானை கோபத்துடன் குறுக்கிட்டது, "நீ யோசித்துப் பேசு நரியைப் போலத் தீய செயல்களை இங்கு யார் செய்கின்றனர். ஊரில் திருடினால் நாம் மன்னித்து விடலாம். வேறு காட்டில் வாழ்பவர் விடுவார்களா? அவர்கள் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை அபகரிக்கலாமா? அதைவிட எல்லோருடனும் சேர்ந்து வாழ்ந்தால் நாம் உதவலாம். அப்படியல்லாத ஒரு தீயவனுக்கு உதவுவது அவனுக்கு ஊக்கமளிப்பதைப் போன்றது" என்ற யானை, "வாருங்கள் சென்று பார்ப்போம்" என்று கூறிவிட்டு நடந்தது.

**யா**னையும் ஏனைய மிருகங்களும் வந்தபோது நரிக்கு விலங்கிட்டு அழைத்துக் கொண்டு வந்தனர். அந்தக் காட்டின் தலைவரான ஒட்டகம் சொன்னது, "தலைவர் அவர்களே, இந்த நரியின் செயல்களைத் தாங்க முடியாமையால் தான் உங்களுக்கு அறிவித்து விட்டு வந்தோம். தங்களின் ஒத்துழைப்புக்கு நன்றி. உங்களைப் போன்ற நல்ல தலைவரால் கூட இந்த நரியைத் திருத்த முடியவில்லையென்றால் சிறைச்சாலை தான் திருத்தும்".

"**ஊ**ரோடு ஒத்துதவாதவர்களுக்கு இதுதான் நடைபெறும். நரியின் கூட்டாளிகள் இதைப் பார்த்து திருந்தாவிட்டால் ஊரே கூடி நடவடிக்கை எடுக்கும்" என்றது யானை.

## 61. தையல் சொல்கேளேல்



**மா**னுக்கு திருமணம் முடிந்து ஒருசில மாதங்கள் கழிந்துவிட்டன. அன்று காலை பெண்மானின் தந்தை வந்து மகளுக்குச் சொன்னார், "மகளே, எனது உற்ற நண்பனின் மகன் தான் உனது கணவன். உற்ற நண்பன் நல்லவன். ஒழுக்கமுள்ளவன். அதனால் மகனும் அவ்வாறு இருப்பானென நினைத்து உனக்குத் திருமணம் செய்துவைத்து விட்டேன். ஆனால் உனது கணவன் நரியுடனும் அதன் நண்பர்களுடனும் சேர்ந்து தீயசெயல்கள் பலவற்றைச் செய்வதாக அறிந்தேன். இனி எதுவும் செய்யமுடியாது. ஆனால் ஒரு பெண் நினைத்தால் ஆணைப் பெருவீரனாக, மகானாக, புத்திகூர்மை மிக்கவனாக மாற்ற முடியும். நீ கற்றவள், அறவுடையவள், ஆத்திரப்படாது அமைதியாகச் செயலாற்று. சில ஆண்கள் பெண்களைத் தரக்குறைவாகவும், அறிவில்லாதவர்களாகவும், கீழ்ப்பட்டவர்களாகவும் கருதுகின்றனர்".

**எ**ன்று தகப்பன் மனவருத்தப்பட்ட போது மகள் சொன்னது, "அப்பா இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு ஔவையார் என்ற அறிவுமிக்க புலவர், "தையல் சொல்கேளேல்" என்று பாடியுள்ளார். இதன் அர்த்தம் மனைவியின், அறிவுள்ள பெண்ணின் சொல்லைக் கவனமாகக் கேள் என்பதே அர்த்தம். "சனிநீராடேல்" என்பதை சனிக்கிழமை தலையில் எண்ணெய் தேய்த்து முழுகு என்று உரையெழுதியவர்கள், "தையல் சொல்கேளேல் என்பதைப் பெண்ணின் சொல்லைக் கேளாதே என்று எப்படி உரை எழுதமுடியும்? உலகத்தை விரிவாக ஆராய்ந்தால் ஆண்களை விடப் பெண்கள்தான் அறிவாளிகள் என்ற நிலை வெளிப்படும். அணுவைத் துளைக்கலாம் என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சொன்ன ஔவையார். இவ்வாறு சமூகத்திற்கு ஒவ்வாத கருத்தைக் கூறியிருக்கமாட்டார். நான் சமாளிப்பேன் நீங்கள் சென்றுவாருங்கள்".

**அ**ன்று இரவு மான் வந்தபோது ஒரு துர்நாற்றம் வீசியது. அது எதனால் நிகழ்ந்தது என்று புரிந்து கொண்ட பெண் மான் சொன்னது, "அன்பானவரே, தாங்கள் நரியோடும் அதன் நண்பர்களோடும் சேர்ந்து குடிக்கிறீர்கள், சூதாடுகிறீர்கள். அதனால் உங்களது தந்தை மிகவும் வேதனைப்படுகிறார். நரி பல தீய செயல்களைச் செய்கிறது. நீங்கள் அதனுடன் சேர்ந்து

குடிப்பதால் உங்கள் மீதும் திருட்டுப்பழி வரும். நீங்கள் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். தீய செயல்களைச் செய்யலாமா…?".

"**எ**னக்கு என்னுடைய வேலை தெரியும் யாரினதும் புத்திமதி எனக்குத் தேவையில்லை. நீ பெண் ஆணுக்கு அடங்கி நடக்க வேண்டியவள். அதனால் பேசாமல் இரு" என்று கோபித்தது ஆண் மான்.

"**நா**ன் சொல்வதைக் கேளாவிட்டால் நரியுடன் சேர்ந்து நீங்களும் சிறைக்குச் செல்வீர்கள்" என்று மனைவி கூறியபோது ஆண் மான் கோபத்துடன் ஏசி அதை அடிக்கப் போனது.

**ம**றுநாட் காலை காவல்துறையினர் வந்து மானைக் கைது செய்தனர். தகப்பன் விசாரித்த போது மேலதிகாரி சொன்னார், "நரியுடன் சேர்ந்து குடித்துவிட்டு ஆட்டின் வீட்டிற்குச் சென்று ஆட்டையும் குட்டிகளையும் கட்டிப்போட்டு விட்டுக் கொள்ளையடித்திருக்கிறார்கள். கட்டிப்போட்ட போது ஒரு முதிய ஆடு இறந்து விட்டது. கொலைக் குற்றத்திற்காக உமது மகனைக் கைது செய்கிறோம்".

**ஆ**று மாதங்கள் மான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது. பின் சாட்சிகளின் அடிப்படையில் சம்பவம் நடைபெற்றன்று மான் வெளியூருக்குச் சென்றது நிரூபிக்கப்பட்டதால் அது விடுதலையானது.

**அ**தைப் பார்க்க வந்த யானை சொன்னது, "நண்பா குற்றம் செய்வாரோடு நண்பராக இருப்பவரும் குற்றவாளிதான். இது தெரிந்து தான் உனது மனைவி உன்னை அன்பால் எடுத்துரைத்தவள். நீ கேட்கவில்லை. பெரும் அறிஞரான ஔவையாரின் கூற்றை ஆராயாது பிழையாகக் கூறியவர்களின் கூற்றை நம்பிப் பலர் கெட்டழிந்துள்ளார்கள். ஆகையால் மனைவியின் சொல்லைக் கட்டாயம் கேள்" என்ற போது மான் எதுவும் சொல்லவில்லை.

## 62. தொன்மை மறவேல்



**யா**னைக் குட்டியொன்று ஒரு நரியுடன் நட்புப் பூண்டிருந்தது. யானைக்குட்டிக்கு ஆரம்பத்தில் நரியைப் பிடிப்பதில்லை. அதனால் அது நரியுடன் சேர்வதில்லை. இருவரும் ஒன்றாகப் படிப்பதால் தேவைக்கு சேரவேண்டிய நிலை. அதைவிட மாணவர்கள் உயர்வு தாழ்வு

பாராது எல்லா மாணவர்களுடனும் அன்பாகப் பழகவேண்டும். அன்பு, உதவும் பண்பு, இரக்கம் கொள்ளல், உண்மைபேசுதல் என்பவற்றை மாணவர் கைக் கொள்ள வேண்டும். அடக்கமாக இருந்து மற்றவர்களை மதிக்க வேண்டும். என்று வகுப்பாசிரியர் சொன்ன பின்பு யானை நரியுடன் நட்புப் பூண்டது.

**பா**டசாலை விட்ட பின்பும், விடுமுறை தினங்களிலும் நரி யானையின் வீட்டிற்கு வந்து யானையை அழைத்துச் சென்றுவிடும். நரிக்குச் சில தீய நண்பர்கள் இருந்தார்கள். அவர்களுடனும் யானை அன்பாகப் பழகும். மனிதர்களின் தோட்டங்களுக்குச் சென்று பழவகைகளையும், காய்கறி வகைகளையும் திருடிக் கொண்டுவந்து யானைக்கும் கொடுப்பார்கள். யானை அவற்றை வாங்கி உண்ணும். அப்படி உண்ணும் போது ஏற்பட்ட சுவையால் யானை நரியுடனும் அதன் நண்பர்களுடனும் நெருக்கமாகப் பழகி வந்தது.

**இ**தை அறிந்த யானையின் தாயார், "மகனே, நீ எமது குலப்பெருமையை மறந்து தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்கள் பலவற்றைச் செய்கிறாய். பெரும் சிறப்புக்கள் வந்தாலும் குலப்பெருமையைக் கெடுக்கக் கூடிய செயல்களை ஒருபோதும் செய்யக்கூடாது. பெருமையையும், புகழையும் விரும்பவோர் புகழ்தேடும் போது கூடக் குடிப்பெருமைக்கு இழுக்கு வரும்படி நடக்கமாட்டார்கள். படிக்கப் படிக்கப் பணிவு வரவேண்டும். நீ படித்து முடிக்கப்போகிறாய். அந்த நிலையில் இழிவான செயல்களை ஓர் அணுவளவு கூடச் செய்யக்கூடாது. நீ நரியுடன் சேர்ந்து திரிவதால் நரி செய்யும் தீய செயல்களை நீயும் செய்வதாக ஆசிரியர்கள் நினைக்கிறனர். அதனால் தீயவர்களின் நட்பை விட்டுவிடு. இல்லாவிட்டால் ஆபத்துத் தான் வரும்".

**ஒ**ரு வாரம் கழிய யானை நரியுடன் சேர்ந்து மனிதர்களின் தோட்டத்திற்குச் சென்றது. அங்கு ஒரு பெரிய பூசணிக்காயைக் கண்டது. அதன் நாவில் எச்சில் ஊறியது. விருப்புடன் அதன் அருகே சென்றபோது நூற்றுக்கணக்கான வெடிகள் வெடித்தன. மனிதர்கள் தகரங்களில் தட்டியவாறு பொல்லுகளுடன் ஓடி வந்தனர்.

**யா**னை பயந்து விட்டது. பயத்துடன் ஓடியபோது ஒரு பெரிய மரக்கட்டை அதன் காலைத் தாக்கியதால் அது நின்றது. வெடிகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன. யானை மெதுவாக எழும்பி நடந்து சென்றது.

**கா**லையில் தாய் சொன்னது, "மகனே, அன்பு மிகுதியால் ஒருவர் நலம் செய்தாலும் நல்ல பண்பில்லாதவர்ளோடு நட்புக் கொண்டால் தீமை தான் வரும். நரி உன்னுடன் படித்தாலும் அது நல்ல குணங்களை உடையது அல்ல. ஒருவரின் அன்பான செயல்கள் பண்பற்ற செயல்களாக இருந்தால் அவர் நல்ல குடியில் பிறந்தவராகார். எமது குடி உயர்ந்தது, பண்பானது அதனால் அதைப் பேணி நடத்தல் வேண்டும்".

**உ**ண்மைதானம்மா வெடிச்சத்தத்தின் போது நான் பயந்து விட்டேன். காலிலும் காயம் ஏற்பட்டதால் நடக்க முடியவில்லை. அன்று உயிர் தப்பியது அதிசயம். அதனால் இனி நான் நரியுடன் சேரமாட்டேன்" என்றது யானை. அதைக் கேட்டு தாய் யானை மகிழ்ந்தது.

## 63. தோற்பான தொடரேல்



**ஒ**ட்டகம் தனது மகனுக்குச் சொன்னது, மகனே, நீ ஒழுக்கமானவன், பண்பானவன், எல்லோரையும் மதிப்பவன், உனது வியாபார நிலையத்தில் எல்லாப் பொருட்களையும் வாங்கி வைத்திருக்கிறாய். விலை கூட்டிவிற்கவில்லை. இருப்பினும் மக்கள் உனது கடைக்கு வராது நரியின் கடைக்குச் சென்றே பொருட்களை வாங்குகின்றனர். அதற்குப் பல காரணங்கள் உண்டு. நரி பணக்காரன் அதனால் வாடிக்கையாளர்களுக்கு தேவையான பொழுது கடன் கொடுக்கிறது. உனது மாமனார் தனது வீட்டைப் பொறுப்பாகக் கொடுத்துவிட்டு பல இலட்ச ரூபா கடனாகப் பெற்றுள்ளார். அதுபோலப் பலர் கடன்பெற்றுள்ளனர். அப்படியானவர்கள் இங்கு வரமாட்டார்கள். வந்தால் நரி பழிவாங்கிவிடும் என்று அஞ்சுகின்றனர். நீ விற்பனைக்காக வாங்கிய பொருட்கள் பழுதடைந்திருக்கின்றன அதனால் அதை யாரும் வாங்கமாட்டார்கள்".

**ஒ**ட்டகம் தனது தகப்பன் கூறுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டு நின்றது. அதற்கு அது நியாயமாகப்பட்டது.

"**ம**கனே, பல காலமாக இவ்வாறு நடைபெறுவதால் நீ வேறு ஒரு தொழிலைச் செய்வதுதான் நல்லது நீ பொறுப்பில்லாமல் நடந்து செய்யக்கூடாதவற்றைச் செய்தால் தான் நட்டம் வருமென்றில்லை. எமக்கு ஏராளமான வயல் உண்டு. உலகத்தவர் ஆயிரம் வகையான தொழில்களைச் செய்தாலும் விவசாயத்தைப் போல சிறந்த தொழில் எதுவுமில்லை. விவசாயிதான் இறைவன் படைத்த உயிர்களுக்கெல்லாம் உணவளிக்கிறான். அதனால் வெட்கப்படாது விவசாயத் தொழிலில் ஈடுபடு. தொடர்ந்து நட்டம் வரக்கூடிய தொழிலைச் செய்வதால் எந்தப் பயனும் வராது" என்றது.

**ஒ**ட்டகத்தின் மகன் வயலை உழுது நெல் விதைத்தது. அதற்கு அமோக விளைச்சல். அதனால் தந்தை வந்து சொன்னது, "மகனே விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய். உனது வியாபார நோக்கம் பூர்த்தியாகும்".

**இ**ப்போது ஒட்டகத்தின் மகன் பெரிய மொத்த வியாபாரி.

## 64. நன்மை கடைப்பிடி



**ஒ**ட்டகச்சிவிங்கியின் மகன் பாடசாலை தொடங்குமுன் வந்து தனது வகுப்பறையைக் கூட்டி துப்பரவு செய்து விட்டு அதிபரின் அலுவலக அறையைக் கூட்டித்துப்பரவு செய்யும். பின்பு பாடசாலையில் நட்ட மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றும்.

**கோ**விலுக்குப் பூசை தொடங்குமுன் வந்து கோவிலைக் கூட்டித் துப்பரவு செய்யும். வீதியால் யாராவது விசமிகள் போத்தலை உடைத்திருப்பார்கள், பாதையின் ஓரமாக உள்ள கற்களைத் தூக்கிப் போட்டிருப்பார்கள். அவற்றையெல்லாம் தூக்கி ஓரமாகப்போடும்.

**அ**தனது பேரன் சொல்வார், "நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் பாடசாலை, கோவில், பாதைகள் ஆகிய இடங்களில் ஆபத்தை விளைவிக்கும் பொருட்களை யாரும் போடுவதில்லை. தவறிப் போட்டால் அவற்றை எடுத்துத் தூர வீசி விடவேண்டும் என்று ஆசிரியர்கள் சொல்வார்கள். அவர்கள் சொல்வதை நாம் செய்வோம். இப்போது போத்தல்களை நடுவீதியில் போட்டு உடைக்கிறார்கள். இப்படியான வேலைகளை நீ செய்யக் கூடாது. அவற்றைத் துப்பரவு செய்தல் வேண்டும்".

**ஆ**சிரியர்களும் வேறு பலரும் ஒட்டகச்சிவிங்கியின் மகன் அவ்வாறு செய்வதைக் கண்டு விசாரித்தால் அது பேரனின் விருப்பப்படி செய்கிறேன் என்று சொல்லும்.

**அ**ன்று அது பாடசாலைக்கு வரும்போது வழியில் ஒரு பிளாஸ்ரிக் பை ஒன்று இருந்தது. ஒட்டகச்சிவிங்கியின் மகன் அதை எடுத்துப் பார்த்தது. அது கனமாக இருந்தது. கூட வந்த மாணவர்கள் அதற்குள் என்ன இருக்கின்றது என்று பிரித்துப் பார்ப்போம் என்று கூறியபோது

அது சம்மதிக்காமல் அதிபரிடம் கொண்டு சென்று கொடுத்தது. அதிபர் பிரித்துப் பார்த்தபோது அதற்குள் தங்க நகைகள் இருந்தன.

**அ**திபர் அவற்றை மாணவர்களுக்குக் காட்டி யாருடையதென்று அடையாளம் காட்டிப் பெறுமாறு கூறினார். ஐந்து தினங்கள் கழித்தும் யாரும் வரவில்லை. அதனால் அதிபர் அவற்றைக் காவல்துறை அதிகாரியிடம் கொடுத்தார். காவல்த்துறை அதிகாரி பார்த்துவிட்டு, "நான் விசாரித்து விட்டுச் சொல்கிறேன்" என்றார்.

**அ**து திருடப்பட்ட நகை அதனால் களவு போனதாக அறிவித்தவர்களை அழைத்து அடையாளம் காட்டிப் பெறச் சொன்னார். அனைவரும் ஒட்டகச்சிவிங்கியின் தாத்தாவை நேரில் சென்று பாராட்டினர். தாத்தாமார் இவ்வாறு நடந்து கொண்டால் நன் மாணாக்கரை உருவாக்கலாம் என்று காவல்துறை அதிகாரி சொான்னார். ஊரவரும் கல்வித் திணைக்களமும் ஒட்டகச்சிவிங்கியின் குட்டியைப் பாராட்டினர்.

## 65. நிலையிற் பிரியேல்



**யா**னையின் மகன் வந்து தகப்பன் யானைக்குச் சொன்னது, "அப்பா, எனக்கு வயது பதினைந்தாகிறது. பாடசாலைக்கே செல்லவில்லை. எந்தத் தொழிலையும் செய்யவில்லை. மாமாவின் வீட்டுக்கு நான் நேற்றுச் சென்றேன். வா என்றுகூட யாரும் சொல்லவில்லை. மாமி வெளியே நின்ற தனது மகளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டா. இருவரும் அதன்பின் வெளியே வரவில்லை. மாமா வேண்டாவெறுப்பாகக் கதைத்தார் அவருக்கு நான் அங்கு சென்றது பிடிக்கவில்லை. சிறிது நேரம் கதைத்துவிட்டு, "எனக்கு, வெளியே வேலை இருக்கிறது நீபோ" என்று அடித்துத் துரத்தாத குறையாகச் சொன்னார். அது எனக்கு மிக்க கவலையைக் கொடுத்தது".

"**நீ** படித்து நல்ல உத்தியோகம் பார்த்திருந்தால் உன்னை அன்போடு வரவேற்றிருப்பார். படிக்காத, தொழில் இல்லாத உன்னை யார் விரும்புவர். நீ ஏன் அங்கே சென்றாய்? உனது மாமா திமிர் பிடித்தவர். நான்தான் அனுப்பியிருப்பேன் என்று ஊர் முழுவதும் சொல்லித்திரிவார். படிக்கவில்லை என்ற அவமானத்தை விட இதுதான் எனக்குப் பெரிய அவமானம். இனிமேல் அங்கு சென்று எனக்கு அவமானத்தை உண்டாக்காதே" என்றது.

“**அ**ப்பா, மாமாவும் மாமியும் மகளும் அவமதித்ததை எண்ணி நான் வெட்கப்படுகிறேன். நீ படி படி என்ற போது அதை அலட்சியப்படுத்திய நான் இனிப்படிக்கப் போகிறேன். பண்டிதர் படிக்கவரச் சொன்னவர். அத்துடன் நீங்கள் நோய் காரணமாக செய்யாமல் விட்ட வயலைச் செய்யப் போகிறேன்” என்றது குட்டி யானை.

“**ம**கனே, உன்னில் எனக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. நீ ஒரு நேரம் ஒரு கதை கதைப்பாய். பின் மறந்து விடுவாய். உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? என்ன?”.

“**அ**ப்பா, இந்தமுறை நன்கு ஆராய்ந்துதான் சொல்லியுள்ளேன். நான் சொன்னதைச் செய்து காட்டுகிறேன்”.

“**ம**கனே, ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செயற்பட்டால் எச் செயலையும் செய்து முடிக்கலாம். நீ சொன்ன சொல்லை உறுதியாக நெஞ்சில் நிறுத்தி எந்த இடர் வந்தாலும் கொண்ட உறுதியிலிருந்து மாறாது கடுமையாக உழைத்தால் உரிய இலக்கை அடையலாம். இம்முறை உனது செயற்பாட்டைப் பார்த்துவிட்டு எனக்குத் திருப்தி ஏற்பட்டால் உனக்கு ஓர் உழவு எந்திரம் வாங்கித் தருகிறேன்” என்றது தந்தை.

**யா**னைக்குட்டி வயலில் நெல்லை விதைத்து விட்டு அதைக் கவனமாகப் பராமரித்தது. இரவில் பண்டிதரிடம் சென்று பாடம் படித்தது.

**ஆ**று மாதம் கழிந்தது. யானைக்குட்டிக்கு நெல் அமோகமாக விளைந்திருந்தது. நெல்லை அறுவடை செய்து விட்டு உளுந்து, பயறு, எள் முதலியவற்றை விதைத்தது. அதனால் அதன் தந்தை மகிழ்ந்து அதற்கோர் உழவு எந்திரம் வாங்கிக் கொடுத்தால் அதன் மூலம் வயல்களை உழுது யானைக்குட்டி பணம் சேர்த்தது.

**இ**ரண்டு வருடங்கள் கழிய யானைக் குட்டி தரம் எட்டுக்கான அறிவைப் பெற்றது. அதனால் அது ஒரு பலசரக்குக் கடையை ஆரம்பித்தது. மேலும் ஒரு வருடம் செல்ல யானைக் குட்டி பெரும் தனவந்தனாகியது.

**மா**மனார் அதற்குத் தனது மகளைத் திருமணம் செய்துவைக்க விரும்பி வந்து யானைக் குட்டியின் தகப்பனைக் கேட்டபோது யானைக் குட்டி சொன்னது, “என்னை அவமதித்தவரின் பெண் எனக்கு வேண்டாம்”.

“**ம**கனே, உன்னை அவர்கள் அவமதித்ததால் தான் நீ இந்தநிலைக்கு வந்தாய் இல்லாவிட்டால் ஊர் சுற்றிக்கொண்டு திரிந்திருப்பாய். இப்போது உனது தரத்தை உணர்ந்து

தானே அவர் வலிய வந்து கேட்கிறார். மாமாவின் மனைவி எனது சகோதரி. அதனால் அவளை திருமணம் செய் மகனே" என்றது தந்தை.

**த**ந்தை சொன்ன காரணம் நியாயமாக இருந்தமையால் யானைக்குட்டி திருமணத்திற்குச் சம்மதித்தது.

## 66. நீர் விளையாடேல்



**மா**ன் தனது குட்டிக்குச் சொன்னது, "மகனே, இப்போது நான் சொல்வது எதையும் நீ கேட்பதில்லை. நேற்றுப் பாடசாலை விட்ட பின்பு புத்தகங்களை எருமையின் வீட்டில் அதற்குத் தெரியாமல் வைத்துவிட்டு நீயும் உனது ஐந்து நண்பர்களும் உச்சுவில் குளத்துக்குச் சென்று நீரில் நீந்தி விளையாடியுள்ளீர்கள். உச்சுவில் குளம் இயல்பாகவே மிகவும் ஆழமானது. அதன் மேற்குக் கரையில் சேறு அதிகம் உண்டு. சென்றவாரம் உன்னோடு படிக்கும் ஒரு எருமைக்குட்டி சேற்றில் புதைந்தபோது ஒருவராலும் மீட்க முடியவில்லை. தற்செயலாக அங்கு வந்த ஒரு குரங்கு குளக்கரையில் நின்ற மருதமரத்தில் ஏறி அதன் முதுகில் பாய்ந்து கயிறுகட்டி இழுத்தெடுத்தது. காலையிலும், மாலையிலும் தான் எல்லோரும் குளிப்பார்கள். நீங்கள் பகல் ஒன்றரை மணிக்குச் சென்று குளித்துள்ளீர்கள். அந்தநேரம் யாரும் வரமாட்டார்கள். தற்செயலாக நீரில் அமிழ்ந்தால் உங்களைக் காப்பாற்றுவது யார்?"

**மா**ன் குட்டி எதுவும் பேசாது தலையைக் குனிந்து கொண்டு நின்றது, "மகனே தாமரைப் பூக்களைப் பறித்து காட்டுப் பிள்ளையாரின் பூசைக்குக் கொடுப்பதற்காக இறங்கிய உங்களது ஆசிரியர் மரணமடைந்தது உனக்குத் தெரியாதா?. சிறுவர்கள் பெற்றோருடன் சென்று நீராட வேண்டும். அதுவும் கரையில் நின்று நீராட வேண்டும். உங்களது ஆசிரியர் நன்றாக நீந்தக் கூடியவர். இருந்தும் தாமரைக் கொடிக்குள் சிக்குண்டமையால் இறந்தவர். ஓ.எல் படிக்கும் உனக்கு இவை பற்றித் தெரியாதா...?"

"**இ**னிமேல் நான் போகமாட்டேன் அம்மா".

“நீ போகாவிட்டாலும் உனது நண்பர்கள் வற்புறுத்துவர். நரி யார் எதைச் சொன்னாலும் கேட்காது. எனவே அவதானமாக இரு என்றது மான்”.

## 67. நுண்மை நுகரேல்



கரடி மிக்க ஆத்திரத்துடன் வந்து ஒட்டகத்தைப் பேசியது, “உனது மகன் தீயவர்களுடன் சேர்ந்து தீயசெயல்கள் பலவற்றையும் செய்கிறான். நேற்று எனது மாந்தோப்புள் நுளைந்து பிஞ்சு, பூ, காய் முதலியவற்றைப் பறித்துக் கீழே போட்டுள்ளான். இது நேற்று மட்டும் நடக்கவில்லை தொடர்ந்து பல நாட்களாக நடக்கிறது. முன்பு இது பற்றி நான் உனக்குச் சொல்லியுள்ளேன். நீ அவனைக் கண்டிப்பதாக இல்லை. அறிந்தவை, தெரிந்தவை என்பதற்காகச் சொல்கிறேன். இனிப் பொறிவைக்கப் போகிறேன். பிறகு என்னைக் குறை நினைக்கக் கூடாது”.

ஒட்டகத்திற்கு பெரும் அவமானமாக இருந்தது. எனினும் அது எதுவும் பேசவில்லை. ஒட்டகத்திற் மகன் வந்ததும் ஒட்டகம் சொன்னது, “மகனே, உனது தீய செயல்களால் எனக்குப் பெரும் அவமானமாக உள்ளது. நீ உனது நண்பர்களுடன் சேர்ந்து கரடியின் மாந்தோப்புள் நுளைந்து தோப்பை அழித்துள்ளீர்கள். உனக்கு மாங்காய் ஒத்துவராது. சளியும் முட்டும் இருக்கு. மாங்காய் சாப்பிட்டதால் முன்பு பதினைந்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றாய். தினமும் இரண்டு ஊசி உனக்கு ஏற்றப்பட்டது. அப்படியிருந்தும் மாங்காய்களைக் களவெடுத்து உண்டிருக்கிறாய். முன்புபோலக் காய்ச்சல் வந்தால் என்னால் பராமரிக்க முடியாது”.

“நான் அவர்களுடன் சேர்ந்து சென்றானே தவிர மாங்காயை உண்ணவில்லை” என்றது ஒட்டகத்தின் மகன்.

“திருடுவது போன்ற குற்றச் செயல் திருடனுக்கு உதவுவது. நீ சென்றமையால் கரடி வந்து ஏசிவிட்டுச் செல்கிறது” என்று சொல்லும் போது மகன் பலமாக இருமியது.

“**நீ** மாங்காய் சாப்பிடாவிட்டால் ஏன் இருமுகிறாய். முன்பும் இவ்வாறுதான் இருமிய பின் காய்சச்சல் வந்தது. மகனே ஒவ்வாத உணவு வகைகளை உண்ணக்கூடாது. உண்டால் நோய் உண்டாகும். முன்பு நீ உண்ட மாங்காய் நஞ்சானதால் பெரும் துன்பம் ஏற்பட்டது. ஒவ்வாத உணவுகளை உண்ணக்கூடாது என்று சொல்லியும் உனக்குப் புரியவில்லை. நோயை அனுபவித்தும் புரியாத மோடனாக இருக்கிறாய். பெற்றாரின் சொல்லைக் கேளாத பிள்ளைகள் தீயவர்களாவர். அதனால் உன்னோடு கதைக்க எனக்குப் பிடிக்கவில்லை” என்றது தந்தை ஒட்டகம்.

“**நா**ன் மாங்காய் சாப்பிடவில்லை அப்பா. முன்பு சாப்பிட்டதால் பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். அதனால் சாப்பிடவில்லை” என்றது மகன்.

## 68. நூல் பல கல்



**யா**னைக் குட்டிக்குத் தாத்தா யானை சொன்னது, “பேரா, நீ ஏ.எல். பரீட்சை எடுத்துவிட்டுப் பல்கலைக்கழகத் தெரிவுக்காகக் காத்திருக்கிறாய். இப்போ சில மாதங்கள் நீ எந்தவிதமான வேலைகளும் இன்றி இருக்கப்போகிறாய். காலம் பொன்னானது. ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கக் கூடாது. இவ்வளவு காலமும் நீ விஞ்ஞான பாடங்களை ஓய்வின்றிக் கற்றமையால் நான் சொல்லவேண்டிய சிலவற்றைச் சொல்லவில்லை. பேரா, நான் ஓர் ஆசிரியர். நான் எந்தநேரமும் படிப்பதை நீ கண்டிருப்பாய். நான் மறுநாள்க் கற்பிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வேன். அதன்பின் பயனுள்ள நல்ல புத்தகங்களை வாசிப்பேன். ஆங்கிலப் புத்தகங்களையும் வாசிப்பேன். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்று கற்றவர்கள் சொல்வார்கள்”.

“**அ**தில் என்ன தாத்தா சந்தேகம்?. இப்போ நீங்கள் சொல்லவிரும்பியதைச் சொல்லுங்கள்” என்றது பேரன்.

“**ஓ**ய்வு நேரங்களில் நீயும் நல்ல புத்தகங்களைப் படித்தல் வேண்டும். அவை பிற்காலத்திற்கு உதவும்” என்று தாத்தா சொல்லும்போது பேரன் குறுக்கிட்டுச் சொன்னது,

“தாத்தா, நான் ஏஎல் பரீட்சைக்காகப் படிக்கும் போது ஒரு மாறுதலுக்காக பல்வேறு விதமான புத்தகங்களை வாசிப்பேன். முக்கியமாக நீங்கள் படிக்கும் புத்தகங்களைப் படிப்பேன். பழம்தமிழ் நூல்கள் பல நவீன விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறுகின்றன. திருக்குறள் உலக வேதமாகிவிட்டது. அதைப் படிக்காதவர்கள் அறிவாளிகள் அல்ல. மருந்து என்ற அத்தியாயம் உடலை மருந்துகள் குடிக்காது எப்படிப் பேணுவது என்று மிகமிக ஆழமாகக் கூறுகிறது. திருமந்திரம் கர்பம் உருவாகும் விதம்பற்றியும், நோய்கள் ஏன் வருகின்றன. அதை எவ்வாறு குணப்படுத்துவது என்றெல்லாம் கூறுகிறது. பிறநாட்டவர் இப்போது கண்டுபிடித்தவற்றைத் தமிழ்நூல்கள் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டன. தமிழர் அறிவானவர்கள், மேலானவர்கள் என்பதை நாம் தான் ஏற்கவில்லை”.

**தா**த்தா பேரனை ஆச்சரியத்துடன் பார்த்தார், “இதெல்லாவற்றையும் நீ படித்தாயா? இவற்றைத் தான் படிக்கும்படி கூற நினைத்தேன்” என்றது தாத்தா யானை.

“**தா**த்தா ஔவையார் அணுவைப் பிளக்கலயம் என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டார். திருமூலர் பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது என்று சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறியுள்ளார். ஏன் சென்ற வருடம் நோபல் பரிசு கொடுக்கப்பட்ட விஞ்ஞானி எதைக் கண்டுபிடித்தாரோ, அதைத் திருமூலர் எப்போதோ சொல்லிவிட்டார். இவற்றைப் படித்த பின் பழம்தமிழ் நூல்கள் முழுவதையும் படிக்க வேண்டும் என்று நினைத்துள்ளேன்”. என்று பேரன் கூறியபோது தாத்தா மெய்மறந்து போனார்.

## 69. நெற்பயிர் விளை



**கா**ட்டில் வாழும் மிருகங்கள் அனைத்தையும் வருவித்த சிங்கராசா சொன்னார், “சென்ற வருடம் மழை பொய்த்ததால் நெல்விளைச்சல் குறைந்து விட்டது. அதனால் நெல் விளைவித்த குடும்பங்களே உணவின்றித் தவித்தது உங்களுக்குத் தெரியும். இதற்கு முக்கிய காரணம் குளங்களைப் பேணாமையாகும். அத்துடன் மழைநீர் குளத்துக்கு வரும் வாய்க்கால்கள் புற்களால் நிரப்பிவிட்டன. அதனால் வாரத்தில் ஒருமுறை எல்லோரும் சிரமதானம் செய்து வாய்க்கால்களையும் குளங்களையும் புரனமைக்க வேண்டும். ஐந்து வருடங்களுக்கு முன்பு குளங்களையும் வெள்ளநீர் வரும் வாய்க்கால்களையும் நல்லமுறையில் வைத்திருந்தமையால்

பெய்த சிறிதளவு மழை நீர் சேர்ந்தது. அதனால் வழக்கமாகப் பெய்யும் மழை பொய்த்தபோதும் குளத்தில் இருந்த நீர் விவசாயத்திற்குப் போதுமானதாக இருந்தமையால் உணவுப் பஞ்சம் உண்டாகவில்லை".

**சி**றிய நேரம் ஓய்வெடுத்த சிங்கம் சிறிது நீர் குடித்துவிட்டுப் பேசியது, "இம்முறை பணப் பயிர்களான வெங்காயம், புகையிலை, பருத்தி என்பன செய்வதைத் தடைசெய்துள்ளேன். முழுக்க முழுக்க நெல்லையே விதைக்க வேண்டும். நூறு ஏக்கர் நிலமுடையவர்கள் இரண்டு ஏக்கரில் பணப்பயிர்களைப் பயிரிடலாம். ஐம்பது ஏக்கர் நிலம் உள்ளவை ஒரு ஏக்கரில் பணப்பயிர்களைப் பயிரிடலாம். ஏனையோர் பயிரிடக் கூடாது. இதனை மீறுவோர் தண்டிக்கப்படுவர்" என்றது.

**யா**ரும் எதுவும் பேசவில்லை. பேசவும் முடியாது. அதனால் மௌனமாக எழுந்து சென்றன.

## 70. நேர்பட ஒழுகு



**அ**ந்தப் பாடசாலையின் அதிபரான யானை, க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் கணிதபாட மாணவர்களில் சிலர் மிகவும் மோசமான புள்ளிகள் எடுப்பதால் அவர்களுக்கு மேலதிக வகுப்பு எடுக்குமாறு நரியையும், ஒட்டகத்தையும் கேட்டது.

"**நா**ன் கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள் என்னாலான முழு முயற்சியும் எடுத்து மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்துவேன்" என்றது நரி. அதிபர் அதைப் பாராட்டினார்.

**ஒ**ட்டகம் அதிபர் சொன்னதைக் கேட்டுவிட்டுத் தனது மாணவர்களை அழைத்துச் சொன்னது, "மாணவச் செல்வங்களே, சில மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்தாலும் கணிதபாடம் சித்தியடையாவிட்டால் பயனில்லை. அதனால் என்னோடு ஒத்துழையுங்கள்" என்று கூறி வகுப்பை ஆரம்பித்தது.

**க**.பொ.த சாதாரண வகுப்பு மாணவர்களில் சிலருக்கு தரம் ஐந்தில் உள்ள அறிவுகூட இல்லை. அதனால் ஒட்டகம் சொன்னது, "மாணவர்களே, பின்தங்கிய மாணவர்களுக்குத் தரம் ஐந்தின் கணிதப் புத்தகங்களில் இருந்து கற்பிக்கவுள்ளேன் வெக்கப்படாது என்னுடன் ஒத்துழைத்தால் நீங்கள் பரீட்சையில் சித்தியடைவீர்கள்" என்று கூறிக் கற்பித்தது. இவ்வாறு தரம் ஐந்து முடிய, தரம் ஆறு, அது முடிய தரம் ஏழு இவ்வாறு ஒவ்வொரு வகுப்புப் புத்தகங்களையும் கற்பித்தது.

**ந**ரி ஒழுங்காக வகுப்பு எடுப்பதில்லை. பாடசாலைக்கு வந்து தனது மாணவர்களையும் சேர்த்துக் கற்பிக்கும்மாறு கூறிவிட்டுச் சென்றுவிடும். பல நாட்கள் வகுப்பிற்கு வராது.

**பி**ன்தங்கிய மாணவர்கள் நல்ல முறையில் கற்றனர். நரி அதிபருக்குச் சொல்லும், "பரீட்சை நெருங்குகிறது, ஒட்டகம் தரம் ஐந்து, ஆறுக்கான பாடநூல்களைக் கற்பிக்கிறது. இதனால் என்ன பயன். சொன்னாலும் கேட்பதாக இல்லை".

"**ஒ**ட்டகம் எனக்குச் சொல்லிவிட்டுத் தான் கற்பிக்கின்றது. தரம் ஐந்தின் கணிதபாடம் தெரியாதவனுக்கு தரம் பதினொன்றின் கணக்கை எப்படி விளங்கப்படுத்துவது?. எழுத்துத் தெரியாத மாணவனுக்குக் கட்டுரை எழுதக் கற்பிக்கலாமா? அவர்கள் ஓஎல் சித்தியடையாவிட்டாலும் சாதாரணமாக கணக்கறிவைப் பெறட்டும். நீர் வகுப்புத்தொடங்கிய அன்று ஏதோவெல்லாம் சொன்னீர் இப்போ வகுப்புப்பக்கமே செல்வதில்லை" என்று அதிபர் கூற எதுவும் பேசாது மெல்லல் சென்றது நரி.

**ஓ**எல் பரீட்சை முடிவடைந்து பரீட்சை முடிவுகள் வெளியாகின. ஒட்டகம் கற்பித்த பின்தங்கிய மாணவர்களில் பலர் கணிதபாடத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருந்தனர். அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோரும் ஒட்டகத்தைப் பாராட்டினர். அதிபர் சொன்னார், "சொல்லும், செயலும் ஒன்றாக இருந்தால்தான் ஒரு இலக்கை அடையலாம். பின்தங்கிய மாணவர்களுக்கு ஒட்டகம் கற்பித்தவிதம் போற்றத்தக்கது. அதனால் அதற்குப் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப் பெற்றார் விரும்புகின்றனர். இப்போ அந்நிகழ்வு இடம்பெறும்" என்றபோது கரகோசம் வானைப் பிளந்தது.

## 71. நைவினை நணுகேல்



**ந**ரி யானையின் நண்பன். ஆனால் யானைக்கு நரிமீது நம்பிக்கை இல்லை. எந்தநாளும் வந்து பணப்பற்றாக்குறை பற்றியே கதைக்கும். எந்தவிதமான உதவியைச் செய்தாலும், அது மறந்துவிடும். அத்துடன் யானையைப் பற்றிப் பிறரிடம் குறையும் கூறும். அதனால் யானையின் பெற்றோருக்கும், யானையின் மனைவிக்கும் அதைப் பிடிப்பதில்லை.

**அ**ன்று மிகந்த சோகத்துடன் யானையின் வீட்டுக்கு வந்த நரி சொன்னது, "நண்பா, மகனுக்குச் சுகமில்லை. உள்ளுர் வைத்தியரிடம் மருந்தெடுத்தும் சுகம்வரவில்லை. அதனால் பட்டணத்தில் உள்ள வைத்தியரிடம் கொண்டுசென்று காட்டவேண்டும். அதற்குப் பணமில்லை. நீதான் எனக்கு உதவி செய்தல் வேண்டும்".

**ந**ரி எப்பொழுதும் பொய் சொல்லித்தான் பணம் வாங்கும். வாங்கிய பணத்தைத் திரும்பிக் கொடுக்கமாட்டாது. நரியின் நிலை பரிதாபமாக இருந்தது. எனினும் பணங்கொடுத்தால் மனைவியும், பெற்றோரும் ஏசுவர். அதனால், "இப்போது என்னிடம் பணம் இல்லை. நீ போ நான் வீட்டுக்கு வருகிறேன்" என்றது யானை.

**ந**ரி சென்றதும் யானையின் மனைவி வந்து சொன்னது, "நரி ஒருபோதும் உள்ளதைப் பேசியதில்லை. ஆனால் இன்று பேசியதைப் பார்த்தால் சொன்னது உண்மைபோலத் தெரிகிறது. நரிக்கு யாரும் பணங்கொடுக்கமாட்டார்கள். அதன்நடத்தை அப்படி. தற்செயலாக அது சொன்னது உண்மையாக இருந்தால் அதன் மகனுக்கு ஏற்பட்ட ஆபத்துக்கு நாம் காரணியாகிவிடுவோம். நரி எப்படியானதாக இருந்தாலும் அதன் மனைவி நல்லவள். அதனால் ஒருமுறை அதன் வீட்டுக்குச் சென்று நிலைமையை அறிந்து பணத்தைக் கொடுத்துவிட்டு வாருங்கள்".

**யா**னை நரியின் வீட்டுக்குச் சென்றபோது நரியின் மகன் காய்ச்சலால் முனகிக் கொண்டிருந்தது. அதைக் கூட்டிச்சென்று மருந்து எடுத்துக்கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தபோது யானையின் தாய் ஏசியது, "பிள்ளையைப் பெற்றால் கவனமாக வளர்க்க

வேண்டும். நோய்நொடி வருமென்று பணத்தைச் சேமித்து வைத்திருத்தல் வேண்டும்” என்ற போது யானை சொன்னது, “அம்மா, எல்லோரும் ஒரு மாதிரி இருக்கமாட்டார்கள். தற்செயலாக நரிக்குட்டிக்கு ஏதாவது நடந்தால் அதனால் எமக்குக் குற்ற உணர்வு உண்டாகும். பணத்திற்கு ஆசைப்பட்டு பிறர் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? நாம் உதவி செய்பவர் உதவாவிட்டாலும் அதைத் தெரிந்துவைத்திருக்கின்ற கடவுள் உதவுவார். பேசாமல் இருங்கள்” அதன்பின் தாய் எதுவும் பேசவில்லை.

## 72. நொய்ய உரையேல்



**யா**னை ஒரு பெரிய பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுகிறது. அது அன்பானது. அத்துடன் கண்டிப்பு மிகுந்தது. எல்லோரையும் அன்புடன் நேசிப்பது. பாராபட்சம் காட்டாதது. குரங்கு அப்பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர். நல்லமுறையில் கற்பிப்பது. ஆனால் முற்கோபங் கொண்டு ஆராயாது கதைத்துவிடும். பெற்றோருடனும் அது அடிக்கடி முரண்படும். ஒருநாள் பன்றிவந்து யானைக்குச் சொன்னது, “அதிபர் ஐயா, நீங்கள் நல்லவர். அன்பானவர். எல்லா மாணவர்களையும் விரும்புபவர். நீதி நியாயமாக நடப்பவர். ஆனால் விஞ்ஞான ஆசிரியர் அப்படியல்ல. அவர் ஆராயாது கதைத்து விடுகிறார். எனது மகன் கொஞ்சம் குளப்படிக்காரன்தான். அது உங்களுக்குத் தெரியும். ஆனால் விஞ்ஞான ஆசிரியர் எனது மகனைக் கண்டபடி வகுப்பில் மாணவர்களுக்கு முன்னால் பேசி அவமதித்துள்ளார். அதனால் அவன் பாடசாலைக்குவர மறுக்கிறான். வேறு பாடசாலையில் சேர்த்துவிடுமாறு கூறுகிறான். இது நல்ல பாடசாலை. எமது குலத்தவர் கடந்த நூறு வருடங்களாக இங்குதான் படித்து வருகின்றனர். இவற்றைச் சொல்லியும் அவன் கேட்கிறானில்லை. அதனால் நீங்கள் தான் அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும்”.

**யா**னைக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. பன்றியல்ல பல பெற்றோர்கள் விஞ்ஞான ஆசிரியரைப் பற்றிக் குறையாகக் கூறிக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தனர். கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் விசாரனைக்காக வரவுள்ளதாக அறிவித்திருந்தனர்.

**அ**தனால் யானை குரங்கை அழைத்து விசாரணை சம்பந்தமான கடிதத்தைக் கொடுத்தது. அதைக் குரங்கு எதிர்பார்க்கவில்லை. விசாரணைக்கு வந்தால் பெற்றோர் எல்லோரும் ஒன்றுகூடி என்னை இடமாற்றம் செய்யுமாறு கோருவர். ஆசிரியர்கள் பலரும் இடமாற்றம் செய்யும்படி கூறுவர் என்று நினைத்தது.

"**எ**ன்னால் உமது இடமாற்றத்தை நிறுத்தமுடியும். அதற்கு நீர் முற்றாக மாற வேண்டும். விசாரிப்பவர்கள் உயர் அதிகாரிகள் அவர்கள் எழுதுவது தலையெழுத்துக்கொப்பானது. அவர்கள் உங்களைப் பற்றிய உண்மைகளை எழுதிவிட்டால் உமது எதிர்காலம் சூனியமாகிவிடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மாணவர்களுடனும், பெற்றோருடனும், ஆசிரியர்களுடனும் அன்பாகவும், பண்பாகவும் பேசுதல் வேண்டும். பிறரைப் புண்படுத்தும் செயல்களையோ, சொற்களையோ பேசப்படாது. நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் இங்கு கற்பிக்கின்றனர். நீர் ஒருவர்தான் பிறரை இழிவுபடுத்தும் சொற்களைப் பேசுகிறீர் என்றபோது குரங்கு சொன்னது, "எனது மனைவிக்கும், எனது தாயாருக்கும் இடையே ஓயாத சண்டை. அதனால் தான் எனது மனம் எதைப்பேசுவது என்று தெரியாமல் பேசுகிறது" என்றபோது யானை சொன்னது, "வீட்டுப்பிரச்சினைகளை வீட்டில் விட்டுவிடல் வேண்டும். பாடசாலைக்கு வந்தால் வீட்டை மறந்து ஒரு புதிய உலகிற்கு வந்திருக்கிறேன் என்று எண்ண வேண்டும். வீட்டுப் பிரச்சினைகளை பாடசாலையில் நினைத்தால் நிம்மதி, மகிழ்ச்சி, அன்பு யாவும் மனதைவிட்டு நீங்க வன்முறைதான் தலைதூக்கும்".

"**உ**ண்மைதான் ஐயா. என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை" குரங்கு அழுதது. அதைப்பார்க்க யானைக்கு வேதனையாக இருந்தது.

"**நீ**ர் உமது மனைவியோடு தனிக்குடித்தனம் செல்லும்".

"**அ**வ்வாறு தான் நானும் நினைக்கிறேன். இனி நான் முன்புபோல நடந்துகொள்ளமாட்டேன். எனக்கு உதவி செய்யுங்கள்" என்று இரந்தது குரங்கு.

"**ச**ரி, நான் விசாரணைக்கு வருவோருக்கு உம்மை இம்முறை மன்னிக்குமாறு கேட்கிறேன். நீர் இனி மிகவும் அவதானமாக நடக்க வேண்டும்" என்றது யானை.

"**அ**திபர் சொன்னால் அவர்கள் கேட்பார்கள்" என்ற நம்பிக்கையுடன் சென்றது குரங்கு.

## 73. நோய்க்கு இடங்கொடேல்



**மு**திய யானையும், முதிய ஒட்டகமும் உற்சாகமாக நடந்து நூலகத்திற்கு வந்து, நூலகரிடம் தமக்கு வேண்டிய நூல்களின் பெயரைச் சொல்ல அவர் அவை கேட்ட நூல்களைக் கொடுக்க அவை வாங்கிக் கொண்டு சென்று விளையாட்டு மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்தன. பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். எருமைக்கன்று ஒன்று சோர்வாக அமர்ந்திருந்தது. அதைக் கண்ட யானை, "எல்லோரும் விளையாடுகிறார்கள். நீ போய் விளையாடாது ஏன் சோர்ந்து அமர்ந்திருக்கிறாய்...?" என்று கேட்டது.

"**எ**னக்குச் சுகமில்லைத் தாத்தா. தலைவலிக்கிறது, கைகால்கள் சோர்கின்ற, காய்ச்சல் குணமாக இருக்கிறது" என்றது எருமைக் கன்று.

**யா**னை அதன் அருகே சென்று அதன் உடலைத் தொட்டுப்பார்த்தது. பின், "பேரா, உனக்கு வருத்தம் இருப்பதாகத் தெரியவில்லை. மனம் சோர்வடைந்தால் உடல் இயங்காது. உனது முகத்தைப் பார்த்தால் நீ பொய் சொல்வது தெரிகிறது" என்றது யானை.

**எ**ருமைக்கன்றுக்குப் பயமாக இருந்தது, "பயப்படாமல் என்னென்று சொல்".

"**இ**ன்று நான் பாடசாலைக்குப் போகவில்லை. வீட்டாருக்கு அது தெரிந்து விட்டது. அதனால் வீட்டுக்குச் செல்லப் பயமாக இருக்கிறது" என்றது எருமைக்கன்று.

"**பே**ரா, என்னைப்பார் எனக்கு எண்பது வயது. இப்பவும் படிக்கிறேன். படிப்பது நல்லதுதானே. படித்தால் நல்ல உத்தியோகம் பார்க்கலாம்" என்றது யானை. எருமைக்கன்று எதுவும் பேசாததால் யானை சொன்னது, "பேரா, பகிடிக்கும் பொய் சொல்லல் ஆகாது. நீ

பாடசாலைக்கு நோய்காரணமாகச் செல்லவில்லை என்று பொய் சொன்னாய். அது தவறு. நோய்வந்திருந்தாலும் அதைப் பெரிதாக எண்ணாது மருந்தைக் குடித்துவிட்டு தனது வேலைகளைச் செய்தல் வேண்டும். நோய் என்று படுத்தால் நோய் அதிகரிக்குமே தவிரக் குறையாது. எனக்கு எந்த நோயும் இல்லை என்ற நினைவோடு வாழவேண்டும். அளவுக்கதிகமாக உண்ணக்கூடாது. குறைவாகவும் உண்ணக்கூடாது. பசிக்காமலும் உண்ணக்கூடாது. இப்படி வாழ்ந்தால் நோய் ஒருபோதும் உடலைத் தாக்காது. நோய்க்கு மருந்தாக உணவுவகைகளை உண்ண வேண்டும். காய்கறிகள், பழவகைகள், இலை குழைகளை உண்பதன் மூலம் நோயைத் தடுக்கலாம். தினமும் நான் கூறியவற்றைச் சாப்பிடு. உடலில் தைரியம் பிறக்கும். தைரியமானவர்கள் சுறு சுறுப்பானவர்களாவர். அவர்களுக்குக் கல்வி எளிதில் புரியும். கல்வியில் ஆசை உண்டாகும்" என்றது யானை.

## 74. பழிப்பன பகரேல்



ஒட்டகம் யானைக்கு மிக்க வேதனையுடன் சொன்னது, "நண்பா, நரியைப்போல ஒரு நம்பிக்கைத் துரோகியை நான் இதுவரை சந்திக்கவேயில்லை. தேவையேற்படும் போதெல்லாம் பலபொய்களைச் சொல்லி அழுது குளறிக்காசு வாங்கும், பொருட்களை வாங்கும். வாங்கிய உடன் மறந்துவிடும். மறந்தாலும் பரவாயில்லை எமது எதிரிகளிடம் சென்று இல்லாத பொல்லாதவற்றையெல்லாம் கூறும். எனது மகனிடம் நரி பல உதவிகளைப் பெற்றுள்ளது. எனது சகோதருடன் நான் கடந்த இருபத்தைந்து வருடங்களாகப் பேசுவதில்லை. ஒரு காணிப்பிரச்சினையினால் அவர்கள் எம்மை மதிக்காது இகழக்கூடிய வகையில் இகழ்ந்தவர்கள். கேலியாகப் பேசியவர்கள். இல்லாதவற்றையெல்லாம் பேசியவர்கள். அதனால் அவர்களுடன் சீவியத்தில் கொண்டாடுவதில்லை என்று உறவைத்துண்டித்து விட்டேன். எனது மகன் பொறியியலாயர். அவன் வேலை செய்யும் அலுவலகத்தில் எனது சகோதரியின் மகளும் வேலை செய்கிறாள். ஒரு கட்டிடத்தைப் பார்ப்பதற்காக மகனும் சில அதிகாரிகளும் சென்றனர். அவர்களுடன் எனது சகோதரியின் மகளும் சென்றவள். இதை அறிந்த நரி எனது மகனைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசியுள்ளது. அதனால் எனது சகோதரியின் கணவன் தன் மகளின் மீது எனது மகனுக்கு காதல் உள்ளதாக கூறுகிறார்" பெருமூச்சுவிட்டது ஒட்டகம்.

“**அ**தை அறிந்த எனது மகன் வேறோர் இடத்தில் திருமணம் பேசச் சொன்னவன். இப்போது திருமணம் முற்றாகிவிட்டது. இதை அறிந்த நரி பெண்வீட்டாருக்குத் தவறாகக் கூறியுள்ளது. உதை அடித்துமுறிக்காமல் விடமாட்டன். துரோகி, வஞ்சகன், பலரிடம் பிச்சை எடுப்பவன்” என்று ஒட்டகம் கூறியபோது யானை,

“**ந**ண்பா, ஊரவர்கள் பழிக்கக்கூடியதாகக் கதைக்காதே. இப்போது நரிக்கும், உனக்கும் என்ன வித்தியாசம். நீ சொன்னவற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று முதலில் ஆராய்ந்து முடிவுசெய். பின் அது உண்மையானால் மறந்துவிடு. பொய் என்றால் பேசவே தேவையில்லை. ஒரு தீயவன் வன்சொற்களைப் பேசினால் அதைப்பற்றிப் பேசத்தேவையில்லை. ஏனென்றால் நாம் சொல்பவை எதுவும் அவனுக்கு விளங்காது. நல்லவர்கள் பேசமாட்டார்கள். நீ நல்லவன், பண்ணானவன். அதனால் தீய சொற்களைத் தயவு செய்து பேசாதே. பேசினால் நல்லவர்கள் பழிப்பர்” என்றது யானை.

“**உ**ண்மைதான். ஒருவனைப் பழிப்பதென்றாலும் நல்ல சொற்களால்தான் பழிக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்து விட்டேன்” என்றது ஒட்டகம்.

## 75. பாம்பொடு பழகேல்



**அ**திகாலை நேரம் மான்குட்டியொன்று மிக்க குதூகலத்துடன் வந்து, “அம்மா, காட்டுக்குள்ச் சில மனிதர்கள் வந்துள்ளனர். ஓர் வயது முதிர்ந்த மனிதனைக் கண்டேன். அவரின் தோற்றம் என்னை மிகவும் கவர்ந்தது. அவர் தூரத்தில் நின்று கொண்டு என்னைத் தன்னருகே வரும்படி அழைத்தார். அவரின் கையில் வித்தியாசமாக குழைகள் இருப்பதைக் கண்டேன். அவரின் அருகில் சென்று கதைக்க விரும்பினேன். ஆனால் எங்கிருந்தோ வந்த பன்றி என்னைப் போகக் கூடாதென்று வெருட்டி அனுப்பிவிட்டது, “நான் நாளைக்கு வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பன்றிக்கு ஏன் என்மீது பொறாமை” என்று கேட்டது.

**மா**ன் அதிர்ச்சியுடன் மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டு விட்டுச் சொன்னது, "நல்லகாலம் உனக்கிருந்தமையால் பிழைத்தாய். பன்றி தடுக்காவிட்டால் நீ இந்நேரம் மனிதர்களின் வயிற்றுள்த்தான் இருப்பாய். இப்படித்தான் ஒருமுறை வேட்டையாட வந்த மனிதர்கள் எனது சகோதரனை ஆசைவார்த்தைகள் கூறிக்கொன்றனர்".

"**அ**ப்படியா அம்மா? எனக்கு மனிதர்களைப் பற்றித் தெரியாது" என்றது மான்குட்டி.

"**அ**னேகமான மனிதர்களின் நாக்கில் நாகபாம்பின் விஷத்தை விட மோசமான நஞ்சு உள்ளது. நாகபாம்பு அழகானது என்று அதைப் பிடிக்க முடியுமா…? நாகபாம்பை விட மோசமானவர்கள் மனிதர்கள். தமது காரியம் பார்ப்பதற்காக எதையும் மிக்க துணிவுடன் செய்வார்கள். பின் விளைவுகளை எதிர்பார்க்க மாட்டார்கள். நன்றியையும் பாராட்டமாட்டார்கள். அவர்கள் தமது தேவைக்காக ஆடு, மாடு, பன்றி, கோழி போன்றவற்றை வளர்ப்பார்கள். மிக்க அன்பு காட்டுவார்கள். வளர்க்கும் மிருகக்களும் அவர்கள் காட்டும் அன்பு உண்மையானது என்று எண்ணி மகிழும். அவை பயன்தராத போது அவற்றைக் கசாப்புக் கடைக்காரர்களுக்கு விற்றுவிடுவார்கள்" என்று தாய் கூறியபோது குட்டி கேட்டது.

"**ந**ல்ல மனிதர்கள் இல்லையா அம்மா? ஆயிரத்தில் ஒருவர், இலட்சத்தில் சிலர் இருப்பார்கள். அவர்களும் சிலசமயகளில் மாறிவிடுவார்கள். நீ பார்த்த மனிதன் வீபூதி அணிந்து சந்தனப் பொட்டும் வைத்திருப்பானே".

"**ஓ**ம் அம்மா, ஓம் அம்மா, வீபூதியும் சந்தனமும் அணிந்திருந்தார்".

"**இ**வர்களெல்லாம் வேடதாரிகள். கடவுள் உயிர்களை வருத்தக்கூடாது, கொல்லக்கூடாது என்று சொல்லியிருப்பதாக மேடைகளில் பிரசங்கம் செய்வார்கள். கோவில் திருவிழாவின் போது விரதம் பிடிப்பார்கள். விரதம் முடிய ஆடு, மாடுகளை வெட்டி உண்பர். மதுவும் குடிப்பர். அதனால் மனிதர்களின் எந்த நடிப்பையும் கண்டு ஏமாந்து விடாதே. அவர்கள் பழகும்போது உள்நோக்கம் ஒன்று இருக்கும். அது நிறைவேறிவிட்டால் பின் வேறொருவரிடம் வேறு காரியத்திற்காக உறவாடச் சென்று விடுவார்கள். இது பெரும்பான்மையான மனிதர்களின் குணங்களாகும்".

**அ**தைக் கேட்க மான்குட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது, "பெற்றோர் அவ்வாறு நடக்கக் கூடாதென்று சொல்லமாட்டார்களா…?"

"**பெ**ற்றோரும் சேர்ந்து பிள்ளைகளின் செயல்களை ஊக்குவிப்பர். சில பெற்றோர் சொன்னாலும் பிள்ளைகள் கேட்டகமாட்டார்கள். பெற்றோர் பிள்ளைகளை ஏமாற்றுவதும்,

பிள்ளைகள் பெற்றோரை ஏமாற்றுவதும் மனிதர்களின் இயல்பான தன்மையாகும். அதனால் நீ எக்காரணம் கொண்டும் மனிதர்களின் வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாறக்கூடாது".

"**நா**ன் மிகவும் கவனமாக இருப்பேன்" என்றது குட்டி.

## 76. பிழை படச் சொல்லேல்



**பு**றா வந்து யானைக்குச் சொன்னது, "பெரியவரே, காட்டுக்குள் வேட்டைக்காரர்கள் சிலர் நுளைந்துள்ளனர். எம்மவரை அவதானமாக இருக்கச் சொல்லுங்கள். நரி வேட்டைக்காரர்களுக்கு அருகில் நின்றது. கடற் பகுதியான காட்டின் மேற்குப் பகுதியால் தான் அவர்கள் வருகிறார்கள். நான் மர உச்சியில் இருந்தமையால் சரியாகக் கணிக்க முடியவில்லை. உங்களுக்கு அறிவித்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன். கிளியையும், கொக்கையும் கூட்டிச் செல்கிறேன்".

"**ச**ரி, சரி விரைவாகச் சென்று பார்த்து வா" என்று கூறிவிட்டுப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டது யானை. புறா சென்ற சிறிது நேரத்தில் நரி யானையிடம் வந்து சொன்னது, "காட்டில் எல்லோரும் பரபரப்புடன் காணப்படுகின்றனர். என்ன நடந்ததென்று தெரியவில்லை".

"**அ**வர்கள் எல்லாவற்றிற்கும் பரபரப்படைவர். நீபோய் உன்னுடைய வேலையைப்பார்" என்றது யானை.

**ந**ரி சென்றதும் அது மைனாவை அழைத்துச் சொன்னது, "நரி வேட்டைக்காரருடன் தனது லாபங்கருதிப் பேசியிருக்கும். ஆனால் அதைப்பற்றி அது எதுவும் சொல்லவில்லை. அதனால் அதன்பின்னே சென்று அதன் நடவடிக்கைகயை அவதானித்து எனக்குத் தகவல் அனுப்பு" என்றது.

**மை**னா தனது நண்பர்களுடன் நரியின் பின்னால் சென்றது. நரி பதுங்கிப் பதுங்கிச் சென்று வேட்டைக்காரர் இருக்குமிடத்திற்கு வந்தது. அதை மைனா யானைக்குச் சொல்ல,

யானை பாம்புகளை அழைத்து அவைகளைக் காட்டுப்பிள்ளையார் கோவில் பக்கம் செல்லச் சொன்னது.

**பா**ம்புகள் சென்றபின் நரி யானையிடம் வந்தது, “காட்டுக்குள் வேட்டைக்காரர் நுளைந்துள்ளதாக எருமை சொல்கிறது. அதன் பேச்சை நம்ம முடியாது” என்றது யானை.

“**நீ**ங்கள் சொல்வது சரி. எருமைக்குப் புத்தி குறைவு. அதனால் அது சொல்வதை ஏற்கமுடியாது. நான் காட்டுப்பிள்ளையார் கோவில் பக்கம் சென்று பார்த்துவிட்டு வருகிறேன்” என்று புறப்பட்டது நரி.

**ந**ரிக்காக காத்திருந்த நாய் நரியைக் கண்டதும், “நண்பா, வேட்டைக்காரரைக் காட்டுப்பிள்ளையார் கோவிலடிக்கு வரச் சொன்னாயாம். ஏன் அப்படிச் சொன்னாய்”.

“**இ**ன்று வெள்ளிக்கிழமை. காட்டுப்பிள்ளையாரைக் கும்பிட எல்லோரும் வருவினை. வேட்டைக்காரனுக்கு மயில் வேண்டுமாம். மயிலைக் கொன்று அதன் தசையால் காய்ச்சப்படும் எண்ணெய் முறிவுதறிவுகளுக்குப் போட்டால் உடனே சுகமாகுமாம். அதுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரலாம் என்றான் அதனால் தான் அங்கு வரச்சொன்னேன்” என்றது நரி.

**கா**ட்டுப்பிள்ளையாரின் மேல் ஏறி ஆடிக்கொண்டிருந்தது ஒரு நாகபாம்பு. பின் அது இறங்கி கோவிலுக்கு முன்பாக உள்ள பற்றைக் காட்டுள்ச் சென்றது. நரி அங்கே வேட்டைக்காரர்களுக்காக காத்திருந்தது. நாகபாம்பு சத்தம் செய்யாது மெதுவாகச் சென்று நரியின் மீது ஏறி அதன் கழுத்தைச் சுற்றியது. நரி பயந்துபோனது, “நண்பா, என்னைத் தீண்டப் போகிறாயா…?” எனக் கேட்டது.

“**து**ரோகி, தகவல்களைத் தவறாகச் சொல்லி எம்மினத்தை அழிக்கப் பார்க்கிறாயா? உன்போன்ற துரோகிகள் வாழக்கூடாது” என்றது.

**ந**ரி அழுதது. கும்பிட்டது. மன்றாடியது, “இனிமேல் நான் தவறாகப் பேசி மற்றவர்களுக்குத் துன்பத்தை உண்டு பண்ணமாட்டேன். என்னை விட்டு விடு” என்று மன்றாடியதால் நாகபாம்பு அதை விட்டது. ஏனைய பாம்புகள் வேட்டைக்காரர் வரும் வழியில் நின்று சீறின. சில படமெடுத்து ஆடின. அதைக்கண்ட வேட்டைக்காரர் பயந்து ஓடிவிட்டனர். யானையும் ஏனைய மிருகங்களும் பாம்புகளைப் பாராட்டின. நரியை எச்சரித்தன.

## 77. பீடு பெற நில்



முயல்குட்டி சோர்வுடன் வந்து தாய்க்குச் சொன்னது, “அம்மா, மாவட்டமட்டப் பேச்சுப்போட்டிக்கு என்னைத் தெரிவு செய்திருக்கின்றனர். எமது பாடசாலை கிராமத்தில் உள்ள மிகச் சிறிய பாடசாலை. இருநூற்றுக்கும் குறைவான ஏழை மாணவர்கள் தான் இங்கு படிக்கின்றனர். போட்டியென்றால் பெரிய பெரிய பாடசாலைகளில் படிக்கும் பெரிய பெரிய உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் பேச்சுப்போட்டிக்கு வருவார்கள். அவர்களை வெல்வது கஷ்டம்”.

“மகனே, ஒருவர் ஒரு செயலில் வெற்றியடைவேன் என்று உறுதியாக நின்றாரேயானால் அவரை வெல்ல முடியாது. உனது ஆசிரியர் நீ நல்ல குரல்வளமுள்வன் என்றும், பேசக்கூடிய ஆற்றல் உள்ளவன் என்றும் சொல்கிறார். அத்துடன் அவன் ஆயத்தப்படுத்தினால் பேச்சில் வல்ல அறிஞர்களை வரவழைத்து எப்படிப் பேசுவது என்று சொல்லிக் கொடுப்பதாகவும் சொல்கிறார். மகனே எல்லா உயிர்களுக்கும் பிறப்பு என்பது ஒரேதன்மையானது. வாழ்வில் உயர்வு தாழ்வு என்பது அவரவது ஊக்கத்தைப் பொறுத்தது. பெரிய பாடசாலைகளில் கற்றாலும் பேச்சு வன்மை இல்லாதவர்களால் பேச முடியாது. பேச்சு வன்மை என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட கொடை. அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. உனக்குக் கிடைத்துள்ளது. அதை நல்ல முறையில் பயன்படுத்தாவிட்டால் கடவுள் கோவிப்பார்”.

மகன் எதுவும் பேசவில்லை. அதனால் தாய் சொன்னது, “மகனே, ஒருவர் உடையவர் என்று பிறர் சொன்னால் அது ஊக்கமுடையவர் என்றே கொள்ளல் வேண்டும். ஊக்கமுள்ளவர்கள் எதை இழந்தாலும் அதைத் தமது ஊக்கத்தால் வெற்று விடுவர். ஒருவரினது ஊக்கம் எவ்வளவு உயர்ந்ததோ அவ்வளவிற்கு வாழ்வும் உயரும்” என்று தாய் கூறியபோது முயல் குட்டி கேட்டது, “ஊக்கமிருந்தால் எல்லோரையும் வெல்லலாம் என்றால் நான் ஊக்கத்துடன் பேசுகிறேன்”.

“மகனே நீ ஊக்கமாகச் செயற்படு. ஆசிரியர்கள் உனக்கு உதவி செய்வர் பயப்படாதே”.

**ஒ**ருமாதம் கழிந்தது முயற்குட்டி பேச்சுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. அதந்த மகிழ்ச்சியில் தான் பெருமை பெறவேண்டும் என்று நினைத்துச் செயற்பட்டது. அதனால் அது நாடு தழுவிய பேச்சுப் போட்டியிலும் முதலிடம் பெற்றது.

## 78. புகழ்தாரைப் போற்றி வாழ்



**யா**னை ஒரு சிறந்த எழுத்தாளர். நல்லொழுக்க நூல்கள் பலவற்றை வெளியிட்டது. இருந்தபோதும் அது வெளியீட்டுவிழா வைப்பதில்லை. பிரமுகர்களை அழைத்து மாலை சூடி பொன்னாடை போர்த்தி நூல் வெளியீட்டு விழாக்களோ விமர்சன அரங்குகளோ வைப்பதில்லை.

**யா**னையின் நண்பனான குதிரை அடிக்கடி ஒரு விழா வைக்கும்படி யானையைக் கேட்கும். யானை அதற்கு ஒப்புக் கொள்வதில்லை. ஒருநாள் குதிரை சொன்னது, “நீ பல நல்ல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளாய். சங்க காலத்தில் இருந்து இன்றுவரை புலவர்கள் நூலை எழுதி வெளியிடும்போது பிரமுகர்களை அழைத்துள்ளனர். அவர்களைச் சிறப்பாக அழைக்காவிட்டால் விமர்சனம் கூட எழுதமாட்டார்கள். உன்னைப் பழிவாங்குவதற்காகத் தகுதியில்லாத நூல்களுக்குப் பரிசும், விருதும் கொடுப்பார்கள் இது உனக்குத் தெரியாதா?”

“**எ**னக்கு எந்த விருதும் தேவையில்லை. பரிசும் தேவையில்லை. சங்க காலம் முதல் பரிசும் விருதும் கொடுத்த எத்தனை நூல்கள் இன்றுவரை உயிரோடு இருக்கின்றன. அரசர்கள் மதியாத புலவர்களின் நூல்கள் தான் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழிந்தும் மக்கள் விரும்பிப் படிக்கின்றனர். அதுபோல எனது நூல்களும் வாழும்” என்றது யானை, “உனக்குச் சொல்வதால் பயனில்லை” என்று கூறிவிட்டுக் குதிரை சென்றுவிட்டது.

**அ**ன்று காலை மான் ஒன்று யானையின் வீட்டுக்கு வந்தது. யானை அதை அன்போடு வரவேற்றபோதும் வந்தவர் யார் என்று அதற்குத் தெரியவில்லை.

“**ஐ**யா, நான் அயலூரைச் சேர்ந்த ஒரு பட்டதாரி, உங்களது நூல்கள் யாவற்றையும் தவாறது வாசிப்பேன். விமர்சனம் செய்வேன். அவற்றைப் பற்றி விமர்சனம் எழுதினால் பத்திரைகள் பிரசுரிப்பதில்லை. தொலைக்காட்சிகளும் மக்களுக்குப் பயன்படாத நூல்களைத் தான் உயர்வாகப் பேசுகின்றன. அதனால் மனம் வெறுத்துவிட்டது. உங்களது அருமையான நூல்களை எமது ஊரவர்களும், மாணவர்களும், அறிஞர்களும் விரும்பிப் படிக்கின்றனர். அதனால் எமது ஊரில் ஒரு விமர்சன விழா வைக்க விரும்புகிறேன். தாங்கள் வரவேண்டும். அத்துடன் அழைக்க வேண்டிய அறிஞர்கள் யார் யார் என்று நீங்கள் சொல்ல வேண்டும்” என்றது மான்.

“**மி**க்க மகிழ்ச்சி பிரமுகர்கள், அறிஞர்கள் தேவையில்லை. அவர்கள் வந்தால் தம்மைப்பற்றியும், ஏனைய பிரமுகர்களைப் பற்றியும்தான் பேசுவர். நூலை வாசிக்கமாட்டார்கள். உண்மையாக விமர்சனம் செய்யவும்மாட்டார்கள். அதனால் உங்கள் ஊரில் உள்ளவர்களைப் பேசவையுங்கள். அவர்கள் எனது நூல்களை வாசித்தமையால் எதையாவது பேசுவர்” என்றது யானை.

**யா**னை விரும்பியது போல ஊர்மக்களுடன் விழா சிறப்பாக நடைபெற்றது. அவர்கள் பிரமுகர்களை விடச் சிறப்பாகப் பேசினர்.

**வி**ழாவின் இறுதியில் நன்றியுரை கூறிய யானை, “அன்பானவர்களே, மிகமிக மகிழ்வாக இருக்கிறேன். உங்களது பேச்சு என்னை உற்சாகப்படுத்தியுள்ளது. நீங்கள் வறியவர்களாக இருந்தாலும் இலக்கிய ரசணை உள்ளவர்கள். அதனால் உங்கள் பாடசாலையை அபிவிருத்தி செய்ய ஐந்து இலட்சம் ரூபா தருகிறேன். அத்துடன் உங்கள் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதால் நாளை முதல் நான் உங்களுக்குப் பாடங் கற்பிக்கிறேன். எனக்குப் பணம், பொருள் எதுவும் வேண்டாம்” என்றது கரகோசம் வானைப் பிளந்தது.

## 79. பூமி திருத்தி உண்



**ஒ**ட்டகத்தின் வீட்டுக்குப் பின் பக்கத்தில் கொஞ்ச நிலம் இருந்தது. அதைக் கவனிக்காமையால் அதில் செடி, கொடிகள் முளைத்திருந்தன. அடிக்கடி ஒட்டகத்தின் மனைவி “இதைத் துப்பரவு செய்யுங்கோ. பாம்பு பூச்சியிருந்தாலும்

தெரியாது. பிள்ளைகள் அடிக்கடி பின்பக்கம் சென்று விளையாடுவார்கள். அதைத் துப்பரவு செய்தால் எமக்குத் தேவையான உணவுகளை உற்பத்தி செய்யலாம்" என்று சொன்னபோதும் யாரும் கேட்பதில்லை.

**அ**ன்று பாடசாலை விட்டதும் வீட்டுக்கு வந்த ஒட்டகத்தின் மகன் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு பிற்பக்கம் சென்றது. மகன் ஏன் மண்வெட்டியுடன் செல்கிறான் என்று நினைத்த தந்தை அதைப் பார்க்கச் சென்றது. பின்னால் தாயும் சென்றது. அதன் பின் அதன் சகோதரர்களும் சென்றனர்.

"**அ**ப்பா, இன்று பூமித். தினம் பாடசாலைக்கு வந்த விவசாயத்திணைக்கள அதிகாரிகள், "உங்கள் வீட்டில் சிறிதளவு நிலம் இருந்தாலும் பயன்படுத்துங்கள். பூமி திருத்தி உண்பவர்கள் தான் உயர்த்த குடியினர். வீட்டுத்தோட்டம் செய்வதன் மூலம் நஞ்சற்ற மரக்கறி வகைகளை உண்ண முடியும். மிஞ்சினால் விற்கலாம்" என்றவை. அத்துடன் விதைகளும் தந்தவர்கள். சாடிகளிலும், உரப்பைகளிலும் மண்ணை நிரப்பி கன்றுகளை நடலாம் என்றவர்கள். நான் விவசாயம் செய்யப் போகிறேன்" என்றது ஒட்டகக் கன்று.

**ஒ**ட்டகக் கன்றின் பெற்றோரும் சகோதரர்களும் அதற்கு உதவி செய்தனர். இரண்டு மாதங்களின் பின் பயிர்கள் செழித்து வளர்ந்து பூத்துக் காய்த்தன. சாடியில் உள்ள செடிகள் மிகவும் செழிப்பாக வளர்ந்து நன்றாகக் காய்த்தன.

**அ**தைப் பார்வையிட வந்த விவசாயதிணைக்களத்தினர் ஒட்டகக் கன்றைப் பாராட்டிப் பரிசும் அளித்தனர். ஒட்டகக் கன்றின் வீட்டுத் தோட்டம் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. அதனால் சிங்கராசா ஒட்டகக் கன்றைப் பாராட்டிப் பரிசளித்தார்.

## 80. பெரியாரைத் துணை கொள்



**ஒ**ட்டகச் சிவிங்கியின் குட்டிக்கு மான் என்றால் உயிர். மான் கற்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்றது. அத்துடன் அது ஒரு சங்கீதவித்துவான். மிருதங்கத்தையும் நன்றாக வாசிக்கும். ஒட்டகச்சிவிங்கியின் அருகில் தான் மானின் வீடு இருந்தது. மான் பாடிக் கொண்டே மிருதங்கத்தை வாசிக்கும். ஒட்டகச்சிவிங்கிக்கு மானின் வீட்டுக்குச் செல்லப் பயம். அதனால் அது மானின் வீட்டின் சுவரருகே இருந்து மானின் பாடலை. ரசிக்கும். பின்க் கேட்டு மான் பாடிய பாடலைப் பாடித்

தகரப்பேணியில் மேளம் அடிக்கும். இதைக் கவனித்த மான் ஒட்டகச்சிவிங்கியின் வீட்டுக்கு வந்தது. அதைக்கண்டு மிகவும் மனம் மகிழ்ந்த ஒட்டகச்சிவிங்கிக் குட்டி மானை வணங்கி வரவேற்றது.

"**உ**னக்குப் பாடல் என்றால் விருப்பமா" மான் கேட்டது.

"**ஓ**ம் ஐயா, நான் ஓஎல் படிக்கிறேன். பரீட்சைக்குச் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுக்கிறேன். நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள்".

"**நீ** எனது வீட்டுக்கு வா. நான் உனக்குச் சொல்லித் தருகிறேன்" என்றது மான்.

**அ**தன் பின் ஒட்டகச்சிவிங்கிக் குட்டி மானின் வீட்டிற்குத் தினமும் செல்லும். மான் அதை அன்புடன் வரவேற்று அதற்குச் சங்கீதமும் ஏனைய பாடங்களும் சொல்லிக் கொடுக்கும். ஒட்டகச்சிவிங்கிக்குக் கணக்கில் விருப்பமில்லை. வகுப்பில் ஒரு முறையும் பத்துப் புள்ளிகளுக்கு மேல் அது பெற்றதில்லை. மான் அதற்குக் கணிதபாடமும் சொல்லிக் கொடுக்கும்.

**ஓ**எல் பரீட்சை வந்தபோது ஒட்டகச்சிவிங்கி எல்லாப் பாடங்களையும் சிறப்பாக எழுதியதால் அதற்கு எட்டு ஏ பெறுபேறாகக் கிடைத்தது.

**நா**ட் செல்ல நாட் செல்ல மான் ஒட்டகச்சிவிங்கிக்கு மிருதங்கம் அடிக்கவும் கற்றுக் கொடுத்தது. சில மாதங்களின் பின் மான் மேடைகளில் பாடும்போது ஒட்டகச்சிவிங்கி மிருதங்கம் அடிக்கும். அதன் வளர்ச்சியைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டனர். அது காலப்போக்கில் மானைப்போலப் பாடி மிருதங்கமும் அடித்தது.

**ஏ**எல் பரீட்சை முடிவுகள் வந்தபோது ஒட்டகச்சிவிங்கி மூன்று ஏ எடுத்தது, "எனது மகன் படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரன் அல்ல. பெரியவரோடு சேர்ந்ததால் அவன் இன்று பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறான்" எனத் தாய் ஒட்டகச்சிவிங்கி மகிழ்வுடன் அயலவர்களுக்குச் சொல்லும்.

## 81. பேதைமை அகற்று



**யா**னை நரியிடம் வந்து சொன்னது, “நீ எந்த ஒரு கருமத்தையும் சிந்தித்துச் செய்வதில்லை. நேற்று நீ குரங்குக் குட்டியைப் பற்றித் தவறாக அதன் தந்தையிடம் சொல்லியுள்ளாய். அதைக் குரங்கு நம்பிக் குட்டியைத் தண்டித்துள்ளது. உனக்கும் குரங்குக் குட்டிக்கும் பாடசாலை விடயத்தில் விரோதம் உண்டு. நீ படிப்பதில்லை. ஊர் சுற்றுவாய். குரங்குக் குட்டி அப்படியானதல்ல. ஆசிரியர்களோடும் அதிபரோடும் மாணவர்களோடும் மிகவும் அன்பாகப் பழகுவது. அது பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் நடந்தவற்றைச் சொல்லியுள்ளது. அதனால் அதிபர் குரங்குக் குட்டியின் தந்தையை அழைத்து உண்மையான நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளார். தனது மகனில் குற்றமில்லாத போது தான் அவனைத் தண்டித்ததை நினைத்துக் குரங்கு மிகுந்த கோபங்கொண்டுள்ளது”.

**ந**ரிக்குப் பயமாக இருந்தது. குரங்கு யார் எதைச் சொன்னாலும் நம்பக்கூடியது. அத்துடன் ஆராயாது நடவடிக்கையும் எடுக்கக் கூடியது. அதனால் நரி, “நண்பா, குரங்கு எதையும் ஆராயாது நடவடிக்கை எடுக்கும். அத்துடன் முரட்டுத்தனமானது. நீ சொன்னால் அது கேட்கும். தயவு செய்து என்னை மன்னிக்கும்படி கூறு” என்று இரந்தது.

“**நீ** எதையும் ஆராயாது பேசுவதால் எவ்வளவு பிரச்சினைகள் வருகிறதென்று உனக்குத் தெரிந்தும், நீ அதை நினைத்துத் திருந்துவதாக இல்லை. இது உனது அறியாமையைக் காட்டுகிறது. ஒருமுறை இருமுறையல்ல பலமுறை நீ ஏனைய மிருகங்களுடன் பிரச்சினைப்பட்டு அடி உதை வாங்கியபோதும் நீ திருந்துவதாக இல்லை. நான் உனக்காக எப்படிக் கதைப்பது. உன்னை விடக் குரங்கு பேதை. நான் ஒன்று சொல்ல அது இன்னொன்று சொல்லும். சட்டம் கதைக்கும். சில சமயம் வாய்க்கு வந்தபடி ஏசும். அதனால் என்னால் அதனுடன் கதைக்க முடியாது. ஒருமுறை சொன்னால் கேட்கக் கூடியவனோடு தான் எதைப்பற்றியும் பேசலாம். இருவரும் எதையும் ஆராயாது விதண்டாவாதம் பேசுவீர்கள். அதனால் எதையும் செய்” என்று சொல்லிவிட்டுச் சென்றது யானை.

நரிக்குப் பயமாக இருந்தது. முன்பொரு முறை கரடிக்கும் குரங்கிற்கும் சண்டை வந்தபோது மிகப்பெரிய கரடியைக் குரங்கு மரத்தில் இருந்து அதன் தோளில் குதித்துக் கழுத்தைக் கடிதத்தை நினைக்க அதற்குப் பயமாக இருந்தது. யானை கைவிட்டால் உதவுவார் எவருமில்லை எனக் கலங்கியது.

## 82. பையலோடு இனங்கேல்



யானை வந்து முதிய கரடிக்குச் சொன்னது, "உனக்கு அறிவே இல்லை. உனது சுயநலத்திற்காகச் சிறுவர்களுடன் சேர்ந்து திரிகிறாய். உனது வயதிற்கு ஏற்றவர்களுடன் தான் நீ நட்புக்கொள்ள வேண்டும். முதியவர்கள் மடத்தில் இருப்பார்கள். அல்லது கோவிலில் இருப்பார்கள். இல்லாவிட்டால் நூலகத்தில் இருப்பார்கள். இவற்றில் ஓர் இடத்திற்குச் சென்று உன்னொத்த வயோதிபர்களுடன் உரையாடு. நீ படித்திருந்தால் பொழுது போகாவிட்டால் சிறுவர்களை அழைத்துக் கற்பிக்கலாம். நீ பாடசாலைப் பக்கமே போகவில்லை. அந்தநேரம் எமது ஊர்ப் பாடசாலையில் அதிபராக இருந்தவர் வீட்டுக்கு வீடு சென்று பாடசாலைக்கு வராத மாணவர்களை அழைத்து வந்து கற்பிப்பராம். உனது வீட்டுக்குப் பல தடவை வந்தபோதும் நீ ஒளித்துவிடுவாயென்று எனது தாத்தா சொன்னவர். அவர் சிறுபிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அதனால் பெற்றோர் தமது பிள்ளைகளை அழைத்து வந்து அவரிடம் ஒப்படைக்கின்றனர். உன்னோடு பிள்ளைகள் சேர்வதை யாரும் விரும்புவதில்லை".

அப்போது அங்கே வந்த மான் சொன்னது, "நீ பிள்ளைகளைத் தவறான வழியில் செல்ல வழிவகுக்கிறாய். குரங்குக் குட்டியைக் கொண்டு பிறர் வீட்டில் உள்ள மரங்களில் பழங்களைப் பறிப்பிக்கிறாய். எப்படி வீட்டுக்காரர்களுக்குத் தெரியாது பிடுங்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறாய். அதனால் பிள்ளைகள் திருடுவது எப்படி என்று தெரிந்துகொள்கிறார்கள். உனது விருப்பத்திற்கு இணங்காதவர்களை ஏசுகிறாய். பாடசாலைக்குப் பிள்ளைகளைச் செல்லவிடாது தடுக்கிறாய். நேற்று ஐந்து பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாது உன்னோடு தங்கியிருந்துள்ளனர். இது நல்லதல்ல".

"பல தடவைகள் உனக்குச் சொல்லியாயிற்று. நீ கேட்பதாக இல்லை. அதனால் காவல்துறைக்கு அறிவிப்பதாக எல்லோரும் கூறுகிறார்கள். நான்தான் தடுத்து வைத்துள்ளேன். இனித்திருந்தாவிட்டால் என்னைக் குறைசொல்லக் கூடாது" என்றது யானை.

## 83. பொருள்தனைப் போற்றி வாழ்



**கு**திரைக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். குதிரை பெரும் வர்த்தகன். கமக்காரன். ஏராளமான வயல்களும், தென்னந்தோப்புகளும் அதனிடம் உண்டு. இளைய மகன் தான் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்ததால் குதிரை தன்னிடமிருந்த முழுச்சொத்துக்களையும் மூத்த மகனுக்கு எழுதிவைத்துவிட்டது. அதனால் இளைய மகனுக்குப் பெருங்கவலை.

**இ**ளைய மகனின் மனைவி சொன்னது, "என்னைத் திருமணம் செய்தமையால் தான் உங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. நானும் ஏழை" அழுதது.

"**நீ** ஏன் அழுகிறாய். அழுவதனால் அப்பா சொத்துத்தரப் போகிறாரா? ஆரம்பத்தில் அப்பா பரம ஏழை. ஒரு சிறு வியாபார நிலையத்தை ஆரம்பித்துத் தான் இந்த நிலைக்கு வந்தவர். அவர் சொல்வார், "பொருளைப் பாதுகாத்தால் பொருள் பெருகும்" என்று. ஒழுக்கமாக எத்தொழிலைச் செய்தாலும் பொருள் பாதுகாக்கப்படும். நீ எதற்கும் யோசிக்காதே" என்றது.

**மூ**த்த மகனுக்கு ஏராளமான சொத்துச் சேர்ந்தமையால் அது கணக்குப் பாராது செலவு செய்து வந்தது. அதன் மனைவி அதை விடக் கூடுதலாகப் பொருளைச் செலவு செய்வாள். மகள் அவர்களை விடச் செலவாளி.

**இ**ருபது வருடங்கள் கழிந்தன. இளைய மகன் ஒரு சிறிய கடையை ஆரம்பித்துப் பெரிய வர்த்தகனானான். அவனுக்கு ஒரு மகள். மனைவி மிகவும் சிக்கனக்காரி. மகள் ஆடம்பரமான வாழ்வை விரும்பாதவள். பெற்றோர் எடுத்துக் கொடுக்கும் உடைகளை அவள் விருப்புடன் அணிந்து செல்லும்.

**மூ**த்த மகனின் மகள் ஆடம்பரமான செலவாளி. ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் புதுப்புது உடைகள் வாங்கி அணிவாள், யாரையும் மதிக்க மாட்டாள். மூத்த மகன் வர்த்தகத்தில்

பெரிதாக ஈடுபாடு காட்டுவதில்லை. அதனால் அவர்களது பொருளாதாரம் சிறுகச் சிறுகக் குறைந்து வந்தது.

**இ**ந்த நிலையில் மூத்த மகனின் மகளுக்குத் திருமணம் பேசப்பட்டது. பேசிவரும் மாப்பிள்ளைகள் அவளைத் திருமணம் செய்ய விரும்பாததால் திருமணம் குழம்பிக் கொண்டிருந்தது. இளைய மகனின் மகளைப் பெண் கேட்டுப் பலர் வந்தனர். குணத்தில் சிறந்த ஒருவனுக்கு இளைய மகன் தனது மகளைத் திருமணம் செய்து வைத்தது.

**ஒ**ருநாள் இளைய மகனின் தந்தை அவனைத் தேடி வீட்டுக்கு வந்த சொன்னார், "நான் ஏராளமான சொத்துக்களைக் கொடுத்தும் அவன் பொருளைச் சரியான முறையில் பேணாததால் ஏழையாகிவிட்டான். உன்னிடம் எதுவும் இல்லாவிட்டாலும் பொருளைப் பேணியதால் இன்று பெரிய வர்த்தகனாகிவிட்டாய். மிக்க மகிழ்ச்சி" என்று கூறிவிட்டுத் தகப்பன் புறப்பட்டுச் சென்றது.

## 84. போர்த்தொழில் புரியேல்



**ந**ரி வேமாக வந்து பன்றிக்குச் சொன்னது, "உனக்கும் எருமைக்கும் இடையே என்ன பிரச்சினை? அது சந்தியில் நின்று உன்னைக் கண்டபடி மதிப்பில்லாமல் ஏசிக்கொண்டிருக்கிறது".

"**எ**னக்கும் அதற்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒஎல் படிக்கும் எனது மகன் எருமையின் மகன் தீயவர்களுடன் சேர்ந்து திரிவதால் அதனுடன் சேர்வதில்லை. நான் தான் சேரக்கூடாது என்று சொன்னேன்" என்றது பன்றி.

"**பி**ள்ளைகளின் பிரச்சினையைத் தூக்கிப் பிடிக்கக்கூடாது" என்ற நரி, "நீ அதனுடன் சண்டைக்குப் போகாதே" என்றது.

**ப**ன்றிக்கு வேதனையாக இருந்தது. பன்றியும் எருமையும் நண்பர்கள். அதனால் பன்றி யானையிடம் சென்று நடந்தவற்றைக் கூறியது, "பன்றியாரே, உமக்கு நரியைப் பற்றித் தெரியும். அது கொழுவி விட்டு விட்டுக் கூத்துப் பார்க்கும். நரிக்கும் ஒட்டகத்திற்குமிடையே பகை இருக்கிறது. அது ஒட்டகத்தைப் பழிவாங்க நினைத்துப் புலியிடம் சென்று இல்லாதது பொல்லாதவற்றைக் கூற அதை நம்பி ஒட்டகத்திற்குச் சந்தியில் வைத்து அடித்தது. எதுவும்

புரியாத ஒட்டகம், "நீ ஏன் அடிக்கிறாய். காரணத்தைச் சொல்லிவிட்டு அடி" என்றபோது, "நீ புலிக்கு என்னைப் பற்றியும் எனது குடும்பத்தைப் பற்றியும் கேவலமாகச் சொல்லியுள்ளாய்" என்றபோது ஒட்டகம் புலியாரே, நான் நரியோடு பேசுவதில்லை. அதைக் கண்டு ஆறுமாதமிருக்கும். அது ஒவ்வொருவரைப் பற்றியும் கேலியாகவும் கிண்டலாகவும் பேசுவதால் பலர் அதோடு கதைப்பதில்லை. இது உமக்குத் தெரியாதா?" என்று கேட்டபின்பு தான் புலி யோசித்துப் பார்த்துவிட்டு ஒட்டகத்திடம் மன்னிப்புக் கேட்டது. அதன்பின் புலிக்குப் பயந்து நரி தலைமறைவாக இருந்தது. அது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டது யானை.

"**உ**ண்மை தான். நரி சொல்லும் போது நம்பத்தக்கதாகச் சொல்லும். அதனால் நம்பிவிட்டேன். தனது மகன் தனது சொல்லைக் கேட்பதில்லையென்றும், பாடசாலைக்குச் செய்வதில்லை என்றும் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் எருமை சொன்னது. அதை நான் நினைக்கவில்லை" என்று கவலைப்பட்டது பன்றி.

"**ப**லர் அடித்தும் நரி திருந்துவதாக இல்லை. ஒருமுறை எருமை கொம்பால் தூக்கி நரியை எறிந்தது. அந்தக் கோபத்தைத் தீர்க்கவும் சொல்லியிருக்கும். எருமை இப்போது மகனின் செயல்களால் மிக்க வேதனையும், கோபமும் கொண்டுள்ளது. அதனால் இதைப்பற்றி அதனிடம் விசாரியாதே .விசாரித்தால் அது சண்டைக்குப் போகும். நாம் சண்டையைத் தூண்டிவிடக் கூடாது" என்றது யானை.

"**நா**ன் கேட்கமாட்டன். எனக்கு எருமை மீது நம்பிக்கை உண்டு" என்றது பன்றி.

## 85. மனந் தடுமாறேல்



**எ**ருமை ஒட்டகத்திடம் ஐந்து இலட்சரூபா கடன் வாங்கியிருந்தது. இருவரும் நல்ல நண்பர்கள். அதனால் தனது வயல் காணியை ஒட்டகத்திடம் பொறுப்பாகக் கொடுக்க விரும்பியது. ஆனால் அதை ஏற்கமறுத்த ஒட்டகம், "எமது நட்புப் புனிதமானது. பழகிய நண்பர் உரிமையோடு செய்யும் செயலை இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக் கொள்வதுதான் பண்பு என்று ஒட்டகம் சொன்ன பின்பு எருமையால் பேச முடியவில்லை.

**ஒ**ட்டகத்தின் மனைவி ஒட்டகத்தின் அருகில் வந்து, "நீங்கள் செய்யும் செயல்களை நான் ஒருபோதும் தடுத்ததில்லை. எமக்கு மூன்று பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். இருவர்

திருமணவயதை அடைந்துவிட்டனர். தற்செயலாகத் திருமணம் நிட்சயமானால் என்ன செய்யப் போகிறீர்கள்?. வயல்காணியைப் பொறுப்பாக வாங்கியிருந்தால் அதைப் பொறுப்பாகக் கொடுத்து நாம் பணம் பெறலாம்” என்றது.

“**எ**ருமை எனது நண்பன். எனக்கு அவன் எவ்வளவு உதவிகள் செய்துள்ளான். தற்செயலாகத் திருமணம் பொருந்தினால் அவனோடு கதைத்தால் அவன் ஆவண செய்வான். நீ தடுமாற்றம் அடையாதே. அதைப் பற்றி நினைத்துக் கவலைப்பட்டால் அது உனது மனதையும் உடலையும் பாதிக்கும்” என்றது ஒட்டகம்.

**ஒ**ட்டகத்தின் உறவினர்களும், பெற்றோரும், சகோதரர்களும் ஒட்டகத்தோடு கதைக்க விரும்பாது ஒட்டகத்தின் மனைவியோடு கதைத்தனர். அதன்பின் ஒட்டகத்தின் மனைவியின் நிம்மதி போய் விட்டது. அதனால் அது தனது கணவனோடு தேவையின்றி முரண்பட்டுக் கொண்டிருந்தது.

**தி**டீரென்று எருமைக்கு நோய் ஏற்பட்டுவிட்டது. அதை வைத்தியசாலையில் அனுமதித்தபோது வைத்தியர்கள் அது தப்புவது கடினம் என்றனர். அதைக் கேட்ட ஒட்டகத்தின் மனைவி இடிந்துபோய் விட்டது. அதைக்கண்ட ஒட்டகம், “பயப்படாதை. எருமைக்குப் பெரும் வருத்தமில்லை. அதை நினைத்து நீதான் நோயாளியாகப் போகிறாய். மனம் தளராதே” என்று ஒட்டகம் சொன்னபோது அதன் மனைவி அதைக் கண்டபடி ஏசியது.

**அ**ன்று மாலை எருமையின் மகன் ஒரு பத்திரத்தைக் கொண்டுவந்து ஒட்டகத்திடம் கொடுத்தான். அதில் எருமை, தனது வயலை ஒட்டகத்தின் பெயரில் எழுதியிருந்தது. அதை எதிர்பாராத ஒட்டகம் அதிர்ந்து போனது. ஒருமாதம் கழிய எருமை சுகப்பட்டு வீட்டுக்கு வந்தது.

**ஒ**ட்டகம் தனது மனைவியை அழைத்துச் சொன்னது, “ஒருவரைப் பற்றி அறியாது பேசக்கூடாது. எருமை மிகமிக நேர்மையானது. நான் பணம் கொடுக்கும் போதே வயலைப் பொறுப்பாகத் தரவிரும்பியது. எருமையின் பிள்ளைகளும் நேர்மையானவர்கள். தகப்பன் இறந்தாலும் வாங்கிய பணத்தைக் கொண்டுவந்து தருவார்கள். நீ தேவையில்லாதவற்றை நினைத்துத் தடுமாறினாய். அதனால் உனக்குக் கதைப்பது என்ன என்று கூடத் தெரியவில்லை”.

**ஒ**ட்டகத்தின் மனைவி எதுவும் பேசவில்லை.

## 86. மாற்றானுக்கு இடங்கொடேல்



**மா**ன் கவலையோடு வந்து நன்கு செழித்து வளர்ந்திருந்த மாமரத்தின் கீழ் அமர்ந்தது. காலையில் நடந்த சம்வத்தை நினைக்க அதன் மனம் மரத்து விட்டது.

**சு**மார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் அதனது சகோதரியின் கணவனை வேட்டைக்காரர் கொன்றுவிட்டனர். அதற்கு மூன்று பிள்ளைகள். ஒன்று ஆண் இரண்டு பெண்கள். அந்தக் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காக மான் திருமணம் செய்யவில்லை. மிகவும் பொறுப்பாகச் செயற்பட்டமையால் மூத்தவன் வைத்தியராகிவிட்டான்.

**மா**னின் சகோதரியின் கணவனின் தங்கையும் கணவனும் பெரும்பணக்காரர்கள். அதனால் மானின் குடும்பத்தை அவர்கள் சேர்ப்பதில்லை. பெரும் தனவந்தனான மான் அவர்களைச் சேர்த்தால் தனக்கு அவமானம் வந்துவிடும் என்று பகிரங்கமாகவே கூறும். அதனால் மாமன் மான் தனது மருமக்களை எப்படியும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்ற பெரும் இலட்சியத்துடன் வாழ்ந்து வந்தது. அது தனது சகோதரிக்கும் பிள்ளைகளுக்கும் எந்தக் குறையும் வைத்ததில்லை. வர்த்தகரான மான் மாமன் மானுடன் அடிக்கடி பிள்ளைகளின் விடயத்தில் முரண்படும். சில சமயம் சண்டையும் வந்துவிடும். காட்டுப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவின் போது மானின் மகன் தன்னுடைய மகளைப் பார்த்துச் சிரித்ததாக எழுந்த சர்ச்சை மோதலில் முடிவடைந்தது. அதன் பின் மாமா மான் தனது மருமக்களை அழைத்துச் சொன்னது, “உங்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்பதே எனது இலட்சியம். அதற்காக நான் எல்லாவற்றையும் செய்வேன். நீங்கள் நன்றாகப் படித்து எமது எதிரிகளுக்குப் பாடங்கற்பிக்க வேண்டும்” கண்கலங்கியது மாமா மான்.

**ம**ருமக்கள் மூவரும் மாமனின் அருகிற் சென்று அவரை வணங்கின. மூத்த மகன் சொன்னது, “மாமா காட்டுப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவுக்கு எனது நண்பர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுடன் கூடச் சிரித்துக் கதைத்தேனே தவிர வேறுயாருடனும் நான் சிரித்துக் கதைக்கவில்லை” என்று கூறியபோது மாமா சொன்னது, “நான் நம்பவில்லை. நம்பவும் மாட்டன். நீ கவலைப்படாது படி. அவர் வர்த்தகத்தில் சிறப்புடையவராக இருக்கலாம். ஆனால் நீங்கள் படிப்பில் சிறந்தவர்கள். அதைமட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்”.

**கா**லங்கடந்தது. மூத்த மான் வைத்தியராகிவிட்டது. இரண்டு பெண் மான்களும் ஆசிரியர்களாகி விட்டன. ஒரு பெண் பொறியியலாளர் ஒருவரை விரும்பித் திருமணம் செய்தாள். அடுத்தவள் வைத்தியர் ஒருவரைத் திருமணம் செய்தாள். மூத்த மானுக்குப் பல இடங்களில் திருமணம் பேசி வந்தது. மூத்த மான் வைத்தியரானதும் தனது மகளைத் திருமணம் செய்துவைக்க வர்த்தகரான மான் பெருமுயற்சி எடுத்தது. கோடிக்கணக்கில் சீதனம் தருவதாகக் கூறித் தரகர்களை அனுப்பியது. மாமா மான் தனது சகோதரிக்கும் மருமகனுக்கும் மூத்த மானின் திருமணம் பற்றி எதுவும் பேசவில்லை. ஒருநாள் மாலை முன்பின் தெரியாத குடும்பத்தினர் மாமா மானின் வீட்டுக்கு வந்தனர்.


“**நா**ன் வைத்தியர். எனது மனைவியும் வைத்தியர். எனக்கு ஒரே ஒரு பெம்பிளைப்பிள்ளை. அவளும் வைத்தியர். உங்களது மருமகனுடன் வேலை செய்கிறாள். அவளுக்கு உங்களின் மருமகனைப் பிடித்துவிட்டது. அதனால் அவர் தனது விருப்பத்தைக் கூறியபோதும் உங்களது மருமகன் அதை ஏற்கவில்லை, “எமது குடும்பப் பிரச்சினைகள் அனைத்திற்கும் முடிவெடுப்பது மாமா தான். அவர் விரும்பாத எதையும் நான் செய்யமாட்டன்” என்று கூறியதால் வந்திருகிறோம். இப்படி ஒரு பிள்ளையைப் பெறத் தவம் செய்யவேண்டும். இப்படியான மாப்பிள்ளையை அடைய எமது குடும்பம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்று உணர்ச்சி வசப்பட்டனர்.

**மா**மா கரைந்து போனார், “இப்படியான பிள்ளைகளை வளர்க்க நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்” என்று நினைத்து மருமகனை அழைத்துக் கேட்டார்.

“**மா**மா, அவள் என்னுடன் வேலை செய்பவள் அவ்வளவு தான் எமக்குள்ள தொடர்பு. எனது எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியவர் நீங்கள். உங்கள் முடிவுதான் எனது முடிவு”.

**அ**டுத்த முகூர்த்தத்தில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு வருமுன் நரி வர்த்தகரிடம் சென்று, “யார் யார் எப்படி உயர்வார்கள் என்று கடவுளுக்கு மட்டும்தான் தெரியும். நீ தெரிந்து கொண்டதாகப் பிதற்றினாய். உன்னை விட ஆயிரம் மடங்கு சிறப்பானது. அக்குடும்பம் அதனால் இனி மேலாவது திருந்தி நட” என்று கூறி விட்டு வந்து சபையில் இருந்து தான் வர்த்தகரைக் கிண்டல் செய்ததை மற்றவர்களுக்குச் சொல்லிச் சிரித்து மகிழ்ந்தது நரி.

## 87. மிகைபடச் சொல்லேல்



**ந**ரி, யானையின் மகளுக்குத் திருமணம் பேசி வந்தது. நரி ஒரு திருமணத்தரகன், "யானையாரே, உமது மகள் அதிஷ்டம் செய்தவள். மாப்பிள்ளை உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார். அவரது சகோதரர்கள் எல்லோரும் பெருந்தனவந்தர்கள். மாப்பிள்ளையின் தந்தை பெரிய விவசாயி. ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல் இருக்கிறது. தென்னந்தோப்புகள் ஐந்து உண்டு. தோட்ட நிலம் ஏராளமாக உண்டு. தாயின் சகோதரன் ஒருவன் பெரும் வர்த்தகன். இன்னொரு சகோதரன் அரசியல்வாதி. ஊரில் மதிப்போடு வாழும் உயர்ந்த குடும்பம் அது. உம்மை எனக்குப் பல வருடகாலமாகத் தெரியும். நீர் ஒழுக்கமாக வாழ்வதால் ஊரே உம்மைப் புகழ்கிறது. அதனால் தான் இந்த உயர்ந்த குடும்பத்திற்கு உம்முடைய குடும்பம்தான் பொருத்தமானது என்று நினைத்து வந்துள்ளேன்" என்றது.

**யா**னை எதுவும் பேசவில்லை. நரியின் பேச்சில் அதற்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதனால் யோசித்தது.

"**எ**ன்ன யோசிக்கிறாய்?. நான் உனக்குக் கெடுதல் நினைப்பேனா? யோசிக்காது பதிலைச் சொல்" என்றது நரி.

**யா**னை சிரித்தது. பின், "நரியாரே, எனக்கிருப்பது ஒரே ஒரு பெண். திருமணம் என்றால் நூறு செருப்புத்தேய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆறுதலாக யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டும். மாப்பிள்ளை யார்? எந்த ஊர் என்று சொல்லும் நான் விசாரித்து விட்டுச் சொல்கிறேன்".

"**தி**ருமணம் முற்றாகுமுன் இடத்தைத் தரகர்கள் சொல்லமாட்டார்கள். வேண்டுமானால் சாதகத்தை தருகிறேன் புலியிடம் கொண்டு சென்று பாரும்" என்ற நரி மாப்பிள்யையின் சாதகத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றது.

**யா**னை எருமையிடம் சென்று நரி கூறியவற்றைச் சொன்னபோது, "யானையாரே நரி ஒன்றைப் பத்தாகச் சோடித்துச் சொல்லும். எனக்கென்றால் இவ்வளவு சொத்துள்ள மாப்பிள்ளை இருப்பாரா என்று சந்தேகமாக இருக்கிறது. அதனால் பொறுமையாக இரு. சில

கலியாணத்தரகர்கள் இருக்கிறத்தைப் பறக்குதென்று கூறித் தமது காரியத்தைப் பார்த்து விட்டுப் பணமும் பெற்றுச் சென்று விடுவர். அவசரப்படாதே” என்றது எருமை.

## 88. மூர்க்கரோடு இணங்கேல்



**மா**ன் வந்து தனது நண்பனான குதிரைக்குச் சொன்னது, “எனது நண்பனான எருமை எதற்கெடுத்தாலும் ஆராயாது பிறருடன் வலியச் சண்டைக்குச் செல்கிறது. எதற்கெடுத்தாலும் முரட்டுத்தனமாகக் கதைக்கிறது. அது எல்லோருடனும் தேவையில்லாமல் கதைப்பதால் அதை எல்லோரும் வெறுக்கின்றனர். அது வீணாகச் சண்டை செய்து நண்பர்களைப் பகைக்ககிறது. தனது பகைவருடன் என்னைக் கதைக்க வேண்டாம் என்று கூறுகிறது. அப்படிக் கதைக்காது விட முடியுமா? நண்பர்களையும் அயலவர்களையும் விரோதிக்க கூடாது. விரோதிப்பதால் என்ன லாபம்கிடைக்கும். ஒவ்வொருவரும் பல சிக்கங்களில் மாட்டியிருப்பர். வேதனையோடு இருப்பர். அதை அறிந்த பின்பு அன்பாகக் கதைத்தல் வேண்டும். ஒட்டகச்சிவிங்கியின் மகன் பெற்றோருக்கு விருப்பமில்லாத பெண்ணை அழைத்துச் சென்றுவிட்டான். அதை அறிந்த எருமை உனக்குப் பிள்ளைகளை ஒழுங்கான முறையில் வளர்க்கத் தெரியாது. கண்டித்து வளர்த்திருந்தால் இப்படி நடக்குமா என்று பல குறைகளைக் கூறியுள்ளது. அதனால் ஒட்டகச்சிவிங்கிக்குச் சரியான கோபம். ஒருவாரம் கழிய ஒட்டகச்சிவிங்கியின் தாய் சென்று மகனையும் மருமகளையும் அழைத்து வந்துவிட்டது. குடும்பமென்றால் பல பிரச்சினைகள் இருக்கும். இன்று கோபத்தால் சண்டை பிடிப்பர். மறுநாள் சமாதானமாகிக் கட்டித்தழுவுவர். இதெல்லாவற்றையும் புரிந்து கொள்ளாத முரட்டுத்தனமான இயல்புடையதாக இருக்கிறது. அதனால் அதனுடன் சேர எனக்கு விருப்பமில்லை”.

“**மூ**ர்க்கரது உறவு எப்போதும் ஆபத்தைத்தான் உண்டுபண்ணும். நீ இரண்டு நாட்களுக்கு அதைச் சந்திக்காதிரு. அதனால் கோபங்கொண்டு அது உன்னைத் தேடி வராது” என்றது குதிரை.

**கு**திரை சொன்னது போல மான் எருமையைச் சந்திக்கச் செல்லவில்லை. அதனால் எருமையும் மானைச் சந்திக்க வரவில்லை. அதனால் மான் மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

## 89. மெல்லினல்லாள் தோள்சேர்



**யா**னை தனது மகன் ஒரு பெண்ணைக் காதலிப்பதாக அறிந்து அதை அழைத்துச் சொன்னது, "மகனே, நீ ஒரு பெண்ணைக் காதலிப்பதாக அறிந்தேன். காதலுக்கு நான் எதிரானவன் அல்ல. உனது தாயாரை நான் காதலித்துத்தான் திருமணம் செய்தேன். உனது தாயார் இதுவரை யாருடனாவது முரண்பட்டதை நீ அறிந்தாயா? எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதால் அவாவுக்கு ஒரு மதிப்பு உண்டு. ஊரில் நடக்கும் நல்ல, கெட்ட காரியங்கள் யாவும் உனது அம்மாவின் விருப்பின் பேரில் தான் நடைபெறும். மண்ணில் பிறந்த உயிர்கள் ஏனைய உயிர்களை மதித்தல் வேண்டும். அவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகுதல் வேண்டும். சிரித்துப் பேசி மகிழ்பவன்தான் மண்ணில் மகிழ்வாக வாழ்வான். பின்பு விண்ணிலும் மகிழ்வாக வாழ்வான்".

**மூ**ச்சுவிட்டு விட்டு மகனைப் பார்த்தது. மகனின் முகத்தில் கலவரம் தெரிந்து, "மகனே, வாழ்க்கை இன்பமானது. அதை உயிர்கள் தான் துன்பமாக்குகின்றன. அந்தக் குடும்பத்தைப் பார். கணவன் மனைவியோடு ஒற்றுமையாக இருக்கிறானா…? அவன் பிரிந்து சென்று பல வருடங்களாகின்றன. மூத்தமகள் புரிசனோடு பிரச்சினைப்பட்டுத் தனியே வாழ்கிறாள். இரண்டாவது மகளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. அவளது இரு சகோதரன்களும் ஊருக்குதவாதவர்களாக வாழ்கின்றனர். அத்துடன் அவர்களை யாரும் மதிப்பதில்லை. சென்றவாரம் பேரனார் இறந்தபோது ஊரவர்கள் பலர் சொல்லவில்லை. நல்ல மனிதர்கள் சிலர் சென்று அத்திமக்கிரியையை நடத்தி வைத்தனர். இத்தகைய உறவு உனக்குத் தேவையா? பண்பான ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்தால் திரவியங்கள் யாவும் வந்து சேரும்".

"**நா**ன் காதலிக்கவில்லை அப்பா. இரண்டொருமுறை தேவை காரணமாகச் செல்ல ஊரவர் கதைகட்டி விட்டனர்" என்றது குட்டி யானை.

"**அ**வசிய தேவையேற்பட்டாலும், நெறிபிறழ்வான வீட்டிற்குச் செல்லும் போது அவதானமாகச் செல்ல வேண்டும். நீ மகிழ்வாக வாழ வேண்டும் என்றால் மென்மையான இயல்புடை பெண்ணைத் திருமணம் செய்தல் வேண்டும்" என்றது யானை.

## ௯0. மேன்மக்கள் சொல்கேள்



**யா**னை காட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு வந்தபோது அங்கு வணங்கிக் கொண்டிருந்தவர்கள் தமது தலையை அசைத்து அதை வரவேற்றனர். கோவிலில் இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது. வரவேற்கக்கூடாது என்று யானை கட்டளையிட்டிருந்தது.

**பூ**சை முடிய யானை அடியவர்களுக்கு உரையாற்றவிருந்தது. கோவிலின் தலைவர் ஒட்டகம். அது ஒழுக்கமுள்ளது, பண்பானது. கோவிலில் சமய ஆசாரங்களை அனுட்டிக்காதவர்களை அது பக்தர்களுக்கு உரையாற்ற விடாது. பேசுபவர்கள் மதுவகைகளைக் குடிக்கக் கூடாது. மாமிசம் உண்ணக் கூடாது. பயனில்லாத வார்த்தைகளைப் பேசி மக்களை திசை திருப்பக் கூடாது என்று அது விரும்பி அதன்படி நடக்கும்.

**ந**ரி நன்றாகப் பாடும். அரிய பல நூல்களைப் படித்துப் பண்டிதர்ப் பட்டம் பெற்றது. ஒரு பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றுகிறது. ஒருநாள் புலி வந்து ஒட்டகத்திற்குச் சொன்னது, "ஐயா, நரி நன்றாகப் படித்துப் பட்டம் வாங்கியது. அதிபராகக் கடமை புரிகிறது. அதனால் காட்டுப்பிள்ளையார் கோவிலில் பூசை முடிந்த பின் அதைப் பேச அனுமதியுங்கள்".

"**ஒ**ழுக்கமில்லாதவர்களைக் கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாது. மதுபானங்கள் குடிக்கக் கூடாது. மாமிசம் உண்ணக் கூடாது. லஞ்சம் பெறக்கூடாது என்று கற்பித்துவிட்டு மதுபானம் குடிப்பதும், மாமிசம் புசிப்பதும், பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக லஞ்சம் பெறுவதும், பிள்ளைகளுக்கு வெளிநாட்டவர் அனுப்பும் பணத்தை சூறையாடுவதும் நல்ல செயல்களா? இதைக் கற்றவன் விரும்பலாமா? சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல் வேண்டும். அப்படி வாழ்பவன் தான் பிறருக்கு அறிவுரை வழங்க வேண்டும்".

"**அ**ப்படிப் பார்த்தால் யாரும் கிடைக்கமாட்டார்கள்" என்றது புலி.

"**ஏ**ன் யானை இருக்கிறது. ஒட்டகச்சிவிங்கி இருக்கிறது. மயில் இருக்கிறது இவர்கள் எல்லாம் தாமுண்டு தமது செயல்கள் உண்டு என்று இருப்பவர்கள். நரியைப் போன்றவர்கள்

எல்லாத் தீயசெயல்களையும் செய்துவிட்டுப் பிரமுகர்களை விழுந்து கும்பிடுவார்கள். அதனால் பிரமுககள் மதிக்க, நீங்களும் அவர்களைப் பெரிதாக எண்ணுகிறீர்கள். மேன்மக்களைக் கொண்டுதான் மற்றவர்களுக்கு அறிவுரை கூறவேண்டும். இது எனது கொள்கை. பிடிக்காவிட்டால் என்னைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு உங்களுக்கு விரும்பியவர்களைத் தலைவராக்குங்கள்" என்றது ஒட்டகம். புலி பதிலேதும் பேசாது சென்றது.

## 91. மொழிவது அறமொழி



**கா**ட்டுப்பிள்ளையார் கோவிலில் மாலைப் பூசை முடிவடைந்தது. அன்று வெள்ளிக்கிழமை ஆதலால் நிறையப் பேர் வந்திருந்தனர். கோவில் தலைவரான ஒட்டகம் பேச்சை ஆரம்பித்து வைத்து, "ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நல்ல நல்ல பேச்சாளர்களை வரவழைத்து அறச் செயல்கள் பற்றி மிகவும் தெளிவாகப் பேசவைப்போம். இன்று கலாநிதி கிளி அவர்கள் பேசுவார்கள். அவர் மூன்று கலாநிதிப்பட்டங்களைப் பெற்றவர். இங்குள்ளோர் ஒரு கலாநிதிப்பட்டத்தையே பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் பேராசிரியர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட கலாநிதிப்பட்டங்களைப் பெறுவர். அதுபோலக் கிளியாரும் மூன்று கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் இப்போது பேசுவார்" என்றது.

**கி**ளி மேடைக்கு வந்து பேச்சுக் கேட்க வந்திருப்போரைப் பார்த்தது. சிறுவர்களும், முதியவர்களும் தான் அதிகம் இருந்தனர். பேச்சாளர்கள் தேவையில்லாத விடயங்களைப் பேசுவதாலும், பேசியவற்றையே பேசுவதாலும், பெரியபுராணத்தை திரும்பத் திரும்பப் பேசுவதாலும் இப்போது பேச்சில் நாட்டம் கொள்பவர்கள் மிகக் குறைவு.

"**அ**ன்பானவர்களே, சிறுவர்கள் அதிகமாக இருப்பதால் அறநெறிக்கதை ஒன்று சொல்லலாமென நினைக்கிறேன். அறநெறியை எல்லோரும் பின்பற்ற வேண்டும். பொய் சொல்லக் கூடாது. புறஞ்சொல்லலாகாது. களவெடுத்தலாகாது. இது பூமியில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொருந்தும். ஒரு ஞானி காட்டு வழியாகத் தனது பொருட்களுடன்

வந்தார். திருடன் ஒருவன் அதைப்பறிக்க வந்தபோது, "நீ சிரமப்படாதே இந்தா பிடி என்று தான் கொண்டு வந்த பொருட்களைக் கொடுத்தார். பின், "மகனே, களவெடுப்பது பாவம். பிறர் துன்பப்பட்டுத் தேடிய பொருளைக் களவெடுக்கக் கூடாது" என்று சொல்லித் தனது கையை நீட்டினார். ஒரு தங்கமோதிரம் அவரது கைக்குள் வந்தது. அதைத் திருடனிடம் கொடுத்த ஞானி. நீ களவெடு பரவாயில்லை. ஆனால் பொய் சொல்லாதே. அதனால் பெரும் நன்மையடைவாய். நான் பின்பு உன்னைச் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

**தி**ருடன் யோசித்துப் பார்த்தான். ஞானி திருடு. ஆனால் பொய் சொல்லாதே என்றுதானே சொன்னவர். அதனால் திருடு என்று தானே சொல்லியிருக்கிறார். அதனால் திருடலாம். நான் அகப்பட்மாட்டேன். இதுவரை நான் அகப்படவில்லை. இனியா அகப்படப் போகிறேன் என்று நினைத்து ஒரு வர்த்தக நிறுவனத்தில் திருடியது சில நாட்களுக்குப் பின் அகப்பட்டுவிட்டது. அரசனின் வீரர்கள், "நீ இந்த வர்த்தக நிறுவனத்தில் திருடினாயா?" என்று கேட்டபோது, "ஆம் நான் தான் திருடினேன்" என்றது. வீரர்கள் அரசன் முன் நிறுத்தியபோது அரசன் கேட்டான், "நீ தான் திருடினேன் என்று ஏன் ஒப்புக் கொள்கிறாய்? நீ திருடியதை யாரும் காணவில்லைத்தானே" என்று கேட்டகத் அத் திருடன் சொன்னான், "நான் பொய் சொல்வதில்லை என்று ஒரு ஞானிக்குச் சத்தியம் செய்துள்ளேன்" என்றான்.

**அ**ரசன் அதைக்கேட்டு ஆச்சரியமடைந்து இவன் பொருள் இல்லாமையால் தான் திருடுகிறான். அதனால் பொருட்களைக் கொடுத்தால் திருடமாட்டான் என்று நினைத்துத் தேவையானளவு பொருட்களைக் கொடுத்து அனுப்பினான்.

**சி**லகாலம் செல்ல அந்தத் திருடனைச் சந்தித் ஞானி, "நான் சொன்னதைக் கேட்டு நடந்தமையால் உனக்குப் பெருஞ் செல்வம் கிடைத்தது. அதனால் நானும் உனக்குப் பொன்னும், பொருளும் தருகிறேன் என்று சொல்லிக் கொடுத்தார். ஆகையால் பிள்ளைகளே பொய் சொல்லாமல் வாழ்ந்தால் நீங்களும் மகிழ்வுடன் வாழ்வீர்கள்" என்றது கிளி.

**பி**ள்ளைகள் மகிழ்ச்சியாரவாரம் செய்து கிளிக்கு அருகே சென்று, "தினமும் வந்து எமக்குக் கதை சொல்லுங்கள்" என வேண்டினர்.

## 92. மோகத்தை முனி



**ந**ரியும், குதிரையும் ஒரு தென்னந்தோப்பில் வேலை செய்தன. அதன் உரிமையாளனான யானை உதவும் மனப்பாங்கு கொண்டது. நரியும், குதிரையும் தென்னந்தோப்பில் வேலை செய்துவிட்டு மிகுதியான வேளைகளில் சந்தியில் கூடிநின்று வீண் கதைகள் பேசும். அதை அவதானித்த யானை இருவரையும் அழைத்துச் சொன்னது, "நீங்கள் இருவரும் நான் தரும் சம்பளத்தை நம்பிச் சீவிக்கிறீர்கள். நான் முன்பு மானின் தோட்டத்தில் உங்களைப் போலத்தான் வேலை செய்தேன். அப்பொழுது சிறிதளவில் ஒரு நிலத்தை வாங்கி தென்னையைப் பயிரிட்டேன். அதிலிருந்து நல்ல வருமானம் கிடைத்தமையால் எனது நண்பரிடம் கடன் பெற்று இந்த நிலத்தை வாங்கித் தென்னைகளை நட்டேன். படிப்படியாக காணிகளை வாங்கி தென்னையை நட்டமையால் இன்று நான் பெரும் பணக்காரனாகிவிட்டேன். அதுபோல நீங்களும் வீட்டில் நாலைந்து தென்னைகளை நட்டு நன்கு பராமரித்தால் உங்களது கஷ்டம் நீங்கும்" என்றது.

**கு**திரை, யானையின் பேச்சைக் கேட்டு முதலில் ஐந்து தென்னை மரங்களை நட்டது. நரி யானை சொன்னதைக் கேட்டு இருபத்தைந்து தென்னைகளை நட்டது. குதிரை நிலத்தையும் நல்ல முறையில் பராமரித்தது. நரி தனது மனைவியின் சகோதரனிடம் இருந்த காணியைப் பெற்று மேலும் ஐம்பது தென்னைகளை நட்டது. ஆனால் தகுந்த முறையில் பராமரிக்கவில்லை.

**ந**ரி குதிரையை அடிக்கடி ஏசும், "யானை சொன்னது போலச் செய். ஐந்து தென்னை மரத்தை வைத்து என்ன செய்யப்போகிறாய். நான் ஐம்பது தென்னை மரங்களை நட்டுள்ளேன். ஐம்பதும் காய்த்தால் மாதம் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் வரும். அதைச் சீட்டுக்கட்டினால் எனது மகளுக்கு வைத்தியரைத் திருமணம் செய்து கொடுக்கலாம்" என்று கூறும்.

"**ந**ண்பா, எம்மால் இயன்றவற்றைத் தான் செய்யமுடியும். வேலைக்குச் சென்றுவிட்டு வந்து பத்து மாடுகள் என்னிடம் உண்டு. பதினைந்து ஆடுகள் உண்டு. நூறு கோழிகள் உண்டு. அவற்றைப் பராமரிப்பதே கஷ்டமாக உள்ளது" என்று குதிரை கூறியது.

“என்னிடமும் ஆடு, மாடு, கோழி என்பன உண்டு. நானும் ஐம்பது தென்னை மரங்களைப் பராமரிக்கிறேன் தானே”.

மூன்று வருடங்கள் சென்றன. குதிரையின் ஐந்து தென்னை மரங்களும் குலை கட்டிக் காய்த்தன. நரியின் ஐம்பது தென்னைகளில் முப்பது பட்டுவிட்டது. ஏனையவை போதிய பசளை இன்மையாலும், நீர் இன்மையாலும் வளர்ச்சியடையவில்லை. அதைப்பார்த்த நரி சொன்னது, “நீ சொல்லச் சொல்ல நான் கேட்டகவில்லை. நீ ஐந்து தென்னைமரத்தை வைத்து நன்றாகக் கவனித்ததால் மாதம் இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாவை வருமானமாகப் பெறுகிறாய். நான் பேராசைப்பட்டு உள்ள முதலையும் இழந்து விட்டேன். மனைவி எந்தநாளும் என்னை ஏசியபடி நிம்மதியாகச் சாப்பிடக் கூட முடியவில்லை” என்று வேதனைப்பட்டது.

## 93. வல்லமை பேசேல்



முயல்குட்டி மாவட்ட ரீதியில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றதால் நாடு தழுவிய ரீதியில் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்குத் தயாராக இருந்தது. அப்போது அதனுடன் கல்விகற்கும் மாணவர்கள் பலர் அங்கு வந்தனர். மான் குட்டி சொன்னது, “நீ தான் முதலிடம் பெறுவாய். ஆசிரியர்களும் அதிபரும் நீதான் முதலிடம் பெறுவாய் என்று கூறியுள்ளனர். கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது”.

“கட்டாயம் நீ முதலிடம் பெறுவாய்” என்றது கிளி.

“உன்னைப் பாராட்ட இங்கு யாவரும் தயாராகவுள்ளோம்” என்றது ஒட்டகம்.

முயல் அமைதியாக அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தது. அது பேசாததால் பன்றிக்குச் சிறிது கோபம் வந்தது, “அவர் பெரிய பேச்சாளர். கட்டாயம் முதலிடம் பெறுவார் என்ற நினைப்பில் இருக்கிறார்” என்றது.

“நண்பர்களே, நான் மாவட்டமட்டத்தில் முதலாக வந்தமையால் நாடு தழுவிய போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். எமது நாட்டில் இருபத்திரண்டு மாவட்டங்கள் உள்ளன. அங்கிருந்தெல்லாம் போட்டியாளர் வரவிருக்கின்றனர். இந்தநிலையில்

என்னைப் புகழாதீர்கள். என்னுடைய வல்லமையை அளவுக்கதிகமாகப் புகழ்கிறீர்கள். போட்டி முடிந்த பின்புதான் பெறுபேறு தெரியும். என்னைவிடத் திறமைசாலிகள் பலர் இருக்கக்கூடும். அதை அறியாது நாம் கதைக்கக் கூடாது" என்றது முயல்.

"**அ**ப்ப உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்று கேட்டது ஒட்டகம்.

"**ந**ம்பிக்கை வேறு. திறமை வேறு. ஏனையவர்களைப் பற்றி அறியாது நான் தான் வல்லவன் என நினைப்பதும், பேசுவதும் தவறு. நான் பேசுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என்னைத் தவிர வேறு எவரும் பேசமாட்டார்கள் என்ற எண்ணம் எனக்கில்லை. அப்படி இருந்தால் ஆணவம் தலைக்கேறிவிடும். திமிர் பிடித்துவிடும். அவை இரண்டும் சேர்ந்தால் என்னை வெல்ல யாரும் இல்லை என்ற கர்வம் வந்து விடும். அதனால் தோல்விதான் ஏற்படும். அதனால் நான் கர்வப்படவில்லை. கற்பனை கூடச் செய்யவில்லை. எனக்கு முதலிடம் கிடைக்கும் என்ற துணிவும் நம்பிக்கையும் உண்டு" என்றது முயல்.

"**ஒ**ரு வாரம் கழிய பேச்சுப்போட்டிக்கான முடிவு வந்தது. முயல் நாடு தழுவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றது. அதை அறிந்த மாணவர்கள் வந்து கூடினர், "கடவுளின் அருளால் எனக்குப் பேச்சு வன்மை கிடைத்தது. அதேபோலக் கடவுளின் அருளால் முதலிடமும் கிடைத்தது. அதற்காக நான் கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். பாராட்டிய உங்களுக்கும் நன்றி" என்றது முயல்.

## 94. வாது முற்கூறேல்



**பெ**ரும் பண்டிதரான யானை இலக்கிய விழாவில் பேசிக்கொண்டிருந்தது. பிரபலமான கல்விமான்கள் பலர் அக் கூட்டத்தில் கலந்து யானையின் பேச்சை கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். சபை மிகவும் அமைதியாக இருந்தது.

**இ**டைக்கிடை நரி எழுந்து நின்று சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது. யுானை,

நரிகேட்ட பொருத்தமில்லாத கேள்விகளுக்கும் சரியான பதிலைக் கூறிக் கொண்டிருந்தது. அது அறிஞர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது. நல்லதொரு பேச்சைக் கேட்கவிடாது நரி வேண்டுமென்றே குழப்புவதாக புலி நினைத்தது.

**மீ**ண்டும் மீண்டும் கேள்விகள் கேட்டதால் சபையோர்கள் குழம்பினர். யானைக்கும் பேசுவது சிரமமாக இருந்தது. அப்போது நரிக்கு அருகில் வந்த புலி, "வெளியோ வா. உன்னுடன் பேச வணிகரான கரடி வந்திருக்கிறது" என்று சொன்னது.

**வ**ணிகரான கரடிக்கும், யானைக்குமிடையே வித்துவப் போட்டி இருந்தது. கரடி மேடையில் ஏறினால் கண்டபடி அலட்டும். பேசும் விடயத்தை விட்டுவிட்டு விகடமாகப் பேசித் தானே சிரிக்கும். மற்றவர்களைக் கேலி செய்யும். அன்று இலக்கியம் சம்பந்தமான பெரிய கூட்டம் நடைபெற்றது. அதற்கும் கரடியை அழைக்கவில்லை. அதனால் கரடி பணம் கொடுத்து நரியைக் கூட்டத்தைக் குழப்புமாறு அனுப்பியிருந்தது.

**வ**ர்த்தகரான கரடி, தன்னைச் சந்திக்க வந்திருப்பதை அறிந்த நரி மகிழ்வுடன் புலிக்குப் பின்னால் சென்றது. புலி பிற்பக்கத்தில் உள்ள ஓர் அறைக்கு நரியை அழைத்துச் சென்றது. அங்கே கரடியைக் காணவில்லை.

"**நீ**யென்ன பெரிய சண்டியனா? இல்லை பெரிய அறிவாளியா? நாடறிந்த ஒரு பெரும் பேச்சாளர் பேசும் போது யாரிடமோ பணம்பெற்றுவிட்டு வந்து சபையைக் குழப்புகிறாய். இதனால் எமது ஊரின் மதிப்புப் போய்விட்டது. பல ஊர்களில் இருந்து அறிஞர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களின் முன்னிலையில் வாயில் வந்தபடி பேசலாமா?" என்று கேட்டு நரிக்கு பலமுறை அடித்தது, "பின், உன்போன்றவர்களுக்கு உபதேசம் செய்தால் அது காதில் ஏறாது. இது தான் சரியான நடைமுறை போய் சபையில் அமைதியாக இரு" என்றது.

**ந**ரி வந்தபோது கரடி அங்கே இருந்தது, "காசு வாங்கிக் கொண்டு அமைதியாக இருக்கிறாய் ஏதாவது பேசு" என்றது கரடி. யாரோ செருமும் சத்தம் கேட்டு நரி திரும்பிப் பார்த்தது. புலி பல்லை நெருமியது. பயந்து நடுங்கிய நரி எழுந்து வெளியே சென்றது.

## 95. வித்தை விரும்பு



**ஏ**ற்கனவே கலாநிதிப்பட்டம் பெற்ற ஒட்டகம் மேற்கொண்டு படிக்க விரும்பியது. அதைக் கேள்விப்பட்ட அதன் உற்ற நண்பனான மான் வந்து கேட்டது, "நண்பா, வேலை கிடைத்த பின்பு இங்குள்ள யாரும் கற்பதில்லை. நீ கலாநிதிப்பட்டம் பெற்ற பின்பும் படிக்கப்போவதாக உனது தந்தை சொன்னார். நான் படிக்கவில்லை. ஆரம்ப வகுப்பில் இருவரும் ஒன்றாகப் படித்தோம். நான் படிப்பில் விருப்பமில்லாததால் தொழிலைத் தேடிக் கொண்டேன் அப்படியிருந்து என்னை நீ உனது உற்ற நண்பனாகக் கருதிப் பழகுகிறாய்" என்றபோது ஒட்டகம் சொன்னது, "படிப்பது பணம் சாம்பாதிப்பதற்கென்றே பலரும் நினைக்கின்றனர். படிப்பு, பணம் இவற்றை விடப் பண்புகள் தான் முக்கியம். நீ பண்பாளன் அதனால் என்னால் உனது நட்பைக் கைவிட முடியவில்லை. கலாநிதிப்பட்டம் ஒரு பெரிய படிப்புக்கான அடையாளம் அல்ல. ஒரு நல்ல கட்டுரை சமர்ப்பித்தால் கலாநிதிப்பட்டம் கிடைக்கும். அக்கட்டுரைக்குக் கலாநிதிப்பட்டம் தருவார்கள். கற்றது கைமண் அளவு கூட இல்லை. அப்படியிருக்க நாம் கற்றவர்கள் என்று பெருமைப்படலாகாது. நேற்று ஒரு கூட்டத்தில் ஒருவர் கேட்டார், "ஔவையார், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடிய பாட்டுக்கள் இன்றும் மதிக்கப்படுகின்றன. ஔவையார் திருக்குறள் பற்றிய விமர்சனத்தில், "அணுவைத் துளைத்து எழுகடலைப் புகுத்திக் குறுகத் தறித்தகுறள்" என்று கூறியுள்ளார். விஞ்ஞானிகள் சமீபத்தில் தான் அணுவைப் பிளக்கலாம் என்று கூறியுள்ளனர். இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார். நான் ஆடிப்போய்விட்டேன். என்னால் எதுவும் கூற முடியவில்லை. ஒரு நூலை எடுத்து ஆய்வு செய்து கட்டுரை சமர்ப்பித்தால் கலாநிதிப்பட்டம் கிடைக்கும். அது அறிவல்ல. அதனால்தான் நான் மேலும் மேலும் படிக்க விரும்புகிறேன்" என்றது ஒட்டகம்.

"**எ**னக்கு நீ சொல்வது எதுவும் புரியவில்லை. வயலில் பலர் வேலை செய்கிறார்கள். அதற்கிடையில் உன்னுடன் பேச விரும்பி வந்தேன். நீ ஏதேதோ பேசுகிறாய். எனக்கு எதுவும் புரியவில்லை. மாலை நேரம் வருகிறேன். புரியும்படி கூறு" என்று கூறிவிட்டுப் புறப்பட்டது மான்.

## 96. உத்தமனாய் இரு



**மா**ணவர்களுக்கு அதிபரான ஒட்டகம் சொன்னது, “எப்போதும் நீங்கள் மேலான பண்புகளை உடைய உத்தமர்களாக இருங்கள். மேலான பண்புகள் உங்களை உத்தமராக்கிச் சமூகத்தில் பெருமையும், புகழும் உள்ளவர்களாக வாழவைக்கும். இங்கு பலதரப்பட்ட மாணவர்கள் கற்கின்றனர். எல்லோரும் உத்தமர்களாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். என்னிடம் முன்பு கல்வி கற்ற மாணவர்களிடமும் இதைத்தான் சொன்னேன். உத்தமர்களாக வாழும் மாணவர்களைத் தான் எனது செல்வம் என்று கூறுவேன். நீங்கள் பாடசாலையை விட்டுச் சென்ற பின்பு ஏதாவது தேவைகருதித்தான் இங்கு வருவீர்கள். நாங்களும் ஏதாவது தேவையேற்பட்டால் தான் வருவோம். ஆனால் சில சமயங்களில் தேவையில்லாது இழிவான இடங்களுக்கும் போக வேண்டியுள்ளது. சில நாட்களுக்கு முன்பு இங்கு கல்விகற்ற நரியும், கழுதையும் இங்கு கல்விகற்கும் தமது இனத்தவர்களான மாணவர்களையும் அழைத்துச் சென்று ஒரு வர்த்தக நிறுவனத்தில் திருடியிருக்கிறார்கள். அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமராவில் திருட்டுப் பதியப்பட்டுள்ளது.

**ஒ**ட்டகம் மூச்சுவிட்டுவிட்டுச் சொன்னது, “திருடியவர்களில் மூவர் எமது பாடசாலையில் தற்போது கல்விகற்கும் மாணவர்கள். அதனால் என்னையும் அம் மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியையையும், ஆசிரியரையும் காவல்துறையினர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். ஆசிரியை பண்பான குலத்துப் பெண் அழுதழுது தான் அவர் காவல்நிலையத்திற்கு வந்தார். காவல்துறையினர், “இப்படித்தானா மாணவர்களைக் கற்பிப்பது. ஆசிரியர்கள் பண்பானவர்களாக இருந்தால் மாணவர்களும் பண்பாளராக இருப்பர்” என்று வாய்க்கு வந்தபடி ஏசியமையால் அவ் ஆசிரியை இந்தப் பாடசாலைக்கு வரமாட்டேன் என்று கூறி இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளார். நல்ல அருமையான ஓர் ஆசிரியையை நமது பாடசாலை இழந்ததோடு, கெட்ட பெயரையும் சம்பாதித்துள்ளது. மாணவர்களே எப்போதும் உத்தமர்களாக இருங்கள். குற்றச் செயல்களைச் செய்வதை விட மோசமானது குற்றச்

செயல்கள் செய்பவர்களுடன் சேர்வது. அதனால் உத்தமர்களோடு சேருங்கள்” என்றது ஒட்டகம்.

## 97. வெட்டெனப் பேசேல்



**நி**தி நிறுவனமொன்று அன்று அந்த ஊருக்கு வந்திருந்தது. மேலாளராகிய மானுடன் பத்துப்பேர் வந்திருந்தனர். மேலாளர் தனது நிதி நிறுவனத்தின் விதிகள் சம்பந்தமாக முதலில் பேசினார். பின்பு தாம் கொடுக்கும் நிதிகளின் விபரம் பற்றிப் பேசினார். எல்லோரும் அமைதியாக இருந்து கேட்டனர். நரி மட்டும் அடிக்கடி எழுந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது.

“**நீ**ங்கள் கடன் தரும்போதும் உதவிகள் என்று செய்யும் போதும் மிகவும் கவர்ச்சிகரமாகப் பேசுவீர்கள். பின்பு கடனை உரிய தினத்தில் கட்டாவிட்டால் பொருளை எடுப்பீர்கள், பிணையாளிக்குத் தொந்தரவு கொடுப்பீர்கள்”.

“**எ**மது நிறுவனம் அவ்வாறு செய்வதில்லை. மனிதாபிமானத்துன் நடந்து கொள்ளும்” என்று மான் கூறியபோது நரி சொன்னது, “பேச்சுப் பல்லக்கு தம்பிகால் நடை என்பார்கள். கடன் தரும்போது இனிப்பாகப் பேசுவீர்கள். பின்பு உங்கள் சுயரூபத்தைக் காட்டுவீர்கள்”.

“**இ**ங்கு எமது நிறுவனத்தில் கடன் பெற்றவர்கய் பலர் இருக்கின்றனர். அவர்கள் இதுபற்றிச் சொல்லலாம்” என்றது மான்.

**க**ழுதையும், புலியும் எழுந்தபோது, “ஒவ்வொருவராகக் கூறுங்கள்” என்றது மான்.

“**நா**ன் விவசாயம் செய்யக் கடன் பெற்றேன். கட்ட முடியவில்லை. அதைச் சொன்னபோது நெல்லை அறுவடை செய்தவுடன் கட்டும்படி மேலாளர் சொன்னவர். மிகவும் நல்ல நிறுவனம். மனிதாபிமானம் உள்ளது” என்றது புலி.

“**உ**ண்மை” என்றது கழுதை. அப்போது நரி எதையோ சொல்ல எழுந்தது, “நீ எதுவும் சொல்லத்தேவையில்லை. யாரோடும் நீ அன்பாகப் பேசியதில்லை. வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுவாய். பேசாமல் இரு” என்றது யானை. கூட்டம் நல்ல முறையில் முடிவடைந்தது.

**ந**ரி வர்த்தகத்துறையில் பட்டம் பெற்றிருந்தது. மாவட்டத்தில் அது தான் முதலிடத்தைப் பெற்றிருந்தது. ஒரு நிறுவனத்தில் கடன் பகுதிக்கு முகாமையாளர் தேவையென விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

**ந**ரி அப்பதவிக்கு விண்ணப்பித்து விட்டுத் தனக்குத்தான் அப்பதவி கிடைக்கும் என்று சொல்லித்திரிந்தது. அந்த நிறுவனத்தினர் நேர்முகப் பரீட்சைக்கு நரியை அழைத்திருந்தனர். நரி கோட்சூட்டெல்லாம் போட்டு வெகு ஆடம்பரமாகச் சென்றது. புலி சாதாரணமாகச் சென்றது. நரி தனது நண்பனான எருமையைக் கூட அழைத்துச் சென்றது. அது எருமைக்குச் சொன்னது, “நான்தான் மாவட்டத்தில் முதலிடம் பெற்றேன். புலி இரண்டாம், மூன்றாம் இடங்கூடப் பெறவில்லை. இப்போது என்னோடு போட்டிபோட வந்துள்ளது” என்று கேலியாகச் சிரித்தது.

**மு**தலில் நரியை நேர்முகம் காண அழைத்தனர். அங்கு நேர்காணும் மேளாளராக மான் இருந்தது. நரியிடம் சுயவிபரக்கோவையை வாங்கிப் பார்த்த மான் எதுவும் சொல்லாமல் சுயவிபரக்கோவையைக் கொடுத்துவிட்டு, “நாங்கள் அறிவிப்போம்” என்றது.

**அ**டுத்துப் புலி சென்றது. சுமார் ஒரு மணிநேரம் அதனுடன் கதைத்த நேர்காணல் குழுவின் தலைவரான மான், “உங்களை எமக்குப் பிடித்ததால் உமக்கு நியமனம் தருகிறோம். சிறிது நேரம் நின்று நியமனக் கடிதத்தைப் பெற்றுச் செல்லும்” என்றது.

**பு**லிக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. அதைப் போய் நரிக்குச் சொல்ல, நரி, “யாரைப் பிடித்து எவ்வளவு காசு கொடுத்தாய்” என்று கேட்டது. அப்போது அங்குவந்த மான் சொன்னது, “நீ நன்றாகக் கற்றவன். ஆனால் அறிவில்லாதவன். ஒருவருடன் பேசும் முறை தெரியாதவன். இது பொதுமக்களுடன் அன்பாகப் பேசி உறவாடுதற்குரிய பதவி. நீ வெட்டெனப் பேசிக் காரியத்தைக் கெடுத்துவிடுவாய். படிப்பு ஓர் உத்தியோகத்திற்கு

அடிப்படைத் தேவையேயொழியப் பண்புதான் முக்கியமானது” நரி பதில்சொல்லவில்லை, “உனது வாய் சரியில்லை. மாவட்டத்தில் முதலாவதாக வந்துவிட்டதால் உன்னை விடப் பெரியவர் யாருமில்லை என்று திமிராக நடந்து கொண்டாய். இனியாவது திருந்து இல்லாவிட்டால் உனது படிப்பு உனக்கு உதவாது போய் விடும்” என்றது எருமை. நரி எதுவும் பேசவில்லை.

## 98. வேண்டி வினை செய்யேல்



**சி**ங்கம் அந்த மாவட்டத்தின் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டது. அதற்கு இரண்டு மகன்மார் இருந்தனர். பட்டணப் பாடசாலையில் அவர்களைச் சேர்த்தபோதும் அவற்றின் கற்றல் தரம் குறைவாகவே இருந்தது. அந்த ஊரில் வசித்த மான் கணிதபாடத்தில் பட்டம் பெற்றது. இன்னும் வேலை கிடைக்கவில்லை. அதனால் அது அக்காட்டில் வசிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பித்துக் கொண்டிருந்தது. சிங்கத்தின் கீழ் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் மானின் திறமையைப் பற்றி அளவுக்கதிகமாகப் புகழ்ந்து பேசியமையால் மானைத் தனது வீட்டிற்கு வரவழைத்து தனது பிள்ளைகளுக்குக் கற்பிக்க விரும்பி தனது ஊழியர்களுக்குச் சொல்லி மானைத் தனது வீட்டிற்கு அழைத்தது. மான் சிங்கத்தின் வீட்டுக்கு வந்ததும் சிங்கம் சொன்னது, “மானாரே, நீர் நல்ல ஆசிரியர் என்று பலரும் சொல்கின்றனர். எனது பிள்ளைகள் இருவரும் கணித பாடத்தில் மிகக் குறைந்தளவு புள்ளிகளைப் பெறுகின்றனர். அதனால் மாலைவேளை எனது வீட்டுக்கு வந்து கணிதபாடத்தைக் கற்பியும். அதற்காக நீர் கேட்கும் தொகையைச் சம்பளமாகத் தருவேன்”.

“**ஐ**யா, பாடசாலை விட்ட பின்பு சுமார் நூறு வறிய மாணவர்களுக்கு இலவசமாக பாடம் சொல்லிக் கொடுக்கிறேன். கற்ற வித்தையை விற்பது பாவம்” என்றது மான்.

“**த**ற்போதுள்ள ஆசிரியர்கள் பாடசாலை விட்ட பின்பும், பாடசாலை தொடங்கு முன்பும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பணத்திற்காகக் கற்பிக்கின்றனர். நீர் இவ்வாறு சொல்கிறீர்” என்றது சிங்கம்.

“**ஒ**வ்வொருவரும் ஒவ்வொரு இயல்பைக் கொண்டவர்கள். இரவுபகலாக காசுக்குக் கற்பித்து என்ன பயன். கல்வியின் முதலிடம் பெற்ற எமது மாவட்டம் இப்போ பல வருடங்களாகக் கடைநிலையை அடைந்துள்ளது” என்று மான் சொல்லும் போது சிங்கம் கேட்டது, “இரவு பகலாகக் கற்கின்றனர் பிறகேன் இந்தநிலை?”

“**ஐ**யா, ஏதாவது ஒரு பயனை விரும்பிச் செய்யும் செயல்கள் வெற்றியைத் தரமாட்டாது. முன்னைய ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றினர். சிறந்த பெறுபேற்றையே தமது இலட்சியமாகக் கொண்டனர். இப்போ பணமே இலட்சியமாக உள்ளதால் கல்வி பின் தங்கிவிட்டது” என்றது மான்.

“**ச**ரி, ஏதோ நடக்கட்டும். நாளையில் இருந்து நீர் வாரும்” என்றது சிங்கம்.

“**ஐ**யா, நான் கற்பித்தலுக்குப் பணம் பெறுவதில்லை. மாலை வேளைகளில் எனக்கு நேரமில்லை. இருவருக்குக் கற்பிக்கும் நேரம் நான் பலருக்குக் கற்பித்துவிடுவேன். அதனால் நான் கற்பிக்கும் இடத்திற்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். அப்படியில்லாவிட்டால் இருபத்தைந்து பிள்ளைகள் கற்கக் கூடிய சிறிய மண்டபம் ஒன்றை உங்கள் வீட்டில் அமைத்துத் தாருங்கள்” என்றது மான்.

**சி**றிது நேரம் யோசித்த சிங்கம், “நான் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தமையால் கஷ்டம் கரைச்சல்கள் தெரியும். எனது பிள்ளைகள் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தமையால் கஷ்டம் கரைச்சல் தெரியாது. அவற்றை உணர்த்த வேண்டும். அதனால் அவை உனது கல்வி நிலையத்திற்கு வந்து கற்கட்டும்” என்றது சிங்கம்.

**சி**ல நாட்களில் சிங்கத்தின் அலுவலகத்தில் ஒரு வேலைக்கு விண்ணப்பம் கோரி இருந்தனர். மான் அதற்கு விண்ணப்பித்துவிட்டு நேர்முகப்பரீட்சைக்குச் சென்று தேர்வு செய்யப்பட்டது. அது வேலைக்குச் சென்றபோது சிங்கம் கண்டுவிட்டுக் கேட்டது, “மானாரே, இங்கு எதற்கு வந்தீர்?”இ “எனக்கு இங்கு வேலை கிடைத்துள்ளது” என்றபோது சிங்கம் சொன்னது, “எனக்குத் தெரியாது இங்கு வேலைக்குச் சேர்ந்துவிட்டாய். உனது நியமனகடிதத்திற்கு ஒப்பமிட்டது நான்தான் அப்போது எனக்குத் தெரியவில்லை. நீ ஒரு புதுமையான ஆள். உனக்குச் சிபாரிசு பிடியாது. பயனை விரும்பிச் செயல்களைச் செய்யமாட்டாய். கடமைப்படவும் மாட்டாய். புதுமையானவன்” என்றது சிங்கம்.

## ௯௯. ஒன்னாரைத் தேறேல்



**யா**னையின் வீட்டுக்கு ஒட்டகம் வந்தது. அதைக் கண்ட யானையின் மனைவி அதை யானைக்குச் சொல்லியது, “நீங்கள் அதிபராக இருந்து ஓய்வுபெறும் போது, நீங்கள் பொறுப்புக் கொடுத்த ஒட்டகம் வந்திருக்கு”.

**யா**னை வெளியே வந்தது. ஒட்டகம் கைகூப்பி யானையைத் தொழுதது. அதை யானை கண்டுகொள்ளவில்லை, “ஐயா, உங்களது மகளுக்கு நல்லதொரு வரன் இருக்கிறது. நீங்கள் விரும்பினால் செய்யலாம். மாப்பிள்ளை உதவிக் கல்விப்பணிப்பாளராக இருக்கிறார். நல்ல குடும்பம்” என்று ஒட்டகம் சொல்லும் போது யானை சொன்னது, “இப்ப அவள் படிக்கிறாள் படிப்பு முடிவடையட்டும் தேவையேற்பட்டால் சொல்லி அனுப்புகிறேன்” என்று கூறிவிட்டு யானை சென்றுவிட்டது. ஒட்டகம் யானையின் மனைவியோடு நெடுநேரம் கதைத்து விட்டுச் சென்றது. ஒட்டகம் சென்றபின் யானையின் மனைவி வந்து, “நல்ல இடம் நீங்கள் முழுமையாகக் கேட்காது அனுப்பிவிட்டீர்கள்” என்று சொல்லும் போது யானை குறுக்கிட்டுச் சொன்னது, “என்னிடம் பொறுப்பை பெறும்வரை நடித்தது. நான் ஓய்வு பெற்ற மறு நாளே என்னை ஒரு மனிதனாகக் கூடக் கருதவில்லை. தனதும் தனது சாதிக்காரரினதும் நன்மையைத்தான் விரும்பியது. என்னுடைய எதிரிகளுடன் ஒட்டி உறவாடியது. விளையாட்டுமைதான விடயத்தில் திட்ம்போட்டு ஏமாற்றியது. அதை ஒரு சதத்துக்குக்கூட நம்பமுடியாது. இப்ப என்னென்ன சதித்திட்டத்தோடு வந்ததோ தெரியாது. அதன் உடல் முழுவதும் விஷம். திட்டமிட்டுப் பழிவாங்குவதில் அதற்கு நிகர் அது தான். நல்ல நம்பிக்கை உள்ள நண்பன் என்று பலகாலம் எண்ணியிருந்த என்னைத் திட்டமிட்டுப் பழிவாங்கிவிட்டது. ஒருவர் பொன், பொருள், காணி, பூமி, பெண் ஆகியவற்றை எப்போது வேண்டுமானாலும் பெறலாம். பணம் அதற்கு உதவிசெய்யும். ஆனால் புகழைப் பெற முடியாது. எனது புகழை அழித்த பகைவரை நம்பச் சொல்கிறாயா? என்னென்ன சதித்திட்டத்தோடு வந்ததோ தெரியாது. அதனால் அதைப்பற்றி எதுவும் கதைக்காதே. ஐந்து நிமிடம் கதைத்தால் மனத்தை மயக்கிவிடும். அதுதான் நான் கதைக்கவில்லை” என்றது யானை.

## 100. ஓரம் சொல்லேல்



**யா**னையின் வீட்டுக்கு அகன்ற ஒரு பாதை செல்கிறது. பக்கத்தில் இருக்கும் மானின் வீட்டுக்குப் பின்னால் ஒரு சிறியபாதை செல்கிறது. சிலவருடங்களுக்கு முன்பு மான் கல்வீடு கட்டுவதற்காக மண், கல் ஏற்றி வந்தது மானினுடைய பாதை ஒடுக்கமாக இருந்தமையால் யானை இரக்கப்பட்டு தனது பாதையூடாக லொறிகள் சென்று மானுக்குக் கல், மண் பறிக்க உதவி செய்தது.

**அ**தன்பின் கனரக வாகனங்கள் வந்தால் அப்பாதையூடாகச் சென்று வந்தன. மான் இறந்ததும் மானின் மகன் நரியின் உதவியோடு தமக்கு அந்தப் பாதையில் பங்து இருக்கிறது என்று விவாதித்தது.

“**இ**ப்பாதையில் உங்களுக்குப் பங்கு இல்லை. உனது தந்தை வீடு கட்டும்போது உங்களுக்குள்ள பாதையால் கனரக வாகனங்கள் செல்லமுடியாது. தூரத்தில் அவற்றைப் பறித்துவிட்டு அள்ளிச் செல்லல் வேண்டும். அது பெரும் செலவாகுமென்று மான் சொல்லிக்கேட்டதால் சம்மதித்தேன். இப்போ நீங்கள் அதற்கு உரிமை பேசுகிறீர்கள்” என்றது யானை.

“**அ**ப்பா எங்களுக்கும் இப்பாதையில் பங்கு இருக்கென்று சொன்னவர்” என்றது மான்.

“**ச**ரி இருக்குமென்றால் உங்களது வீட்டு உறுதியில் எழுதப்பட்டிருக்கும். அதைக் கொண்டு வா பார்ப்பம்” என்றது யானை.

“**உ**றுதியில் எழுதாவிட்டாலும் பலகாலம் பாவித்ததால் அதில் உருத்து உண்டு. நீ மறிக்க முடியாது” என்றது நரி.

“**ந**ரியே, உண்மைக்கு மாறாக ஒரு பக்கம் சார்ந்து பேசுவது கூடாது. நீ பக்கம் சார்ந்து பேசுகிறாய். அதற்குப் பணம் பெற்றிருப்பாய். முன்பு நீ கழுதையின் காணிப் பிரச்சினையில்

பொய்ச்சாட்சி கூறியமைக்காகத் தண்டப் பணம் செலுத்தினாய். அது ஞாபகம் இருக்கா?" என்று கேட்டது யானை.

**அ**தைக் கவனிக்காது நரி சொன்னது, "இப்போ நீ இந்தக் காணியைக் கொண்டு மேலோகம் செல்லப் கோகிறாயா? எருதின் காணியில் தனக்குப் பங்கிருக்கு என்று வாதாடிய பன்றிக்கு நீதவான் சிறைத்தண்டனை கொடுத்தவர். அதுபோல நான் நீதிமன்றம் போகப்போகிறேன்" என்றது யானை.

**நீ**திமன்றம் என்றதும் நரிக்குப் பழைய ஞாபகங்கள் நினைவுக்கு வந்தன, "யானையாரே, நீர் பெரிய மனிதர் இப்படிக் கதைக்கக் கூடாது. மான் என்ன உமது பாதையில் வீடு கட்டவா போகிறது. அது தேவையேற்பட்டால் போய் வரவிடும்" என்றது நரி.

"**ந**ரியாரே, நீர் காசு வாங்கிவிட்டு எப்படியாவது பேசி பிரச்சினையைத் தீர்க்க விடாமல் பிரச்சினை கொடுப்பீர். இது மானுக்கும் எனக்கும் உள்ள பிரச்சினை. நீர் இதில் தலையிட வேண்டாம். உம்மை யார் அழைத்தது. மரியாதையாகச் சென்றுவிடும். இல்லையென்றால்" பிளிறியது யானை. யானைக்குக் கோபம் வந்துவிட்டது என்று தெரிந்த நரி அவ்விடத்தை விட்டுச் சென்றது. மான் எதுவும் பேசாது சென்றது. அதைக்கண்ட யானை, "மானாரே, தேவையேற்பட்டால் இப்பாதையைப் பயன்படுத்தும்" என்றது.